ANGAYAR MALAR
ப்டம்பர் '92
ந்த இதழ் மட்டும்
லை ரூ. 7.00

மங்கையர் மலர்



நவராத்திரி
சிறப்பிதழ்







பாம்பே டையிங்
ஸ்தாபிதம் 1879

உண்மையிலேயே இந்தப் பெண் ஒரு கதாநாயகி!

திரைப்படங்களிலே நாம் பார்த்திருக்கிறோம், கதாநாயகன் ஒரு கிராமத்திற்குப் போய் பல நன்மைகளைச் செய்வார். அவருக்கு நிறைய கஷ்டங்களும் வரும், நல்லதும் வரும். இறுதியில் கிராம மக்களின் மனதில் நீங்கா இடம்பெறுவார்!

இதுபோல ஒரு பெண் கிராமத்திற்குப் போய்ப் பல சாகசங்களை நிகழ்த்தி... ஹீரோயின் சப்ஜெக்டாக ஏதேதோ எடுக்கிறார்களே தவிர இது போல இன்னும் வரவில்லை.

அதே போல நாம் யார் யாரையோ சொல்கிறோம் சமூகத்தில் பெரும் மாறுதல்களை நிகழ்த்துகிறார்கள், 'புரட்சி' செய்கிறார்கள் என்று! ஆனால் 'உண்மையில்' ஒரு பெண் அமைதியாக ஒரு பெரும் சமுதாயப் புரட்சியையே செய்து வருகிறார், அதுவும் எங்கோ சிறு கிராமத்தில்!

திண்டுக்கல்லிற்கு அருகாமையில் சிறு கிராமம் விராலிப்பட்டி. அந்த ஊரின் காவல் தெய்வம் வேறு யாருமில்லை.

மஞ்சுளா ரமேஷ்

ஊரின் வெற்றிக்கொடி ஜான்சி என்ற இருபத்திரண்டே வயதான இளம் மங்கை! இந்த ஊரில் யாரை எதைக் கேட்டாலும் 'எங்க டீச்சரைக் கேட்கணும்!' என்பார்கள். அந்த அளவிற்கு இந்த ஊர் மக்களோடு இணைந்து அவர்களுக்காகவே வாழ்ந்து வருகிறார் வெற்றிக்கொடி.

எப்போதும் புன்னகைத்த முகம், சரளமான ஆங்கிலம், கிராம மக்களோடு பேசும் போது அவர்களோடு உறவு கொண்டாடும் கிராமத் தமிழ், எளிய கைத்தறி சேலை..... சமூக சேவையே இந்தப் பெண்ணுரு கொண்டதோ என ஆச்சர்யமாக உள்ளது.

* வெற்றிக்கொடி





திண்டுக்கல் பால் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கத்தின் நிர்வாக இயக்குநர் திரு. இருதயராஜ் ஒருமுறை சொன்னார், ''நான் பால் விற்பனை, வாங்குவது மாட்டு லோன் சம்பந்தமாக பல கிராமங்களுக்குப் போய் இருக்கிறேன். அப்படித் தான் ஒருமுறை விராலிப்பட்டிக்குப் போனப்போ இந்தப் பெண்ணைப் பார்த்துப் பிரமித்துப் போய் விட்டேன். நீங்கள் அவசியம் அவரைப் பார்த்தால் மகிழ்ந்து போவீர்கள்!'' என்றார்.

வெற்றிக்கொடி இந்தக் கிராமத்திற்கு எப்படி வந்து சேர்ந்தார்?



கிராமத் திண்ணையில் அமர்ந்தபடி மாலைக் காற்று சிலுசிலுவென முகத்தில் மோத வெற்றிக்கொடி பேச ஆரம்பித்தார்.

''நான் மதுரை லேடி டோக் காலேஜில் பி.காம். படித்துக் கொண்டிருந்தப்போ சோஷியல் சர்வீஸ் கேம்ப்பிற்காகப் பக்கத்து சர்ச்சிற்கு வந்திருந்தோம். அப்போ இந்த ஊருக்கெல்லாம் கூட வந்திருக்கேன். நான் ஒரு காலத்தில இங்கேயே தங்கிடப் போறேன்னு நினைச்சதே இல்லை.

கிராஜுவேஷன் முடிச்சவுடனே இந்த சர்ச் நடத்தும் ஸ்கூல்லேயே வேலை கெடைச்சது. விராலிப்பட்டி மாதிரி பல கிராமங்களில் இருந்து பசங்க படிச்சாங்க. ஆனா இங்கே ஆர்வமா படிக்க முன்னேறதுக்கான வாய்ப்பே இல்லைங்கறது எனக்குத் தெரிஞ்சு போச்சு. என்னுடைய சொந்த ஆர்வத்துல இந்தக் கிராமத்து இளைஞர்களுக்கு டியூஷன் எடுத்தேன். அவங்க வயல் வேலையெல்லாம் முடிச்சுட்டு ராத்திரி வந்தாக்கூட சொல்லிக் குடுப்பேன். அப்படி மூணு பேர் ப்ளஸ் டூ பாஸ் பண்ணாங்க. ஆனா பல பிரச்னைகளால பள்ளிக்கூடம் மூடிட்டாங்க.

இங்கே படித்த பலருக்கும் சான்றிதழ் வாங்கவெல்லாம் அவர்களோடு நானும் சேர்ந்து அலைந்தேன். ஒருவழியா டீச்சர்ங்கற என்னோட கடமைகளை முடிச்சுட்டு மதுரைக்குப் போனப்பதான் இந்த ஊர்த் தலைவரும், அவர் மனைவியும் எங்க பெற்றோரை வந்து பார்த்தாங்க.

''உங்க பொண்ணால எங்க கிராமத்தில பலருக்கும் படிப்பு கிடைச்சது. ஆனா இப்போ பள்ளிக்கூடத்தையே மூடிட்டாங்க. அதனால எங்க புள்ளைங்களோட வாழ்க்கையெல்லாம் வீணாகக் கூடாது. எங்க ஊருக்கு டீச்சரா உங்க பொண்ணை அனுப்புங்க. நாங்க அவளை எங்க பொண்ணு மாதிரி பார்த்துக்கறோம்னாங்க.

என்னோட பேரண்ட்ஸ் என்னையே முடிவெடுக்கச் சொன்னாங்க. எனக்கு இந்தக் கிராம வாழ்க்கை, மக்கள்லாம் ரொம்பப் பிடிச்சிருந்தது. இதோ இவங்களோடயே வந்துட்டேன்...''

''டீச்சரா வந்த நீங்க கிராமத்திலே பெரிய மாற்றங்களை எப்படிச் செஞ்சீங்க...?''



''முதல்ல இங்க இருக்கிற படிக்கிற பெண்களுக்கும், இளைஞர்களுக்கும் டியூஷன்தான் எடுத்தேன். ஆனால் மற்ற நேரங்கள்ல இந்த ஊரைக் கவனிக்க ஆரம்பிச்சேன். பெண்கள் வயல்ல வேலை செய்யற காலம் கொறச்சல். மற்ற நேரங்கள்ல வெட்டியா பொழுதைக் கழிச்சாங்க. அவங்களுக்குள்ள ஒரு சங்கம் ஃபாம் பண்ணச் சொன்னேன். பேங்கை அணுகி மாட்டு லோன் வாங்கினோம். மார்கெட்



டிங் எப்படி? திண்டுக்கல் போய் பால் கூட்டுறவு சங்கத்தை அணுகினேன். அவர்கள் வந்து பால் வாங்க ஆரம்பித்தார்கள். வெட்டியா பொழுதைக் கழித்துக் கொண்டிருந்த ஒவ்வொரு பெண்ணும் இன்றைக்கு உழைப்பு, உழைப்பு என்று இறங்கி விட்டாள். கைநிறைய சம்பாதிக்கிறாள். இப்போ இங்கே வேலை செய்யவே நேரம் போதவில்லை. இதுல பேச ஏது நேரம்?''

''நீங்க சொல்ற அளவு ஈஸியா எல்லா வேலையும் முடிஞ்சுட்டுதா?''

''நாலே வரியில் நான் செய்ததைச் சொன்னேன். ஆனால் இதையெல்லாம் முடிக்க நான் பட்ட பாடு... ஒவ்வொரு ஆபீஸா, ஏறி இறங்கறப்ப ஒவ்வொருத்தரும் பேசின ஏளனப் பேச்சுக்கள் கொஞ்ச நஞ்சமல்ல. 'லோன்லாம் தர முடியாதும்மா. நீ இன்னிக்கு இருப்பே. நாளைக்குப் போயிடுவே. அவங்க மாடு வாங்கறேன்னு காசு வாங்கி குழந்தைக்குக் காது குத்துவாங்க. காசே திரும்பி வராது. உனக்கு இதெல்லாம் தெரியாது. சின்னப் பொண்ணு' என்று துரத்தியது சாதாரணம். ஏளனமாகப் பேசியது ஏராளம்.

சங்கம் பதிவு பண்ண, லோன் வாங்க, ஆஃபீஸரைப் பார்க்க, டாக்குமெண்ட்ஸ் ரெடி பண்ண என ஒவ்வொரு கட்டத்திலும் போராட்டம்தான். ஆனா நான் இங்கே ஒரு குக்கிராமத்தில போராட்டத்தை ஆரம்பிச்சிருக்கேன்னவுடனே எங்க காலேஜ் எனக்குப் பக்கபலமா இருந்தது. பாங்க் மானேஜர் ஆதரவு கொடுத்தார். பால் உற்பத்தியாளர் சங்கத்தின் டெபுடி ஜெனரல் மானேஜர் எங்க ஊருக்கென்று சங்கம் பதிவு செய்து கொள்ள உதவியதை மறக்கவே முடியாது! அப்படி இப்படியாக ஒருவழியாகக் கடந்து வந்து இன்று ஒவ்வொரு பெண்ணும் ஒரு மாடு வாங்கி லோன் அடைத்து விட்டு அடுத்த லோன் வாங்கி இருக்கிறோம். இன்று எந்த ஆபீஸிற்குப் போனாலும் விராலிப்பட்டி என்றால் மரியாதை உண்டு. ஏனென்றால் ரீபேமண்ட் டாணென்று வந்து விடுமே!'' என்று பெருமையுடன் சிரிக்கிறார்.

சரி, ஆனால் இந்தனை குக்கிராமத்தில் எவ்வளவோ பிரச்னைகள் வருமே. அதற்கெல்லாம் இவர் பேச்சைக் கேட்கிறார்களா? வெளியூர் ஆளை இந்த மாதிரி உள் விவகாரங்களில் எல்லாம் எளிதில் ஏற்றுக் கொள்ள மாட்டார்களே!

''உண்மைதான். ஒருமுறை கணவனால் கைவிடப்பட்ட பெண் வாழா வெட்டியாக அம்மா வீட்டில் இருந்தப்போ பக்கத்து வீட்டுப் பையனோடு நட்பு ஏற்பட்டுப் போச்சு. அந்தப் பெண் கர்ப்பமும் ஆயிட்டா. அந்தப் பெண்ணிற்கும், அந்த இளைஞனுக்கும் யாருக்கும் தெரியாம பதிவுத் திருமணம் செய்து வைத்தோம். இந்த விஷயத்தில் நான் இருந்தேன் என்பது யாருக்குமே தெரியாது. ஊர்ப் பஞ்சாயத்தை மீறி ரெஜிஸ்டர் மேரேஜான்னு ஊரே அமர்க்களப்பட்டது. பஞ்சாயத்து கூடி அவங்களுக்கு அபராதம் விதிச்சாங்க. என்னோட சிஷ்யர்கள் விஷயத்தை சுமுகமாக முடித்து விட்டார்கள்.

அதே போல பல சமயம் பல பிரச்னைகள் வர்றப்ப நான் பஞ்சாயத்துப் பிரசிடெண்டிடம் நேரிடையாக அறிவுரை போல சொல்ல முடியாது. யாரிடமோ, எதற்கோ சொல்வது போல அவர் காதுபட



சொல்வேன். அநேகமாக நான் சொல்வது அவருக்குச் சரியென்று படும் என்பதை அவர் சொல்லும் தீர்ப்பிலிருந்தே தெரிந்து கொள்ளலாம்!''

இவரோ இருபத்திரண்டு வயது திருமணமாகாத இளம் பெண். இருப்பதோ குக்கிராமம். சட்டென்று ஏதேனும் பேசி விடுவார்களே...

''அந்த மாதிரி பேச்சு மட்டும் இங்கு வந்ததே கிடையாது. என்னிடம் படிக்கும் இளைஞர்களுக்கு நான் டீச்சர்தான். எனக்கு மேல் உயரமாக இருந்தால் கூட சரியாகப் படிக்கவில்லையென்றால் அடிதான். நறுக் கென்று குட்டுவேன்.

ஆனால் நான் வெளியூருக்கு ஆஃபீஸரைப் பார்க்க, பேங்கிற்குப் போக என போய் விட்டு ஆறு மணியாகியும் வரவில்லை யென்றால் பஸ் ஸ்டாண்டில் கூட்டம் கூடி விடுவார்கள். 'டேய், டீச்சர் இன்னும் வரலே. சைக்கிளை எடுத்துட்டு பஸ் ஸ்டாண்ட்ல போய் நில்லு' என அவரவர் வீட்டிலேயே விரட்டுவார்கள்... எனக்கு இங்கு அத்தனை பாதுகாப்பு...'' என வெள் ளையாகச் சிரிக்கிறார்.

''நீங்கள் பிறந்து வளர்ந்ததோ நகர நாகரிகத்தில். இங்கு முற்றிலும் வித்தியாசமான வாழ்க்கை. உங்களை யாரேனும் 'இதென்ன பைத்தியக்காரத்தனம்?' என்று கேட்கவில்லையா? இல்லை, உங்களுக்கே என்றேனும் விரக்தி வந்ததில்லையா?''

''என் ஃபேரெண்ட்ஸ், சொந்தக்காரங்க ஆரம்பத்தில கேலி பண்ணி இருக்காங்க. அப்புறமா இப்ப குறைஞ்சு போச்சு. நான் ஆரம்பத்தில பல தடைகளைச் சந்திக்க நேர்ந்தப்ப அழுதிருக்கிறேன். நாம தப்புப் பண்ணிட்டோமோ'ன்னு. ஆனா தைரியமா முன்னேறியாச்சு.''

''எல்லோரும் சொல்ற மாதிரி, இப்ப இதெல்லாம் சரி. கல்யாணம் ஆனப்புறம் என்ன பண்ணுவீங்க...?''

''இந்தக் கிராமத்திலேயே இருந்து என் பணிகளைத் தொடர சம்மதிப்பவரைத்தான் நான் கல்யாணம் பண்ணிப்பேன். அவர் கலெக்டரா இருந்தாக் கூட இந்தக் கிராமத்துல வந்துதான் என்னை அவர் பார்க்கணும்...'' என்கிறார் அழுத்தமாக.

இந்தப் பட்டதாரி இரண்டு பசு மாடுகளையும் வாங்கிப் போட்டிருக்கிறார்! ஏனென்றால் இவர் சங்கத் தலைவியாயிற்றே! இவரைப் போல கிராமத்திற்கு ஒரு ஜான்சி தோன்றினால் போதும்! நாடு எங்கே போகிறது என்று கவலைப்பட வேண்டாம்!

ஜான்சி போன்ற பெண்கள் இந்த ஊர்களில் இல்லாவிட்டாலும் கூட, விராலிப்பட்டி அருகே பல ஊர்களில் பெண்கள் கூட்டுறவு சங்கங்களை ஏற்படுத்தி இருப்பதை ஆவின் மக்கள் தொடர்பு அதிகாரி சிவகாமிநாதன் அழைத்துக் கொண்டு போய்க் காண்பித்தார்.

குருந்தம்பட்டியில் நாகம்மாள் சொன்னார் :

''இங்கே காடுகள் அதிகம். நாங்க பிழைப்புக்காகக் காடுகளில் மரங்களை வெட்டி பிழைப்பு நடத்துவோம். அதனால காடுகள் அழிய ஆரம்பிச்சது. காட்டிலாகாவைச் சேர்ந்த அதிகாரிகள் எங்களை வந்து பார்த்து, ''இந்த மாதிரி காடுகளை அழிச்சா அதனால நாட்டுக்கே கெடுதல். நீங்க

உங்களுக்குள்ள சங்கம் அமைக்க பால் வியாபாரம் செய்யுங்க. அதற்குத் தேவை யான உதவிகளைச் செய்கிறோம் என்றனர். அதன்படி நாங்க சங்கம் அமைத்து மாடு வாங்கி பால் வியாபாரம் செய்கிறோம்'' என்றார்.

இங்கு கிருஷ்ணவேணி, புஷ்பவதி போன்ற சில பெண்கள் வெளியூரில் இருந்து திருமணம் செய்து இங்கு வந்த வர்கள். ''எங்களைப் போன்றவர்களுக்குத் தையல் பயிற்சி வகுப்புக்கள் நடத்தினால் நன்றாக இருக்கும். எத்தனையோ இளம் பெண்கள் பயன் அடைவார்கள். ஆனால் யார் எங்களுக்கு உதவி செய்வார்கள்?'' என்று வருத்தப்பட்டார்கள்.

காக்காயனூர் எனும் சிறு கிராமத்தி லுள்ள மகளிர் பால் சங்க உறுப்பினர்களோ பொருளாதார நிலையிலும் சரி, கல்வி நிலையிலும் சரி இன்னும் கீழ்நிலையில் இருப்பவர்கள். இவர்கள் பெண்களைப் படிக்க அனுப்ப மாட்டார்களாம்.

''வயசுக்கு வந்த பசங்களை பள்ளிக் கூடத்துக்கு எப்படி அனுப்பறது? பஸ் ஏறி இல்ல போவணும்? நாலாவது அஞ்சாவது படிக்கும். அவ்வளவுதான். அப்புறமா கட்டிக் குடுத்துடுவோம்'' என்கி றார்கள் சர்வ அலட்சியமாக.

எது எப்படியாயினும் திண் டுக்கல்லைச் சுற்றியுள்ள இது போன்ற நிலமற்ற ஏழைப் பெண்களுக்கு இந்தப் பால் கூட்டுறவு சங்கம் பெரும் வரப்ரசாதம்தான். சாதாரணமாக வயல் களில் வருடத்திற்கு மூன்று மாதம் வேலை கிடைத்தாலே பெரிய விஷயம். அதிலும் ஆணுக்குப் பதினைந்து ரூபாய் கூலி என் றால் பெண்ணுக்கு ஐந்து ரூபாய்தான். பஞ்சமும், பட்டினியுமாக வாழ்க்கை நடத் தியவர்கள் இப்போது சுயதொழில் செய்கி றார்கள். மாட்டைப் பராமரிக்கும் வேலை யும், பாலை விற்று அதனால் வரும் பண மும் இவர்களுக்குள் பெரும் மாறுதலை ஏற்படுத்தி வருகிறது.

''பாலுக்குக் கொடுக்கும் விலை குறைவு, மாட்டுத் தீவனம் கிடைப்ப தில்லை'' எனப் பல குறைகள் இவர் களுக்கு இருந்தாலும், அதையும் மீறி எங்க ளுக்கென ஒரு வாழ்வு கிடைத்துள்ளது எனும் மகிழ்ச்சி இவர்கள் முகத்தில் நிலவத்தான் செய்கிறது.

புதிய ஹமாம்...
எனக்கும் இதுதான் பிரியம்!



அதில் ஆச்சரியமொன்றுமில்லை!
புதிய ஹமாமின் சிறப்பே அலாதி.
புதிய ஹமாமின் உயர்ந்த ஃபார்முலாவினால்
கூடுதல் வளமான நுரை. மேனியிலே
பட்டுபோன்ற மென்மையும், மனதிலே
புத்துணர்ச்சி பொங்கிடும் அனுபவமும் தந்திடும்.
இதுவே புதிய ஹமாமின் சிறப்பாகும். புதிய
ஹமாம் வீட்டில் அனைவரின் மனதையும்
வென்று நிற்கிறது.

புதிய ஹமாம்.
குடும்பத்தினர் அனைவரும் விரும்புவது நேற்றும் இன்றும்.

கூடுதல் நுரை.
கூடுதல் மென்மை.

CLARION/B/T/64/244 TAM

டாடா தயாரிப்பு



அலுக்காமல் அனுபவிக்கும் நவராத்திரி

நவராத்திரி வந்துவிட்டது. ஒரு பக்கம் ஆகா என்று குழந்தைகளின் சந்தோஷம். ஆனால் மறுபக்கம் தாய்மார்களின் ஆதங்கம். ஐயோ, விலைவாசி விற்கிற நடப்பில் என்ன நவராத்திரியோ, சிவராத்திரியோ என்கிற அலுப்பு. அப்பப்பா, இப்பொழுது தான் நோன்பு முடிந்து அஷ்டமி முடிந்து திரும்பிப் பார்க்கும் முன் இன்னும் பத்து நாள் நவராத்திரி செய்து குழந்தைகளைச் சமாளித்து, திரும்பினால் தீபாவளி. முழி பிதுங்கி விட்டது போங்கள், என்று எல்லோர் மனதிலும் புலம்புவது கேட்கின்றது.

ஆனால் சகோதரிகளே!

நீங்கள் உங்கள் வயதில் அலுத்துக் கொள்வது நியாயம்தான். ஆனால் உங்கள் குழந்தைகளை நினைத்துப் பாருங்கள். அவர்களுக்கு இதுதான் அலுக்காமல் அனுபவிக்கும் வயது. இந்த வயதில் நீங்கள் பண்டிகைகளுக்கு ஆர்வம் காட்டத் தவறினால் பிற்காலத்தில் அவர்களுக்கு எந்தப் பண்டிகையுமே செய்யத் தெரியாமல் போய்விடும். ஆம் இன்னும் பத்து நாள் லீவ் விட்டால் வீடு இரண்டுதான் என்று நீங்களே அலுக்காமல் அவர்களுக்கு அட்டவணை அமைத்துக் கொடுத்து ஊக்குவித்தால், அடுத்த நவராத்திரியை அவர்களே உங்களை முந்திக் கொண்டு செய்து விடுவார்கள்.

இதைக் குழந்தைகளுக்காகச் செய்யும் நவராத்திரி என்று நீங்கள் மனதில் நினைத்துக் கொண்டு இந்த எளிய வழிகளைக் குழந்தைகளுக்குக் கற்றுக் கொடுக்கலாம். செலவு அதிகம் இல்லாமல் சிக்கனமாக செய்யக் கற்றுத் தரலாம். சின்ன அட்டை (நோட்டுக் அட்டை) எடுத்துக் கொண்டு அதில் சில பொம்மைகளை வரைந்து கொடுத்து கத்தரித்துக் கொள்ளச் சொல்லவும். சில கலர் பேப்பரை வாங்கி அதில் மாநில வாரியாக பொம்மைகளை அலங்காரம் செய்யச் சொல்லித் கொடுக்கலாம். (ஆந்திரம், கேரளம், கர்நாடகம், தமிழ்நாடு என்று) பிறகு ஒரு பெரிய அட்டை அல்லது வெள்ளைத் தாளில் இந்தியா வரைபடம் வரைந்து அதில் அந்தந்த மாநில பொம்மைகளை ஒட்டச் செய்யலாம். இது ஒரு தேசிய ஒருமைப்பாட்டைக் காட்டும். குழந்தைகளுக்கும் பாட சம்பந்தப்பட்டதாக இருக்கும்.

மாலை நேரங்களில் தாய்மார்கள் சிறிய கோலங்களைக் கீழே வரைந்து அதில் செலவு இல்லாமல் (மஞ்சள், குங்குமம், நீலம், காப்பிப் பொடிச் சக்கை, அரப்புத்தூள்) போன்ற கலர்ப் பொடிகளைப் போட்டு அழகு படுத்தலாம். அதையே குழந்தைகளைச் சிறிய அட்டை அல்லது பேப்பரில் வரைந்து ஸ்கெட்ச் அல்லது கலர் பென்சிலில் போடச் சொல்லிக் கொடுக்கலாம். தினமும் அவர்கள் வரைந்ததையும் கொலுவில் வைக்கலாம். இதனால் அவர்களது ஆர்வம் கூடி வருவதை நீங்களே



காணலாம். சிறுவர்கள் இருந்தால் அவர்களையும் அவர்களுக்குத் தோன்றிய சித்திரங்களை வரையச் செய்து கலர் அல்லது பெயிண்ட் செய்து வைக்கச் சொல்லி உற்சாகப் படுத்தலாம்.

குழந்தைகள் செய்த பொம்மை யில் கத்தரித்து விழுந்த துண்டுக் கலர் பேப்பரில் அழகான சிறிய பர்ஸ் அல்லது முக்கோண வடிவம், ஸ்டார் எல்லாம் செய்து அதில் மஞ்சள் குங்குமம் போட்டு வரும் சுமங்கலிகளுக்கு வைத்துக் கொடுக் கலாம். மற்றும் பத்து வயதுக்கு மேற்பட்ட குழந்தைகளுக்குப் பருத்தி வாங்கிக் கொடுத்து பொம்மை செய்யச் சொல்லலாம் அல்லது அதில் வஸ்திரமாலை செய்யக் கற்றுத் தந்து, நடுவில் எல் லாம் அழகான கலர் சம்க்கி வாங்கி ஒட்டச் சொல்லி எல்லா படங்களுக் கும் மற்றும் பெரிய பொம்மை களுக்கும் போடச் சொல்லலாம்.

இனி அடுத்தது, பொம்மையை வைத்து விட்டு அழைக்கப் போக மாட்டேன் என்கிறாள் என்று நீங்களே அலுக்காமல் குழந்தைகளை 'நீ, போட்ட பொம்மை, கோலம் எல்லாவற்றையும் பார்க்கப் பக்கத்தில் உள்ள ஆண்ட்டியை அழைத்து விட்டு வா' என்று ஊக்கப்படுத்தினால் மறுநாள் முதல் நீங்கள் சொல்லும் முன்பு உங்கள் மகள் கிளம்புவதைக் காணலாம். உங்கள் அக்கம்பக்கத்து வீட்டில் இருப்பவர்களுடன் சேர்ந்து கொண்டு, எல்லா குழந்தைகளையும் அழைத்து நான்கு அல்லது எட்டு வரிகளில் ஏதாவது ஒரு ஸ்லோகம் காலையில் எழுதிக் கொடுத்து மாலையில், அவர்கள் பார்க்காமல் சொல்ல வேண்டும் என்று கூறினால், போட்டி யினால் குழந்தைகள் மனப்பாடம் செய்து சொல்லி விடுவார்கள். பத்தாவது நாள் ஒரு முழு ஸ்லோகத்தைக் (ஸ்ரீ மஹிஷாஸுரமர்தினி, ஸ்ரீதுர்கா ஸ்தோத்திரம், ஸ்ரீ மஹாலக்ஷ்மி ஸ்தோத் ரம்) குழந்தைகள் கற்றுக் கொண்டதைக் கவனிக்க லாம்.

சகோதரிகளே, இவை எல்லாம் உங்கள் ஊக்கத்தில் இருக்கிறது. அதே போல் காலையில ஒரு மணி நேரம் பள்ளிப் பாடங்களைப் படி என்று சொன்னால் அவர்கள் நிச்சயம் படித்து விடு வார்கள். ஆமாம் இவ்வளவும் செய்து விட்டு மாலையில் கொலுவிற்கு என்ன செய்வது என்று யோசிக்க வேண்டாம். இதோ அதற்கும் சில எளிய முறைகள் :

1. 100 கிராம் வெள்ளை எள்ளு எடுத்து வறுத்து மிக்ஸியில் பொடித்து வைத்துக் கொள்ள வும். தேவையானால் அவசரத்திற்கு வெல்லம், நெய் சேர்த்து உருண்டை செய்து கொடுக்கலாம். வறுத்த பொடி மீதம் இருந்தால் தோசை இட்லி மிளகாய்ப் பொடியில் கலந்து வைத்து உபயோ கிக்கலாம்.


2. உடைத்த கடலை (பொட்டுக் கடலை) மிக்ஸியில் அரைத்து வைத்துக் கொண்டால், சிறிது சர்க்கரை சேர்த்து பொட்டுக்கடலை பொடியாகக் கொடுக்கலாம். இல்லாவிட்டால் அவசரத்திற்குத் தேங்காய், பச்சை மிளகாய் சேர்த்து சட்னி செய் தும் கொள்ளலாம்.

3. சுண்டலுக்குப் போடும் பயறுகளை வேக வைத்துக் கொண்டு ப்ரிஜ்ஜில் வைத்து விட்டால், கொத்துக்கடலை, பட்டாணி, தட்டைப் பயறு போன்றவற்றைக் கூட்டிற்கும் கறிகாயுடன் சேர்த் துக் காலையில் உபயோகப்படுத்தலாம். மாலை யில் தாளித்துச் சுண்டல் செய்து கொள்ள லாம்.

4. தட்டைப் பயறு, பச்சைப்பயறு போன்ற வற்றை வேகவைத்து பாதி எடுத்து வைத்து விட்டு ஒருநாள் காரம் போட்டு சுண்டல், மறுநாள் வெல்லம் சேர்த்தும் செய்யலாம்.

நவராத்திரிக்குக் கொடுக்கும் அன்பளிப்புகள் பெண்கள் ஆசையோடு பயன்படுத்தத் தக்கவையாய் இருக்க வேண்டும். 'கட்பீஸ்' எனப் பயன்படுத்த முடியாத ரவிக்கைத் துணிகளைவிட சிறிய பொருளானாலும் பயன்படுத்தும் பொருளாகக் கொடுங்கள்.

– மாலதி




5. மைதா மாவில் சிப்ஸ் செய்து வைத்துக் கொள்ளலாம். அதிலும் பாதி காரம், மறுபாதிக்கு சர்க்கரை சேர்த்து அல்லது பாகில் போட்டும் செய்யலாம்.

ஆமாம், நாம் எப்பொழுது மற்றவர்கள் வீட்டிற்குப் போய் வருவது, இப்படியே வீட்டிலேயே சரியாக இருக்கிறது என்று எண்ணாமல், ஒருநாள் நீங்கள் வெளியே சென்று வர நேர்ந்தெடுத்துக் கொண்டு, அன்று உங்கள் மகன் அல்லது மகளிடம் வருபவர்களைக் கவனிக்கச் சொல்லி விட்டு, அப்படியே உங்கள் அன்பான கணவரையும் தாஜா செய்து ஒரு நாள் வீட்டைப் பார்த்துக் கொள்ளச் சொல்லி விட்டுச் செல்லவும். அதே போல் உங்கள் நெருங்கிய சிநேகிதி அல்லது உறவினர்களை நேரில் சென்று அழைக்க முடியாவிட்டால், சிக்கனமாக 15 பைசா செலவில், உங்கள் குழந்தைகளை விட்டே அழகான பொம்மைகளை வரையச் செய்து அதிலேயே அழைப்பிதழ் எழுதி அனுப்பினால், அவர்களும் உங்களை ஏமாற்றாமல் குறித்த நேரத்தில் வந்து உங்களை மகிழ்விப்பார்கள்.

இவைகளை அலுக்காமல், மன மகிழ்ச்சியோடு செய்து எல்லாம்வல்ல துர்க்கை, லக்ஷ்மி, சரஸ்வதியின் அருள் பெறுங்கள். குழந்தைகள் அடுத்த நவராத்திரியை ஆவலுடன் எதிர்பார்ப்பதை நீங்கள் காணலாம்.

– இராஜேஸ்வரி குமார்



– ஆர். பத்மாவதி

SOLID

These are troubled times.

'Smart' operators who were offering 'incredible' deals, suddenly appear to be neither smart nor credible. Which is why you need to invest in a really solid company – one that will ensure your interests.

A company like CLIF.

Coimbatore Lakshmi Investment & Finance. Part of the 500 crore Lakshmi Group of Companies.

Do you really need the backing of a 500 crore Group to make a 5000 rupee deposit?

Yes, you do. When you deposit your money with CLIF, you know it's being managed with the same expertise that has built such a large group over the years. The same sense of responsibility that has earned the trust of millions, over 3 generations. The same philosophy which places the company's well-being side-by-side with society's well-being.

OK. The Lakshmi Group is philanthropic. What does that mean to a depositor?

A great deal. The Lakshmi Group runs hospitals, schools, colleges and even temples, through various trusts. Institutions that have been built through decades of commitment. To you, this means that CLIF is part of a group that cares for society and believes in being a responsible corporate citizen. So with CLIF, you get sincere responsible people to handle your deposit.

And the assurance that your money couldn't be in safer hands.

Solid. That's what CLIF is. Backed by a 500 crore group, with 80 years of trust and experience. And a sincere commitment to responsible management of money.

Your money.

Clif

Coimbatore Lakshmi Investment & Finance Co. Ltd.

(A LAKSHMI GROUP COMPANY)

Corp. Office : Krishna Towers,
1087-D, Avanashi Road, Coimbatore - 641 037.
☎ 211621 / 210199 / 214607 / 210532.

Branches : "Crown Court", 34, Cathedral Road, Madras - 600 086.
20-A, Jawharlal Nehru Street, Pondicherry - 605 001.

You can trust Lakshmi.

FIXED DEPOSIT SCHEME
Interest payable Monthly Quarterly Annually

Period	Rate
25 months	15% as per RBI guide lines
36 months	
48 months	
60 months	

In multiples of Rs. 1000 subject to a minimum of Rs. 1000

CUMULATIVE DEPOSIT SCHEME

Amount	Period (in months)	Maturity Value Rs.	Annual yield
Rs. 1000	25	1364	17.47%
	36	1564	18.80%
	48	1815	20.38%
	60	2107	22.14%

In multiples of Rs 1000 subject to a minimum of Rs 2000

RECURRING DEPOSIT SCHEME

PERIOD (Months)	MATURITY VALUE ON MONTHLY DEPOSIT OF Rs.100	Rs 200	Rs.300	Rs.400	Rs.500
25	2950	5900	8850	11800	14750
30	3658	7316	10974	14632	18290
36	4568	9136	13704	18272	22840
42	5546	11096	16645	22193	27741
48	6604	13209	19813	26418	33022
54	7742	15484	23227	30969	38711
60	8968	17936	26905	33873	44841

HIGHLIGHTS

- Good profit records since inception
- Personal accident insurance for every depositor
- Loan upto 75% of the deposit available on easy terms
- Outstation cheques are accepted at par
- Interest payable from the date of receipt of cheque
- Monthly interest on deposit of Rs. 5,000 and above
- Outstation repayment by demand draft
- Computerised FD Receipts
- MICR Interest Warrants are payable at par at all branches of State Bank of India
- Interest payable as per RBI norms on premature withdrawals

Seagull CLIF 172

This is in continuation of the advertisement that appeared in Dinamalar on 26.8.92.

Fixed Deposits. Hire Purchase. Leasing. Financial Services.

கொலுவிற்கு நாமே தயாரிக்கலாமே!


கொலுவில் கடையிலிருந்து வாங்கி வைக்கும் பொம்மைகளை விட, நாமே தயாரிக்கும் பொருட்களைத்தான் சிறியவர்கள் முதல் பெரியவர்கள் வரை ஆர்வமாகப் பார்க்கிறார்கள். இங்கே சில எளிய கொலுவிற்கான அலங்காரங்கள் -

1. மணல் கொட்டி போடும் எந்தவித செட்டிங்கானாலும் சரி, ஓரம் முழுவதும் கலர் கோல மாவினால் பட்டை கோடுகளாகவோ (அ) கம்பிகளாகவோ இரண்டு, மூன்று நிறங்களில் இட்டால் செட்டிங்குகள் மிகவும் எடுப்பாகக் காட்சி தரும்.

2. மண்பானை கடைகளில் விற்கும் சிறுசிறு செப்புகளில் மணலைக் கொட்டி, அதில் பிளாஸ்டிக் பூங்கொத்துக்கள் (அ) இயற்கைப் பூக்களை இலைகளுடன் கிள்ளி மணலில் செருகி செட்டிங்கில் ஆங்காங்கே வைக்கலாம்.

3. இந்தப் பூக்களுக்குப் பதிலாகக் கலர் பேப்பர்கள் (அ) தோரணம் கட்டும் கலர் பேப்பர் நாடாக்கள் போன்றவற்றை வேண்டிய டிசைனில் இதழ் இதழாக வெட்டி. தென்னங்குச்சியில் ஒன்றன் கீழ் ஒன்றாக எதிர் எதிர் புறங்களில் நூலால் கட்டி விட வேண்டும். ஐஸ்-க்ரீம் கப்புகளிலும் செருகலாம். கலர் காம்பினேஷன், இதழ்கள் வெட்டும் பாங்கில்தான் இதன் அழகு அமையும். இல்லாவிட்டால் எல்லா கலரிலும் செய்து ஒரே இடத்தில் கொத்தாக செருகி வைத்தாலும் நன்றாக இருக்கும்.

4. குழந்தைகள் போடாமல் இருக்கும் உடைகளிலிருந்தும், காலண்டரிலிருந்தும் பறவைகள், பூக்கள் போன்றவற்றை வெட்டி எடுக்கவும். தாம்பாளத்தின் அடிப்புறம் பசை தடவி வெட்டிய துண்டை நடுவில் ஒட்ட வேண்டும். இதைச்சுற்றி கலர் கோல மாவினால் டிசைன் செய்து விட வேண்டும். பசை தடவி உள்ளதால் இதைச் செங்குத்தாக சுவற்றில் சாய்க்கலாம். இடத்தையும் அடைக்காது.




5. பிள்ளையார் சதுர்த்தி அன்று வாங்கும் (நூலில் செய்த) குடையைத் தூக்கி எறியாமல் ஒட்டலுக்குப் பக்கத்திலோ, நீச்சல் குளத்திற்குப் பக்கத்திலோ செருகி, இரண்டு பொம்மைகளை அதன் கீழ் வைத்து விட வேண்டும்.

6. பிளவர் வாஸ்களில் மணலைக் கொட்டி பூங்கொத்துக்களைச் செருகி வைக்கின்றோம். மேற்புறம் மணல் தெரியாமல் இருக்க வீட்டில் உபயோகித்த ஸ்ட்ரா குச்சிகளைச் சிறு சிறு



துண்டுகளாக வெட்டி மணல் தெரியாதபடி போட்டுவிடலாம். இதை இயற்கைப் பூச் சாடிகளிலும் போடலாம். ஸ்ட்ரா குச்சிகள் நீரை உறிஞ்சாது.

7. தென்னங்குச்சியில் குச்சி மனிதனை ( ) இவ்வாறு செய்துகொள்ளவேண்டும். முகத்திற்குப் பழைய மை டப்பாவை வைத்துக் கட்டி விட வேண்டும். குச்சி, மை டப்பா தெரியாதபடி வெள்ளைத் துணியால் சுற்றிக் கொள்ள வேண்டும். சாந்துப் பொட்டு, மை ஆகியவற்றால் முகம், முடி வரைந்து கொள்ளவும். கையில் லாலிபாப்



குச்சியைச் செருகி வயல் செட்டிங்கில் காவல் காப்பது போல வைக்கலாம்.

8. கொலுவைப்பதற்கு ஒரு வாரம் முன்பு தாம்பாளத்தில் மண்ணை நிரப்ப வேண்டும். (மணல் அல்ல). நல்வரவு (அ) வெல்கம் போன்றவற்றை நன்கு அழுந்த விரலால் எழுத வேண்டும். நமக்குப்பிடித்த விதைகளை (நாங்கள் போட்டது வெந்தயம்) போட்டு மூடி வெயில் படும் படி வைத்துத் தினமும் நீருற்ற வேண்டும். நாம் எழுதிய எழுத்துக்களுக்கு ஏற்ப செடிகள் வளர்ந்து பார்க்க நன்றாக இருக்கும்.,

9. மிக்ஸி, ஃபேன் வாங்கும் பொழுது - வட்டவடிவமான, செவ்வக வடிவமான தெர்மா கோல்களில் அவை வரும் வட்டமாக இருப்பதில் நீரை ஊற்றி பச்சைக்கலர் இங்க் சிறிது ஊற்றி கிராம செட்டிங்கில் குளமாக வைத்து விடலாம். செவ்வக டைப்பில் நீரை ஊற்றி நீலக் கலர் இங்க் சிறிது ஊற்றி விட்டால் நீச்சல் குளம் ரெடி. இவை இரண்டும் மணலில் நன்கு புதையும் படி அமைக்க வேண்டும். பக்கவாட்டு தெர்மா கோல் வெளியில் தெரியக்கூடாது. ஆனால் மேற்புறம் தெரியலாம்.

10. அலுமினியப் பாத்திரத்தைத் தலை கீழாகக் கவிழ்த்துப் போட்டு பசை தடவி, பச்சைக் கலரைப் பூச வேண்டும். அதன் மீது புல்லை ஆங்காங்கே ஒட்டி விட வேண்டும். இப்பொழுது மலை ரெடி. இதன் மேல்பாகம் குறிந்து இருப்பது போல் செய்து அதில் லிங்கத்தை வைத்து விட வேண்டும். – அரவிந்தலோசனி

நவராத்திரி ஸ்பெஷல் இனிப்புச் சுண்டல்கள் :

நவராத்திரியில் எல்லோருமே கார சுண்டல்கள் செய்வார்கள். காராமணியை மட்டும் ஸ்வீட் சுண்டலாகச் செய்வார்கள். பயறு, உளுந்து, ப.பருப்பு, க.பருப்பு,



கேரட், கொள்ளு இவைகளைக் கொண்டும் 'ஸ்வீட்' சுண்டல் செய்யலாமே! பக்குவங்கள் இதோ.

1. பயறு : பயறை வறுத்து, கழுவி, கல்நீக்கி ஆவியில் நன்றாக வேக வைக்கவும். கையால் நசுக்கினால் மாவாக வேண்டும். ¼ கிலோ பயறுக்கு 300 வெல்லம் பாகாக வைத்து (வெல்லத்தில் உள்ள மண்ணைநீக்கவும்) வெந்த பயறைப் போட்டுக் கிளறி 1 தேங்காய் மூடியைத் துருவிக் கொட்டிக் கிளறி ஏலப்பொடி சேர்த்து இறக்கவும்.

2. கறுப்பு உளுந்து : கறுப்பு உளுந்தை நன்றாக வறுத்து, ஆவியில் நன்றாக வேக வைக்கவும். கால்கிலோக்கு 350 வெல்லம் பாகு வைத்துக் கிளறி, 1 தே. மூடி துருவிப் போட்டு இறக்கவும்.

3. பயத்தம்பருப்பு இனிப்புச் சுண்டல்: பயத்தம்பருப்பை நன்றாக வறுத்துக் கழுவி கல்நீக்கி, சட்டியில் (வாணலியில்) வேக வைக்கவும். முக்கால் வேக்காடு போதும். (நசுக்கினால் நசுங்க வேண்டும்) ¼ கிலோ ப. பருப்புக்கு ¼ கிலோ வெல்லம் போட்டுக் கிளறி, நீர் வற்றியதும், தே. மூடி ஒன்றைத் துருவிப் போட்டு இறக்கவும்.

4. கேரட் : ப. பருப்பு சுண்டலில் 1/4 கிலோ காரட்டையும் துருவி வதக்கி, 400 வெல்லத்தைப் போட்டு, தே. துருவல் போட்டுக் கிளறி இறக்கவும். பார்க்க அழகாயும் ருசியாயும் இருக்கும்.

5. கடலைப்பருப்பு : கால் கிலோ கடலைப் பருப்பை வறுத்து, நீர் விட்டு வேகவைத்து, நன்றாக வெந்ததும் 200 சர்க்கரையைக் கொட்டிக் கிளறி, தே. மூடி ஒன்றைத் துருவிப் போட்டு, நெய் 1 ஸ்பூன் விட்டுக் கிளறி இறக்கவும். எல்லா இனிப்பு சுண்டல்களுக்குமே 1 (அ) 2 ஸ்பூன் நெய் விட்டுக் கிளறி இறக்கினால் வாசனையாய் இருக்கும்.

6. கொள்ளு : கால் கிலோ கொள்ளு தானியத்தை வறுத்து நீர் விட்டு குக்கரில் வேகவைக்கவும். 300 வெல்லம் பாகு காய்ச்சி, வெந்த 'கொள்ளு' தானியத்தைப் போட்டுக் கிளறி, தே. மூடி ஒன்றுத் துருவிக் கொட்டிக் கிளறி இறக்கவும்.

தானிய சுண்டல் :

தேவையான பொருட்கள் :
நிலக்கடலை - 100 கிராம்
பொட்டுக்கடலை - 100 கிராம்
கொத்துக்கடலை (சிவப்பு) - 100 கிராம்
பயறு - 100 கிராம்
கொள்ளு - 100 கிராம்
உப்புப் பொடி - தேவைபோல்
காரப்பொடி - 2 ஸ்பூன்
நெய் - 2 ஸ்பூன்

செய்முறை :

பயறு, கொள்ளு, கொத்துக்கடலை இவற்றை இரண்டுமணி நேரம் ஊறப் போடவும். ஒரு பாத்திரத்தில் பொட்டுக் கடலை, தோலுரித்து இரண்டாக்கிய நிலக் கடலை, உப்பு, காரப்பொடி இவற்றைப் போடவும். ஊறவைத்த தானியத்தை வடிகட்டி தனித்தனியே வெற்று வாணலியில் பொரிபடும்படி வறுக்கவும். பாத்திரத்தில் இடவும். வாணலியை அடுப்பில் போட்டு நெய் விட்டு, எல்லா பொருள்களையும் கொட்டிக் கிளறி (4 நிமிடம்) இறக்கவும். 'தானியகார சுண்டல்' ரெடி.

- கமலா

பெரிய சைஸ் பழைய குக்கருக்கு ரூ. 120 - ம், சிறிய சைஸுக்கு ரூ. 75 ம் புதிய குக்கர் விலையில் தள்ளுபடி செய்து கொடுப்பதாகச் சொல்கிறார்கள். இந்த விலைக்கு இவ்வளவு கனமான பாத்திரம் வேறு வாங்க முடியாது. இதில் அடிப் பிடிக்காமல் வடாம் கூழ் கிளறலாம். உப்புமா, திருவாதிரைக் களி, வெஜிடபிள் புலவு செய்யலாம்.

- பார்வதி





ஒரு வரி எழுதிப் போடக்கூடாதா?

சமீபத்தில் சென்னைக்கு வந்த போது ஒரு எழுத்தாள நண்பரைச் சந்தித்தேன். ''ஜனவரி இதழில் நீங்கள் எழுதியிருந்த சிறுகதை மிகவும் நன்றாயிருந்தது'' என்று பாராட்டினேன்.

அவர் சந்தோஷப்பட்டதாகத் தெரியவில்லை. அதற்கு மாறாக, ''ஜனவரி மாதம் வந்த கதைக்கு ஜூன் மாதம் வந்து பாராட்டுகிறீரே. நீர் உண்மையிலேயே அந்தக் கதையை ரசித்திருந்தால் உடனடியாக ஒரு பதினைந்து பைசா கார்டில் ஒரு வரி எழுதிப் போட்டிருக்க வேண்டும். அப்போது நான் மிகவும் சந்தோஷப்பட்டிருப்பேன். இப்போது வந்து கதை நன்றாயிருந்தது என்று சொல்வது, ஏதோ என்னைப் பார்த்து விட்டதால் கடனுக்குப் பாராட்டுவதைப் போல் இருக்கிறது!'' என்றார்.

நான் மிகவும் வெட்கப்பட்டுப் போனேன். எனது கடந்த கால வரலாற்றைப் புரட்டினேன். நான் கதை, கட்டுரை எழுதத் தொடங்கிய காலத்தில் இரண்டு, மூன்று நண்பர்கள் தவறாமல் பாராட்டிக் கடிதம் எழுதுவார்கள். அவற்றைப் படித்த போது எனக்கு எவ்வளவு சந்தோஷம் உண்டாயிற்று என்று எண்ணிப் பார்த்தேன். வீட்டில் பழைய காகிதக் குப்பைகளை ஒழிக்கிறேன் என்று ஆரம்பித்து உட்கார்ந்தவுடன் முதலில் அந்தக் கடிதங்கள்தான் கையில் அகப்படும். இன்று வரை அவற்றைத் தூக்கியெறிய மனம் வந்ததில்லை. திரும்பத் திரும்பப் படித்த பிறகும் அலுப்பு வருவதில்லை. அந்த நண்பர்களையும் மறக்க முடிவதில்லை. இந்தனைக்கும் அவர்களை நேரில் சந்தித்து இருபது வருஷங்களாகி விட்டன. ஆயினும் அவர்களின் பாலிருக்கும் அன்பும் தோழமையுணர்வும் குன்றவேயில்லை. இதுதான் அந்த ''ஒரு வரி''யின் மகத்துவம்.

எனது நண்பர் கோபாலனின் கைப்பையில் எப்போதும் இருபது தபால் கார்டுகள் இருக்கும். அவருடைய டயரியில் ஆயிரக்கணக்கான விலாசங்கள் இருக்கும். ஒரு நல்ல சிறுகதை அல்லது கட்டுரையைப் படித்தால், நல்ல நடனத்தைப் பார்த்தால் அல்லது கச்சேரியைக் கேட்டால் உடனே ஒரு தபால் அட்டையை எடுத்து, ''கொன்றாட்டீர், ஐயா,'' என்று ஆரம்பித்து மூன்று, நான்கு வரிகளில் பாராட்டி எழுதி அனுப்பி விடுவார். தமிழ் நாட்டிலுள்ள பிரபல எழுத்தாளர்கள், வித்வான்கள், நடனமணிகள் எல்லாருக்கும் அவருடைய பெயர் பரிச்சயமாகியிருக்கும். முக்கால்வாசிப் பேரை அவர் சந்தித்தும் இருப்பார். அவ்வளவு பேரும் அவரைத் தம் நண்பராக ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள். அவருடைய பெண்ணுக்குத் திருமணம் நடந்த போது பெரிய, பெரிய வித்வான்களும் எழுத்தாளர்களும் வந்து கலந்து கொண்டதைப் பார்த்து அவருடைய சம்பந்தி அசந்து விட்டார். கோபாலனைச் சம்பந்தியாக அடையப் பெற்றது தமக்குக்





கிடைத்த பெரும்பேறு என்று எண்ணத் தொடங்கி விட்டார் என்றால் பார்த்துக் கொள்ளுங்கள்.


வளரும் கலைஞனுக்கு, எழுத்தாளனுக்கு இத்தகைய பாராட்டுக் கடிதங்கள் பெரும் நன்மையைத் தரும் என்பது எனது சொந்த அனுபவம். சக மனிதர்களைப் பற்றி அக்கறையே படாத மனிதர்கள் நிறைந்த இந்த உலகில் குறிஞ்சி மலரைப் போல ஓரிருவர் இருந்து கொண்டு பிறருக்கு உற்சாகத்தையும் ஊக்கத்தையும் உண்டாக்குகிற வகையில் கடிதம் எழுதிப் பாராட்டுகிறார்கள். நாம் எல்லாருக்குமே அவ்வப்போது பாராட்டுக்களும் ஷொட்டுக்களும் தேவைப்படவே செய்கின்றன. சில பாராட்டுக் கடிதங்கள் சிலருடைய வாழ்க்கையையே மாற்றியமைத்து விடும்.



இப்படியான, ஒரு சிரமமற்ற, நல்ல காரியத்தைச் செய்கிறவர்களின் எண்ணிக்கை மிக மிகக் குறைவாயிருப்பதைக் கண்டு எனக்கு ஆச்சரியமாகவேயிருக்கிறது. அதற்குப் பல காரணங்களிருக்கலாம். முன் பின் தெரியாதவருக்கு எப்படிக் கடிதம் எழுதுவது? நண்பனுக்குப் போய்ப் பாராட்டுக் கடிதம் எழுதலாமா? அவன் தவறாக எண்ணிக் கொள்வானோ? காக்காய் பிடிக்கிறதாக நினைத்துக் கொள்வானோ என்றெல்லாம் தயக்கம் ஏற்படலாம். சின்னச் சின்ன சாதனைக்கெல்லாம் பாராட்டி எழுதுவதா என்று தோன்றலாம். எழுதுவதற்குச் சோம்பலாக இருக்கலாம். நேரில் பார்க்கிற போது பாராட்டி விட்டால் போகிறது என்று எண்ணலாம். ஆனால் வாய் வார்த்தைகள் காற்றில் கரைந்து, போகிறவை. கடிதம் அதிக வாழ்நாள் கொண்டது. திரும்பத் திரும்பப் படிக்கப் படுவது. ஒவ்வொரு முறை படிக்கும் போதும் சந்தோஷத்தைத் தருவது. நமது அன்புக்கும், நல்லெண்ணத்துக்கும் ஓர் அடையாளச் சின்னமாக விளங்கக்கூடியது. ஒரு பொக்கிஷமாகப் பாதுகாத்து வைக்கப்படக் கூடிய வாய்ப்புப் பெற்றது.

பெரிய மனிதர்கள் :

பண்டித நேருவுக்கு எதைப் பற்றிக் கடிதம் எழுதினாலும், "நன்றி, உங்கள் கருத்துக்களைக் கவனத்தில் இருத்திக் கொள்கிறேன்!" என்று ஒரு சிறிய பதில் வரும். ஜனாதிபதி புஷ் இவ்வாறு சின்னச் சின்னக் கடிதங்களை எழுதுவதில் மன்னர். தனது பேருக்கும் புகழுக்கும் அதுவே காரணம் என நம்புகிறார். பாராட்டு, புகழ்ச்சி, நன்றி என்று ஏதாவது கடிதம் எழுதிக் கொண்டேயிருப்பார். ஆப்ரஹாம் லிங்கனும் இது போலச் சின்னக் கடிதங்களை எழுதுவார். கடிதம் எழுதவே அவகாசமில்லை என்று சொல்வது எவ்வளவு பெரிய பொய் என்பதை இந்த உதாரணங்கள் நிரூபிக்கின்றன.



ஒரு கல்லூரி முதல்வரின் மேஜையில் உள்ளங்கை அகலத்தில் காகிதத் துண்டுகள் அடுக்கி வைக்கப்பட்டிருக்கும். கல்லூரி மாணவர் பேரவைத் தேர்தலை வெற்றிகரமாக நடத்தித் தந்ததற்கு நன்றி என ஒரு பேராசிரியருக்கு எழுதியனுப்புவார். பேச்சுப் போட்டியில் வெற்றி பெற்ற மாணவனுக்குப் பாராட்டு, அதிக சதவீதம் தேர்ச்சி பெற்ற வகுப்பின் ஆசிரியருக்குப் புகழ்ச்சி, கல்வித் துறைக்கு அனுப்ப வேண்டிய ஆவணங்களைத் தயார் செய்த அலுவலருக்கு நன்றி, ஒரு கத்தை கடிதங்களை ஒரே நாளில் தட்டச்சு செய்து கொடுத்த பெண்ணுக்கு ஊக்குவிப்பு என்று இரண்டு, மூன்று வரிகள் எழுதி அனுப்பிக் கொண்டேயிருப்பார். தனது அறையை நன்றாக நீர் விட்டுக் கழுவிப் பெருக்கி ஒட்டடையடித்துச் சுத்தம் செய்து வைத்த கடைநிலை ஊழியருக்குக் கூட ஒரு நன்றிக் கடிதம் எழுதினார். எல்லாரும் அவரை நேசித்ததில் வியப்பில்லை.

தலைமையதிகாரிக்குத் தன் பேரில் மரியாதை, மதிப்பு அல்லது நல்லெண்ணம் உள்ளது என்பதை அலுவலர்களுக்கு உறுதி செய்வதில் இத்தகைய கடிதங்களின் பங்கு மகத்தானது. அவர்களும் தலைமையதிகாரியிடம் மதிப்பு, மரியாதை, நல்லெண்ணம் உள்ளவர்களாகிறார்கள்.

செலவில்லாத காரியம் :


சுயநலமற்ற கண்ணோட்டமும், பாராட்டத் தயங்காத மனமும்தான் இதற்குத் தேவை. மனதில் உண்மையாகத் தோன்றும் உணர்வுகளை வெளியிடுவது, சுருக்கமாக, இரண்டு, மூன்று வரிகளில் சொல்ல விரும்புவதைச் சொல்வது, குறிப்பான விஷயத்துக்குப் பாராட்டுவது, பிறர் தூண்டுதலின்றித் தானாக முன்வந்து புகழ்வது ஆகியவை சிறப்பான பண்புகள். இந்தப் பண்புகளைப் பெற்றவர்கள் வாழ்க்கையில் உயர்ந்த நிலையை அடைகிறார்கள்.

''நீங்கள் அருமையாக எழுதுகிறீர்கள்'' என்று மொட்டையாகப் புகழ்வதை விட, ''நீங்கள் எழுதிய பெரிய கோவில் பற்றிய கட்டுரை அருமை'' என்று சொல்வதே அதிக மகிழ்ச்சி தரும்.

ஒரு கதையைப் படித்தவுடன் மனதில் தோன்றும் சந்தோஷத்தை உடனே எழுத்தில் வடித்து ஆசிரியருக்கு அனுப்புவது, உங்களுடைய நம்பகத் தன்மையைக் காட்டும். கைவசம் எப்போதும் பத்து தபால் அட்டைகளை வைத்திருப்பது இதற்கு உதவும். தபாலாபீஸ் போய், கார்டு வாங்கி எழுதலாம் என்று எண்ணினால் அந்த சுயம்பு உணர்வு மங்கிச் செயற்கையான உணர்வுகள்தான் தோன்றும்.

புகழ்வதில் கஞ்சத்தனம் பண்ணாதீர்கள். சுமாரான திறமையுடன் காரியம் பண்ணுகிறவரைக் கொஞ்சம் புகழ்ந்தால், அவர் முயற்சி பண்ணித் தன் திறமையை வளர்த்துக் கொள்ள முயலலாம்.

உங்கள் எண்ணங்களை எழுத விலையுயர்ந்த காகிதங்களும், பூ வேலைப்பாடு செய்த உறைகளும் தேவையில்லை. சாதாரண 15 பைசா கார்டு போதும். நோக்கம்தான் முக்கியம். கருவி அல்ல.



இந்தக் கட்டுரையைப் படித்து முடித்ததும் உங்களுக்கு உடனே என்னைப் பாராட்டி எழுத வேண்டும் என்று தோன்றும். ஜமாயுங்கள்.

– கே. என். ராமசந்திரன்

மேனிக்கு அளித்திடும் மென்பட்டுப் பொலிவு




உங்கள் எழிலைக்
கூட்டுகிறது சீராக — இளம் மேனி
பெறுமே அன்பின் மலர்ச்சி
அருமையாக — வளமான் நுரை
மேனிக்குக் காவலே — உள்ளமும்
உடலும் புதுமை ஜேஸ்மின்
சுகந்தம் வீசுமே —



புதிய
ஜெய்
மல்லிகையின் நறுமணம்
கொண்ட அழகு சாதன சோப்.

டாட்டா தயாரிப்பு.

DART/TOMCO/3345 TM



இரண்டுங்கெட்டான் யார்?

- வைதாரிணி



''ம்... ம்... மட மடன்னு 'ட்ரக்'ல சாமான் எல்லாம் ஏத்து. போய் புது வீட்டுல ஒரு மாதிரியா கௌரவமா 'செட்டில்' ஆனாத்தான் கொஞ்சம் நிம்மதியா இருக்கும்,'' என்று என் இரண்டுங்கெட்டான் பெண் புனிதாவை முறைத்தவாறே உறுமினார் என் கணவர். ஆம்... எங்கள் கதையை முழுவதும் கேட்டபின் நீங்களும், ''நீங்கள் எடுத்த முடிவு நூறு சதவிகிதம் சரியானதே,'' என்று தலை ஆட்டுவீர்கள்.

நான்கு மாதம் முன் ஒரு நாள்...

''அடியே இதோ... நாலு நாள் முன்னால நா வாங்கிண்டு வந்தேனே, அந்த ''கோந்து ட்யூப்'' எங்கே?'' என்று காட்டுக் கத்தலாய்க் கத்திக் கொண்டு என்னை முறைத்தார் என் கணவர்.

''இப்ப நான் எனக்குத் தெரியாது'ன்னா, ''வீட்டுல கொலையே விழுந்தாலும் ஒனக்குத் தெரியாதே''ன்னு குசும்பு பேசுவீங்க. 'எனக்குத் தெரியும்'னா, ''இவ்வளவு நேரமா நா ஒருத்தன் கரடியா கத்திண்டு இருக்கேன், தெரிஞ்சுண்டே என்ன நெஞ்சழுத்தம் இருந்தா இப்படி 'கமுக்'னு கொளத்துல கல் போட்ட மாதிரி இருப்பே'ன்னு என் காது ஜவ்வு பிய்யறா மாதிரி கத்துவீங்க. என்ன பதில் குடுத்தா உங்களுக்குத் திருப்தியா இருக்கும்னு சொன்னா, சொல்றேன்,'' என்று நான் எதிரடி கொடுக்க, சிறிது மிரண்டார் என் ஆசைக் கணவர்.

அதற்குள் ஓடி வந்த புனிதா (ஆரம்பத்தில் இவளுக்குக் கொடுத்த பட்டப் பெயர் உங்கள் மனதில் பதிந்திருக்கும் என்று நினைக்கிறேன்)

''அப்பா... அப்பா... எதிர் வீட்டு சங்கர் மாமா ஒரு லெட்டர் ஒட்டணும்,



அவசரமான்னு வாங்கிண்டு போனார்'' என்றவுடன்


''அந்தப் பெண்டாட்டி தாசனா? முதல்ல அவன் பெண்டாட்டி வாயை இழுத்து ஒட்டச் சொல்லு. துப்பு கெட்ட மனுஷன், வாங்கிண்டு போன சமத்து போல திருப்பிக் கொடுக்கத் தெரியல்லே, பிச்சைக்காரப் பசங்க'' என்று என் மேல் இருந்த கோபத்தையும் சேர்த்துக் கொட்ட, நானும் புனிதாவும் மெள்ள அவரவர் வேலையைக் கவனிக்க நழுவினோம்.

மறுநாள் காலை மணி 8. ''ட்ர்....''

''புனிதா... காலிங்பெல் அடிக்கறது பாரு. யாருன்னு கொஞ்சம் பாரு.'' என்று சமையற்கட்டிலிருந்து மகளை ஏவினேன்.

நவராத்திரி வருகிறது. வெற்றிலை பாக்குக் கொடுப்பவர்கள் (தேங்காய் கொடுக்க முடியாதவர்கள்) வெற்றிலை பாக்கு பழத்துடன் சின்னச் சின்னப் பீங்கான் பொம்மை வைத்துக் கொடுக்கலாம். பீரோவில் ஒட்டக் கூடிய காந்தம் பொருத்திய படங்கள் கொடுக்கலாம். கொலு ஞாபகம் வைத்துக் கொள்ளும் முறையில் அமையும்.

– சரோஜா



புனிதா முன்னால் ஓட, பின்னாலேயே ஈரத் தலையைத் துவட்டியவாறு மெல்ல இவர் வெளிப்பக்கம் செல்ல முற்பட்டார். அடித்த பந்து போல் திரும்பி வந்த புனிதா,

''அப்பா... அப்பா... அந்த 'பெண்டாட்டிதாசன் மாமா' கோந்து கொண்டு வந்திருக்கார்''

என்றவுடன் கூடவே வந்த சங்கரன் முகம் விறுவிறுவென சிவக்க,

''யாருய்யா பெண்டாட்டிதாசன்? குழந்தைகளுக்கு வேண்டாததெல்லாம் சொல்லிக் கொடுக்கறீரா? ஒம்ம பெண்டாட்டி ஒரு சத்தம் போட்டா நீர் எப்படி 'பெட்டிப் பாம்பா' அடங்கிப் போவீர்ங்கறதெல்லாம் ஒம்ம பொண்ணு எங்ககிட்டே எல்லாம் முன்னாலேயே சொல்லி யாச்சு. அதையெல்லாம் நாங்க நாலு பேர்ட்ட சொல்லி ஒங்களை சிரிப்பா சிரிக்க அடிச்சிருக்கலாம். குழந்தை சொல்றதையெல்லாம் பெரிசா எடுத்துக்கப் படாதுன்னு ஏதோ நாங்க பேசாம போனா என் மண்டையையே நீர் உருட்டறீரா? உம்மை சும்மா விடப் போறதில்லை நான். இந்தாரும் உம்ம அல்ப கோந்து.'' என்று முகத்தில் விட்டெறியாத குறையாக 'டேபிள்' மீது 'டக்'கென்று வைத்து விட்டுச் சென்றார்.

அன்றிலிருந்து திரு + திருமதி சங்கரன் எங்களைப் பற்றி பிரசாரம் பண்ணாத இடம் இல்லை. அத்துடன் அவசரத்திற்குக் கிடைத்துக் கொண்டு இருந்த பால், காப்பித் தூள் எல்லாம் 'கட்'. எதிர்பாராத விதமாக நேருக்கு நேர் பார்த்துக் கொள்ள நேர்ந்தால் ஒரு 'மூன்றாவது கண்' திறந்த தவிப்பைக் காட்டுவாள் 'சங்கரி'. அவர்கள் மகள் கவிதா ஏக்கத்துடன் இங்கு பார்ப்பதோடு சரி.

இத்துடன் கதை முடியவில்லை. இது நடந்து சரியாக பதினெட்டாம் நாள். அரை வருடப் பரீட்சை 'ரிஸல்ட்' வந்த நாள். என் மகள் எப்போதும் போல் முதல் ராங்க். மூன்றாவது வீட்டு ரகுவும் இவள் வகுப்பு தான். அதனால் நான் அவன் எந்த ராங்க் என்று புனிதாவைக் கேட்டேன்.

''அம்மா, ரகு கணக்குல 'ஃபெயில்' 'சயின்ஸ்'ல 14 மார்க், தமிழ்ல கூட ரொம்ப மோசமா வாங்கியிருக்கான். டீச்சர் கூட, ''இவ அம்மா அப்பாவெல்லாம் கவனிக்கவே மாட்டாளோன்னு எங்கிட்ட கேட்டா,'' என்று கூற,

என் போறாத வேளை, ''அவ அம்மாக்கு ஊர் கத்தவே நேரம் போறாது. போறாக்குறைக்கு மாமியாரோட சண்டை போடவே ஒரு நாளைக்கு 'மினிமம்' ஆறு மணி நேரம் வேணும், அந்தப் புள்ள வேறு எப்படி 'மார்க்' வாங்கும்?'' என்று கிண்டலாகக் கூறி விட்டு, எப்பேர்ப்பட்ட ஆபத்துக்கு வித்திட்டேன் என்று அறியாமலேயே ''மனமே முருகனின் மயில் வாகனம்'' என்று ரசித்துப் பாடியவாறே ரசத்தை எடுக்க சமையலறைப் பக்கம் விரைந்தேன்.

அடுத்த மூன்றாவது நாள்....

பத்ரகாளி தோற்றத்துடன் புவனா, அதான் ரகுவின் தாய், ரகுவைக் கரகர வென்று இழுத்தவாறே என் வீட்டுப் பக்கம் வருவதைப் பார்த்தபோதே என் வயிற்றில் புளியைக் கரைத்தது.

''ஏம்மா, சகலகலா வல்லவி... உன் பெண் ஏதோ ஃபர்ஸ்ட் ராங்க் வாங்கி



HIT 111 92 TAM



விட்டாள் என்ற நிமிரில் நீ என்னவெல்லாமோ பேசிண்டே போறயாமே?'' என்று 'பிஸ்மில்லா கான்' 'பிச்'சில் என்னைப் பார்த்து அவள் கேட்க, அக்கம் பக்கத்தில் மெல்ல கூட்டம் சேர, நான் ஒன்றும் புரியாமல் விழித்தேன்.

''கேளு உன் பெண்ணை,'' என்று 'ஙக்'கென்று புனிதாவை என்னிடம் தள்ளினாள். இவள் 'பே' என்று விழிக்க,

''என் பிள்ளை, உன் பெண் சொல்லிக் குடுத்த பாடத்தில, இன்னிக்கு என்னையே 'கொஸ்சின்' பண்ணறான்.

''எனக்குப் பாடம் சொல்லிக் குடுக்க ஒனக்கு ஏது நேரம்? உனக்கு ஊர் சுத்தவும், பாட்டியோட சண்டை போடவுமே நேரம் போறல்ல. அப்புறம் நான் 'ஃபெயில்' ஆனா அடிக்க மட்டும் உனக்கு என்ன 'ரைட்' இருக்கு?''ன்னு 'ரஜினி' ஸ்டைல்ல நின்னுண்டு கேக்கறான். யாருடா உனக்கு இதெல்லாம் சொல்லிக் கொடுக்கறான்னா, ''புனிதாதான் அவ அம்மா சொன்னதாச் சொன்னா,''ங்கறான். நீங்கள்லாம் படிச்சவான்னு பேரு, மத்தவா வீட்டுல கலகம் பண்ணறதுல உங்களுக்கெல்லாம் என்ன அவ்வளவு சந்தோஷம்? ...ம்...?'' என்று காட்டமாகக் கேட்க,

இதுதான் சமயம் என்று 'சங்கரி' திடீர் என்று முன்னால் வந்து, ''இது இவா புருஷன் பெண்டாட்டி இரண்டு பேருக்கும் ரொம்பப் பிடிச்ச வேலை. எங்க வீட்டு விஷயத்துல இவா அடிச்ச கூத்துதான் நான் முன்னாலேயே சொல்லியிருக்கேனே,'' என்று அபாயச் சங்கு போல் ஊத, நான் முழி முழி என்று முழித்தவாறே நின்றேன்.

அடுத்த பத்தாவது நிமிடம் புனிதா, ''அடிக்காதேம்மா... அடிக்காதேம்மா,'' என்று அலறியதெல்லாம் இங்கே சொல்ல வேண்டிய அவசியமில்லை என்று நினைக்கிறேன்.

இதன்பின் ஒரு மாதம் எந்தக் கலகமும் இல்லாமல் ஓடியது. ஆனால் புனிதாதான் சற்று கரத்துக் குறைந்தாற்போல் வளைய வந்து கொண்டு இருந்தாள். போதாக் குறைக்கு எதிர் வீட்டு கனிதா வேறு விளையாட வருவதில்லை. குழந்தையைப் பார்த்தால் மனசு கஷ்டமாக இருக்கவே மறுபடியும் புனிதாவுடன் இந்த ஒரு மாத மாக இருந்த இறுக்கத்தைத் தளர்த்தி சிறிது கலகலப்பாக இருக்கத் தொடங்கினேன்.

நவம்பர் பதினாலு...

''மெனி மெனி ஹாப்பி ரிடர்ன்ஸ் ஆஃப் தி டே,'' என்று கண்ணைத் திறந்தவுடன் என் கணவர் புன்னகையுடன் கூற,


''அட... ஆமாம் இன்னியோட நம்ம கல்யாணமாய் பத்து வருடம் முடியறது இல்ல?'' என்று நான் எழ முயல, மெல்ல அணைத்து என்னைத் தடுத்த இவர், ''அவசரப்பட்டு எழுந்து சமையல், டிபன்னு நிண்டாடாதே, இன்னிக்கு 'ஜயா' ஆஃபீஸ் லீவ் போட்டுட்டேன். நாள் பூரா குடும்பத்துடன் சினிமா, ஹோட்டல், 'பீச்' எட்ஸெட்ரா, எட்ஸெட்ரா,'' என்று குதூகலிக்க,

''ஹைய்யா... மஜா, மஜா,'' என்று புனிதா 'ஸ்பிரிங்' பொம்மை போல் குதித்தாள்.

சினிமா தியேட்டரில்...

சின்னச் சின்ன ஸ்லோகப் புத்தகங்கள், மகிஷாசுரமர்த்தனி ஆஞ்சநேய ஸ்லோகம் போன்றவை தங்கள் சுருதிக்கேற்பக் கொடுக்க லாம். இரட்டை லாபம் இதில். ஒன்று பிரசுரம் செய்பவர்களுக்கு. இரண்டு சுமங்கலிகளுக்கு என் றைக்கும் நல்ல விஷயங்களைப் படித்து அறிந்து கொள்ளவும் வசதி.

– சரோஜா



நாலாம் வீட்டுப் பரமேஸ்வரன் ஒரு மிக மிக அழகிய சிவந்த பெண் ஒருத்தியுடன் அளவுக்கு அதிகமாகவே வழிந்தபடி 'கூல்ட்ரிங்'கை உறிஞ்சிக் கொண்டு இருக்க புனிதா,

''ஹை பரமு மாமா... அந்த 'ஆன்டி' எவ்வளோ அழகா இருக்காம்மா,'' என்று உரக்கக் கத்த, எங்களை அங்கு எதிர்பார்க்காத பரமேஸ்வரன் செய்வதறியாமல் திகைக்க, கரகரவென்று புனிதாவை இழுத்துக் கொண்டு அகன்றேன். பின் புனிதாவிடம், ''ஒனக்கு ஏன் அந்த வம்பெல்லாம்? யாரு வேணா யாரோட வேணா சினிமா வருவா, போவா. நீ உன் வாயை மூடிண்டு பேசாம இரு.'' என்று அடிக்குர லில் அதட்ட,



அதே நேரம் 'கல்ட்ரிங்' குடன் திரும்பிய இவர், ''அவளை ஏன் திட்டறே? இவங்கள்ளாம் வீட்டுல பெண்டாட்டியை வச்சிண்டு விவஸ்தை கெட்டுப் போய் அலைஞ்சா அதுக்குக் குழந்தை என்ன பண்ணும்? பொறுக்கிப் பசங்க, நாக்கத் தொங்கப் போட்டுண்டு அலையறாங்க,'' என்று முணுமுணுத்த வாறே, 'ட்ரிங்'கைக் குடித்தார்.

நான்காம் நாள்....

''அம்மா, நான் வசந்தி வீட்டுக்கு விளையாடப் போறேன்,'' என்று புனிதா பரமேஸ்வரனின் எதிர் வீட்டுப் பெண்ணுடன் விளையாடச் சென்றாள். அரை மணி நேரம் கழிந்தபின் தெருவிலே ஏதோ 'கலகலப்பு' ஏற்பட என் உள்மனம் துணுக் குற்றது. என் மகளை முதலில் அழைத்து வர வேண்டும் என்று வசந்தி வீட்டிற்குக் கிளம்பிய நான் அங்கு இருந்த நிலை கண்டு துணுக்குற்றேன்.

நடந்தது இதுதான்....

வசந்தியுடன் விளையாடும் போது புனிதா வசந்தியிடம், ''ஏண்டீ, நீ பரமு மாமா வீட்டு எதிரிலேதானே இருக்கே, மாமா எப்பவும் நாக்கைத் தொங்கப் போட் டுண்டா இருப்பார்? நீ பார்த்திருக்கியா?'' என்று கேட்க,

இதைக் கேட்டவாறே வந்த வசந்தி யின் தாய் இன்னும் சிறிது குடைந்து கேட்கவே, ''விவஸ்தை'' என்ற வார்த் தைக்கும் அர்த்தத்தைத் தெரிந்து கொண்டு சினிமா தியேட்டரில் பார்த்த விவரத்தை புனிதா ஆதியோடு அந்தமாக ஒப்புவிக்க, பரமுவின் மனைவி இதைக் கேட்டவாறே வந்து நிற்க, ஒரே ரகளை.

மீண்டும் பழைய குற்றச்சாட்டுக்கள், ''படிச்ச முட்டாள்கள்'' என்ற பட்டங்கள், ''இந்த வயசுல இருக்கற குசும்பைப் பார்,'' என்ற பேச்சுக்கள், ''பிஞ்சுல பழுத்தது'' என்ற நாமகரணங்கள், எல்லாவித அமர்க் களத்துக்கும் இடையில் புனிதாவைக் கரகர வென்று இழுத்து வந்து இரண்டு மணி நேரம் அழுது தீர்த்தேன். இது நடந்து மூன்றாம் நாள் பரமுவின் மனைவி தூக்கில் தொங்கி உயிரை விட்டதுதான் அந்தத் தெருவையே ஒரு உலுக்கு உலுக்கியது.

இதன்பின் பதினைந்தே நாட்களில் வேறு வீடு தேடி, ''அட்வான்ஸ்'' கொடுத்து, இதோ போய்க் கொண்டு இருக்கிறோம். இரவில் விசும்பியவாறு உறங்கிய புனிதாவின் தலையை வருடி விட்டு ஒரு தீர்மானத்துடன் இவர் பக்கம் திரும்பினேன்.

''இதோ பாருங்க, இதுவரை நடந்த எல்லா விஷயங்களிலும் தவறு பெரியவர் களுடையது, ஆனால் பாதிக்கப்பட்டது இந்தப் பிஞ்சு உள்ளம். குழந்தைகள் மனம் பளிங்கு போன்றது. விகல்பம் தெரியாதது. நாம் இனி இவள் முன்னால் எந்த விஷயமும் எக்குத்தப்பாகப் பேசுவது கூடாது. அவள் முன் நாம் பேசிய பேச்சுக் களுக்கு அர்த்தம் தேட அவள் முற்படத் தான் இத்தனை விபரீதங்கள் நேர்ந்து விட்டன. பிஞ்சு மனது, பிஞ்சாகவே இருக் கட்டும். வாலிபம் வரும் போது இந்த உலகத்தின் அசிங்கங்கள், பொல்லாத் தனங்கள், நீசத்தனங்கள் எல்லாம் தானா கவே தெரியவரும். அப்போது தெரியவும் வேண்டும். இப்போது இந்தக் குழந்தை, குழந்தையாகவே இருக்கட்டும்.''

என் கணவரும் தலைகுனிந்தபடி மௌனமாக அமர்ந்திருந்தார், அதை ஆத ரிப்பது போல.

நவராத்திரி கொலுவில் 'பார்க்' இல் லாமலா? 'பார்க்'கில் சின்னச் சின்ன க்ரோட்டன்ஸ் அமைக்க வேண்டுமே!'' என்ற கவலை வேண்டாம். காலியான சென்ட் பாட்டில்களில், 'ரூபின் ரோஸ்', காகிதப் பூக்கள், 'போகன்வில்லா'க் களைக் கொண்டு, கண்ணைக் கவரும் குரோட்டன்ஸ்களை வைத்து, பார்ப்பவர் களைப் பிரமிக்க வைக்கலாம்.

- காந்தாமணி



'கவிட்சில்' அடிக்கடி கைபட்டு அழுக்காகி விடுகிறது. நிறமே மாறி விடுகிறது. அதனால் கவிட்சில் கைபடும் இடத்தில் பெரிய ஸ்டிக்கர் பொட்டை ஒட்டி வையுங்கள். பார்க்கவும் அழகாக இருக்கும். சுவிட்சும் அழுக்கு ஆகாது. ஏற்கெனவே அழுக்காகியிருந்தாலும் பரவாயில்லை. வேறு பொட்டை ஒட் டுங்கள். அழுக்கு வெளியில் தெரியாது.

- சிவ. முத்ரா





சரும-வைட்டமின்
நேற்றிருந்ததை சீராக்கி,
இன்றுள்ளதை சிறப்பாக்கி,
நாளைய தினத்திற்கு
பொலிவூட்டுவீர்.
இதோ அறிமுகம்: இந்தியாவின் முதல் சோப் — வைட்டமின் E கொண்ட எவிடா.
வைட்டமின் E. எழில் மிகுந்த புதியதோர் உலகம்.
வைட்டமின் E. மேனியழகை மேம்படுத்தி உங்களை இளமை பொலிவுடனும் எழிலுடனும் தோன்ற வைக்கிறது என்பது சர்வதேசமெங்கும் ஒப்புக்கொள்ளப்பட்ட ஒன்று.
வைட்டமின் E. இயற்கையான மாயிஸ்ச்சரைசர் மற்றும் ஆன்டி-ஆக்ஸிடன்ட் கொண்டது. அதனால் சுற்றுப்புற தூசு, சூரிய ஒளி இவற்றின் பாதிப்பை எதிர்க்கும் திறனை உங்கள் சருமத்திற்கு அளிக்கிறது. இவ்வாறு வைட்டமின் E. சருமத்தின் மென்மையைக் காத்து உரிய காலத்திற்கு முன்பாகவே சருமம் முதிர்ச்சி அடைவதைத் தடுக்கிறது.
சரும வைட்டமின் — இப்போது சோப் வடிவிலே.
எவிடா – வைட்டமின் E. கொண்ட புதிய சோப். அழகிய சோப். அழகான நறுமணம். அழகான நோக்கம். மொத்தத்தில் அழகுக் களஞ்சியம்.
இந்த சோப் உங்கள் சருமத்தை மென்மையாக சுத்தமாக்கி, ஊட்டமளிக்கிறது. அதை இளமை பொலிவுடனும், மெருகுடனும், வெல்வெட் போன்ற மென்மையுடனும் திகழ வைக்கிறது.
அழகான இந்த உலகிலே பிரவேசியுங்கள்.
இப்போது அழகு மிளிரத் தோன்றுவது என்பது வெகு எளிது. காரணம் அன்றாடக் குளியலே இனி அழகுக் குளியல்தானே.
Evita
Godrej
Evita
SOAP WITH VITAMIN-E
FOR SKIN NOURISHMENT
எவிடா. வைட்டமின் E கொண்டது. சருமத்திற்குப் பொலிவு அலாதியான மெருகு.



கழுத்தாய பிரச்சனைகள்!

ஜூன் இதழில் 'ஸ்பாண்டிலோஸிஸ்' பற்றி எழுதியிருந்தோம். அதற்கான தீர்வுகாணும் முயற்சி இங்கே...

அதிக நேரம் டீ.வி. பார்ப்பதை வேண்டுமானால் தவிர்க்கலாம். ஆனால் தொழில் முறையில் ஏழெட்டு மணி நேரம் கழுத்தை ஒரே நிலையில் வைத்திருக்க வேண்டுமே. ஸ்பாண்டிலோஸிஸ் ஏற்படுவதைத் தடுக்க இயலாதா?

உங்கள் அலுவலுக்கிடையே ஒருசில நிமிடங்கள் நீங்கள் கழுத்துத் தசைநார்களுக்கு வலுவளிக்கும் பயிற்சிகளை மேற்கொள்ளுவதன் மூலம் இப் பிரச்னையை எளிதில் வென்று விடலாம்.

சின்னஞ்சிறு உதிரிப்பாகங்களை பொறுமையுடன், தலை நிமிராமல் இணைக்கும் வேலையில் அநேகர் ஈடுபட்டிருக்கின்றனர். இடையே ஒலிப்பெருக்கி அழைப்பு விடுக்கிறது.

"நண்பர்களே! சிறிதே பயிற்சி மேற்கொள்வோம். வாருங்கள்" என்ற அழைப்புதான் அது. தொடர்ந்து அவர்கள் என்ன செய்ய வேண்டுமோ, அவற்றைச் சொல்லி...." மூச்சை நன்கு இழுத்து விடுங்கள்... கைகளை விரியுங்கள்... அண்ணாந்து கழுத்தைத் திருப்புங்கள்..." என்று ஆட்டுவிக்கிறது. அனைத்தும் சில நிமிடங்களில், ஐந்து மணித் துளிகளுக்குள் முடிந்து விடுகிறது. அடுத்த நிமிடமே அவர்கள் பணி முன்னை விட உற்சாகமாய், புது உத்வேகத்தோடு தொடர்கிறது. அவர்கள் இந்தக் "கழுத்தாய" பிரச்னைகளுக்கு எளிதில் ஆளாவதில்லை. ஆனால் இது நடைபெறுவது நம் நாட்டிலல்ல. தொழில் துறையில் உலகிலேயே முதலிடம் வகிக்கும் ஜப்பானில். அவர்கள் தொழில் கடினமானது. கழுத்தை ஒரே நிலையில் வைத்திருக்க வேண்டியது. இரண்டு மணி நேரங்களுக்கு ஒரு முறையேனும் பின்னால் விளக்கப்பட்டுள்ள பயிற்சிகளை மேற்கொள்ளுங்கள். "அலுவலகத்தில் கைகளை மடக்கி, நீட்டி மற்றவர்களுக்குக் காட்சிப் பொருளாவதா?" உங்கள் உடல்நலத்தை விட மற்றவை கண்டிப்பாய் முக்கியத்துவம் வாய்ந்தவையல்ல. அதை உணருங்கள். நீங்கள் ஆரம்பியுங்களேன். மற்றவர்கள் தானாய்ச் சேர்ந்து கொள்வார்கள்.


குளிர் கட்டுப்பாடு செய்யப்பட்ட அறைகளில் பணிபுரிவோர் எளிதில் இதனால் தாக்கப்படுகிறார்களா?

ரோமாபுரியில் உள்ள போது ரோமானியனாக வாழ வேண்டுமல்லவா? ஏ. ஸி. அறைகளில் பணிபுரியும் போது உங்கள் குளிர் கால உடைகளை அணிந்து கொள்ளுங்கள். தாழ்ந்த தட்பநிலை, நீங்கள் ஸ்பாண்டிலோஸிஸ் உடையவராய் இருந்தால் அதை அதிகப்படுத்தும்.

உணவுப் பழக்கங்கள் இதனோடு தொடர்புடையனவா?

உங்கள் எடை கூடுவதும் குறைவதும் உணவுப் பழக்கங்களின் அடிப்படையிலேயே. தேவைக்கதிகமான கலோரிகள் உங்கள் உடல் எடையை அதிகரிக்கின்றன. உடல் எடை ஸ்பாண்டிலோஸிஸை மிகைப்படுத்தும்.

அதைப் போலவே, இரத்த சோகை, நீரிழிவு போன்றவையும் இதை அதிகரிக்கச் செய்யும்.



பயிற்சிகள் : செய்முறை விளக்கம்.

படம் 1 : நேராக நில்லுங்கள் அல்லது நிமிர்ந்து அமருங்கள். உங்கள் நெற்றியின் மீது ஒரு கைக்கு மேல் இன்னொரு கையைப் படத்தில் காட்டியபடி வைக்கவும். தலையை அசைக்காமல் உள்ளங்கைகளை நோக்கி அழுத்தவும்.

படம் 2 : உங்கள் பின் தலையில், (கழுத்தில் அல்ல) கைகளைக் கோர்த்துக் கொள்ளுங்கள். தலையை அசைக்காமல் அதைப் பின்நோக்கி கோர்த்த கைகளில் தங்கும் படி அழுத்துங்கள்.

படம் 3 : உங்கள் வலது கையை முகத்தின் வலது பக்கத்தில் வைத்துக் கொள்ளவும். தலையை அசைக்காமல் பக்கவாட்டில் வலக்கையை நோக்கி அழுத்துங்கள். இதே போல் இடதுகையை இடப்பக்கம் வைத்துச் செய்யவும்.

படம் 4 : உங்கள் வலதுகையை வலது நெற்றிப் பொட்டில் வைத்துக் கொள்ளவும். இடதுகை அதற்கு நேர் எதிர் திசையில் பின்தலையில் இருக்கட்டும். உங்கள் தலையின் அசைவைக் கைகளால் தடுத்துக் கொண்டு வலது தோளைப் பார்க்க முயற்சி செய்யுங்கள்.

எல்லாப் பயிற்சிகளும் பத்து வரை எண்ணும் வரை அதே நிலையில் இருக்க வேண்டும். மூன்று முறைகள் ஒவ்வொரு பயிற்சியும் செய்க.

படம் 5 : நிமிர்ந்து நில்லுங்கள். கைகளைப் பக்கவாட்டில் சாதாரண நிலையில் தொங்க விடுங்கள். மூச்சை உள்நோக்கி நன்கு இழுங்கள். இவ்வாறு இருக்கும்போதே உங்கள் தோள்களை பின்நோக்கி எவ்வளவு உயர்த்த முடியுமோ அவ்வளவு உயர்த்துங்கள். மூச்சை வெளிவிடுங்கள். தோளைச் சாதாரண நிலைக்குக் கொண்டு வாருங்கள். ஓர் நொடி சற்றே ஓய்வெடுங்கள். மீண்டும் தொடருங்கள். இப் பயிற்சியை இருபது முறை செய்யவும். ஓர் நாளில் இருமுறை துவங்கிப் படிப்படியாய் முன்னேறுங்கள்.

படம் 6 : உங்கள் மோவாயைக் கொண்டு உங்கள் மார்பைத் தொட அதிக சிரமமின்றி முயற்சி செய்யுங்கள். மெதுவே சிரமமின்றி தலையை மேல்நோக்கி முடியுமட்டும் அண்ணாந்து உயர்த்துங்கள்.

படம் 7 : நேரான நிலையில் நில்லுங்கள். அல்லது அமருங்கள். முன் கைகளை பூமிக்கு இணையாக உயர்த்துங்கள். முழங்கைகளை மடக்கி விரல்களைப் பின்னிக் கொண்டு இழுங்கள்.

படம் 8 : நேராய் நில்லுங்கள். இரு கைகளையும் இணைத்து முறைப்படி வணக்கம் கூறுவது போல் கூப்பவும். இரு உள்ளங்கைகளையும் ஒருசேர அழுத்துங்கள்.

பயிற்சி எண் 5 தவிர பாக்கி அனைத்துமே பத்து வரை எண்ணவும். மூன்று முறை செய்யவும். இவை ஒவ்வோர் பயிற்சிக்கும் ஏழு விநாடிகள் மட்டுமே போதுமானது. எல்லாப் பயிற்சி முறைகளையும் செய்து முடிக்க ஐந்து நிமிடங்களுக்கு மேல் கண்டிப்பாய் ஆகாது. இடையறா வேலைக்கு நடுவே சில மணித்துளிகள் இதற்காக ஒதுக்குதல் கூடாதா? ஜப்பானியரைப் போல் நாமும் வருமுன் காத்திடல் ஆகாதா? இம்முறையினை வங்கிகள், தனியார் நிறுவனங்கள் முதலானவைகளாவது ஆரம்பிக்கலாமே?


இக் கட்டுரையின் பதில்களும், பயிற்சி முறைகளும் அளித்து உங்களுக்கு உதவிக் கரம் நீட்டுபவர்,

டாக்டர். சாம்சன் டேனியல் அவர்கள்.


– சாமளி



















அந்த புஸ்தகத்தை படிச்சது போதும், படுத்துக்கலாம் வாங்க!

கொஞ்சம் பொறு! கர்ப்பத்தடைக்கு வாத்ஸ்யாயனர் என்ன யோசனை சொல்லி இருக்கார்னு பார்த்திடறேன்.

போதுமே! என்கிட்ட கேட்டா சொல்லிட்டுப் போறேன்!

சொல்லேன்!

எல்லாம் தெரிஞ்ச, புத்திசாலியான மனைவி! என்னை மாதிரி!

ஓஹோ! அப்ப இதுவும் தெரிஞ்சுருக்கணுமே. எனக்கு

“காம சூத்திரம் இனி தேவை இல்லை டுடே இருக்கையில் என்ன கவலை!”

அதெல்லாம் அணிய பிடிக்காதுன்னு!

உங்களை யார் அணியச் சொன்னது?

அப்ப, நீ மாத்திரை போட்டுக்க ஆரம்பிச்சிட்டியா?

ம்ஹூம்...

லூப்?

உங்களுக்கேன் அந்த கவலை! நான்தான் வழிகண்டுபிடிச்சுட்டேங்கறேனில்ல?

ஆங்! அம்மாவாத்துல டேரா போடப்போறே!

இல்லவே இல்லை. எல்லாம் தெரிஞ்ச புத்திசாலி மனைவி இப்படி நடந்துப்பாளா?

ஏதோ விஷயம் இருக்கு. அதான் இப்படி நமுட்டுச் சிரிப்பு சிரிக்கறே.



என்னவா இருக்கும் சொல்லுங்க?

இரு, வாத்ஸ்யாயனரின் யோசனையையும் பார்த்துடறேன்...

என்னங்க இது! ‘டுடே’ பற்றி கேள்விப்பட்டதே இல்லியா?

‘டுடே’ – இந்தக்கால பெண்களுக்கான அந்தரங்க கருத்தடை சாதனம்!

பலே ஆளு! எல்லா விஷயமும் தெரிஞ்சு வச்சிருக்கீங்களே!

கிண்டல் இருக்கட்டும். நீயும் ‘டுடே’ உபயோகிக்கப் போறேன்னு சொல்லேன்!

உபயோகிக்கப் போறேனாவது! ஹனிமூன் முழுக்க எது பாதுகாப்பு தந்ததுன்னு தெரியலையா உங்களுக்கு?

எனக்கு எப்படி தெரியாம போச்சு!

தெரிஞ்சு என்ன ஆகணும்? ரெண்டு பேரும் சந்தோஷமா இருந்தோமே. அது போதாதா?

ம்...ம்...! இப்ப நல்லாவே தெரிஞ்சுகிட்டேன். வாத்ஸ்யாயனர் சரியாத்தான் சொல்லி இருக்கார். பெண்களைப் பற்றி...

என்ன?


பெண்களால், எந்த ரகசியத்தையும் காப்பாற்றவே முடியாதுன்னு...

சரி சரி! புஸ்தகத்தை மூடுங்க!



கருத்தடை பற்றிய இலவச பிரசுரத்தைப் பெற, சுய முகவரியிட்ட மற்றும் தபால் தலையுடன் கூடிய உறையை கீழ்கண்ட முகவரிக்கு அனுப்பவும். ப்ளின் கெமிக்கல்ஸ் & ஃபார்மாசூடிக்கல்ஸ் இந்தியா லிட்., ஸ்கைபேக் ஹவுஸ் அனெக்ஸ், மரோல், அந்தேரி (கிழக்கு), பம்பாய்-400 059.

டுடே பெண்களின் அந்தரங்க கருத்தடை சாதனம்.



நவராத்திரி எண்ண அலைகள்

நவராத்திரி...

இந்தச் சொல்லின் எதிரொலியாய் வரும் எண்ண அலைகள் என்னென்ன என்ற கேள்விக்கு விதவிதமாக விடைகள் வந்தன. "ஆஹா, பீரோவில் வைத்திருக்கும் பொம்மைகளையெல்லாம் எடுத்து, அழகழகாய் அரேஞ்ச் பண்ணி, வண்ண, வண்ண ரங்கோலியிலும் மலை, குளம் போன்ற அமைப்புகளிலும் கற்பனைத்திறம் காட்டி 'சபாஷ்' பெற ஒரு வாய்ப்பு" - இது வனஜா.

"பல காலமாகப் பார்க்காத உறவினர், நண்பர்கள் வீட்டுக்குப் போகவும், அவர்களை நம் வீட்டுக்கு அழைத்து மஞ்சள், குங்குமம் கொடுக்கவும் ஒரு சான்ஸ்" - இது மைதிலி.

"சுண்டல் ருசியே தனி. அதுவும் எல்லோர் வீட்டுச் சுண்டல் பொட்டலங்களையும் பிரித்து, கும்பலாக உட்கார்ந்து கொண்டு 'கமெண்ட்' அடித்துக் கொண்டு சாப்பிடுவது அலாதி ருசி" - இது குமார்.

'கொலு சீசனா? இனிமேல் வெளியே சுற்றி விட்டு இரவு 9 மணிக்கு மேல்தான் வீடு திரும்ப வேண்டும். இல்லாவிட்டால் ஹாலில் பெண்கள் கூட்டமாய் மொய்க்க, நமக்கு 'பெட்ரூம்'தான் ஒண்ட இடம்" - இது கோவன்.

இப்படிப் பண்டிகை என்றாலே அதன் வெளிப்பாடான சடங்குகளில்தான் நம் கவனம் செல்கிறதே தவிர, அச்சடங்குகளின் ஆதாரமான உட்பொருளை நாம் சில சமயங்களில் மறந்து விடுகிறோம்.

சற்றுச் சிந்தித்துப் பார்த்தால் ஒவ்வொரு பண்டிகைக்குப் பின்னாலும் நம் முன்னோர்கள் எவ்வளவு அழகான கோட்பாடுகளைப் பொதிந்து வைத்திருந்தார்கள் என்ற பேருண்மை புலப்படும். அறுவடைத் திருநாளான பொங்கல் நல்வாழ்வுக்கு

மகளிர் தேவை

திக்கற்ற நிலையில், தனியாக வாழும் தனக்கென்று குழந்தையேதுமில்லாத, தன்னைச் சார்ந்து யாரும் வாழாத, விதவைப் பெண்கள், அல்லது கணவரால் கைவிடப்பட்ட பெண்கள் மற்றும் திருமணம் ஆகாத (இனியும் திருமணம் செய்து கொள்ளாத எண்ணத்தில் வாழும்) பெண்களிடம் இருந்து கோவையில், தனியார் அறக்கட்டளை ஒன்றில், குழந்தைகளுக்கு அன்னையராகப் பணிபுரிய விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

தகுதிகள் :	
1. வயது :	25 முதல் 35 வயதிற்குள் இருப்பது நலம்.
2. கல்வி :	ஆரம்பக் கல்வி அல்லது அதற்கு மேம்பட்ட கல்வி.
3. தாய்மொழி :	தமிழாக இருப்பது நலம். (தமிழில் எழுதி, படித்து, பேச நன்கு தேர்ச்சி பெற்ற மற்றவர்களும் விண்ணப்பிக்கலாம்.)
4. மற்றவை :	அ) கடவுள் பக்தி உடையவராகவும், குழந்தைகள் மீது அன்பும், பாசமும் கொண்டவராகவும், அவர்களது வளர்ச்சியிலும், முன்னேற்றத்திலும் மிகுந்த அக்கறை கொண்டவராகவும் இருத்தல் வேண்டும். எஸ்.ஓ.எஸ். குழந்தைகள் கிராமத் தத்துவத்தின் அடிப்படையில் தங்கள் பொறுப்பில் விடப்படும் குழந்தைகளை வளர்க்கவும், மற்றும் குடும்பத்தை தானே திறம்பட நிர்வாகம் செய்து நடத்திச் செல்ல திறமையும் பெற்றிருத்தல் வேண்டும். ஆ) குழந்தைகளுக்காக நிறுவப்படும் கிராமத்திலேயே நிரந்தரமாக தங்கி பணிபுரிய விருப்பம் உடையவராக இருக்க வேண்டும்.

தேர்ந்தெடுக்கப்பட்ட பெண்களுக்கு தகுந்த பயிற்சி அளிக்கப்படும். ஊதியத்துடன், தங்குவதற்கான வசதிகளும் அளிக்கப்படும். விருப்பம் உள்ளவர்கள் விண்ணப்பங்களை உடனடியாக அனுப்ப வேண்டுகிறோம்.

அனுப்ப வேண்டிய முகவரி :
தபால் பெட்டி எண் : 5803,
துடியலூர் அஞ்சல், கோயமுத்தூர் - 641 034

மீண்டும் மீண்டும் சுவைக்கத் தூண்டும் அண்ணாநகர் ரங்க விலாஸ் பட்சணங்கள்

ஐந்தாம் ஆண்டில் அடியெடுத்து வைக்கும் ரங்க விலாஸ் பட்சண நிறுவனம், சுத்தமான நெய், தேங்காய் எண்ணெய், OK எண்ணெய் ஆகியவற்றைக் கொண்டு, உங்கள் வீட்டில் செய்தது போன்ற சுவை, நேர்த்தியுடன் மிகச் சுகாதாரமாகப் பட்சணங்களைத் தயாரித்து வழங்குகிறது.

★ **இனிப்புகள் :**
திருநெல்வேலி அல்வா
லட்டு
ஜாங்கிரி
பேணி
சோன்பப்டி
மைசூர்பாக்
அதிரசம்
வேர்க்கடலை உருண்டை
பாதுஷா
இஞ்சி முரப்பா
சாக்லேட் கேக்
ரவா லாடு
மாலாடு
பொரி விளங்காய்
ஸ்வீட் சோமாசி
ஒக்கோரை
தூத்பேடா
மனோகரம்
ஸ்ரீவில்லிபுத்தூர்
பால்கோவா
தேங்காய் பர்பி
திரட்டுப்பால்
சந்திரகலா
சூர்யகலா
வெல்லச் சீடை
சோகன்டாம்

★ **காரங்கள் :**
கைமுறுக்கு
சீடை, தட்டை
தேன்குழல்
முள்ளுத் தேன்குழல்
உருளைக்கிழங்கு சிப்ஸ்
வாழைக்காய் சிப்ஸ்
தேத்திரங்காய் சிப்ஸ்
முந்திரிப்பருப்பு வறுவல்
ரிப்பன் பக்கோடா
காராசேவு
ஓமப்பொடி
மசாலா வேர்க்கடலை
அச்சாங்காய்
புளியோதரை மிக்ஸ்
காராபூந்தி
மிளகுவடை
மிக்சர்
பட்டர் மிக்சர்

★ **சிறப்பு வகைகள் :**
5, 7, 9, 11 வரிசைக் கைமுறுக்கு
முள்ளுத் தேன்குழல்
அதிரசம்
அனைத்துவகை
பருப்புத் தேங்காய்
அப்பம். இன்னும் பல

★ **பொடி வகைகள் :**
சாம்பார் பொடி
ரசப்பொடி
இட்லிப் பொடி
கறிவேப்பிலைப் பொடி
பருப்புப் பொடி

★ வீட்டு டெலிவரியும் செய்யப்படும். ★ விசேஷங்களுக்கு ஆர்டரின் பேரில் சாப்பாடு/டிபன் சப்ளை செய்யப்படும். ★ முறுக்கு, தட்டை, சீடை செய்வதற்கு மாமிகளும் விற்பனையைக் கவனிக்கப் பெண்களும் உடனடியாகத் தேவை.



ரங்க விலாஸ்

77, AA 1 ஆம் தெரு, (கிராண்ட் தியேட்டர் அருகில்) அண்ணாநகர்,
சென்னை 600 040. போன் : 6211182



ஆதாரமான மண்ணுக்குச் செல்லும் நன்றி விழா. இன்று ஏதோ ரியோ டி ஜெனிராவில் உலகளவு மாநாடு வைத்துப் பறை சாற்றுகிறார்களே சுற்றுப்புறச் சூழல் என்று. அந்த பாதுகாப்பு உணர்வுதான் நம் முன்னோர்கள் செய்த இயற்கை வழிபாட்டின் அடிப்படை. உழவுத் தொழிலுக்கு உறுதுணையாக இருக்கும் மாடுகளுக்கும் பொங்கல் வைத்துப் போற்றுவதும், இயற்கையின் பரிணாமங்களான பூமி, காற்று, மழை, வானம், நெருப்பு இவற்றைப் பஞ்சபூதங்களாக உருவாக்கம் செய்வதும், திருமாலுக்குத் துளசி, சிவனுக்கு வில்வம், அன்னை பராசக்திக்கு வேம்பு என்று பிணைப்பு ஏற்படுத்தியதும் - வெறும் மூடநம்பிக்கைகளல்ல. மனிதனுக்கும், இயற்கைக்கும், மற்றும் சகல ஜீவராசிகளுக்கும் இடையேயுள்ள தெய்வீக பந்தத்தை உறுதிப்படுத்துவதற்குத்தான்.

இதே கோணத்திலே சென்ற நம் முன்னோர்களின் சிந்தனை பெண்மையின் பெருமைக்கு எடுத்த விழாவே நவராத்திரி. இந்த இருபதாம் நூற்றாண்டிலே பெண் கருக் கொலை, பெண் சிசுக் கொலை, வரதட்சிணைக் கொடுமைகள், வேலியே பயிரை மேயும் கதையாய் காவல் நிலையத்திலேயே பெண்களைக் கற்பழிக்கும் அவலம் - இப்படி உலக அரங்கிலே காட்டுமிராண்டி நாடாய், கலாசாரத்தின் வாசனையே அறியாத நாடாய்க் களங்கப்பட்டு நிற்கும் நம் நாடு ஒரு காலத்திலே பெண்மையைத் தெய்வமாய் மதித்த நாடு.

வேப்பம் பூ ஊறுகாய் :



மோர் மிளகாயைப் புளித்த தயிர் சேர்த்துத் தயாரிப்பது போன்று புளித்த தயிரில் வேப்பம் பூவைப் போட்டு வெயிலில் காய வைக்கவும். காய்ந்த பிறகு திரும்பவும் தயிர் இருக்கும் வரை ஊறப் போட்டு வெயிலில் காய வைத்து டப்பாக்களில் போட்டு வைக்கலாம். பிறகு உங்களுக்கு வேண்டும் பொழுது கொஞ்சம் எடுத்து நெய்யில் வறுத்து மோர் சாதத்துடன் சாப்பிடலாம். சுவையாக இருக்கும்.

- ஜி. இந்திரா

மனித வாழ்வு வளம் பெற இன்றியமையாத கல்வி, செல்வம், வீரம் இம் மூன்றையும் பெண் வடிவங்களாக உருவகப்படுத்தி வணங்கிய நாடு. ''பொட்டைப் புள்ளைக்கு எதுக்குங்க படிப்பு? அந்த நேரத்தில் வீட்டு வேலை செஞ்சாலும் நூறு ரூபாய் சம்பாதிக்கலாமே!''. ''நான் வேலைக்குப் போகும் போது வீட்டிலே தம்பி, தங்கச்சிங்களைப் பாத்துக்கிட்டு சமைக்க வேண்டாங்களா? அது எப்படீங்க பள்ளிக்கூடத்துக்குப் போக முடியும்?'' என்று ஒரு சாரார், ''பெண்ணை மேலே படிக்க வைக்க ஆசைதான். ஆனால் அப்புறம் அதுக்கும் மேலே படிச்ச மாப்பிள்ளை பார்க்கணுமே'' என்று கவலைப்படும் ஒரு சாரார்; பெண் கல்வியின் நோக்கமே அவள் வேலைக்குப் போய் வரும் ஊதியம் கல்யாணச் சந்தையில் அவள் மதிப்பை உயர்த்துவதுதான் என்று ஒரு சாரார்.

இப்படிப் பெண் கல்வியின் இலக்கணமே தலைகீழாய்ப் போன இன்றைய உண்மைக்கும், வாழ்வின் சாராம்சமான வேதங்களின் உருவமான பிரமனின் நாவிலே கல்விக்கு மட்டுமல்ல, ஆய கலைகள் அறுபத்து நான்கிற்கும் அதிபதியாய் கலைமகள் வடிவில் அமர்த்தப்பட்ட பெண்கல்வியின் அன்றைய உருவகத்துக்கும் இடையே என்னவொரு வேறுபாடு! இதே போல் செல்வத்தின் அரசியாய், ஆதிசங்கரரின் பாடலுக்கு இணங்கிப் பொற்காக மழையே பொழிய வைத்த அலைமகளாய் உருவகப்படுத்தப்பட்டது அன்றைய பெண்மை. இன்றோ வீடு, அலுவலகம் என்று இரட்டைச் சுமை தாங்கிச் சம்பாதிக்கும் பெண்கள் கூடத் தங்கள் சம்பளத்தைத் தங்கள் விருப்பப்படி செலவிட முடியாத நிதர்சனம். இவை இரண்டும் போகட்டும். ஆண்களின் ஏகபோக உரிமை என்று நிலைநாட்டப் பெறும் வலிமையைக் கூட நம் முன்னோர்கள் பெண்ணுருவிலேதான் பார்த்திருக்கிறார்கள். உலக இயக்கத்தின் ஆதாரமான 'சக்தி'யே பெண்மையாக உருவகப்படுத்தப்பட்டது தானே.


இப்படிப் பெண்மையைத் தெய்வீகமாக்குவதோடு மட்டும் நின்று விடவில்லை நம் முன்னோர்கள். இப் பெண்ணுரிமைக் கொள்கைகளை நடைமுறையில் கடைப்பிடித்தும் காட்டினார்கள். வேத காலத்துப் பெண்களைப் பற்றிய



ஆராய்ச்சி நூல்கள் இந்த உண்மையை எடுத்துக்காட்டுகின்றன. 'உபநயனம்' என்ற சடங்கு குருகுலவாசத்தில் கல்வி அறிவு பெறுவதற்கு முன்னோடியாய் நடத்தப்பட்டது. இது ஆண்களுக்கு மட்டுமல்ல பெண் குழந்தைகளுக்கும் உண்டு. 'பிரம்ம வாதினி' என அழைக்கப்பட்ட மகளிர், இல்லற வாழ்வில் ஈடுபட விருப்பம் இல்லாமல் படிப்பிலேயே தங்கள் வாழ்நாளைக் கழித்தனர். 'ஸ்திரீ தனம்' என்பது பிறந்த வீட்டுச் சொத்தில் பெண்களுக்குள்ள உரிமை. இவை தவிர மனைவி சொத்தை ஊதாரித்தனமாகச் செலவழிக்கும் கணவனுக்குத் தண்டனை, பிரிந்து சென்ற கணவன் குறிப்பிட்ட நாள் வரை திரும்பா விட்டால் மனைவிக்கு மறுமணம் செய்து கொள்ள உரிமை, மனைவியை விலக்கி வைக்கும் கணவன் அவளுக்குக் கொடுக்க வேண்டிய ஜீவனாம்சம், 'நியோகா' என்றழைக்கப்பட்ட விதவைகள் மறுமணம்' - இப்படிப் பல செய்திகளை ஆராய்ச்சி நூல்கள் எடுத்துக்காட்டுகின்றன. இப்படி உயர்வாக, ஆண்மைக்குச் சமமாய் இயங்கிய பெண்மையைத்தான் இன்று சில சமயங்களில் சட்டங்களால் கூட காப்பாற்ற முடியவில்லை.

இதற்கு மாற்று என்ன என்பதைப் பெண்மையின் பெருவிழாவான இந்த நவராத்திரி சமயத்திலாவது சிந்திப்போம். முப்பெருந்தேவியரின் உருவப் படங்களை வைத்து வழிபடுவதோடு நிற்காமல் அந்த உருவங்களின் பின்னே உள்ள உண்மைகளை உணர முயற்சிப்போம். ''என் மருமகள் பாவம், பிறந்த வீட்டிலிருந்து சீதனம் கொண்டு வரவில்லை. இருந்தாலென்ன அவள் பொறுமைக்காக அவளை நேசிக்கிறேன்'' என்று சில மாமியார், மாமனார்கள், ''என் பெண்டாட்டியைப் பார். குடும்ப பாரத்தை என்னோடு சேர்ந்து சுமக்க 'அலுவலகம்' என்ற ஆண் உலகில் நுழைந்திருக்கிறாள். பதிலுக்கு 'வீட்டு வேலை' என்ற பெண் உலகத்தை நான் எட்டியாவது பார்க்கிறேன்'' என்று சில கணவன்மார்கள்; ''என் அம்மாதான் என்ன செய்வாள்? காலை நேரப் பரபரப்பில் அவளுக்கு மூச்சு முட்டிப் போகிறதே. என்னாலியன்ற உதவியை நான் செய்கிறேன்'' என்று சில குழந்தைகள் ''அவளுக்குத் திறமை இருக்கிறது. வீட்டையும், வெளிஉலக வேலையையும் எவ்வளவு பொறுப்பாக நிர்வகிக்கிறாள். அவளைப் பற்றி அனாவசிய அவதூறுப் பேச்சை விட்டு விட வேண்டும்'' - என்று சில உறவினர்கள் - இப்படி எல்லோரும் அவரவர் சூழ்நிலையில், அவரவர் கோணத்தில் சராசரிப் பெண்ணுக்கு மதிப்புக் கொடுக்க முன்வருவார்களே யானால் அதுதான் நிஜமான நவராத்திரித் தத்துவம். பொம்மைக் கொலு, சுண்டல், உறவினர், நண்பர் கலகலப்பு - இப்படி ஒன்பது நாட்களோடு முடங்கி விடாமல் பெண்மையை மதிக்கும் உணர்வு ஆண்டு தோறும் தொடர்ந்து வர ஓர் இனிய ஆரம்பம்.

- நிர்மலா சக்ரவர்த்தி



ஆகஸ்ட் இதழில் ஒரு சகோதரி, ஃப்ரிட்ஜில் வைக்கும் காய்கறிகளைத் துணியில் சுற்றி, பின் பாலிதீன் பையில் வைத்தால் நன்றாக இருக்கும் என எழுதியிருந்தார். அந்த முறையில் நிறைய இடம் அடைத்துக் கொள்ளும் வாய்ப்பு உண்டு. அதைவிட ஜவுளிக் கடைகளில் தரும் துணிப் பைகளிலோ, திருமணங்களில் தரும் துணிப் பைகளிலோ போட்டுச் சுற்றி வைத்தால் இட அடைசல் இன்றி, காய்கறிகளும் புத்தம்புதியது போல் இருக்கும்.

- என். கிரிஜா மஹாதேவன்

வெஜிடபிள் குனுக்கு!


சௌசௌ ஒரு துண்டு, வாழைக்காய் பாதி, புடலங்காய் பாதி, உருளைக் கிழங்கு, கத்தரிக்காய் இவற்றையெல்லாம் பொடியாய் அரிந்து ஒரு பாத்திரத்தில் வைக்கவும். அதில் கொஞ்சம் மைதா மாவைச் சேர்க்கவும். ஒரு டேபிள் ஸ்பூன் நெய் காய்ச்சி விடவும். பொடியாய் அரிந்து கொத்துமல்லித் தழைகள் மற்றும் இஞ்சி சேர்த்துச் சிறு குனுக்குகளாக எண்ணெயில் போட்டு எடுக்கவும். காய்கறிகள் கொஞ்சம் மீந்து விட்டால் செய்யலாமே!

- ஜி. இந்திரா



“நம் மக்களிடம் இருக்கும் பொதுவான குறை, எதைச் சொன்னாலும் உடனே நம்பி விடுவது. அதிலும் முன்னாடி ரெண்டு பேர் ஒரு காரியத்தைச் செய்தார்கள், உதாரணமாக ஒரு சிட் ஃபண்டில் போய் பணம் கட்டினார்கள் என்று வைத்துக் கொள்ளுங்கள். உடனே இவரும் போய்க் கட்டி விட்டு வந்து விடுவார். ம்ஹூம், இத்தனை பேர் கட்டியிருக்காங்களே, தெரியாமலா கட்டி இருப்பாங்க என்பார்கள். இதனால்தான் நம் மக்கள் எளிதில் ஏமாறுகிறார்கள்!”

தெரியாமலா கட்டி இருப்பாங்க



என்கிறார் புகழ்பெற்ற மாயவரம் சிட்ஃபண்ட்ஸின் மானேஜிங் டைரக்டர் கல்யாணசுந்தரம். மிக எளிய நிலையில் இருந்து சாதாரண சீட்டுக் கம்பெனியாக ஆரம்பித்து இன்று பெரும் ஸ்தாபனத்தின் நிர்வாக இயக்குநராக உயர்ந்தவர் இவர்.

சேமிப்புப் பழக்கம் பெண்களிடம் அதிகம். வீட்டிற்குள் அவர்களுக்குள் சீட்டுக் கட்டுவது முதல் வெளியில் பல்வேறு சீட்டுக்களிலும் சேருகிறார்கள். அவர்களுக்கு இவர் கூறும் யோசனைகள் என்ன...?

“ஒன்று சொன்னால் கோபிக்கக் கூடாது. பெண்கள் திறமைசாலிகள்தான். சிறுவாடு சேமிப்பு என வீட்டுப் பானைக்குள் போட்டு வைத்துச் சேமிப்பவர்கள்தான். ஆனால் மற்றவர்களைப் பார்த்து அவர்கள் என்ன செய்கிறார்களோ, அதைப் போல நாமும் செய்ய வேண்டும் என ஆசைப்படுவார்கள்.

அந்த மாதிரி இல்லாமல் சொந்தமாகச் சிந்திக்க வேண்டும். இந்தக் காலத்தில் விலைவாசி இருக்கும் நிலையில் வருகிற சம்பாத்தியத்தில் குடும்பம் நடத்துவதே பெரிய விஷயம். அதிலேயும் மிச்சம் பிடித்துச் சேமிப்பது அதைவிட பெரிய விஷயம். அப்படிச் சேமிக்கும் பணத்தை நாம் சரியான இடத்தில் போடுகிறோமா எனப் பார்த்துக் கொள்ள வேண்டும்.


ஒரு சீட்டுக் கம்பெனியிலோ, மற்ற இடங்களிலோ பணத்தைப் போடுகிறோம் என்றால் அதன் தலைவர்கள் யார், இயக்குநர்கள் யார், அதன் வரலாறு என்ன இதையெல்லாம் பார்க்க வேண்டும். நன்கு ஆராய்ந்து அறிந்த பிறகு நாம் பணத்தைப் போட வேண்டும். நாம் கேட்கின்ற விவரங்களைக் கம்பெனியினர் கொடுக்கக் கடமைப்பட்டவர்கள். எனவே தீர விசாரித்து எதையும் செய்யுங்கள்.

வட்டி விகிதம் ஏராளமாகத் தருகிறேன் என்றெல்லாம் சொல்லி ஏமாற்றிய எத்தனையோ நிறுவனங்களை மக்கள் அறிவார்கள். அந்த மாதிரியெல்லாம் கொடுக்க முடியுமா என நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

எதைச் செய்தாலும் யோசித்து ஆராய்ந்து செயல்படுங்கள்” என்கிறார் அரசாங்கத்திடம் பல பரிசுகளைப் பெற்ற இந்த அனுபவஸ்தர்.

– பவித்ரா

மனமிருந்தால் மங்கையரே



நவராத்திரி கொலுவைக் காலத்திற்கு ஏற்றாற்போல எளிமையாகக் கொண்டாட விரும்பும் பெண்கள் அதிகமாகிவரும் வேளையிலே, தான் இருக்கும் சிறு பிளாட்டிலே திருமதி தாரிணி முகுந்தன் கொலுப்படிகள் வைத்துப் பழைமையான தம் கலாசாரம், சம்பிரதாயங்களிலிருந்தும் வழுவாமல், நூதன முறையிலே மலைகளையும், பூங்காக்களையும், கோவில்களையும், புல்வெளிகளையும் கிராமத்தையும் ஏன், 'டிஸ்னி லாண்டை'யும் கூட நம் கண் முன்னால் தம் கற்பனைத் திறனுடன் தாமே பிரம்மாவாகிப் படைத்து வரும் நேர்த்தியைக் கண்டோம்.

திருமதி தாரிணி முகுந்தன் :

''இது என்னுடைய தனிப்பட்ட முயற்சி, வேலை என்று நான் சொல்வது தவறு. என் மாமியார் திருமதி பத்மா வீரராகவன் அவர்களின் யோசனைப்படிதான் நானும், என் ஓர்ப்படி ஷோபனா ஸ்ரீகாந்தும், என் நாத்தனார் லலிதா பாலாஜியும் சேர்ந்து இந்தப் புதுமையான, அதிகச் செலவில்லாத கொலுவை வைக்கக் கற்றுக் கொண்டோம்.

ஆற்று மணல் போலத் தோற்றமளிக்கும் இது என்ன பொருள்? கலரில் கிடைக்கிறதா? கலபமாகக் கிடைக்கும் பொருளா என்ற நம் சந்தேகங்களுக்கும் விடையளிக்கிறார்.

''இது மரத் தூள். ஒரு மூட்டை மரத்தூள் விலை ஐந்து ரூபாய்தான். தேவையான அளவு வாங்கிக் கொள்ளலாம். கலர்ப் பொடிகளும் கிடைக்கின்றது. கற்பனைதான் தேவை. அது நமக்குள் கிடைப்பது. உணர்வுபூர்வமானது. அதன்படிதான் இவ்வுலகைப் படைக்கின்றோம். மலைகள் செய்யத் தேவையானது சாதாரண தினசரித் தாள்கள்தான். மைதாமாவுப் பசை செய்து வைத்துக் கொள்ள வேண்டும்.

மலை செய்வதற்கு முதலில் பேப்பர்களைக் கைக்கு வந்தபடி கசக்கி உருண்டையாகச் சுருட்டி வைத்துக் கொள்ள வேண்டும். ஒரு மூங்கில் கூடை இருந்தால் (அல்லது ஏதேனும் கூடை வடிவ பாத்திரத்தில் பேப்பர் ஒட்டியோ) அதை ஒரு மர பெஞ்சின் மீது கவிழ்த்து வைப்போம். அதன் மீது பசை தடவி, தயாரித்து வைத்துள்ள பேப்பர் உருண்டைகளைப் பசை தடவி அதன் மீது ஒட்டிக் கொள்ளும்படி சிறிது தூரத்திலிருந்து எறிய வேண்டும். அவை ஒன்றின் மீது ஒன்று கரடு முரடாக முறையற்ற வடிவத்தில் ஒட்டிக் கொள்ளும். சாயப் பொடிகளைச் சிறிது தண்ணீரில் போட்டு மரத்தூளையும் போட்டுச் சேர்த்தால் பளிச்சென்ற கலர் மரத்தூள் கிடைக்கும். மரக்கலர், பச்சைக் கலர் சேர்த்த பொடிகளை அந்த மலை வடிவத்தின் மீது தூவிப் பாருங்கள். பச்சைப் பசேலென்ற புல், செடிகளுடன் கூடிய மலை தயாராக இருக்கும். ஆங்காங்கே வேறு கலர் தூள் தூவி

மயன் மாளிகை அமைக்கலாம்

அழகுபடுத்தலாம். மலைமீதிருந்து கீழ்வரை பிளாஸ்டிக் பேப்பரை வைத்து நீர்வீழ்ச்சி போல அமைக்கலாம். ஜரிகைப் பேப்பர் களையும் பக்கவாட்டிலே ஒட்டினால் பள பளவென தண்ணீர் வருவது போல இரவிலே தெரியும்.


மலையைத் தொடர்ந்து அடிவாரத்தில் கிராமம் அமைக்க வேண்டும். அங்கே வரப் புகள் பிரௌன் நிறத்தில் பச்சைப் பசேல் வயல்கள், மஜந்தா, ரோஸ்நிற பூக்கள் அமைப்பு, ஆட்கள் தலையில் கூடையுடன், கையிலே மண்வெட்டி, கூடை, கலப்பை சகிதம் ஆங்காங்கே நிற்க வைக்கலாம். சிறு பள்ளிக்கூடம், மருத்துவமனை வைக்கலாம், பூனை, நாய் பொம்மை களை உலவ விடலாம். மலையிலிருந்து யானைக் கூட்டம் துரத்துவது போல வும் மற்ற விலங்குகள் (மான், வரிக்குதிரை போல) கிராமத்துப் பக்கம் ஓடி வருவது போலவும் அமைக்கலாம்.

இப்போதுதான் பெரிய பொம்மைகளைவிட சிறு பீங்கான், பேப்பர் மோல்டு, களிமண் பொம்மைகள் நிறையக் கிடைக்கின்றதே! அவைகளை வாங்கி கற் பனையுடன் உபயோகிக்க லாம். பத்திரப்படுத்துவதும் சுலபம்தான்.

வெறும் மரத்தூளில்: மணல் குன்றுகள், பாலை வனம் அமைப்போம். பாலைவனத்திலே ஆங்காங்கே ஒட்டக பொம்மைகளை வைப் போம். 'டிஸ்னிலேண்ட்' குழந்தைகள் மகிழ அற்புதமாக அமைக்கலாம். பிளாஸ்டிக் ரயில் வண்டிகள், கார்கள், வன விலங்குகள், சிறு ரோபோக்கள் எதுதான் கிடைக்கவில்லை இப்போது.

நீச்சல்குளம் கூடத் தண்ணீரே உபயோகப் படுத்தாமல் அகன்ற பேசின்களில் ஜன்ன லுக்குப் போட்டு உடைந்த கண்ணாடிகளைப் போட்டு வைத்து விட்டால் தண்ணீர் போல அழகாகத் தெரியும். குளமும் ரெடி. போன வருடம் வி. ஜி. பி. கோல்டன் பீச் அமைத்தது பலரும் பாராட்டும்படி இருந்தது. பத்து நாட்களும் பத்து விதமான, புதுமையான இடங்களைக் கற்பனைத் திறன் கொண்டு அமைப்போம். அரை மணிநேரம் போதும்.

என் மகள் ஸ்வேதாம்பரியும், மகன் நிகில் ஸ்ரீவத்சாவும் எங்க ளுக்கு மிகவும் சந்தோ ஷத்துடனும், உற்சாகத் துடனும் சுறுசுறுப்பாக உதவுவார்கள். பல மாடி கள் உள்ள இடத்தில் மண் ணையும், செங்கல்லை யும் சுமந்து யார் கஷ்டப் பட்டுக் கொலு வைப்பார் கள் என்று அலுத்துக் கொள்ளும் பல பெண் மணிகள் இவையெல் லாம் வெறும் பேப்பர் களும் மரத்தூளும் என்ப தோடு, சுலபமாய்க் கிடைக்கக் கூடிய, செல வும் அதிகமில்லாத பொருட்கள் என்பதைக் கண்ணால் கண்டு மிகவும் மகிழ்ந்ததோடு, இதே



போல அமைக்க எங்களிடம் கற்றுக் கொண்டும் வைக்க ஆரம்பித்துள்ளனர்.

மேலும் ஒரு வருடம் உபயோகித்த கலர் மரத்தூளைப் பிளாஸ்டிக் கவரில் போட்டுக் கட்டி, கெடாமல் இருக்க பூச்சி மருந்து பாக்கெட் இரண்டையும் போட்டு வைத்தால் மூன்று வருடம் உபயோகிக்கலாம்.

இரண்டு, மூன்று ரூபாய்க்கு சம்கிகள் வாங்கி சாதாரண மண் பொம்மைகளுக்கு, பழைய பட்டுப் புடைவையிலிருந்த உடை தைத்து சம்கி ஒட்டிப் போடுவோம். சீரியல் விளக்குகள் போட்டால் காண்போர் கண்கள் கவரும்படி இந்திர லோகத்திற்குள் வந்தது போலத்தான் இருக்கும். கொலுப்படிகள், கிராமங்கள், மலைகள் அமைப்பதோடு தினமும் ஒரு ரங்கோலி கோலம் இந்தக் கலர் மரத் தூளை உபயோகித்துப் போடுவோம். அதிலும் ஜமுக்காளம் போன்ற கோலத்தைப் பார்க்கவே கூட்டம் வரும்.

வருகின்ற அத்தனை பெண்களுக்கும் தாம்பூலம் கொடுப்பதோடு அவர்களுக்கு உபயோகமான பொருள்களையும் என் மாமியார் வைத்துக் கொடுப்பார்.

வித்தைகளுக்கு நாயகியான அவள் பெருமையைத் தினமும் படிப்பதோடு வெள்ளிக் கிழமையன்று 'ஆண்டாளு'க்குத் திருக்கல்யாணமும் செய்வோம். பட்டுப் புடைவை, அங்கவஸ்திரம் இவற்றுக்குச் சம்கியும், ஜரிகையும் தைத்து திருமண உடைகளைச் சிறப்பாகத் தயாரித்து மகிழ்வோம். இவை காற்றிலே ஆடும்போது ஜிலுஜிலு வென்று பார்க்கப் பரவசமாக இருக்கும். பெஞ்சு மீது வைப்பதாலும், அறையில் கொலுப்படிகளுக்கு இரு பக்கமும் உள்ள வெற்றிடத்தில் வைப்பதாலும் இடம் நிறைய அடைத்துக் கொள்ளாமல் புழங்கும் இடமும் கிடைக்கும்.

இதுபோல மரத்தூள் அலங்காரம் செய்யும் எண்ணம் திடீரென எப்படி உதயமானது என்று திருமதி பத்மா வீரராகவன் சொல்கிறார்.

''1970 ஆம் வருடம் பழக் கண்காட்சி ஒன்றுக்குச் சென்றிருந்தேன். அங்கு தக்காளிப் பழங்கள் கலர் கலரான பச்சை, மரக்கலர் வர்ணங்களால் அமைந்த டிசைன்கள்மேல் நேர்த்தியாக அடுக்கப்பட்டிருந்தது. ஆர்வம் காரணமாக கடைக்காரரைக் கேட்டதும் சாதாரண மரத்தூள் அது என்றார். ஆச்சரியப் பட்டேன். எனக்கும் என் மகளுக்கும் புதிது புதிதாக ஏதாவது கைவினைப் பொருட்கள் செய்து நவராத்திரிக்கு வைக்கும் பழக்கம் உண்டு. அந்த வருடம் சிறிது மரத்தூள் வாங்கி வந்து சிறு பார்க்கும் (பூங்கா) கிராமமும் அமைத்தோம். பார்த்தவர்கள் பலரும் பாராட்டினார்கள். உற்சாகம் பெருக்கெடுத்தது. மருமகள் தாரிணியும் அதில் பங்கேற்க முன்வந்தாள். அவள் கற்பனையும் சேர்ந்தது.

சமீப காலமாக என் மகளும், இரு மகள்களும் போட்டி போட்டுக் கொண்டு இப்புது உலகைப் படைக்கின்றனர். குருவுக்கு மிஞ்சிய சிஷ்யர்களானதில் எனக்கு மிகவும் சந்தோஷம்தான். கொலுப்படிகள் அமைத்துக் கொண்டாடும் சந்தர்ப்பம் இல்லாதவர்கள், அப்படிச் செய்யாவிட்டாலும் மேஜை மீதோ, கண்ணாடி மர பீரோவிலோ வைத்துப் பூஜைகள் செய்து, தாம்பூலம் கொடுத்து நவராத்திரியைச் சிறப்பாகக் கொண்டாட முடியும். நேரமில்லை என்பதெல்லாம் நொண்டிச் சாக்கு என்பதே என் எண்ணம். மனம் இருந்தால் மார்க்கம் உண்டு. நம் சம்பிரதாயங்கள் நமது பண்பாடுகள் போதிக்கும் ஒழுக்கத்தை நாம் பின்பற்றினால்தான் குழந்தைகளும் பின்பற்ற வாய்ப்புக் கிடைக்கும். ''வேண்டுமென்றால் வேலியிலும் காய்க்கும். வேண்டாமென்றால் செடியிலும் காய்க்காது'' என்ற பெரியோர் வாக்குப்படி நாம் சிறு அளவிலாவது பண்டிகைகளை விடாமல் கொண்டாட வழக்கப்படுத்திக் கொண்டால் நம் சந்ததிக்கு நல்லது.


- ஆதித்யா

ஃப்ரிட்ஜில்...



வெற்றிலை, மல்லி போன்ற மெல்லிய தன்மையுடையவற்றை இறுக மூடிய எவர்சில்வர் சம்புடங்களிலோ, தூக்குகளிலோ போட்டு வைப்பது நல்லது. தினம் ஒருமுறை அவற்றை வெளியில் எடுத்துப் பாத்திரங்களின் உள்ளே நீர்த்துளிகள் சேர்ந்திருந்தால் சுத்தமாகத் துடைத்துவிட்டு வைப்பது சிறந்தது.

- சந்திரா



பாமோலிவ்

எக்ஸ்ட்ரா கேர்

வழங்குகிறது—சருமப் பராமரிப்பு பற்றிய உங்கள் கேள்விகளுக்கு மூன்று பதில்கள்



	ஆம்	இல்லை
எண்ணெய்ப்பசை சருமமுள்ள நங்கையர் அதிக வயது வரை இளமையாகத் தோன்றுகிறார்களா?	✓	
எண்ணெய்ப்பசை சருமத்திற்கு மாய்ச்சரைசிங் தேவையா?	✓	

இதுவரை அநேக சோப்புகள் உங்களுடைய சரும வகைக் குறித்து கவனம் செலுத்தியது இல்லை. உங்களுடைய சருமத்திற்குத் தேவையான தனிப்பட்ட பராமரிப்பை அவைகள் அளிக்க இயலாதிருந்தன. ஆனால் இப்போது உங்களுக்கு இருக்கிறது பாமோலிவ் எக்ஸ்ட்ரா கேர்.

பாமோலிவ் எக்ஸ்ட்ரா கேர், மூன்று வெவ்வேறு சருமவகைகளுக்கு மூன்று வெவ்வேறு சோப்புகள்.

பச்சை நிற பாமோலிவ் எக்ஸ்ட்ரா கேர் – எண்ணெய்ப் பசை சருமத்திற்கு. இதிலுள்ள மென்மையுள்ள க்லென்ஸிங் லோஷன் எண்ணெய்ப் பசையைக் கடந்து சென்று, இதமாகவும் முழுமையாகவும் சுத்தம் செய்து, உங்களுடைய சருமத் தன்மையை மீட்டு, மீண்டும் புத்துணர்ச்சியோடு கூடிய தூய்மையுடன் திகழச் செய்கிறது.

	ஆம்	இல்லை
உலர்ந்த சருமமுள்ள நங்கையர் விரைவிலேயே முதுமை அடைகின்றனர் என்பது உண்மையா?	✓	
சரும வகை முக்கியமானதா?	✓	

பிங்க் நிற பாமோலிவ் எக்ஸ்ட்ரா கேர் – உலர்ந்த சருமத்திற்கு. இது உங்கள் சருமத்தை உலரவிடாது. இதமாக சுத்தம் செய்கிறது. மேலும் நாள் முழுவதும் உங்கள் சருமத்தில் ஈரப்பசையைத் தக்க வைக்க உதவுகிறது. இதிலுள்ள விசேட ஸ்கின் லோஷன் உங்கள் சருமத்திற்கு ஊட்டமளித்து, அதை மென்மையாகவும், வழவழப்பாகவும் வைக்கிறது.

	ஆம்	இல்லை
சாதாரண சருமம் பொதுவாக பெரும்பாலோர்க்கு உள்ளதா?		✓
வெவ்வேறு சரும வகைக்கு வெவ்வேறு வித சரும பராமரிப்பு உண்மையிலேயே தேவைதானா?	✓	

வெண்மை நிற பாமோலிவ் எக்ஸ்ட்ரா கேர் – சாதாரண சருமமுள்ள சில அதிர்ஷ்டசாலிகளுக்கு. இதன் வளமான க்ரீம் மயமான தயாரிப்பு உங்கள் சருமத்தின் இயற்கைப் பொலிவை மிளிரச் செய்கிறது.

ஒவ்வொரு நங்கையும் வேறுபட்டவர்கள் – அது போன்றதே அவர்களுடைய சருமமும். உங்களுடைய சருமத்திற்குத் தேவையான விசேட தனிப்பட்ட முறையிலான பராமரிப்பை வழங்குவது பாமோலிவ் எக்ஸ்ட்ரா கேர் மட்டுமே. உங்களுடைய சருமத்தை கூடுதலாகப் பராமரிக்கிறது.

பாமோலிவ் எக்ஸ்ட்ரா கேர், உங்களுடைய சருமத்திற்கு கூடுதல் பராமரிப்பளிக்கிறது


* அர்ச்சனா

சென்டிமெட் மென்மையான உணர்வையும், ஒருவித நம்பிக்கையையும் குறிக்கும் சொல். மூடநம்பிக்கை என்ற எல்லைக்கு அது சென்று விடாத வரை அதனால் பாதகமில்லை. சொல்லப் போனால் மற்றவர்களைப் பாதிக்காத எந்த சென்டிமெண்ட்டும் வெறுக்கப்பட வேண்டியதில்லை. ஆனால் "லேடீஸ் சென்டிமெண்ட்" என்ற பேரில் பெண்ணடிமைத்தனமும், பெண்களை மூளைச் சலவை செய்யும் விதமும் திரையில் பரவலாக இடம் பெறுவதை சென்ற இதழில் கட்டிக்காட்டியிருந்தோம்.

"பூட்டாத பூட்டுக்கள்" படத்தின் தோல்விக்கு அதன் கதை லேடீஸ் சென்டிமெண்ட்டுக்கு எதிரானது என்றார்கள். ஆனால் 'சிறை' படத்தில் தன்னை நிர்க்கதியாக விட்டுச் சென்ற கணவன் சில காலம் கழித்து, "நீ எப்படி இருந்திருந்தாலும் பரவாயில்லை. நீ இப்போது எனக்குத் தேவை" என்பது போலச் சொல்ல, கதாநாயகி தாலியை வீசி எறிவாள். போதாக்குறைக்கு தன்னைக் கெடுத்த அயோக்கியனிடமே போய் "உன் செயலால் நான் எந்தவித



திரையுலகில் லேடீஸ் சென்டிமெண்ட் - 2



* ரேவதி


ஆதரவும் இல்லாதவளாகப் போய் விட்டேன். இனி உன் வீட்டிலேயே தான் இருப்பேன். தூய்மையையும் காத்துக் கொண்டு'' என்று கேட்கிறாள் (நடைமுறைக்கு ஒவ்வாததாக ஆனால் சுவையானதாகப் படைக்கப்பட்ட) கதாநாயகி. திரையுலகினரின் பாஷையில் இதெல்லாம் லேடீஸ் சென்டிமெண்ட்டுக்கு முரணானது. அந்தப் படம் ஓடவில்லையா? அதன் வெற்றியில் பெண்களுக்குக் கணிசமான பங்கில்லையா?

''சாரதா'' படத்தைக் குறிப்பிட்டே ஆக வேண்டும். (சென்ற இதழின் தொடக்கத்தில் குறிப்பிட்ட 'மாலதி' படத்தின் இயக்குனர் கே. எஸ். ஜி. தான் இந்தப் படத்தையும் இயக்கியிருக்கிறார்!) பெண்ணின் தேவைகளுக்கு - அவளது 'இல்லற' உணர்ச்சிகளுக்கு மதிப்பு கொடுத்த முதல் படம் என்று இதைச் சொல்லலாம். கணவன் ஆண்மையை இழந்ததனால் அவளது மனைவிக்கு மறுமண ஏற்பாடுகள் நடக்கின்றன. இந்த ஏற்பாட்டிற்கு ஆதாரமாக இருப்பவனே விபத்தினால் குறை ஏற் பட்ட அவளது கணவன் தான் என்பது கதையின் தனிச் சிறப்பு. ஆனால் தன் முழுத் துணிவையும் இயக்குனர் படத்தில் காட்டவில்லை; முடிவில் கதாநாயகி இறந்து விடுகிறாள். என்றாலும் அந்தக் கால கட்டத்தில் இது போன்ற ஒரு பிரச்னையை மையமாகக் கொண்டு ஒரு திரைப்படம் எடுத்ததே பாராட்டப்பட வேண்டிய விஷயம். பெண்கள் கூட்டம் அலை மோதிய படம் இது.

ஆனால் திரையுலகைப் பொறுத்தவரை இதுபோன்ற வெற்றிகளுக்குப் பின்னால் கூட லேடீஸ் சென்டிமெண்ட் என்பதன் இலக்கணம் மாறவில்லை.

இரண்டு முறை சிறந்த நடிகை என்று தேசிய விருது பெற்ற அர்ச்சனா சென்ற இதழில் நாம் கூறியவற்றை ஒத்துக் கொண்டார் - ஒருசில விதிவிலக்குகளுடன்.

* பிரபு





* திருலோகசந்தர்

''புதிய ராகம் படத்தில் கதாநாயகிக்குத் தெரியாமல் அவளுடைய கர்ப்பப் பையையே நீக்கும்படி செய்து விடுகிறான் அவள் கணவன். தன்னால் தாய்மையடைய முடியாது என்பது ஒரு பெண்ணுக்கு ஏற்படும் மிகப் பெரிய சோகம். அந்த நேரத்திலே தாலியும் அறுபடுகிறது. கணவனை விட்டு வெளியேறுகிறாள் அவள். இது ஒரு இயற்கையான காட்சியாகத் தான் படுகிறது எனக்கு. அந்தக் கணவனை அவள் கொலை செய்திருந்தாலும் பெண்கள் ஏற்றுக் கொண்டிருப்பார்கள்.''

'சென்டிமெண்டான' ஒரு காட்சிக்கு வக்காலத்து வாங்கும்போதே தனது கடைசி வாக்கியத்தின் மூலம் 'ஆன்டி-சென்டிமெண்ட்' முடிவுகளைப் பெண்கள் ஏற்றுக் கொள்வார்கள் என்பதையும் உணர்த்தி இருக்கிறார் அர்ச்சனா.



''அவர்கள், அவள் ஒரு தொடர்கதை, உதிரிப்பூக்கள் - இவையெல்லாம் பெண்களின் வெவ்வேறு பரிணாமங்களையும், பிரச்னைகளையும் அற்புதமாகக் கையாண்ட படங்கள். இவற்றில் எல்லாம் கதைகளுக்குத் தேவையான காட்சிகள் இருந்தனவே தவிர லேடீஸ் சென்டிமெண்ட் என்று திணிக்கப்பட்ட காட்சிகள் இல்லை. பெண் கதாபாத்திரங்களை அழவிடாமலேயே சோகச் சுமையை நம் மனத்தில் ஏற்றிய காட்சிகள் இவற்றில் உண்டு.

பாசமலர் சென்டிமெண்ட்டுகள் நிறைந்த ஒரு படம். இருக்கட்டுமே. மக்களின் மனநிலையை மிருக உணர்வி லிருந்து மாற்றி பாசப் பிணைப்பை வலியுறுத்தும் இதுபோன்ற படங்கள் சமுதாயத்திற்கு நன்மை செய்பவைதானே. எட்டு முறை இந்தப் படத்தைப் பார்த்திருக்கிறேன். கட்டுப்பாட்டோடு இருக்க வேண்டுமென்று சபதம் எடுத்துக் கொண்டு போனாலும், ஒவ்வொரு முறையும் நான் அழாமல் திரும்பியதில்லை.

லேடீஸ் சென்டிமெண்ட்டை சரியான விதத்தில் வக்ரத்தனம் இல்லாமல் பயன்படுத்தியவை என்று விசுவின் படங்களையும் சொல்வேன். ஏன், வசந்த் இயக்கிய 'கேளடி கண்மணி' கூட இந்த விதத்தில் குறிப்பிட வேண்டிய படம்தான்'' என்றார் அர்ச்சனா.

''மற்றவர்கள் நடித்த படங்கள் இருக்கட்டும். நீங்கள் நடித்த படங்களில் லேடீஸ் சென்டிமெண்ட் என்ற பேரில் திணிக்கப்பட்ட காட்சிகள் இல்லையா?'' என்று நாம் கேட்டவுடன், ''நிச்சயமாக இல்லை. ''வீடு'' படத்தில் நடுத்தர வர்க்கத்தைச் சேர்ந்த ஒருவர் வீட்டைக் கட்டப் படும் பாடு விவரிக்கப்பட்டிருந்தது. அந்தப் பாத்திரம் ஒரு பெண் என்பது தற்செயலாக அமைந்த ஒன்று. ஆணாக இருந்தாலும் அந்தப் பிரச்னையின் தீவிரம் அதேதான். ''தாசி'' படத்தில் முன்னொரு காலகட்டத்தில் அடிமை வாழ்வு வாழ்ந்த பிரிவைச் சேர்ந்த ஒருத்தியின் ரோல் எனக்கு. குறைந்த உடையை மட்டுமே அந்த அடிமைகள் அணிவது வழக்கமாம். தவிர தனது பல்வேறு எஜமானர்களுக்கு 'இணங்க' வேண்டிய அவலம். இவையெல்லாம் கதைக்குத் தேவையாக இருந்தன. போராடும் வாழ்க்கை அமைந்த சித்தாளாக ''மட்டி மனுஷங்க'' படத்திலும் லேடீஸ் சென்டிமெண்ட் என்று திணித்த காட்சி எதுவும் கிடையாது.''

திரையில் வரும் முக்கியப் பெண் பாத்திரங்கள் தியாகம் செய்பவர்களாகப் படைக்கப்படுவதைப் பற்றி ''முட்டாள்தனம்'' என்று சீறுகிறார் அர்ச்சனா. ''நிஜ வாழ்வில் பெண்கள் செய்யாத தியாகங்களையெல்லாம் திரையில் காட்டுவது அவர்களது எண்ணங்களைக் கட்டுப்படுத்தி அவர்கள் நிலையை மட்டுப்படுத்துவதன் வெளிப்பாடுகள்தான்'' என்றார் முத்தாய்ப்பாக.

இந்தித் திரையுலகில் பெண்ணடிமைத்தனத்தை வளர்க்கும் விதமான (மனைவியைக் காலால் எட்டி உதைக்கும் கணவன் போன்ற காட்சிகள் நிறைந்த) படமொன்றில் நடிக்க ஷபனா ஆஸ்மி மறுத்ததுடன் பெண்களைக் கேவலப்படுத்தும் படங்களில் தான் இனி நடிக்கப் போவதில்லை என்றும் அறிவித்தார்.

நடிகை ரேவதியைச் சந்தித்து ''திறமை மிக்க, பெண்களின் பெரும் ஆதரவைப் பெற்ற உங்களுக்கும் ஷபனா ஆஸ்மி போன்ற ஏதாவது கொள்கைகள் உண்டா?'' என்று கேட்டோம்.

''டூயட் போன்ற விஷயங்களை விட்டுவிட்டால் நான் ஏற்ற பெரும்பாலான பாத்திரங்கள் இயற்கையானவைதான். அவற்றில் கணிசமானவை ஆன்டி-சென்டிமெண்ட் முடிவுகளைத் தேடிக் கொண்ட பாத்திரங்களும் கூட. ஆண் பெண் சமத்துவத்தில், அதிகப் பிடிப்பு கொண்டவள் நான். நான் நடிக்க மறுத்த படங்களை இப்போது என்னால் வெளிப்படையாக விவாதிக்க முடியாது. ஆனால் ஒன்று சொல்வேன். பெண்களை மட்டமாகச் சித்தரிக்கும் சில காட்சிகளை மாற்றியமைக்கச் சொல்லி சில இயக்குனர்களிடம் வேண்டுகோள் விடுத்து அதில் கணிசமான வெற்றியும் கண்டிருக்கிறேன்'' என்றார் 'எத்தனை யுகங்கள், எத்தனை யுகங்கள், எங்கே போயின எங்கள் முகங்கள்' எனும் பெண்ணுரிமைப் பாடலில் முக்கியப் பங்கேற்றிருக்கும் ரேவதி.

அதே பாடலில் பங்கேற்ற நடிகர் பிரபுவிடம் இந்த விஷயத்தைப் பற்றிக் கருத்து கேட்டோம்.

பூரி மாவு பிசையும் போது பிரெட் துண்டங்களை நீரில் நனைத்துச் சேர்த்துப் பூரி செய்தால் கரகரவென்று இருக்கும்.

- ஜி. இந்திரா





''நீங்கள் ஆண் பெண் சமத்துவத்தில் நம்பிக்கை கொண்டவரா?'' என்றதும், ''அந்தக் கொள்கையில் எனக்கு விருப்பம் இல்லாவிட்டால் அந்தப் பாடல் காட்சியில் நடித்திருக்க மாட்டேனே'' என்றார்.

சற்று யோசித்து விட்டு, ''பெண்கள் இரண்டாம்தரக் குடிமக்களாகத்தான் நடத்தப்படுகிறார்கள். அவர்களுக்கு அதிக மரியாதை தரப்பட வேண்டுமென்பதில் சந்தேகமேயில்லை'' என்றார் அழுத்தமாக.

தொடர்ந்து பேசுகையில் ''தாலி என்பது புனிதத்துவம் வாய்ந்தது என்பது மக்கள் மனத்தில் ஊறிப் போன விஷயம். இனிமையான அந்த உணர்வை செண்டிமெண்ட் என்ற பேரில் திரையுலகம் வளர்ப்பதில் என்ன தவறு இருக்க முடியும்?'' என்றும் கூறினார்.

''கதாநாயகர்கள் பேச்சுக்குத் திரையுலகில் மதிப்பு அதிகம்தான். இந்தச் சூழ்நிலையில் உங்கள் படங்களில் பெண்களை நியாயமான, நடைமுறைக்கு ஒத்த விதங்களில் சித்தரிக்க நீங்கள் ஏதாவது முயற்சி எடுத்துக் கொண்டதுண்டா?'' என்றதும் சிறிது சங்கடத்துடன் புன்னகைத்தார். பிறகு, ''பெண்களுக்குக் குறைந்த உரிமைகள் என்பது இந்தியாவில் மட்டுமல்ல, உலகெங்கும் இதே நிலைதான். தமிழ்த் திரையுலகமும் விதிவிலக்கல்ல'' என்றார் மழுப்பலாக.

பல வெற்றிப் படங்களை அளித்த இயக்குனர் திரு. ஏ. சி. திருலோகசந்தர் தன் கருத்தில் தெளிவாகவே இருந்தார்.

''பெண்களைச் சித்திரிப்பதில் பெரும்பாலான இயக்குனர்கள் பொறுப்புணர்வோடு செயல்படுவதில்லை என்றுதான் சொல்வேன். மனைவியின் மீது அமிலத்தை ஊற்றுவது, நெருப்பால் சுடுவது, தாலியை அறுத்துக் கையில் கொடுப்பது - இதையெல்லாம் திரையில் விவரமாக (சில சமயம் ஸ்லோ மோஷனில்!) காட்ட வேண்டுமா என்ன? இதையெல்லாம் யார் விரும்புகிறார்கள்? நான் விரும்பவில்லை. என் வீட்டினர் விரும்புவதில்லை. என் வீட்டில் வேலை செய்யும் பெண்மணியைக் கேட்டுப் பார்த்தேன். ''யாருக்குப் பிடிக்குமுங்க இந்தக் கோரமெல்லாம்?'' என்றாள். பின் எதற்காக, யாரை மனதில் கொண்டு, பெண்களுக்கு இழைக்கப்படும் கொடுமைகளைக் குறுகிய நோக்கில் இப்படி சேடிஸத்தோடு காட்ட வேண்டும்? ஒரு படத்தில் ஒரு மனைவி மொத்தம் பதினைந்து அறைகள் வாங்குகிறார்! நடக்கிறதைத் தானே காட்டுகிறோம் என்கிறார் ஒரு புது இயக்குனர். நடப்பதையெல்லாம் காட்ட முடியுமா? அல்லது காட்டத் தான் வேண்டுமா? கருத்தரிப்பதும், பாத்ரூம் போவதும் கூட நடப்பதுதான். அதற்காக...?

தாலியின் புனிதத்துவம் என்பது மனத்தைப் பொறுத்த விஷயம். என் நல்ல வாட்சை என் மகன் போட்டு உடைத்து விட்டால் நான் நிச்சயம் பதறுவேன். அது போல நல்ல இல்லறத்தை - அல்லது குறைந்தது பொறுத்துக் கொள்ளக்கூடிய இல்லறத்தை - நினைவுபடுத்தும் சின்னமாக தாலி இருந்தால் அது புனிதமானதுதான். அப்படி இல்லையென்றால் தாலி என்பது ஒரு கனம்; கழுத்தில் உரலைக் கட்டிக் கொண்டது போன்ற பாரம்.

வித்தியாசமான ஆனால் சமூகத்துக்குத் தேவையான மாற்றங்களை வலியுறுத்தும் முடிவுகளை ''லேடீஸுக்குப் பிடிக்காது, படம் கவுந்துடும்'' என்று கூறி அரைத்த மாவை அரைக்கிறார்கள். அவர்கள் படத்தின் முடிவை ரசிகர்களின் யூகத்துக்கு விடுமாறாவது அமைக்கலாமே? சரத் சந்திரர் போன்ற வங்க இயக்குனர்களிடம் இந்த யுக்தியை நான் கவனித்திருக்கிறேன். பாத்திரங்களை உயிரோட்டமானவையாகப் படைத்து விட்டு பனிச்சென்று வித்தியாசமான கோணங்களில் அவர்களைச் சிந்திக்க விட்டு விட்டு சனாதனவாதிகள் கேட்டால் ''எனக்குத் தெரியாது, என் மைதிலியே அந்த முடிவைத் தேர்ந்தெடுத்துக் கொண்டாள்'' என்று சிரிப்புடன் பதிலளித்ததுண்டு'' என்றார்.


– ஜி. எஸ். எஸ்.

ஃப்ரிட்ஜில்...

சாதாரண ஐஸ் கட்டிகள் தவிர ஃப்ரீஸரில் வைக்கும் ஐஸ்க்ரீம்களை மூடி வைத்தால்தான் சுவை குறையாமல் இருக்கும்.

தினம் அல்லது 2 நாட்களுக்கு ஒரு முறையேனும் டிஃப்ரோஸ்ட் செய்தால் தான் ஃப்ரீஸரின் மேற்புறத்தில் படிந்துள்ள பனிப் போர்வை அகலும். கம்ப்ரசருக்கும் நல்லது.

- சந்திரா



அவசிய பூஜைகளும் ஆடியோ கேஸட்டுகளும்

இந்தக் காலத்தில் ஆண்களோடு பெரும்பாலான பெண்மணிகளும் வேலைக்குப் போகும் காரணத்தால் அலுவலக வேலையோடு வீட்டுப் பொறுப்பையும் சுமக்கும் நிலையிலுள்ள அவர்கள் எப்போதும் பரபரப்பாகவும் வேகமாகவும் இ ய ங் க வேண்டியுள்ளது. இருப்பினும் இந்த அவசர காலத்திலும், எந்த ஊரில் வாழ்ந்து வந்தாலும் நம்முடைய கலாசாரத் தையும் பண்பாட்டையும் விடாப்பிடியாக அவர்கள் தொடர்ந்து செய்து வருவது நம்முடைய மண்ணுக்கே இருக்கும் தனிச் சிறப்பு.

எந்தப் பண்டிகையானாலும் இரண்டு நாட்கள் முன்னதாகவே உற்றாரும் உறவினரும் கூடிச் சூழ்நிலையைக் கலகலப்பாக்க, பட்சண வகையறாக்கள் செய்வது முதல் பூஜை காரியங்கள் வரை அனைத்துமே சாஸ்திரப்படியும் சம்பிரதாயப்படியும் செய்து வந்த காலமெல்லாம் போய், சாஸ்திரிகளை மட்டும் வரவழைத்து வீட்டோடு பூஜையைச் செய்து வருகின்றனர்.

இப்போது இந்த வழக்கத்திலும் ஒரு புதுமையான மாறுதல். வாத்தியாருக்குப் பதிலாக பூஜா மந்திரங்களும் செய்முறைகளும் பதிவு செய்யப்பட்ட ஆடியோ கேஸட்டுகள் பயன்படுத்தப்படுவதுதான் அது.

வெளிநாடுகளிலும், இந்தியாவின் மூலை முடுக்குகளிலும் வ ா ழ் கி ன் ற வ ர் க ள் "வாத்தியாரைத் தேடி நாங்கள் எங்கே போவது! என்ற பிரச்னைக்கு இடமில்லாமல் செய்து விடுகின்றன இந்த கேஸட்டுகள்" என்கிறார்கள். "உள்ளூரிலேயே இருந்தால் மட்டும் என்னவாம்? நான்கு ஐந்து வீடுகளில் பூஜைக்குச் செ ல் ல வேண்டியிருக்கும் சாஸ்திரிகளால் நம் வீட்டிற்கு நேரப்படி வருவதென்பது சில சமயங்களில் இயலாமல் போய் விடுவதால் எங்களுக்குக் கூட இந்த கேஸட்டுகள் ஒரு வரப்ரஸாதம்தான் என்கிறார்கள் இங்கேயே இருப்பவர்கள். "எந்தப் பூஜையானாலும் கடவுளுக்கும் நமக்கும் இடையில் வேதவித்தான சாஸ்திரிகள் ஒருவர் ஒரு தூதராக அமர்ந்து, பூஜையைச் செய்வித்து, தெய்வீகச் சூழ்நிலையை உருவாக்கி, தேவதைக்குப் ப்ரீதியை உண்டாக்கி, நமக்கும் பூஜா பலனை கிடைக்கச் செய்வது என்பது கேஸட்டுகளால் சாத்தியமாகுமா?" என்று கூறுபவர்களும் உண்டு. இதுபற்றி இவர்கள் என்ன கூறுகிறார்கள் என்று கேட்போம்.

* சுந்தர சாஸ்திரிகள்



✱ மரகதம்



திரு இராமமூர்த்தி சாஸ்திரி :

●● அறிவியல் வேகமாக வளர்ந்துண்டு வர இந்த நாளில் இந்த நவீன மாற்றத்தை நான் மனப்பூர்வமா வரவேற்கறேன். பூஜா திரவியங்களெல்லாம் எடுத்து வச்சிண்டு, வாத்தியார் வராறான்னு வாசலையே பார்த்துண்டு இருக்கிற டென்ஷனெல்லாம் இல்லாம நிம்மதியா பூஜையைச் செய்யறதுக்கு நல்ல உபாயம் இது. நேயர் ஒருத்தர் வரலக்ஷ்மி பூஜை ஆடியோ கேஸட் ஒண்ணு கொடுத்தார். கேட்டுப் பார்த்தேன். மந்திரங்கள் உச்சரிப்பு எல்லாம் நிதானமாகவும், தெளிவாகவும், இருந்ததைக் கேட்டு ரொம்ப சந்தோஷமா இருந்தது. ஒரே நாளில் நிறைய வீடுகளுக்குப் போய் பூஜை செய்விக்க வேண்டிய நிலையில இருக்கிற வாத்தியாரால இவ்வளவு நிதானமா சொல்ல முடியாம போகலாம். இப்படி கேஸட் உபயோகப்படுத்தறவா எல்லாம் கட்டாயம் நெனவு வச்சுக்க வேண்டிய விஷயம் என்னென்னா அவா பூஜை ஆரம்பிக்கும் போதே வாத்தியாருக்குன்னு கொடுக்க வேண்டிய தட்சிணையைத் தனியா எடுத்து வெச்சுண்டு பூஜையெல்லாம் முடிஞ்ச பிறகோ பின்னாலேயோ கட்டாயமா அவர்கிட்டே அதைக் கொடுத்திடணும். அவர்கிட்டே கொடுக்க முடியலன்னாலும் வேற யாராவது ஏழைக்காவது அதைக் கொடுத்திடணும்.''

திரு ஆர்.வி. சுந்தர சாஸ்திரிகள் :

●● வேதத்திற்கு ''எழுதாக் கிளவி'' என்று பெயர். அதை வடமொழியில் ''ஸ்ருதி'' என்று சொல்லுவா. அதைப் பிறருக்கு எழுதிக் கொடுத்தோ கேஸட் மூலம் ஒலி பரப்பியோ சொன்னா அதிகப் பிழைகள் ஏற்படும். வாத்தியார் அருகில் இருந்து செய்து வைப்பது போல கேஸட்டில் சொல்ல முடியாது. உதாரணமாக பூஜை செய்து வைக்கும் போது ''ஆசமனம் செய்யுங்கோ! என்று சொல்லி அச்சுதாய நம:; அனந்தாய நம:; கோவிந்தாய நம:; என்று நேராகச் சொல்லுவது கஷ்டம். உடனே அக்ஷதையை எடுத்துக் கொள்ளுங்கள் என்று சொல்லி வாத்தியார் அக்ஷதையைக் கையிலே கொடுத்து விடுவார். இது போல் கேஸட்டில் செய்ய முடியாது. மேலும் ''ஆவாஹயாமி! ஆஸனம் சமர்ப்பயாமி!'' - இவைகளுக்கு வாத்தியார் அருகில் இருந்தால் கையில் கொடுத்துப் படத்திலோ, கும்பத்திலோ அக்ஷதையைப் போடுவது கஷ்டம். பாத்யம், அர்க்யம், ஆசமனீயம் இவைகளின் செய்முறையும் வாத்தியார் அருகிலிருந்து சொல்வதுபோல் கேஸட்டில் முடியாது. புஷ்பங்கள் இல்லாவிடில் அதற்குப் பதிலாக அக்ஷதை, குங்குமங்களைப் போடச் சொல்லலாம். ஆனால் கேஸட்டைப் பயன்படுத்துபவர்களுக்கு எந்த புஷ்பம் போடவேண்டுமோ அது இல்லாவிடில் வேறு என்ன செய்வது என்ற குழப்பம் ஏற்படலாம். உண்மையைச் சொல்ல வேண்டுமென்றால் எது தெற்கு வடக்கு என்று தெரியாதவர் கூட இன்று நிறைய பேர் உண்டு. இவர்களுக்கு சாஸ்திரிகள் உதவி நிச்சயம் தேவை. ஏதாவது கலோகமோ, ருத்ரம் சமகமோ காதால் கேட்டு அனுபவிக்க கேஸட்டைப் பயன்படுத்துவதில் நன்மை உண்டு. ஆனால் கூடிய மட்டும் தேவ, பித்ரு காரியங்களைச் சிறு வயதாக இருந்தாலும் சாஸ்திரிகளின் உதவி கொண்டு செய்து தக்ஷிணை தாம்பூலமும் வழங்கினால்தான் நல்லது. கிரஹஸ்தர்கள் முடிந்தவரை சிறந்த வேதவித்தை வைத்துக் கொண்டு முக்கியமான பூஜை விதிமுறைகளையும் செய்முறைகளையும் சற்று அறிந்து கொண்டால் அவர்கள். சொந்தமாகச் செய்து கொள்ளவும், மற்றவர்களுக்குச் செய்விக்கவும் உதவும்.''



✱ கிருத்திகா



எந்த அரிசியானாலும் புலவு அரிசி மாதிரி பொல பொலவென்று இருக்க ஓர் எளிய வழி. அரிசியைக் களைந்து தண்ணீர் ஊற்றி (அரிசி 1 பங்கு தண்ணீர் 2 பங்கு) வைத்து, வாணலியில் தண்ணீர் ஊற்றி இட்லிக்கு மூடுவது போல மூடிவிட வேண்டும். கொதி வரும்போது அரை ஸ்பூன் எலுமிச்சை சாறையும் சேர்த்துவிட வேண்டும். சாதம் பொல பொலவென்று உதிர்வதோடு வெண்மையாக இருக்கும்.

– கௌரி



திருமதி மரகதம் வெங்கடராமன் (குடும்பத் தலைவி) :

●● "எங்கள் குடும்பத்தில் பரம்பரை பரம்பரையாகவே சாஸ்திரிகள் வந்துதான் எந்தப் பூஜையையும் ஆரம்பித்து வைத்து தொடர்ந்து வருஷா வருஷம் நடத்தியும் கொடுப்பது வழக்கம். ஆனால் சென்ற வருடம் ஆவணிமாதம் திடீரென்று என் பிள்ளையைப் பார்க்க அமெரிக்கா செல்லும்படி ஆயிற்று. வரலக்ஷ்மி பூஜையையும், விநாயக சதுர்த்தியையும் சான் ஃபிரான்சிஸ்கோவில் கொண்டாடும்படி நேர்ந்தது. சாஸ்திரிகள் இல்லாமல் எப்படிச் செய்வது என்று குழம்பிக் கொண்டிருந்த எனக்கு இப்படி கேஸட் வந்திருப்பது தெரிந்ததும் மிகவும் மகிழ்ச்சியாய் இருந்தது. இங்கிருந்தே கேஸட்டுகளை வாங்கிச் சென்றேன். இந்தியப் பொருளுக்கு அமெரிக்காவில் ஒரு குறைவுமில்லை. அங்கே கிடைக்கும் பூக்களைக் கொண்டு கேஸட்டின் உதவியுடன் ஜாம் ஜாமென்று பண்டிகைகளைக் கொண்டாடினேன். சாஸ்திரிகள் வரும் நேரத்திற்காக பூஜை காத்துக் கொண்டிருக்காமல் காலையிலே நம் சௌகரியப்படி நல்ல நேரம் பார்த்து நிதானமாகத் தொடங்கி அமைதியாகச் செய்வதால் முழுக் கவனமும் சிதறாமல் பூஜையிலே இருப்பதை அனுபவித்து உணர்ந்ததால் இந்தியா திரும்பி வந்த பிறகும் இந்த வருடமும் இனி தொடர்ந்தும் கேஸட்டுகளையே பயன்படுத்த முடிவு செய்து விட்டேன்.

கேஸட்டின் ஆரம்பத்திலேயே பண்டிகையோட மகத்துவம், என்னென்ன பூஜா திரவியங்களையெல்லாம் சேகரித்துக் கொள்ள வேண்டுமென்கிற விவரமெல்லாம் சொல்லி விடுவதால் புதிதாய்க் கல்யாணமாகி பூஜைகளைத் தொடங்குபவர்களுக்கு இது மிகவும் உதவியாக இருக்கும். இரண்டு மூன்று நாட்கள் முன்னதாகவே கேஸட்டைப் போட்டுக் கேட்டு எல்லாவற்றையும் குறித்து வைத்துக் கொண்டால் சாமான்களைச் சேகரம் பண்ணிக் கொள்ள சௌகரியமாய் இருக்கும். எப்போது பூ இடணும், அக்ஷதை போடணும் என்பதெல்லாம் மனத்தில் பதிந்து விடும். மந்திரத்தை நாம் திருப்பிச் சொல்வதற்கு ஆகும் நேரத்தைக் கணக்கிட்டு இடைவெளி கொடுத்துதான் கேஸட்டில் மந்திரம் சொல்லப்பட்டிருக்கிறது. இதுவும் ஒரு பெரிய வசதி. நம் ஊரில் கேஸட் உபயோகித்துப் பூஜை செய்பவர்கள் ஒரு விஷயத்தைக் கண்டிப்பாக ஞாபகம் வைத்துக் கொள்ள வேண்டும். கரெண்டை நம்பாமல் பாட்டரி ஸெல்களைப் போட்டுதான் கேஸட்டைப் போட வேண்டும். இல்லையென்றால் பூஜை நடுவில் முக்கியமான சமயத்தில் கரெண்ட் கட் ஆகி மனம் சங்கடப்பட நேரும்.

செல்வி எஸ். கிருத்திகா :

●● "எல்லோரும் இப்படி சாஸ்திரிகளுக்குப் பிரதியாக கேஸட்டை உபயோகிக்கத் தொடங்கிவிட்டால் அவர்களுடைய பிழைப்பு என்ன ஆவது? ஏற்கெனவே அவர்கள் பல்வேறு காரணங்களால் தங்கள் குழந்தைகளைக் குலத்தொழிலில் ஈடுபடுத்துவதில் அவ்வளவாக ஆர்வங்காட்டுவதில்லை. இந்நிலையில் எல்லோரும் எல்லா பூஜைகளுக்கும் வைதிகக் காரியங்களுக்கும் சாஸ்திரிகளைப் புறக்கணித்து கேஸட்டுகளைப் பயன்படுத்த ஆரம்பித்தால் வேதம் ஓதுபவர்களின் எண்ணிக்கை நாளடைவில் அருகிப் போய்விடும். கோயில்களில் கூட குருக்களுக்குப் பதில் ஆடியோ கேசட்டுகளே அஷ்டோத்திரம் சொல்ல வேண்டிய நிலை ஏற்பட்டுவிடும். வேதத்திலே, சாத்திரத்திலே உயர்ந்த நாடு நம் நாடு என்பது பழங்கதையாகிவிடும். மற்றுமொரு விஷயம் - கேஸட்டைப் போட்டு ஒரு பரதநாட்டியக் கலைஞர் ஆடும்போது அக்கச்சேரி நம்மை அவ்வளவாக ஈர்ப்பதில்லை. ஆனால் பக்கவாத்தியக் கலைஞர்களுடன் பாடுபவரும் மேடையில் அமர்ந்து பாட நர்த்தகி ஆடும்போது அது சோபிக்கிறது. அதுபோல சாஸ்திரிகள் வந்திருந்து பூஜையில் அமர்ந்து சொல்லச் சொல்ல வீட்டிலுள்ள அனைவரும் அங்கு குழுமியிருந்து பூஜை செய்யும் போதுதான் அந்தச் சூழ்நிலையே ஒரு புனிதம் பெறுகிறது. இறையுணர்வு மேலோங்குகிறது."

– திருமதி வசந்தா சரவணபவன்



இந்த மாதம் எப்படி? செப் '92



மேஷ ராசி :

அஸ்வினி, பரணி, கிருத்திகை 1 - ஆம் பாதம்.

மாதத்தின் பிற்பகுதியில் நல்ல பலன்களை எதிர்பார்க்கலாம். முருகனது அருளால் தொல்லைக் கடன்கள் தீரும். அடகு வைக்கப்பட்ட நகைகள் மீட்கப்படலாம். ஆயினும் மாதம் பூராவும் ஏதேனும் ஒரு விதத்தில் உடலில் கோளாறு ஏற்படும். அது நெஞ்சு வலியாகவும் இருக்கலாம். அல்லது கண் சம்பந்தமாகவும் அமையலாம். கலைஞர்கள், குறிப்பாகப் படத் துறையினர் கவனமுடனும், தொடர்ந்தும் பணியாற்ற வேண்டி வரும். அரசுத் துறையினருக்கு மாதப் பிற்பகுதி ஆதாயமுடையது. ஒரு சிலருக்கு எடுத்த காரியத்தில் தடங்கல் ஏற்படுத்த அசுர குரு ஆயத்தமாக இருக்கிறார். ஆனால் பிற்பகுதியில் தேவ குரு அதை நிவர்த்திப்பார். எனினும் மனக் குழப்பமும், சஞ்சலமும் இருந்து கொண்டே இருக்கும். மாதத்தின் முதல் ஐந்து நாட்களிலும் எச்சரிக்கையும் இஷ்ட தெய்வத்தின் பால் ஈடுபாடும் அவசியம். 10, 11, 12 தேதிகள் அனுகூலமானவை. முல்லை மலர்களால் தக்ஷிணாமூர்த்திக்கும் குருவுக்கும் அர்ச்சனை செய்யவும்.

ரிஷப ராசி :

கிருத்திகை 2, 3, 4 - ஆம் பாதங்கள், ரோகிணி, மிருகசீரிஷம் 1, 2 - ஆம் பாதங்கள்.

கேதுவும் செவ்வாயும் உங்களை அலைக்கழிக்கக் காத்திருக்கிறார்கள். ஆனால் குருவின் பார்வையால் குழப்பங்கள் நீங்கும். மாதத்தின் முற்பகுதியில் தாம்பத்திய உறவு சீராக இருக்காது. தொல்லைச் சண்டைகளை உருவாக்கும். செலவினம் அதிகமாகும். அரசுத் துறையில் பணிபுரியும் பெண்கள் எச்சரிக்கையுடன் செயல்படுங்கள். குறிப்பாக அலுவலக நேரத்தில் அளந்து, நிதானித்துப் பேசுங்கள். பிற்பகுதியில் பிரகஸ்பதியும், பிருகுவின் மைந்தனாகிய குருவும் உங்களுக்கு உரிய உதவியைச் செய்வார்கள். கலையுலகப் பெண்கள் நிலையானதொரு புகழை 12, 13, 14 தேதிகளில் அடையலாம். சுபகிரகங்களைத் தவிர மற்ற யாரும் உதவும் நிலையில் இல்லை. எனவே எதிலும் எச்சரிக்கையுடன் செயல்படுங்கள். ஸ்ரீ சுப்பிரமணிய புஜங்கத்தைத் தினமும் தவறாமல் படியுங்கள். பலனளிக்கும். 5, 6, 7 தேதிகளில் முல்லை மலர்களைக் கொண்டு குருவுக்கு அர்ச்சனை செய்யவும். எதிர்பாராத லாபம் ஒன்றை அடைவீர்கள்.

மிதுன ராசி :

மிருகசீரிஷம் 3, 4 - ஆம் பாதங்கள், திருவாதிரை, புனர்பூசம் 1, 2, 3 -ஆம் பாதங்கள்.

அஷ்டமத்துச் சனி உங்களை அலைக்கழித்த நிலை மாதத்தின் முதல் வாரம் வரை நீடிக்கும். அதன் பிறகு குருவின் பார்வையால் சனியின் தொல்லை குறையும். மாதத்தின் முற்பகுதியில் அரசியலிலும், அரசாங்கத் துறையிலும் உள்ளவர்களுக்குச் சூரியன் சில நன்மைகள் புரிவார். அது பதவி உயர்வாகவும் இருக்கலாம் அல்லது மாற்றலாகவும் அமையலாம். இசைக் கலைஞர்களும், நாடகத் துறையினரும் நன்மையை எதிர்பார்க்கலாம். ஆனால் உறவினர்களிடையே மனஸ்தாபம் ஏற்படும் வாய்ப்பு உள்ளது. சுப நிகழ்ச்சி ஒன்றில் பங்கேற்பீர்கள். உங்கள் வீட்டுத் திருமணம் ஒன்று நிச்சயிக்கப்படலாம். இராசிநாதனால் தனலாபம் ஒன்று ஏற்படலாம். அது உத்தியோக உயர்வு காரணமாகவோ, அல்லது செல்வாக்கைப் பயன்படுத்துவதாலோ கூட கிடைக்கலாம். 8, 9,



10 தேதிகளில் எச்சரிக்கைத் தேவை. 15, 16, 17 தேதிகள் ஏற்றவை. 22, 23 தேதிகளில் ஒரு காரியம் கைகூடி வருவது போல வந்து தட்டிப் போய் விடும்.

கடக ராசி :

புனர்பூசம் 4 - ஆம் பாதம், பூசம், ஆயில்யம்.

சுக்கிரன் ஒருவன்தான் உதவும் நிலை. மற்றவர்களால் மாதத்தின் முற்பகுதியில் மன நிம்மதி, செல்வாக்கு, பொருளாதார நிலை அனைத்துமே பாதிக்கப்படும். பிற்பகுதியில் சற்று நிம்மதி ஏற்படும். சுபநிகழ்ச்சி ஒன்றுக்கு ஏற்பாடும் ஆகும். கண் நோயும் வரலாம். கண் திருஷ்டியும் ஏற்படலாம். 22, 23 தேதிகளில் வெளி நாட்டிலிருந்து எதிர்பார்க்கும் செய்தி அனுகூலமாக வரும். மாணவ மாணவிகளுக்குச் செலவினம் மிக்க மாதமாக அமையும். அலுவலகப் பெண்டிருக்கு மாத பிற்பகுதி சோதனைமிக்க மாதமாக அமையும். பித்தம், வாந்தி, மயக்கம் என உடல் நிலையில் பாதிப்பும் ஏற்படலாம். அல்லது அலுவலகத்தில் கணக்காய்வு, விசாரணை என ஏதோ ஒருவிதத்தில் அலைச்சலாகவும் அமையலாம். நாடகம், படத்துறை, நடனம் போன்ற கலைஞர்களுக்கு மாதத்தின் பிற்பகுதியில் நல்ல ஒப்பந்தங்கள் ஏற்படலாம். ஏற்ற நாட்கள் 18, 19, 20, 22, 23. தவிர்க்கப்பட்ட வேண்டியவை 10, 11, 12 ஆகிய தேதிகள்.

சிம்ம ராசி :

மகம், பூரம், உத்திரம் 1 - ஆம் பாதம்.

குருபெயர்ச்சி ஏற்படும் இரண்டாவது வாரத்திலிருந்து நல்ல நிலை உருவாகும். குறிப்பாக 15-ந் தேதிக்கு மேல் வாகன யோகம், வீட்டு யோகம் ஏற்படும். 5, 6, 7 தேதிகளில் மனதில் குழப்பமும், தொழிலில் சற்று அலைச்சலும் ஏற்படும். எனினும் கேதுவும், செவ்வாயும் பணவரவுக்கு உதவுவார்கள். சனியும் ஆதாயத்தைத் தருவதுடன், இதுவரை இருந்த நோய், நஷ்ட கஷ்டங்கள் ஆகியவற்றை நீக்கி ஒரு நல்ல நிலையை உருவாக்குவார். ஓரளவுக்கு ஆதாயமுள்ள மாதமே. இது அனைத்துத் துறையினருக்கும் பொருந்தும். சுபநிகழ்ச்சி நடத்துவது, அல்லது கலந்து கொள்ளுவது போன்ற மகிழ்ச்சியான சூழ்நிலையும் உருவாகும். ஏற்றமுடைய நாட்கள் 18 முதல் 22 முடிய. தவிர்க்க வேண்டிய நாட்கள் 12, 13, 14 ஆகிய தேதிகள்.

கன்னி ராசி :

உத்திரம் 2, 3, 4 - ஆம் பாதங்கள், ஹஸ்தம், சித்திரை 1, 2 - ஆம் பாதங்கள்.

மாதத்தின் முற்பகுதியில் ஒரு சிலருக்கு இடமாற்றம் உண்டு. அது பதவி மாற்றத்தின் காரணமாகவும் அமையலாம். அல்லது தொழில் மாற்றம் காரணமாகவும் அமையலாம். அத்துடன் பணக்கஷ்டம், மனக்கஷ்டம் வேறு சேரும். ஆனால் பிற்பகுதியில் இந்த நிலை மாறும். அம்மான் வகையினரால் ஒருசிலருக்கு உதவி கிடைக்கும். கேதுவும், செவ்வாயும்

கூடுமானவரை
மிக மெல்லிய
தன்மையுடையனவற்றை
ஃப்ரீஸருக்குச்
சமீபமான தட்டுக்களில்
வைப்பதைத் தவிர்த்துக்
கீழ்த் தட்டுக்களிலே
வைக்க வேண்டும்.
- சந்திரா



மாதம் பூராவும் பொருளாதாரத்தில் சிக்கலை உருவாக்குவார்கள். சுபநிகழ்ச்சி ஒன்றில் கலந்து கொள்ளுவீர்கள். அல்லது நடத்தி வைப்பீர்கள். ராகுவினால் வயிற்றில் கோளாறு ஏற்படும். எனவே ருசிக்காகச் சாப்பிடாமல் பசிக்காக மட்டுமே சாப்பிடுங்கள். இந்த ராசியில் பிறந்த நடிகையர்களுக்குச் சுக்கிர பலம் ஓங்கி உள்ளது. மற்ற துறையினருக்கு மந்தமான பலன்தான். குடும்பத்தில் முதலில் சிக்கல் உண்டாகி மாத முடிவில் நீங்கும். ஏற்றமிகு நாட்கள் 22, 23. ஆனால் ஆகாத நாட்கள் 15, 16, 17 தேதிகள்.

துலா ராசி :

சித்திரை 3, 4 - ஆம் பாதங்கள், சுவாதி, விசாகம் 1, 2, 3 - ஆம் பாதங்கள்.



மாதத்தின் முதல் பகுதியில் நல்லதொரு மாற்றம் உங்கள் தொழிலில் ஏற்படும். பிற்பகுதியிலும் ஒரு பெருக்குச் சுபநிகழ்ச்சியில் கலந்து கொள்ளும் வாய்ப்பு உண்டு. பொன் நகைகளோ, வீடோ வாங்கும் முயற்சியில் வெற்றி கிடைக்கும். அலுவலகப் பணியில் உள்ளவர்கள், வங்கித் தொழிலில் ஈடுபட்டிருப்பவர்கள் சற்றுச் சிரமமான சூழ்நிலையை எதிர்பார்க்க வேண்டியிருக்கும். நாலில் உள்ள சனீஸ்வரனும் நல்லதைச் செய்ய மாட்டார். கன்னிப் பெண்ணானால் திருமணம் கைகூடி வரும். மாதத்தின் கடைசி வரை ஏற்ற தாழ்வுகள் எல்லா விஷயங்களிலும் இருக்கும். குறிப்பாகக் கலைஞர்கள், மற்றும் கைவினைப் பொருள்களைத் தயாரிப்பவர்கள் வெளிநாட்டுத் தொடர்பினால் ஆதாயம் அடைவார்கள். 22 முதல் 24 வரை நல்ல கால கட்டம் உள்ளது. தனலாபம் ஏற்படும். எனினும் அஷ்டமத்தில் சந்திரன் உச்சம். 18, 19, 20 தேதிகளில் பரபரப்பும், பதட்டமும் கொண்ட சூழ்நிலை உண்டாகும்.



சில சமயங்களில், இட்லிகள் மறுநாள் சாப்பிடுவதற்குப் போதுமான அளவில் மீறாமல் மிகச் சில இட்லிகளே மீந்து விடும். அவைகளில் ஒன்றை நாலு துண்டங்களாகச் செய்து சற்று விசாலமான ஒரு பாத்திரத்தில் தண்ணீரில் 10 நிமிஷங்களுக்கு ஊற வைக்கவும். அதற்குள் கெட்டித் தயிரைக் கடைந்து, தயிர் வடைக்குச் செய்வது போல் தேங்காய், பச்சை மிளகாய் அரைத்துக் கலக்கித் தேவையான உப்பைப் போட்டுக் கறிவேப்பிலை, கொத்துமல்லிப் பொடியாக நறுக்கிப் போடவும். கடுகு, மிளகாய் வற்றல் தாளித்துக் கொட்டித் தயிர் தயார் செய்து கொண்டு தண்ணீரிலிருந்து ஊறிய இட்லித் துண்டங்களைத் தயிரில் போட்டு ஒரு ஸ்பூன் போட்டுக் கொடுத்து விடவும். குழந்தைகள் ஜோராகச் சாப்பிடுவார்கள்.

- உமா சேகர்

விருச்சிக ராசி :

விசாகம் 4 - ஆம் பாதம், அனுஷம், கேட்டை.

நினைத்த காரியத்தை நினைத்தபடி செய்து முடிக்கலாம். மாதத்தின் முற்பகுதியில் தனலாபமும், மகிழ்ச்சியும் இருக்கும். இந்த ராசிக்காரர்கள் வீட்டில் ஒரு புதிய ஜீவன் பிறக்கலாம் அல்லது ஒரு புதியவர் வீட்டிற்கு வந்து சேரலாம். ஆனால் தாம்பத்திய உறவில் சற்று சஞ்சலத்தை எதிர் பார்க்கலாம். சனி பகவானால் கோர்ட்டில் உள்ள விவகாரம் சுமுகமாகத் தீர்க்கப்படலாம். ஆனால் 8ல் உள்ள கேதுவாலும், அங்காரகனாலும் உடல்நிலை பாதிக்கப்படலாம். குறிப்பாக ரத்தப் பரிசோதனை செய்து கொள்வது நல்லது. 27, 28 தேதிகளில் சுபகாரியங்கள் செய்யலாம். ஆனால் 20, 21, 22 தேதிகளில் எதற்கும் ஒதுங்குவது நல்லது.


தனுசு ராசி :

மூலம், பூராடம், உத்திராடம் 1 - ஆம் பாதம்.

மாதத்தின் பிற்பகுதி தான் மிகச் சிறந்த நிலையில் அமையும். ராசிநாதன் தர்ம கருமாதிபதியோகம் தருகின்ற சூர்யனுடனும், உச்ச புதனுடனும் சேர்ந்து இருப்பது பல வழிகளில் உயர்வுகளைத் தரும். இது வரை கைகூடிவராத காரியங்களுக்கு இப்பொழுது முயற்சி செய்யுங்கள், கட்டாயம் உங்களுக்கு வெற்றி கிடைக்கும். திருமணத்திற்காகக் காத்துக் கொண்டிருப்பவர்களுக்கு ஜாதகப் பொருத்தங்கள் அமைந்து அமோகமாகத் திருமணம் நடக்கும். 2வது சுற்று ஏழரை சனி நடக்கிறவர்களுக்கு, சனி பகவானின் பரிபூரண அருள் கிடைக்கும். அதனால் வீட்டில் நடக்கும் எந்த நிகழ்ச்சியும் மனமகிழ்ச்சியைத் தரத் தக்கதாகவே அமையும். நல்லதொரு காலகட்டம் என்றே சொல்லலாம். ஆகினும் கேதுவால் அரசுப் பணியில் உள்ளவர்கள் நினைத்தும் கூட பார்த்திராத இடத்திற்கு மாற்றப்படுவார்கள். அதனால் விநாயகப் பெருமானுக்கு அர்ச்சனை செய்யுங்கள். ஏற்ற முடைய நாட்கள் 28, 29, 30. மாதத்தின் முதல்நாளே கூட ஒரு சிலருக்கு அதிர்ஷ்ட வாய்ப்பு உள்ளது. அஷ்டமத்துச் சந்திரன் ஆட்சிக்கு வருவதால் 22, 23 தேதிகளால் பாதகம் இராது.


மகர ராசி :

உத்திராடம் 2, 3, 4 - ஆம் பாதங்கள், திருவோணம், அவிட்டம் 1, 2 - ஆம் பாதங்கள்.


கேதான்
பெயர் ஒன்றே போதுமானது



கடந்த காலத்தில் இருந்ததைப் போல் அல்லாமல் பரிபூரண மகிழ்ச்சியும் வெற்றியும் கிடைக்கும். குருவின் பார்வை பெறும் சனீஸ்வரன் இவர்களுக்குக் கெடுதலைச் செய்ய மாட்டார். சனீஸ்வரன் இதுவரை இவர்கள் அடைந்த அல்லல்களையும், துன்பங்களையும் நீக்குவார். புதன் சுக்கிரன் தர்மகர்மாதிபதிகளாகையால் இதுவரை அரசுப் பணியிலோ, தனியார் துறையிலோ அல்லல்பட்டு வந்த உயர் அதிகாரிகளுக்கு உரிய முறையில் நியாயம் கிடைக்கும். இது கோர்ட் விவகாரம் ஆனாலும் சரி, அல்லது பதவி மாற்றத்திலும் சரி. இதுவரை இருந்தது போல் அல்லாமல் பதவி உயர்வும் மேலதிகாரிகளின் உதவியும் கிடைக்கும். குறிப்பாக 22, 23 தேதிகள் ஏற்றவை. சனீஸ்வரன் திசை நடப்பவர்களுக்கும் நல்ல காலகட்டம். நடிகர்கள், கலைத்துறையில் உள்ளவர்கள், இரசாயனத் தொழில் செய்பவர்கள் ஆகியோர் புது ஒப்பந்தங்கள் மூலம் லாபம் பெறுவார்கள். எனினும் மாத ஆரம்பத்தில் அரசுத் துறையிலிருந்து ஏதேனும் விளக்கம் கேட்டு கடிதம் வரலாம்.



பரிசுப் பொருட்களின்மேல் சுற்றப்பட்டு வரும் கிஃப்ட் பேப்பர் இருந்தால் தூர எறிந்து விடாதீர்கள். உங்கள் வீட்டு காஸ் புக், டு வீலர்ஸ் லைசென்ஸ் புக், பேங்க் பாஸ் புக், பாஸ்போர்ட் புக், மற்றும் ரேஷன் கார்டு, பஞ்சாங்கம் போன்றவற்றிற்கு அட்டையாகப் போட்டு வைத்தால் பார்க்க அழகாக இருப்பதுடன், ஒரிஜினல் அட்டை கிழியாமலும் இருக்கும்.

- ஆர். பாலா

கும்ப ராசி :

அவிட்டம் 3, 4 - ஆம் பாதங்கள், சதயம், பூரட்டாதி 1, 2, 3 - ஆம் பாதங்கள்.

இதுவரை இருந்த நிலை போல் அல்லாமல் இனி சற்று பிரச்னைகளை எதிர்பார்க்க வேண்டிய நிலைதான் தெரிகிறது. ராசிநாதன் விரயத்தில் இருக்கிறார். எனினும் ஆட்சியில் இருப்பதால் ஆயுளுக்கோ, ஆரோக்கியத்திற்கோ பஞ்சமில்லை. ஆனால் மனக்குழப்பமும், சஞ்சலமும் உங்கள் அமைதியைக் கெடுத்து விடும். கூடிய மட்டும் பதுங்க வேண்டிய தற்குப் பதுங்கியும், ஒதுங்க வேண்டியதற்கு ஒதுங்கியும் சூழ்நிலைக்குத் தக்கவாறு பேச வேண்டும். பழகவும் வேண்டும். இது எத்துறையினருக்கும் பொருந்தும். எனவே இனம் பிரித்துக் காட்ட வேண்டிய அவசியமில்லை. சனீஸ்வர வழிபாட்டை விட்டு விடாதீர்கள். இரும்பு அகல் விளக்கில் ஒளி உங்கள் வீட்டில் சுடர் விடட்டும். கண்டிப்பாக அந்தச் சுடர் உங்கள் இன்னல்களை விரட்டும். அரசியல்வாதிகளுக்குச் சற்றுப் பலமான எதிர்ப்புகள் ஏற்படும். ஆகவே அரசியலிலிருந்து சில காலம் ஒதுங்கி இருப்பது நல்லது. 27, 28 தேதிகள் ஒதுக்கப்பட வேண்டியவை. 4, 5, 6, 7 தேதிகள் நல்லவை.

மீன ராசி :

பூரட்டாதி 4 - ஆம் பாதம், உத்திரட்டாதி, ரேவதி.

இந்த ராசிக்காரர்கள் இனி நிம்மதிப் பெருமூச்சு விடலாம். இதற்கு முன்னால் எவ்வளவு தான் நல்ல பலன்களை எழுதியிருந்தாலும், தசாபுக்திகளைப் பொருத்து அவை நடந்து இருக்கலாம். அல்லது அவற்றின் பலவீனத்தின் காரணமாக நடக்காமல் இருக்கலாம். தற்போது ராசிநாதனின் பார்வையும் சனீஸ்வரனின் நிலையும் சாதகமாக அமைந்துள்ளன. எனவே பாதகம் ஏதும் நடந்து விடாது. அவர்கள் பார்த்துக் கொள்வார்கள். குறிப்பாக புதன், சுக்கிரன், சூரியன் கூட அருள்புரிவார்கள். ராகு உடல்நிலையை ஓரளவுக்குப் பாதிக்கலாம் என்றாலும், ராசிக்கு, ராசிநாதன் பார்வை இருப்பதால் அதனால் பாதிப்பு இல்லை. 18, 19, 20, 8, 9, 10 ஆகிய தேதிகள் நல்லவை. ஆனால் 28, 29, 30 தேதிகளும், மாதத்தின் முதல் 4 தேதிகளும் சற்று எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும்.

- ஜெயலட்சுமி கிருஷ்ணன்

நலம் தரும் நவராத்திரி



சாதாரணமாக நவராத்திரியை பொம்மைக் கொலு என்று சொல்வது கிராமத்துப் பழக்கம். கொலு என்பது வரிசைப்படுத்துதல், அழகுபடுத்துதல் என்கிற பொருளோடு ஐக்கியமான சொல். பரம்பரை பரம்பரையாக பொம்மைகளை ஒன்பது நாளும் 'கொலு'வில் வைத்திருப்பவர்கள் வழக்கத்தை விடாமல் செய்வது நல்லது. மொத்தத்தில் மங்கலத் திருவிழா என்று சொல்வது பொருத்தம்.


சுமங்கலிகளை வரவேற்கவும், சுமங்கலிகளாகப் போய் மற்ற வீடுகளுக்கும் மங்கலத்தை உண்டுபண்ணவும் ஆக இருமுறையில் பெண்கள் நாட்டு நலம் சேர்க்கிறார்கள். ஒருபுறம் கொடுப்பதில் பெருமை. ஒருபுறம் வாங்கிக் கொள்வதில் பெருமை. பெண்களால்தான் தர்மம் தழைக்க முடியும் என்பதை விளக்குவதில் நவராத்திரி சிறப்புப் பெற்றது.

இந்த ஒன்பது நாளும் பாருங்கள். எந்த நேரத்தில் யார் வீட்டுக்குப் போகும் சுமங்கலிகளுக்கும் குழந்தைகளுக்கும் வரவேற்பு. சுண்டல் இல்லா விட்டால் என்ன? சர்க்கரையாவது பொட்டலம் கட்டிக் கொடுப்பார்கள். மற்ற நாட்களில் போங்கள்!

''நேரங் கெட்ட வேளையில் வந்து நிக்கறாளே! இங்கிதம் தெரிய வேண்டாம்?'' என்ற முணுமுணுப்போடுதான் உபசாரம் தொடங்கும்.

நவராத்திரியில் காளி முதலிடம் வகிக்கிறாள். பெண்கள் ஆட்சி மாதிரி! ஆனால் காளி உக்கிர காளியாக இல்லாமல் உமா, லட்சுமி, சரஸ்வதி என்ற முப்பெரும் வழிபாட்டுக்கு உரியவளாக நிற்கிறாள் என்பது வழிபாட்டு முறைகளில் தெரிகிறது.

இந்த ஒன்பது நாளும் நாம் செய்கிற ஒவ்வொரு காரியமும் நல்ல எண்ணங்களை வெளியிடும் முறையிலும், தானம் செய்கிற முறையிலும், வந்தவர்கள் வெறும் கையோடு செல்லாமல் சிறிதளவாவது உணவு என்கிற முறையில் பிரசாதம் விநியோகம் செய்து, அம்பிகையின் அருளை




ஒவ்வொருவரும் பெறும் முறையிலும் அமைந்திருக்கிறது.

அவரவர்கள் வீட்டுப் பிரசாதத்தை அவர்களே உண்பதில்லை. பகிர்ந்து உண்ணும் இந்த முறை நேசப் பண்பாட்டிற்குச் சிறந்த உதாரணம்.

இப்படிப்பட்ட நவராத்திரிக்கும், ஜோதிட சாஸ்திரத்துக்கும் என்ன சம்பந்தமோ? கிழமைகளுக்கு ஏற்ற நவக்கிரக நாயகர்களைத் திருப்தி செய்யும் வகையில் சுண்டல் வகைகள், சனிக்கிழமை எள்ளு என்று வரிசைப்படுத்தி நைவேத்யம் செய்கிறோம். அதுவே விநியோகமாகிப் பலன்களை அளிக்கிறது.

கல்யாணியாக வழிபடுவது, ''கல்வியையும் அரசர் நட்பையும் அளிக்கவல்லது.'' இடையூறுகளைப் போக்க வல்லது துர்க்கை அம்சம். சண்டிகா - ஐஸ்வர்யம் அளிப்பது - சுபத்ரா. நாடிய பொருள் கைகூட என்று தேவியின் பல அம்சங்களால் வழிபட கன்னியர்களைத் தேர்ந்தெடுத்து மங்கலப் பொருள்கள் கொடுப்பது சிறப்பு.

நவராத்திரியில் தேவி மஹாத்மியம், ராமாயணம், பாகவதம் போன்ற நல்ல பாராயணம் செய்வது நல்லது. நம்மால் முடியாவிட்டால் தெரிந்த பண்டிதர்களுக்கு



வாய்ப்பு அளிக்கலாம்.

வெற்றிலை, பாக்கு, மஞ்சள் குங்குமம் இவை பெண்களுக்கு அளிப்பது மிகவும் புண்ணியம். (ஆனால் இப்போது எந்தப் பெண்ணும் வெற்றிலை போடுவதில்லை. அப்படியே காய்ந்து போய், அழுகிப் போய் 'வெற்றிலை' வெற்று இலையாகி விடுகிறது.)

காலத்திற்கேற்ப புதுமுறைகளில் மங்களப் பொருள்களைக் கொடுக்கலாம்.

நவராத்திரியின் சிறப்பு அம்சங்கள் எத்தனையோ உண்டு.

பெண் குழந்தைகளுக்கு முதலிடம். குழந்தை விளையாட்டைப் போல் தேவியின் திருவிளையாட்டால் உலகம் படைக்கப்பட்டிருக்கிறது என்பது தேவி பக்தர்கள் கொள்கை.

இசை மூலம் இறைவனை அடையலாம் என்பதற்கு நவராத்திரி சிறப்பான உதாரணம்.

ஒன்பது நாளும் ஆகும் செலவை எந்தக் குடும்பத்தினரும் செலவாக நினைப்பதில்லை. தீபாவளியைக் கூட 'கஷ்டம்' செய்ய நினைப்பவர்கள் நவராத்திரியை மகிழ்வுடன் வரவேற்கிறார்கள் என்பது பெரிய சிறப்பு.

இப்போதெல்லாம் கொ லு வை, வரிசைப்படுத்துவதில் சின்னக் குழந்தைகள் கூட ஆர்வத்தைக் காண்பிக்கிறார்கள். அறிவியல், விஞ்ஞானம், பழமை, புதுமை, ராமாயணம் என்று இப்படிப் பல வரிசைகளை அவர்களே செய்யும் போது அறிவு விருத்தி, சிந்தனா சக்தி.



பலருடைய கூட்டுறவு குழந்தைகளுக்குக் கிடைக்கிறதே!

பெண்களுக்கு இந்த ஒன்பது நாளும் இடுப்பில் பட்டு, உடம்பில் நகை நட்டு என்று குளிரக் குளிர பார்க்கலாம். (வீட்டிற்குள்தான். ஏக்கப் பெருமூச்சுக்களைக் கிளறவும் வாய்ப்பானால் கூட) அவர்களின் ஒன்பது நாள் பூஜைகள் குடும்பத்தின் வழி வழியாக வரும் சந்ததிகளுக்குப் பெரிய பலன், அருள் எல்லாம் தரும்.

ஏழை பணக்கார வித்தியாசம் கொலுவுக்கு இல்லை. (சில வீடுகளில் ஒரே சமயத்தில் வெற்றிலை பாக்குக் கொடுக்கும் போது பெரிய மனிதர்கள் வந்தால் தனி மரியாதையாக ரவிக்கை, தேங்காய் கொடுப்பதுண்டு. இது மகா தோஷம்!) சமத்துவ மனப்பான்மையை வளர்க்க உதவுகிற திருவிழாவாக இருக்க வேண்டும்.

மற்றவர்களுக்கு அலங்காரம் செய்யும் போது கற்பனை எப்படி வளருகிறதோ அப்படிச் சிலைகளுக்கு அலங்கரிப்பதில், குழந்தைகளுக்கு அலங்கரிப்பதில் உண்டாகும் திறனால் ஒரு ''பியூட்டி பார்லர்'' கூட திறக்க முடியும்.

தன் வீட்டில் கொலு இல்லாவிட்டால் கூட பக்கத்து வீட்டுக் கொலுவுக்கு 'ஐடியா'வைக் கொடுத்துப் பாராட்டுப் பெறுவது நல்லது.

ஒரு நாட்டின் கலாசாரம் காக்கப்படுமானால் அந்த நாட்டின் பெருமை உலக அளவில் உயர்ந்து நிற்பது உண்மை. இந்த ரீதியில் வெளிநாடு சென்றுள்ள பல அன்பர்கள் கூட நவராத்திரி விழாவை ஆங்காங்கே சிறப்பாகக் கொண்டாடி இந்திய நாட்டின் சிறப்பை 'சுண்டல்' விநியோகம் மாதிரி விநியோகிக்கிறார்கள் என்பது இன்றைய உண்மை. 'எங்கள் நாடு' என்ற பற்று மனத்தில் நிற்க உதவுகிறது.

காலம் எப்படி மாறினாலும் இளைய சமுதாயம் சில பண்பாடுகளையும் கலாச்சார உண்மைகளையும் பாதுகாத்துப் பரம்பரைச் சொத்தாக வைக்க வேண்டுமானால் நவராத்திரி போன்ற விழாக்கள் அவசியம்.

நமக்குள்ளே ஊறிக் கொண்டிருக்கும் பக்திப் பெருக்கு நம்மை அறியாமலே இவ் விழாவைக் கொண்டாட வைப்பதால் எத்தனை பேர் பிழைக்க முடிகிறது? வெற்றிலை வியாபாரி பூக்காரி முதல், ரிப்பன், வளை என்று கடைக்காரர்கள் ஆக மொத்தம் ஆண்டுக்கொருமுறை வருகிற ஒன்பது நாளும் 'பெரிய திருவிழா'. ஏன்? ஊரெங்கிலும் திருவிழா என்பதுதான் பொருத்தமான உண்மை.

– சரோஜா ரங்கராஜன்

ஃப்ரிட்ஜில்....

காய்கறி வைத்திருக்கும் துணிப் பைகளின் வாய் அரைகுறையாகத் திறந்திராமல் நன்றாக மடக்கி மூடப் பட வேண்டும்.

காய்கறிக்கென இருக்கும் பிரத்தியேக பிளாஸ்டிக் ட்ரேயிலும் நீர் முத்துக்கள் சேர்ந்து போய் நீர் தேங்குவதால் காய்கள் கெடுவதற்கான வாய்ப்பு உண்டு. எனவே, பழைய பருத்தித் துணியை இரட்டையாக மடித்து ட்ரேயினுள் விரித்து, அதன் மேல் காய்களைப் போட்டு வைத்தால் ஆச்சரியப்படத்தக்க வகையில் காய்கள் அதிக நாட்கள் கெடாமல் இருக்கும்.

ஃப்ரிட்ஜில் வைக்கும் எந்த உணவுப் பொருளையும், குடிதண்ணீரையும் மூடியே வைத்திருந்தால் ஃப்ரிட்ஜிற்குள் கலவை வாசனை வருவதையும், ஃப்ரிட்ஜின் கலவை வாசனை உணவுப் பொருளைத் தாக்குவதையும் தடுக்கலாம்.

ஃப்ரிட்ஜை வாரம் ஒருமுறை சுத்தமாகத் துடைத்து வைப்பதாலும், எப்பொழுதும் அதனுள் திறந்த நிலையில் உள்ள சிறு டப்பாவில் சமையல் சோடாவைப் போட்டு வைப்பதாலும் ஃப்ரிட்ஜுக்கே உரித்தான கலவை வாசனை எப்பொழுதும் உங்கள் ஃப்ரிட்ஜின் அருகில்கூட நெருங்காமல் காக்கலாம்.

- கே. சந்திரா





அன்பு



பரிவு



அமைதி



அரவணைப்பு



நேசம்

டிபாஸிட் திட்டங்கள்

திட்டம் 1

டெபாஸிட்டுகள் குறைந்தபட்சம் ரூபாய் 5000/-, அதற்கு மேற்பட்டு முழு ஆயிரம் ரூபாய்களாகவும்!

காலம் (மாதங்கள்)	வட்டி விகிதம் (ஆண்டொன்றுக்கு)
25 / 36 / 48 / 60	15% [illegible]

திட்டம் 2

டெபாஸிட்டுகள் குறைந்தபட்சம் ரூ. 10,000/-, அதற்கு மேற்பட்டு முழு ஆயிரம் ரூபாய்களாகவும்!

காலம் (மாதங்கள்)	வட்டி விகிதம் (ஆண்டொன்றுக்கு)
25 / 36 / 48 / 60	15% [illegible]

* [illegible]

திட்டம் 3 [illegible] டிபாஸிட்டுகள்

[illegible] டெபாஸிட் ரூ. 2000/- அதற்கு மேற்பட்டு முழு ஆயிரம் ரூபாய்களாக!


[illegible] தொகை**	காலம்			
	25 மாதங்கள்	36 மாதங்கள்	48 மாதங்கள்	60 மாதங்கள்
ரூ. 2000/-	ரூ. 2728	ரூ. 3128/-	ரூ. 3630/-	ரூ. 4214/-
[illegible]	17.48	18.80	20.38	22.14


** [illegible] 15% [illegible]


குறிப்பு: [illegible]

நம்பிக்கை

நோகாமல் நோன்பு







அழகான வழவழக்கும் முகமும், ஆரோக்கியமான தலைமுடியும், கொடி யிடையும், துடியுடனுமாய் 'ஸ்லிம் பியூட்டி'யாய் வளைய வர யாருக்குதான் ஆசை இல்லை? ஆனால் 'உடற்பயிற்சி செய்யவும், என்னை அழகுபடுத்திக் கொள்ளவும் எனக்கு எங்கே நேரம் கிடைக்கிறது?' என்று நீங்கள் புலம்பலாம். அல்லது 'இதையெல்லாம் யார் செய் வார்கள்?' என்று சோம்பல்படலாம். அப்படியானால், இதோ உங்களுக்கு நீங்கள் விரும்பியபடி அழகுபெற சில மிக எளிதான வழிகள். நீங்கள் தினந்தோறும் செய்யும் வேலைகளுக்கிடையே இவற்றை முயற்சிக்கலாம்.

முதலில் உங்கள் வடிவத்திலிருந்து தொடங்கலாம். காலையில் உடற்பயிற்சி செய்ய நீங்கள் சோம்பல்படலாம். ஆனால் முடிந்தவரை அங்குமிங்கும் நடந்து கொண்டே இருங்கள். வெளியே செல்லும் போது முடிந்தவரை வாகனங்களைப் பயன்படுத்தாமல் நடந்து செல்லுங்கள். ஒருவர் (ஒரு மணி நேரம்) உட்கார்ந் திருக்கும் போது 70 கலோரிகளும், நிற்கும் போது 100 கலோரிகளும், நடக்கும் போது 180 கலோரிகளும், மாடிப்படி ஏறி இறங்க 800 கலோரிகளும் செலவழிகிறது. உங்கள் வீடு மாடியில் இருந்தால் நீங்கள் கொடுத்து வைத்தவர். தினமும் 2 அல்லது 3 முறை படி ஏறி இறங்குங்கள். இதை உங்களால் முடிந்த அளவு செய்யுங்கள். இடுப்பு, வயிறு பாகங்களில் அதிக சதை போட்ட வர்களுக்கு இது நல்ல பயிற்சி.

தொள தொளவென்ற வயிறை உடைய வர்கள் வருந்த வேண்டாம். உங்கள் வயிறை முடிந்த அளவு உள்ளிழுத்துக் கொள்ளுங்கள். பிறகு சாதாரண நிலைக்கு வரவும். இதை நீங்கள் சமைக்கும் போதும், டி.வி. பார்க்கும்போதும் இஸ்திரி போடும் போதும், மற்ற எந்த நேரமும் யாரும் கவ னிக்காதபடி செய்ய முடியும். சில மாதங் களில் ஆலிலை போன்ற ஒட்டிய வயிறை நீங்கள் அடைவது உறுதி. இது சற்று மெது வான வழி என்றாலும் சுலபமான வழி.

காலையில் படுக்கையிலிருந்து எழும் போதும் அவசரமாக, உடனே எழுந்திருக்

கும்பிட முடியும்

காதீர்கள். இடது கையை தலைக்குமேல் நீட்டி. இடது காலை நன்கு, கீழ் நோக்கி இழுத்து இடது பாகம் முழுவதையும் நன்கு 'ஸ்ட்ரெச்' செய்யுங்கள். பின் இதே போல் வலது பாகத்தையும் செய்யுங்கள். இதைச் செய்ய சில விநாடிகள்தான் பிடிக்கும் என்றாலும் நீங்கள் செய்யப்போகும் வேலைகளுக்கு உங்களை இது தயார்ப் படுத்திவிடும்.

மேலிருந்து ஏதாவது சாமானை எடுக்க வேண்டும் என்றால் எம்பி உடம்பு, இடுப்பின் தசைகளை மேல் நோக்கி இழுத்து எடுங்கள். அதே போல் குனியும்போது இடுப்பில் அழுத்தத்தை உணரும்படி குனியுங்கள். இவற்றைச் செய்யும்போது உங்களுக்கே உரித்தான நளினத்தை சேர்த்துச் செய்யுங்கள்.

'மசாஜ்' செய்வது உடலுக்கு மிக நல்லது. அதற்கு நேரமில்லாதவர்கள் இதைச் செய்யலாம். இதற்குக் குளிக்கும் நேரமே போதும். உடலில் சோப்பு தேய்த்துக் கொண்டதும் குனிந்து கைகளை உங்கள் பாதத்தில் நன்கு அழுத்திக் கொள்ளுங்கள். மூச்சை உள்ளிழுத்துக் கொண்டு மெதுவாக நிமிருங்கள். நிமிர்கையில் கைகளை மெதுவாக ஆனால் அழுத்தம் கொடுத்து மேலே கால், தொடை, வயிறு இடுப்பு, மார்பு என்று கழுத்துவரை கொண்டு செல்லுங்கள். பின் மூச்சை வெளியேற்றிக் கொண்டே முதுகு, பின் புறம், பின் கால்கள் வரை கொண்டு செல்லுங்கள். இது ஏறக்குறைய ஒரு முழு மசாஜுக்கு சமமானது. முதலில் இதைச் செய்ய கஷ்டமாக இருந்தாலும் நாளடைவில் பழகிவிடும். இதைத்தவிர அதிக சதை போட்ட பாகங்களை கைகளால் அழுத்தித் தேய்க்கவும் செய்யலாம்.

கெட்டியான 'ஸ்பாஞ்ஜ்' ஆல் உடலை அழுத்தித் தேய்த்தால் இரத்த ஓட்டம் அதிகரித்துச் சருமம் மின்னும். நீங்கள் உலர்ந்த சருமம் கொண்டவராக இருந்தால் கடைசி சொம்பு தண்ணீரில் சில துளி ஆலிவ் ஆயில் பேபி ஆயில் விட்டு உடலில் தெளித்துக் கொள்ளுங்கள். இது சருமத்தை மென்மையாக்கும்.

முகத்தை 'பேஷியல்' அல்லது ப்ளீச்சிங் செய்ய பியூட்டி பார்லர் போக நேரமில்லாதவர்கள், சமைக்கும் நேரத்தைப் பயன்படுத்திக் கொண்டு பலன் பெறலாம். உடைத்த முட்டை ஓட்டில் எஞ்சியிருக்கும் வெள்ளைக்கருவை முகத்தில் தடவிக் கொள்ளுங்கள். முட்டை சாப்பிடாதவர்கள் சூடான பாலை உபயோகிக்கலாம். எண்ணைப்பசை கொண்ட சருமம் கொண்டவர்கள் வெள்ளரி, தக்காளியை உபயோகிக்கலாம்.


உபயோகித்த எலுமிச்சை மூடிகளை சமையலறையில் 'சிங்க்'குக்கு அருகிலேயே வைத்திருங்கள். ஒவ்வொரு முறை கைகளைக் கழுவும் போதும் அவற்றால் நகங்களையும் கைகளையும் தேயுங்கள்.

தலைமுடியைச் சுத்தமாக வைத்திருங்கள். போனில் பேசும் போதும், புத்தகம் படிக்கும் போதும் விரல்களால் தலையை மசாஜ் செய்யுங்கள். பால், பனீர், தயிர், மீன், சாப்பிடுவதால் தலைமுடியில் நல்ல ஆரோக்கியமான வளர்ச்சியைக் காண்பீர்கள்.

நல்ல உறக்கமும், ஓய்வும் மனதுக்கு அமைதியைத் தரும். உங்கள் அகத்தின் அழகு முகத்தில் தெரியும். ஒரு போதும் பட்டினியாய் இருக்காதீர்கள். 'டயட்டிங்' கஷ்டம் என்று நினைப்பவர்களுக்கு - சாப்பிடும் முன்பு ஒரு டம்ளர் நீர் பருகுங்கள். முதலிலேயே நிறைய காய் கறிகள்/சாலட் உண்ணுங்கள். இது சாப்பாட்டு அளவைக் குறைக்கும். நிதானமாக மென்று சாப்பிடுங்கள். இரண்டாம் முறை போட்டுக் கொள்வதைத் தவிருங்கள். உப்புச் சத்தைக் கொஞ்சம் குறைத்தால் உடலில் உள்ள அதிகப்படி நீரைக் குறைக்கலாம். பசித்தால் மட்டுமே உண்ணுங்கள்.

கொஞ்சகாலம் இவற்றைக் கையாண்டு பாருங்கள். உங்கள் இஷ்டப்படி, உட்கார்ந்து கொண்டே பிறரின் பாராட்டுகளைப் பெறுவீர்கள்.

– உமா கணேசன்



காதல் தோல்வியை விழுங்க முடியும்!




ஏது காதல்? எல்லோரும் காதலித்தாக வேண்டுமா? என்பது பற்றி இப்போது சர்ச்சை வேண்டாம். காதல் பொய்யா நிஜமா அது ரொம்ப பவித்திரமா, அது வெறும் உடம்பின் ரசாயன மாற்றமா என்றெல்லாம் நாம் இப்போது விவாதிக்க வேண்டாம். வந்தது காதல்தானா அல்லது அது கன்றுக்குட்டி பாசமா, பால் வழி ஈர்ப்பா, வெறும் கவர்ச்சியா என்றெல்லாம் கூட தோண்ட வேண்டாம்.

இப்போதைக்கு காதலித்தாகி விட்டது. இந்த நிமிடத்தில் காதலில் தோல்வி. தோல்வி கண்டவள் எப்படி நொறுங்கிய நெஞ்சத்தின் துண்டுகளைப் பொறுக்கிப் பெரிய கட்டுப் போட்டு வலியைப் பொறுத்து மீண்டும் வாழ்வைத் தொடங்குவது என்பதுதான் நமக்கு முன் உள்ள சவால்.

காதல் தோல்வியில் பெண்களுக்கு உலகம் வெறுமையாகும். வாழ ஒரு நோக்கம் இல்லாமல் போகும். தன் ஆடை அலங்காரங்களில் வெறுப்பு தோன்றும். கூட வாழும் வீட்டு உறுப்பினர்களைப் பிடிக்காமல் போகும். தொழிலைத் தொடர முடியாது. நினைவு மிதப்பின் காரணமாய் ஈடுபாடு எதிலும் இருக்காது. கல்விக்குக் கால் புள்ளி வைக்க நேரிடும். ஏனெனில் சுய நம்பிக்கை சுத்தமாக அடிபட்டுப் போயிருக்கும்.

காதல் தோல்வி, அடிப்படையில் ஒரு 'ஈகோ' பிரச்சனைதான். சுய கௌரவ பிரச்னை. 'எனக்கா இப்படிப்பட்ட treatment? என்னையா இப்படி ஏமாற்றினாய்? என்னை யாரென்று நினைத்துக் கொண்டாய்?' இந்த ரீதியில் எழும் சீற்றம் எதை நோக்கிப் பாய்வது என்று குழம்பி விட்டுத் தன்னைத்தானே தாக்க ஆரம்பிக்கும்.

இதன் விளைவாக சுய பச்சாத்தாபம். இந்த சுய பச்சாத்தாபம் இருக்கிறதே இது மிகவும் ஆபத்தான மனநிலை.



'எனக்கு இவனைப் பிடிக்க முடியவில்லை பார், என்னிடம் என்ன இல்லை என்று இன்வான் என்னை விட்டு விலகினான்?'

'இத்தகைய உத்தமன் என்னை வெறுக்க வேண்டுமானால் என்னிடம் அழகே இல்லை, திறமை துளியும் இல்லை. என் அன்புக்கு அடித்துப் போடும் சக்தியில்லை.'

'நான் மட்டும் இவனை அடைய முடிந்திருந்தால் எவ்வளவு நன்றாயிருந்திருக்கும்? உலகத்துக்கே எடுத்துக் காட்டாக வாழ்ந் திருப்பேனே எப்படிப்பட்ட துர்ப் பாக்கியம் நான் இவனைப் பிரிய நேர்ந்தது?' 'இத்தனைக்கும் மேல் இவ்வளவு பேர் எங்கள் உறவைப் பார்த்த பின், இவ்வளவு நாள் இவனுடன் சுற்றியபின், இந்த முறிவு ஏற்பட்ட பின் எப்படி நான் வெளியே நடமாடுவேன்?'

'இந்த அவமானத்துக்குப் பின் நான் வாழத்தான் வேண்டுமா?' இப்படி சுய பச்சாதாப அலைகள் படிப்படியாக மேலெழும்பி அவ மான உணர்ச்சியில் நுரைத்துப் பொங்கும்.

பெரும்பாலும் இந்தப் பொங் குதல் தற்கொலைக்கு இழுக்கும். இதன் முதல்படி கண்ணீர். மாரி போல கண்ணீரை மாறாமல் சிந்தும் கண்கள். தெருவில் தனியாக நடக் கும்போது ஓவென்று குரலெடுத்து வானத்தை நோக்கி அழத் தூண்டும். இந்தக் கட்டத்தில் வேற்று நபர் ஒருவரைச் சந்திக்கும் நிமிடத்தில் மனம் கட்டுப்பட்டு அழுகையை நிறுத்தும். சில நிமிடங்களுக்கெல் லாம் வேறு ஏதாவது காரணம் காட்டி ரொம்பப் பல வீனமாய் இருக்கும்.


'இந்த ஆபீஸ் எனக்குப் பிடிக்க வில்லை.'

'நான் இந்தக் கோர்ஸைத் தொடர மாட்டேன்.'

'எனக்கு வயிற்று வலி.'

'என்னை யாருமே கவனிக்கவில்லை.'

இந்த மாதிரி புகார்களோடு எல்லோர் முன்பும் அழத்தோன்றும். இது ஒரு வித மான தாற்காலிகமான மனச் சிதைவு. இந்த மாதிரியான வெளிப்பாட்டுக்கு அவர்கள் ஒரு response ஒரு பதிலை எதிர்பார்க் கிறார்கள். அதாவது யாராவது ஒருவர், சம்பந்தப்பட்ட ஹீரோவை அணுகி 'நீ ஓடிப் போய் இப்பவே காப்பாற்றா விட்டால் அவள் அவ்வளவுதான்' என்று சொல்ல வேண்டுமென்கிற அளவுக்கு எதிர்பார்க்கிறார்கள். இ தெ ல் லா ம் சம்பந்தமில்லாதவருக்கு என்ன புரியும்? அதனால் தம்முடைய துக்கத்துக்கும் சோகத்துக்கும் எங்கும் கவனிப்பு இல்லை என்பது தெரிந்து கடைசிகட்டமான தற் கொலை முயற்சிக்கு வருவார்கள்.



இதில் வேடிக்கை என்னவென்றால் தற்கொலை முயற்சிதான் நடக்குமே ஒழிய தற்கொலையில்லை. ஏனெனில் அதுவும் அவர்களின் ஒரு வெளிப்பாடு. குறிப்பிட்ட ஒரு ஆடவனைப் பழிவாங்கும் முயற்சி அல்லது அவனை அச்சுறுத்தும் அல்லது அவனுக்கு அறிவிக்கும் சவால். சரி, என்ன செய்யலாம்?

கூடியவரை புதிய மனிதரிடையே புதிய சூழ்நிலைக்குப் போய் விடுவது நல்லது.





காதல் சாத்தான் தலைதூக்கும். சாகப் போகிறவளுக்கு 'ஆர்கானிக் கெமிஸ்ட்ரி' எதற்கு என்றும். ஏதாவது பதில் சொல்லிக் கொள்ளலாம்.

'ஆர்கானிக் கெமிஸ்ட்ரியை மாஸ்டர் பண்ணிய பிறகு தான் சாகலாமே' என்கிற ரீதியில்.

அல்லது 'எனக்கு ஆர்கானிக் கெமிஸ்ட்ரி வருகிறதா என்று பார்த்து விடுகிறேனே' என்று எடுத்துக் கொள்ளலாம். 'மூன்று வருடம் ப டி த் த 'ஆர்கானிக் கெமிஸ்ட்ரி'யையே ஒழுங்காக பூர்த்தி செய்ய முடியாதவள் காதல் தொல்விக்கு ஏன் புலம்ப வேண்டும்' என்கிற மாதிரி தனக்குத்தானே சவால் விட்டுக் கொள்ளலாம். சனிக்கிழமை தலை முழுவதும் 'ஆர்கானிக் கெமிஸ்ட்ரி' நிரம்பியிருக்கும். மோஹன் ஒரளவு மறக்கப்பட்டிருப்பான். இப்போது மீண்டும் துக்கம் கொண்டாடலை இன்னொரு வாரம் இன்னொரு பாடம் முடிப்பதற்காக ஒத்திப் போட வேண்டும் அந்தப் பெண்.

இதுவும் ஒரு சவாலாகத்தான். 'ஒரு ஸ்டாடிஸ்டிக்ஸ் பரீட்சையில் அந்த ஸ்ரீவித்யாவுக்கு மேல் அதிக மார்க் வாங்க முடியாதவள் மோஹனை எப்படி வெற்றி கொள்ள முடியும்?'

இப்படியே வருட இறுதிப் பரீட்சை வந்து விடும். முயற்சி அளவே பலனும் இருக்கும். அடுத்து மேல் படிப்பு, உன்னதமான வேலை என்று கிடைத்து விட்ட போது மோஹன் மஹா அல்பமாய்த் தெரிவான்.

இல்லை அந்தப் பெண்ணுக்கு குறிப்பிட்ட சமயம் பரீட்சை பாடம் ஏதுமில்லை என்று வைத்துக் கொள்ளலாம். அப்போது இருக்கவே இருக்கின்றன வேறு வழிகள்.

மாடி போர்ஷன் அடைசல்களை நீக்கிச் சுத்தப் படுத்திவிட்டு செத்துப் போனால் நம்மை யாரும் திட்டாமல் இருப்பார்கள். சிறு சிறு கடன்களை அடைத்து விட்டு செத்துப் போகலாம். எப்படி அடைப்பது? டார்கெட் ஏற்படுத்திக் கொண்டு தொட்டுக் காட்டலாம். முப்பது இடங்களில் சொல்ப சொல்பமாய் தேங்கிய நம் பணத்தை முதலில் வசூலிப்பது. இன்ஷ்யூரன்ஸ் போன்றவற்றில் 'ஸர்ரண்டர்' வேல்யூவைப் பெறு


எப்பாடு பட்டாவது மன உறுதி ஏற்படுத்திக் கொண்டு துக்கத்தையும் அழுகையையும் கட்டுப்படுத்திக் கொள்ள வேண்டும். தனக்குத்தானே டார்கெட்டுகளை ஏற்படுத்திக் கொண்டு அவற்றைத் தொட முயற்சிப்பது நல்ல பலன் தரும்.

உதாரணமாக திங்கள்கிழமை காதல் தோல்வி, இன்னும் ஒரு மாதத்தில் பட்ட இறுதி வருடப் பரீட்சை என்றிருக்கும் நிலையில் செவ்வாய்க் கிழமை அந்தப் பெண் நேராக கெமிஸ்ட்ரி லேப் போகும். பார்க்கிற எந்த முட்டாளுக்கும் சந்தேகம் வரும் வகையில் காப்பர் ஸல்ஃபேட்டும் ஸல்ஃப்யூரிக் ஆஸிடும் கேட்டுக் கொண்டு நிற்கும். அவனும் பணம் வாங்கிக் கொண்டு கொடுப்பான். உபகரணங்களுடன் ஊர் சிரிக்கும்படி ஒரு நாடகம் நடக்கும்.

இதைத் தவிர்க்க அந்தப் பெண் திங்கள் கிழமையன்று ஒரு உறுதி மொழி எடுத்துக் கொள்ள வேண்டும்.

'எனக்கு வரும் வெள்ளிக்கிழமைக்குள் 'ஆர்கானிக் கெமிஸ்டிரி' படித்து முடிக்க வேண்டியிருப்பதால் என் காதல் தோல்விக்காக சனிக்கிழமை முதல் துக்கம் கொண்டாட இருக்கிறேன்' என்று பத்து முறை மனசில் சொல்லிக் கொள்ள வேண்டும்.

பின் அசுர வேகத்தில் பாடத்தை ஆரம்பிக்கலாம். பாடம் ஆரம்பிக்கும் போது



...பாது என்று எல்லா வழியிலும் ...பணம் திரட்டி கடன்களைத் தீர்த்து 'ஹாய்' ஆனவுடனேயே மேலும் வாழும் ஆசை பெருகிவிடும்.

அப்பாடா, இப்போது கடனே இல்லை. இப்ப 'ஸொஸைடி' லோன் பெற்று ஒரு 'பவழ செட்' பண்ணிக் கொண்டால் எளிதாக தவணை முறையில் கடனை அடைக்க முடியும்.

'கீர்த்தி என்னை மறந்த பின் பவழ செட் ஒரு கேடா?' என்று மீண்டும் கண்ணீரும் துக்கமும் வந்தாலும் பவழ செட்டுக்காக ஆசைப்பட்ட கணங்களை மறக்க முடியாது. நினைத்தபடி 'பவழ செட்' வாங்கி அணிந்த பின் இன்னொரு டார்கெட்டைப் பிடித்துக் கொள்ள வேண்டும். இன்னும் ஒரே மாதத்தில் வர வேண்டிய 'இன்க்ரிமெண்ட்' இருக்கிறது. அதைப் பெற்று விட வேண்டும். அதுவும் ஆயிற்று. அடுத்த மாத சுழற்சி மாற்றச் சுற்றறிக்கையில் இவள் பெயரும் இருக்கும். புதிய கிளைக்கு மாற்றலான பின் அங்கு வேறு சூழ்நிலை. ஒரு ஸீனியர் இவளுக்கு பிரமோஷனுக்கான பரீட்சை விவரம் சொல்லி அருகில் நடக்கும் கோச்சிங் வகுப்புக்கு அழைத்துப் போவாள். ஒரு உற்சாக நடுத்தர வயது மாது இவளுக்கு க்ராக்கரி குக்கரியில் சுவை ஏற்படுத்தி என்றுமில்லாதபடி இவளைக் குடும்ப நிர்வாகத்தில் ஈடுபடுத்தி விடுவார்.

மறு வருடம் நிறைந்த பிரமோஷனோடு கொஞ்சம் சதை பிடித்து இன்னும் சிவந்து ஹேர் ஸ்டைல் மாறி வெகுவாக அழகியாயிருப்பாள் நம் கதாநாயகி. இன்று அவளுக்கு 'கீர்த்தி' அடிமட்டம்.

அவள் கீர்த்தி மீது வைத்த காதல் நிஜம். அவனைப் பிரிந்து அவள் வேதனை நிஜம். அவ்வளவே நிஜம் வேறு வழியில்லாத நிலையில் அவள் காதல் தோல்வியை விழுங்கியதும்.

ஒட்டினது எவ்வளவோ அவ்வளவே பிய்ப்பதும் சிரமம். காதல் தோல்வியை மறக்க தினம் இரண்டு மைல் நடந்தவர்கள் உண்டு. இரவும் பகலும் தமக்குத் தாமே தண்டனை விதித்துக் கொண்டவர்கள் உண்டு, சூடு போட்டுக் கொண்டவர்கள், சாப்பிடாமல் இருந்தவர்கள், வேலையை ராஜினாமா செய்தவர்கள், வீட்டை மாற்றிக் கொண்டவர்கள், ஊரை விட்டுப் போனவர்கள் உண்டு.

இதெல்லாமே நான் மேற் சொன்னபடி மாற்றம் தேடும் முயற்சிதான். ஆனால் மனத்தை மாற்றிக் கொள்ள துரும் பெடுத்துப் போடாமல் சூழ்நிலையை மாற்றிக் கொண்டு எந்த உபயோகமும் இருக்காது.

முதல் நாளிலிருந்து நடந்த சம்பவங்கள் முழுவதையும் ஒரு கதை போல எழுதி வரலாம். பேசியவை பார்த்தவை எல்லாவற்றையும் உள்ளது உள்ளபடி நினைப்புக்குக் கொண்டு வந்து எழுதும் போதே முன்னாள் காதலனின் குறைகள் அத்தனையும் ஒவ்வொன்றாக ஞாபகம் வந்து விடும்.

அவனை இழந்தது அவ்வளவு ஒன்றும் பெரிய விஷயமில்லை என்ற ஞானம் வந்து விடும்.

தோல்வி நேரத்தில் பெண்கள் தனியே இருக்கக் கூடாது. கூடிய வரை கூட்டங்களை நோக்கி ஓட வேண்டும். பயணங்களை மேற் கொள்ள வேண்டும். உடல் உழைப்பில் ஈடுபட வேண்டும்.

முக்கியமாக பாட்டு கேட்கக் கூடாது, இசையின் உருக்கம் மனதை பலவீனப் படுத்தும். டைப் ரைட்டிங், கம்ப்யூட்டர் பயிற்சி போன்றவை நல்ல மாற்றம் ஏற்படுத்தும்.





யாரிடமாவது மனம் விட்டுப் பேச லாம். தேர்ந்தெடுக்கப்படுபவர் நல்ல மனமும் பக்குவமும் உள்ளவராயிருக்க வேண்டும்.. தோல்வி நிலையின் மனச் சிதைவில் இருப்பவருக்கு நல்ல தேர்வு செய்ய இயலாது.. அதனால் இந்த வழியில் கவனம் தேவை.

இந்த நேரங்களில் இலக்கியக் கூட்டங் களும் பக்தி மார்க்கமும் பலவீனம் ஏற் படுத்தும். மாறாக அரசியல் கூட்டங்கள் அறிவியல் செமினார்கள் நடக்கும் இடத் தில் போய் உட்காரலாம்.

தோட்டக்கலை உத்தமம். புதிய மொழி படிக்கலாம். நிறைய படிக்கலாம். படித்தவற்றை யாருக்காவது கற்பிக்கலாம். மனம் லேசாகும்.

ஆறு வருடக் காதலை ஒரு நாள் ஒரு மொத்தமாகத் தொலைத்து விட்டு தற் கொலை முடிவுடன் இருபத்தைந்து வயது இளைஞன் என்னிடம் வந்தான்.

ஒரு கட்டுக் கடிதாசிகளைக் கொடுத்து சரளாவிடம் கொடுத்து விடு என்றான்.

'நீயோ சாகப் போகிறாய், கோடீஸ் வரனை மணக்கப் போகும் சரளாவுக்கு இவை எதற்கு?' என்றேன்.

கடிதங்களைப் பார்த்து சரளா வருந்த வேண்டுமாம். ஆக மொத்தம் அவள் வருந் தம்தான் இவனுடைய குறி. அதற்காகத் தான் இவன் சாவதே.

'ஒகே, அப்படியே கொடுத்து விடு கிறேன். ஆனா ஒண்ணு, எப்படியோ நீ உயி ரோடு தப்பிச்சுட்டன்னு வெச்சிக்க. அடுத்த வருடம் இதே தேதியில் நீ இன்று செய்ய நினைச்ச காரியத்துக்காக சிரிப்பே வெட்கப் படுவே' என்று சொல்லி விட்டேன். அடுத்து வந்த வருடங்களில் அவன் பிரமாத மான தொழிலதிபர் ஆனான். நல்லதொரு ரூபவதியை மணந்து மணி மணியாய் குழந்தைகள் பெற் றான். எப்போது என்னைப் பார்த்தாலும் கண்ணின் கோடி யில் ஒரு ஈரமான நன்றியை எனக்காக வைத்திருக்கிறான்.

காதல் தோல்வியில் சுசப்பும் போட்டி யும் உருவாவது சகஜம்.

பக்கத்து வீட்டுப் பிரம்மச்சாரி இவளை விரும்புகிற மாதிரி எல்லா பாவ்லாக்களும் செய்து விட்டுப் பெரிய இடத்தில் திரு மணம் நிச்சயம் செய்து கொள்கிறான். வீம்புக்காக அவன் கல்யாணத்துக்கு முதல் முகூர்த்தத்திலேயே இவளும் வந்த வர னுக்குக் கழுத்தை நீட்டுகிறாள்.

அவனுக்காகவே இவள் தேன் நிலவு தனிக்குடித்தனம் எல்லாவற்றையும் திட்ட மிட்டு நடத்தினாள். சமீபத்தில் ஒரு காமா சோமா இடத்தில் வீடுகட்டி கிருகப்ரவே சத்துக்கு அழைத்திருந்தாள். போனபின் தான் சூட்சமம் புரிந்தது. அந்த முன்னாள் ரோமியோ வீடு கட்டிவிட்டானாம். மொத் தத்தில் தன் திருப்திக்காக இவள் கடைசி வரை ஒன்றும் செய்யப் போவதில்லை.


இந்த மாதிரி போட்டியாய் இருந்தா லும் பரவாயில்லை. சில சமயம் ஹிஸ்டீ ரிக்கலான அழிவு சக்திகளாகக் கூட காதல் தோல்விகள் மாற வாய்ப்பிருக்கிறது.

காதல் தோல்வியால் பிரிந்தவர்கள் ஒருவரை ஒருவர் மன்னிக்க வேண்டுமா னால் கஷ்டம், வேண்டாம். மறந்து விட லாம். 'பார் நீ போய் எனக்கு ஒன்றும் பழு தில்லை' என்று சொல்வது கூட ஒருவித புறக்கணிப்புதான். இதனால் இருவருக்கும் மன அமைதி கிடைக்கிறது. எங்காவது பார்க்க நேர்ந்தால் புன்னகைக்கலாம். 'பார் எனக்கு வெறுப்பில்லை' என்பதும் ஒரு

மலை அமைக்கும் போது, கலர் கலரான கோலிக் குண்டுகளைக் களி மண்ணில் ஆங்காங்கே அழுத்தி வைத் தால், அவைகள் மலையில் 'லைட்' போட்டது போல் 'பளிச்' 'பளிச்' சென்று மின்னும். அதோடு, ஒரு பிடி ரவையில் பச்சைக் கலர் கலந்து, மலையின் மண் ஈரமாக இருக்கும் போது, லேசாகத் தூவியும், அப்பியும் வைத்தால், அவை தூரத்திலிருந்து பார்க்க மலையின் மீது மரங்கள் பச்சைப் பசேலென்று படர்ந்திருப்பது போல் காட்சியளிக்கும்.

- உமா





கம்பீரம் தான். இதை விடுத்து ஒருவரை ஒருவர் விஷமாய்த் தூக்கி நிமிட நிமிடமாய் சபித்து நிம்மதி தேடுவது நாம் காதலித்த கணங்களை அவமதிப்பது. ஏன் நம் நெஞ்சை, நம்மை நாமே நிந்தித்துக் கூறு போட்டு பிறிப்பது.

இன்னொரு வழி காதலை விட்ட சூட்டோடு இன்னொரு இடத்தில் தொடங்குவது. இது மரபுகளைச் சுமக்காத ஆடவருக்கு மிக எளிது. இதனால் தப்பொன்றும் இல்லை. கிடைக்காத காதலை மறந்து விட்டு இன்னொரு இடத்தில் நாடி. வாழ்வை வளமாக்குவது துரோகமில்லை. ஆடவரைப் போல பெண்களும் கொடிய காதல் தோல்வி வலையிலிருந்து இந்த வகையில் தப்பலாம்.

விவகாரமான காதல் சம்பவங்களில் சம்பந்தப்பட்டவர்கள் நிகழ்ந்து விட்ட தவறுதலைத் திருத்திக் கொள்ளலாம்.. அதாவது திருமணமான ஆடவனிடம் மனத்தைப் பறி கொடுத்தவர்கள் நிலைமை புரிந்ததும் தம்மைத் தாமே வெட்டிப் பிரித்துக் கொள்ளலாம். தப்புக்கு மேல் தப்பு செய்து நரகத்தில் நிரந்தர இடம் பிடிக்க வேண்டாம்.



உங்கள் வீட்டு சீலிங் ஃபேன் பழசாகி, அழுக்காகி, பெயிண்ட் போயிருந்தால் கவலை வேண்டாம். உடன் தங்கக் கலர் மற்றும் சில்வர் கலர் பேப்பர் வாங்கி ஃபேன் பிளேடு அளவுக்கு வெட்டி ஒட்டிவிடுங்கள். இதைப் பார்க்கும், உங்கள் வீட்டிற்கு வரும் விருந்தினர் இந்த சீலிங் ஃபேனை எங்கு வாங்கினீர்கள் எனக் கேட்டு அதிசயப்படுவார்கள்.


– பாலா

ஆக மொத்தம் காதல் தோல்வியை விழுங்க முடியும். இன்னுமொரு வாழ்க்கையை 'ஓஹோ' வென்று வாழ முடியும். உயரத்துக்கு வந்து சிகரத்தில் நிற்கும் அவர்களுடைய ஒரு நேர வீழ்ச்சியை யாரும் ஞாபகப்படுத்திக் கொள்வதில்லை.

– மாலதி



ஜிங்லர்ஸ்.
உங்கள் அருமைக் குழந்தையின் பட்டு மேனிக்கு இதமான, விசேஷ மெத்தை.



உங்கள் குழந்தைக்கு சிறப்பான கவனம் தேவை. இதை மனதில் கொண்டு, முழு ஈடுபாட்டுடன் தயாரிக்கப்பட்ட ஜிங்லர்ஸ் மெத்தையை உங்கள் குழந்தைக்கு அளிக்கிறோம். மென்மையான ஜிங்லர்ஸ் குழந்தை-மெத்தை பல ஒப்பற்ற சிறப்பம்சங்கள் கொண்டது.



• எளிதில் துவைக்கலாம், விரைவில் உலரும் • சர்வதேச தொழில் நுட்பம் • மென்மையான பாலிஃபைபர் கொண்ட உட்புறம் • 100% பருத்தியினாலான மேல்பாகம் • காற்றுப்புகும் அமைப்பு உள்ளதால் வெப்ப எரிச்சல், தடிப்பு ஏற்பட வாய்ப்பே இல்லை • உட்புறம் ஈரத்தினால் கெட்டியாகாமல் மென்மையாக இருக்கும் • பல அளவுகளில், மனதிற்கினிய வண்ணங்களில் கிடைக்கிறது.



ஜிங்லர்ஸ் — உங்கள் அரவணைப்புக்கு ஈடான அழகிய மெத்தை.

jinglers

India's first real washable baby bed




M/s. **Utility Textiles,**
AH-196, III Street, Shanthi Colony
Anna Nagar, Madras 600 040
Tel: 6211939 & 6213496

Marketing Agent: M/s. West & Harry P. Ltd.,
Madras. Tel: 451837

Insight-UT-1876

Authorised Dealers:

Madras City: Aysha Apparels, Purasaiwalkam ● C & Y Chains, Tarapore Towers ● Children Choice, Luz ● Chandirams, N.S.C. Bose Road ● Garment Shop, Spencer Plaza, Mount Road ● KIBS, Armenian Street ● Krishna Thulasi ● London Stores, Mylapore/Purasawalkam/Mount Road ● Lucky Apparels & Lucky Dresses, Tambaram ● Little Kingdom, Kodambakkam High Road/Kellys/Pondy Bazaar ● Mummy Daddy, Kilpauk ● Murugan Dresses, T.Nagar ● Naidu Hall, Purasaiwalkam/R.H.Road/Anna Nagar/T.Nagar ● Trishla, Luz ● (Tivoli)Merlin, Anna nagar ● Tots to Teens, G.N. Chetty Road ● Witco, Anna Nagar/T.Nagar ● Vitan, Luz. ● **Coimbatore:** Bison showroom, Ashoka Plaza ● Grand Bazaar ● May Flower, Gandhipuram ● Pinky ● Saravanas, Lakshmi Complex ● Shobha, Big Bazaar Steet ● Tip Top Southern Bonanza, Oppanakkara Street ● Tip Top Regency, Gandhipuram ● Vandana, R.S.Puram. ● Wonder Shoppee ● **Cuddalore:** Seematti ● Mummy Daddy ● **Chidambaram:** Seematti Dresses ● **Dindigul:** Shabnam ● **Erode:** Bharani Readymades ● Pinky ● Priya ● Sagar ● Selection, R.K.V. Road ● **Kumbakonam:** Seematti Dresses ● **Madurai:** Archana ● In-style ● Hajee Moosa ● Mummy Daddy ● Milan ● May Flower ● Pinky ● Shabnam ● Uladaigal Ulagam ● **Mayavaram:** Seematti Dresses ● **Nagercoil:** Ganesh Plastic Centre ● Tower Readymades ● **Neyveli:** Banu Cloth Stores, Main Bazaar ● **Pollachi:** Fashion Garments, Palghat Road ● Maharaja ● **Pondicherry:** Crowns ● Shabnam ● Selection ● Seematti Dresses ● **Pattukottai:** Seematti ● **Pudukottai:** Pinky ● **Salem:** Aunty Uncle ● Golden House (Maharani) ● Lavanya Shopping Paradise ● Milan, ● Mummy Daddy ● Ramyaa Shopping Palace ● **Ramanathapuram:** Daddy Mummy ● **Tirunelveli:** Good Luck Emporium ● Roopam ● **Tirupur:** Selection Centre, Kamaraj Road ● **Thanjavur:** Maharaja Readmades ● **Trichy:** Ananda Corporation ● Kiddies Corner ● Krishna Readymade Hall ● Mummy Daddy ● Ruby Readymades ● Step 'N' Select, Thillai Nagar ● **Tuticorin:** Students Readymade Emporium ● **Vellore:** Jolly Shopping ● Shabnam ● Sarkar



அமெரிக்கக் கப்பலில் இந்தியப் பெண்!

''முதலில் அமெரிக்கா பயமாக இருந்தது. கல்சுரல் ஷாக் வேறு.''



கடந்த ஜூலை 13 ஆம் நாள் சென்னை துறைமுகத்திற்கு நட்புமுறையில் மூன்று நாள் விஜயம் செய்த அமெரிக்க ஏழாவது பிளீட் கப்பலான யு.எஸ்.எஸ். ப்ளூரிட்ஜ் என்ற போர்க் கப்பலில் ருசிரா தேசாய் என்ற இந்திய - அமெரிக்கப் பெண் பணியாற்றுகிறார். அமெரிக்கக் கடற்படை மற்றும் இராணுவத்தில் மிகச் சில இந்திய வம்சாவளியினரே பணியாற்றுகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

அமெரிக்கப் பிரஜையான ருசிரா அகமதாபாத்தைச் சேர்ந்தவர். அமெரிக்கக் கடற்படையில் ஆபரேஷன்ஸ் பிரிவில் செயலாற்றும் இவர் டிவிஷன் ஆபிசராக பணியாற்றுகிறார்.

அஹமதாபாத் நகரில் ஜனவரி 1968 - ல் பிறந்த ருசிரா, மந்திர் எலிமெண்டரி பள்ளியிலும், சர்தார் படேல் ஜூனியர் கல்லூரியிலும் படிப்பை முடித்தார். பழைமை வாதியின் குடும்பமாக இருந்த போதிலும் அவரின் தாயார் ருசிராவை படிப்பில் மிகவும் ஊக்குவித்தாராம்.


தன்னுடைய 14 வயதில் 1982 - ல் அமெரிக்க நாட்டிற்குக் குடிபெயர்ந்தார். இவருடன் இவரின் இரு தங்கைகளும் சென்றார்கள். பிளோரிடா மாநிலத்தில் உள்ள செயிண்ட் பீட்டர்ஸ்பர்க் என்ற நகரத்தில் தன் படிப்பைத் தொடர்ந்தார் தன் மாமா வீட்டில் தங்கியபடியே. பின்னலீஸ் பார்க் உயர் நிலைப் பள்ளியில் படிப்பைத் தொடர்ந்தார்.

''முதலில் அமெரிக்கா பயமாக இருந்தது. கல்சுரல் ஷாக் வேறு. ஆனால் அமெரிக்கர்கள் outgoing nature, நன்றாகக் கலகலப்பாக பழகும் தன்மையை உடையவர்கள். ஆகவே பழகி விட்டது. என மாமா மாமி அமெரிக்காவில் நீண்ட நெடுங்காலம் வாழ்ந்தாலும் இந்திய கலாசாரம், சம்பிரதாயம் அங்கும் கடைப்பிடிப்பவர்கள். ஆனால் நாங்கள் இள வயதிலயே அங்கு சென்றதால் அமெரிக்க நடைமுறைகள், பழக்கங்கள் மிகச் சீக்கிரம் வந்துவிட்டது. புடைவை ஜீன்ஸ்களாகவும், சாப்பிடும் சப்பாத்தி ஹாம்பர்கராக வும், ஃப்ரைஸாகவும் மாற பிடித்த வருடங்கள் இரண்டுதான்'', என்றார் ருசிரா. ஆங்கிலத்தில் பள்ளியில் மேஜர் பட்டம் பெற்றார்.

''பிறகு குடும்பச் சூழ்நிலைகாரணமாக அமெரிக்கக் கடற்படையில் சேர்ந்தேன். கடற்படையில் சேர்ந்தால் படிப்புச் செலவு, உணவு, உடை, இருப்பிடம் எல்லாம் இலவசம். இதற்குள் அமெரிக்க பிரஜா உரிமையும் எனக்கு வரவே, கடற்படையில் சேருவது எனக்கு எளிதாகிவிட்டது. பிறகு கலிபோர்னியாவில் உள்ள சான்டியாகோவில் டென்டல் டெக்னீஷியன் கோர்ஸில் சேர்ந்து



முழு நேரமாக சேர்த்துக் கொள்ளப்பட்டேன். 14 மாத கடுமையான பயிற்சிக்குப் பிறகு போர்க் கப்பலில் சேர்ந்தேன். பிறகும் கூட 4 வருட உதவித் தொகை கிடைத்ததால் பயாலஜியில் மேற் பட்டப் படிப்பு சேர்ந்து, யூனிவர்சிடி அப் சன்டியாகோவில் படித்துவருகிறேன், அதே சமயம் கடற்படையிலும் பணியாற்றி வருகி-



றேன்,'' என்றார்.

படு கட்டியான ருசிரா ஆண்களுக்கு இணையாக எல்லா வீரசாகசங்களிலும் ஈடுபட்டு வருகிறார். சில மாதங்களுக்குப் பிறகு ருசிரா Naval Physician என்ற தகுதியைப் பெறுவார். அது வரை போர்க்கப்பலில் பயிற்சி உண்டு. அமெரிக்கர்களின் கடும் உழைப்பு தம்மைப் பெரிதும் கவர்ந்தது என்கிறார்.

ருசிராவைப் பற்றி குறிப்பிடுகையில் வைஸ் அட்மிரல் திமோத்தி ரைட், கமாண்டர் - அமெரிக்க செவன்த் ஃப்ளீட் கூறுகிறார்: ''சின்னப் பெண்ணான ருசிரா மிகவும் கெட்டிக்காரி. படுகட்டி. தனக்குத் தரப்பட்ட வேலையைச் சரியாக செய்து நல்ல பெயர் எடுத்துவருகிறார். கப்பலில் எல்லோருக்கும் அவளை மிகவும் பிடிக்கும். புத்திசாலியும் கூட. அவருக்கு அமெரிக்கக் கடற்படையில் மிக நல்ல எதிர்காலம் இருக்கிறது'' என்றார்.

– திவ்யா

களாக்காயை பால் போகக் கழுவி, குக்கரில் முழுசாக வேக வைக்கவும். மிளகாய் வற்றல், உளுத்தம் பருப்பு, கடலைப் பருப்பு, பெருங்காயம் இவற்றை வறுத்து, அவற்றுடன் உப்பு, தேங்காய்த் துருவல் சிறிது சேர்த்து எல்லாவற்றையும் களாக்காயுடன் மிக்ஸியில் அரைக்கவும். பிறகு, கடுகு தாளித்துப் போடவும். இதை இட்லி, தோசைக்குச் சட்னியாகத் தொட்டுக் கொள்ளலாம். சாதத்தில் போட்டும் பிசைந்து சாப்பிடலாம்.



- ஆர். பாலா

குருப் பெயர்ச்சி பலன்

10.9.92 அன்று குரு பகவான் சிம்மத்திலிருந்து கன்னிராசிக்குச் சென்று 12.10.93 முடிய மூன்று நிலைகளில் தனது சஞ்சாரத்தைச் செய்கிறார்.

முதல் நிலை :
10.9.92 முதல் 27.1.93 வரை நேரான நிலையில் சஞ்சாரம்.


இரண்டாவது நிலை :
28.1.93 முதல் 31.5.93 வரை வக்ரகதியில் சஞ்சாரம்.

மூன்றாவது நிலை :
1.6.93 முதல் 11.10.93 வரை மீண்டும் நேரான நிலையில் சஞ்சாரம்.

இவைகளில் நேரான நிலை சஞ்சாரம் கன்னி ராசியிலும், வக்ரகதி எனும் பின்நோக்கி வரும் சஞ்சாரம் சிம்மத்திலும் இருக்கும். கோட்சாரப்பலன் என்பது அவரவர்களின் ஜாதகத்தில் உள்ள சந்திரனை அடிப்படையாகக் கொண்டு தற்போது குருவின் மேற்கண்ட மூன்று நிலைகளின் சஞ்சாரத்தைப் பொறுத்து தற்காலப் பலனைக் கூறுவதாகும். இந்த அடிப்படையில் பலன் கூறினாலும், அவரவர் ஜாதகத்தின் நட்சத்திர அடிப்படையிலான தசாபுக்தி, அந்தரம் இவைகளுக்கு ஏற்பப் பலன்கள் இங்கு கூறப்பட்டுள்ள பலன்களிலிருந்து மாறுபட்டுக் கூட நடக்கலாம்.

மேஷம் :

முதல் நிலையில் 10.9.92 முதல் 31.5.93 முடிய கன்னிராசியில் ஆறாம் இடத்தில் சஞ்சரிக்கிறார். இந்த இராசியில் குரு இருக்கும் போது வீண் வம்புகள் வீண்செலவுகள் ஏற்படலாம். உற்ற நண்பனும் உதவ மாட்டான். அத்துடன் துயரச் செய்திகளைக் கேட்க வேண்டி இருக்கும். ஜாதகத் தில் கஜகேசரி யோகம், குருசந்திரயோகம் உள்ள வர்களுக்கு மேற்கண்ட பாவபலன்களால் அதிகம் பாதகம் ஏற்படாது. இரண்டாம் நிலையில் 28.1.93 முதல் 31.5.93 முடிய நல்ல பலன்கள் நடக்கும். சுபநிகழ்ச்சிகள், கல்வியில் முன்னேற்றம் பொன் னாபரண லாபம் வழக்கு வியாஜ்யங்களில் வெற்றி என நற்பலன்கள் ஏற்படும். 1.6.93 முதல் 11.10.93 வரை பந்து ஜனவிரோதம், உடலில் கபவாத ஜ"ரம் பித்தத்தினால் தலைசுற்றல், ஞாபகமறதி, திருட்டு பயம் போன்ற பலன் நடக்கும். இந்த காலகட்டத்தில் வங்கி நகைக்கடை நடத்துனர் போன்றவர்கள் வெகுவாகப் பாதிக்கப்படு வார்கள். மாணவ மாணவிகளுக்குக் கூடாநட்பும், தகாத நடத்தையும் ஏற்பட்டு படிப்பில் கவனம் குறையும். அச் சமயம் திருச்செந்தூர், ஆலங்குடி, மாயவரம், வள்ளலார் ஆலயம் போன்ற இடங் களுக்குச் சென்று குருவுக்குரிய சாந்திகளைச் செய்தால் குறைகள் நீங்கும். நடிப்புத் துறையில் உள்ளவர்கள் ஒன்றுக்கு ஒன்பது முறை யோசித்து ஒப்பந்தங்களில் கையெழுத்திடுங்கள். மேஷ ராசிக்காரர்கள் கடன் சம்பந்தப்பட்ட விஷயத்தில் ஜாமீன் பொறுப்பேற்பதைத் தவிர்க்கவும். யாருக் காகவும், எதற்காகவும் எத்தகைய வாக்குறுதியும் கொடுக்க வேண்டாம். ஆனால் குடும்பம், தொழில் விரயம் ஆகிய இடங்களைக் குரு பார்ப் பதால் தொழிலும் குடும்ப வாழ்க்கையும் நன்கு அமையும். சுப விரயம் ஏற்படும்.



ரிஷபம் :

நல்ல நிலையில் குரு சஞ்சரிக்கிறார். 92 செப்டம்பர் முதல் 93 ஜனவரி முடிய தொழிலில் முன்னேற்றம் உண்டு. புத்திர ப்ராப்தி உண்டு. பெண்களால் நன்மை உண்டு. அது மனைவி மூலமும் வரலாம். தாய் வீட்டுச் சீதனமாகவும் அமையலாம். ஆனால் பிப்ரவரி முதல் மே முடிய மோசமான பலன் ஏற்படலாம். குறிப்பாக மாணவ மாணவிகள் இந்தக் காலகட்டத்தில் பொறுப்புணர்வுடன் படிக்க வேண்டும். இது ஆசிரியர்களுக்கும் பொருந்தும். அவர்களது உற்சாகமுடன் கூடிய கடமை ஆற்றும் பணி தேக்கமடைந்தோ, அலட்சியத்துடன் இருப்பதோ கூடாது. விரோதமும், வீம்பும் வளரக்கூடிய சூழ்நிலை உண்டு. எனவே இதற்கேற்ப அமைதியைக் கடைப்பிடியுங்கள். மீண்டும் ஜூன் முதல் அக்டோபர் முடிய நற்பலன்கள் ஏற்படும். செப்டம்பர் தேர்வுகளில் வெற்றி ஏற்படும். பதவி உயர்வு உண்டு. எந்துறையினர்க்கும் ஏற்றமும் மாற்றமும் மனமகிழ்வுக்கு ஏற்ப அமையும். வியாழனன்று தக்ஷிணாமூர்த்தியையும், குருவையும் துதியுங்கள். தங்கம் தங்கமாகத் தானே தேடி உங்களை வந்தடையும் நிலை ஏற்படா விட்டாலும் பணத் தட்டுப்பாடு ஏற்படாது என்பது நிச்சயம்.

மிதுனம் :

சகோதரர்களால் மனக்கவலை ஏற்படும். கொடுத்த வாக்கைக் காப்பாற்றக் கடன் வாங்க வேண்டிய நிலை ஏற்படும். அவசரப்பட்டு வார்த்தைகளை விட்டு விபரீதத்தை விலை கொடுக்காமலேயே வாங்க வேண்டிய நிலை. தாயாரின் நிலை பற்றி கவனம் தேவை. தாம்பத்திய சுகக்குறைவு ஏற்படும். மாமியார் மருமகள் உறவில் விரிசல் தோன்ற வாய்ப்பு உண்டு. இந்த நிலை 93 ஜனவரி முடிய நீடித்து பிப்ரவரியிலிருந்து நல்ல நிலைக்கு மாறும். இதுவரை இருந்த தொல்லைகள் குறையும். தொழிலில் ஏற்பட்ட மந்த நிலை மாறி தனலாபத்திற்கு வாய்ப்பு உண்டு. இந்த நிலை எத்துறையில் உள்ளவர்க்கும் பொருந்தும். ஆனால் மீண்டும் ஜூன் முதல் சிரமமான நிலை ஏற்படும். தொழிலில் தேக்கம் உறவில் பகை, நட்பில் விரிசல், குடும்பத்தில் குழப்பம், படிப்பில் தேக்கம், நடிப்பில் தோல்வி என அனைத்துத் துறையினர்க்கும் அல்லல் உண்டு. எனவே கோளறு பதிகத்தைப் பக்திநெறியுடன் படியுங்கள். ஆழ்நிலை தியானத்தில் சூழ்நிலையைச் சற்று நேரமாவது மறக்க முயலுங்கள். குருவைத் துதியுங்கள்; குறை நீங்கும்.

கடகம் :

இந்த ராசியில்தான் குரு உச்சம் பெறுகிறார். சந்திரன் ஆட்சியை அடைகிறார். ஆனால் இந்த குருபெயர்ச்சி இந்த ராசிக்காரர்களுக்குச் சுப பலனை அவ்வளவாகத் தர மாட்டார். 93 ஜனவரி வரை அரசுப் பணியில் ஈடுபட்டிருப்பவர்களும் சரி, தனியார்த் துறையில் உள்ள பணியாளரும் சரி சற்று எச்சரிக்கையுடன் பணிபுரிவது நலம். இல்லையெனில் இடமாற்றம், பதவி நீக்கம் என ஏதாவது ஒன்றை எதிர்நோக்க வேண்டியிருக்கும். நடிப்புத் துறையினர்க்கும் கூட இது பொருந்தும். ஒப்பந்தம் செய்யப்பட்டவரை நீக்கி, வேறு ஒருவரை அமர்த்தப் பார்க்கும் வாய்ப்பு உண்டு. எந்தச் செயலிலும் ஒரு தேக்கம், வீண் செலவு என நஷ்டமும் கஷ்டமும் வரலாம். பிப்ரவரியிலிருந்து மே முடிய இத்தகைய இழுபறி நிலைதான். அதன் பிறகு இழந்ததைப் பெறுவார்கள். தனலாபமும் உண்டு. ஆனால் ஜூன் முதல் மீண்டும் மன வேதனைதான். சோதனைக்கு மேல் சோதனை, போதுமடா சாமி எனப் பாட வேண்டிய நிலை. தூய எண்ணம் உடையவர்களை குரு ரட்சிப்பார். ஆனால் சூழ்நிலை அவர்களுக்கு ஏற்ப அமைவது அரிது. எனவே வியாழன் தோறும் குருவுக்கு அர்ச்சனை செய்க.

சிம்மம் :

93 ஜனவரி வரை நல்லதொரு காலகட்டம். இதுவரை இருந்த சங்கடமான சூழ்நிலை இனி இருக்க நியாயமில்லை. தொழிலில் தேக்கமா? இனி அத்தகைய ஏக்கம் வேண்டாம். ஊக்கமுடன் பாடுபடுவீர்கள். அதற்கேற்ற தனலாபத்தையும் அடைவீர்கள். வருமானமும் வரும். வளமும் உண்டாகும். ஆனால் அதே சமயம் எச்சரிக்கையுடன் சிக்கனமாக இருக்க வேண்டும். ஏனெனில் ஜனவரி வரை இருந்த நிலை மாறி வக்ரத்தில் சஞ்சரிக்கும் குரு சஞ்சலத்தைத் தர இருக்கிறார். செலவினம் கூடும். சேர்த்து வைத்தது கரையும். வேதனையால் உள்ளம் வருந்தும். தொழிலில் தேக்கமும் அதன் காரணமாகப் பணப் பற்



ராக்குறையும் ஏற்பட்டு மனம் நொந்து போவீர்கள். ஆனால் ஜூன் முதல் அடுத்த குருபெயர்ச்சி வரை நிலை மாறும். கலைஞர்கள் பாராட்டப்படுவார்கள். அறிஞர்கள் கௌரவிக்கப் படுவார்கள். தொழில் வல்லுனர்கள் தொழில் விரிவுபடுத்துவர் எதிலும் ஏற்றம். எங்கும் மாற்றம் என மகிழ்ச்சியான சூழ் நிலையில் மிதப்பீர்கள். மற்றவர்கள் உங்களை மதிப்பார்கள். இராஜ கிரகமாகிய சூரியன் வீடல்லவா! சும்மா சொல்லக் கூடாது உள்ளபடியே சிம்ம ராசிக்காரர்கள் சிரமங்களிலிருந்து கண்டிப்பாய் விடுபடக் கூடிய வாய்ப்பான காலம். பயன்படுத்திக் கொள்ளுங்கள்.

கன்னி :

ஸ்ரீஇராமச்சந்திர மூர்த்தியின் ஜென்ம இராசியிலே குரு வந்த போதுதான் சீதா பிராட்டியார் சிறைவைக்கப்பட்டார் என்பர். அப்படிப்பட்டதொரு நிலை இந்த இராசிக்காரர்களுக்கு ஏற்படலாம். மந்த நிலையும் சொந்த பந்தங்களுக்குள் பகையும் வீண்பழியும் ஏற்படுத்துகின்றன. குரு ஜனவரி வரை உங்களை அலைகழிக்கப் பார்ப்பார். அரசுப் பணியில் உள்ளவர்கள், வங்கியில் வேலை செய்வோர், நகைக் கடைக்காரர்கள் ஆகியோர் சற்று தமது கவனக்குறைவால் வீண் பழியையும், இடமாற்றத்தையும் அடைகின்ற சூழ் நிலை. ஆனால் ஜனவரி முதல் வரையிலான கால கட்டம் மேலும் துன்பத்தையும் துக்கத்தையும் தூர தேசப் பிரயாணத்தையும் ஏற்படுத்திச் சோதனையும், துக்கத்தையும், வேதனையையும் சேர்த்தே தர இருக்கிறார். இந்தச் சமயத்தில் குருவுக்கான வழிபாடு நவக்கிரக ஹோமம் இவற்றைச் செய்வது நலம். அதன்பின் அக்டோபர் வரை சிரமம் நீடிக்கும். நல்ல தசாபுக்தியுடையவர்கள் சிரமப்பட வேண்டியிருக்காது. பெரியோர்களையும் ஆச்சார்யார்களையும் ஆராதியுங்கள். உங்கள் பழக்கங்களில் ஏதேனும் மற்றவர்களால் வெறுக்கப்படுமானால் அவற்றை விட்டொழியுங்கள். அப்பொழுதுதான் கெட்டழியும் நிலையிலிருந்து மாறி மனமகிழ்வுடன் இருப்பீர்கள். அப்பொழுதுதான் குருவின் ஆசியும் அருளும் கிடைக்கும். தக்ஷிணாமூர்த்தியின் படம் ஒன்றை வீட்டில் வைத்துப் பூஜிக்கலாம்.


தளவாய் ஸ்பெஷல்

தக்காளி அடை :

¼ படி புழுங்கலரிசியை ஊற வைத்து, கழுவிக் கல் அரித்த அரிசியுடன் ¼ கிலோ தக்காளி, 4 வற்றல் மிளகாய் சேர்த்துச் சற்றுக் கரகரப்பாக அரைக்கவும். அரைத்த மாவுடன் பெருங்காயம், உப்பு, பொடியாக நறுக்கிய வெங்காயம், கறிவேப்பிலை, கொத்துமல்லி ஆகியவைகளைச் சேர்த்து நீர்க்கக் கரைத்துக் கல்லில் ஊற்றி எண்ணெய் விட்டு அடையை வார்த்தெடுக்கவும். பருப்புச் செலவில்லாத இந்த அடை கண்ணிற்கும் நாவிற்கும் சிறந்த விருந்தாகும்.

- வனஜா

(திருமதி வனஜா எழுதிய மற்ற ஸ்பெஷல் அயிட்டங்கள் வேறு பக்கங்களில் இடம் பெற்றுள்ளன.)



துலாம் :

93 ஜனவரி வரை கடினமானதொரு நிலையை எதிர்நோக்க வேண்டியிருக்கும். உடல்நிலை ஒருநாள் போல் ஒருநாள் இருக்காது. பிரயாணம் அதிகம் ஏற்படும். அதனால் அலைச்சலும், மனஉளைச்சலும் ஏற்படுமே தவிர, தனலாபம் இருக்காது. அளந்து பேசுங்கள். இடமறிந்து பேசுங்கள்; அதையும் ஆதாரத்துடன் பேசுங்கள். இல்லையேல் வீண் வம்பில் மாட்டிக் கொண்டு விழிக்க வேண்டி வரும். அதையடுத்து மே வரை இலாபம் ஏற்படும். திருமணமோ, புதுமனைப் புகுவிழாவோ, காது குத்தலோ ஆகிய ஏதோ ஒன்றுக்குப் பணம் விரயம் ஆகலாம். இராசி ரீதியாக லாப குரு விசேஷ பலனைத் தர வேண்டும். தவிர துலா லக்கினம் உயர்ந்த இலக்கனம் என்பர். புஷ்பராகம் ஒன்றை அணியுங்கள். மீண்டும் அடுத்த குருபெயர்ச்சி வரை விரய குரு. எனவே கட்டாயம் வீட்டில் தக்ஷிணா மூர்த்தியின் படத்தை தென்திசையைப் பார்க்குமாறு வைத்துப் பூஜை செய்யுங்கள். எனினும் துலா இராசிக்கு குருபெயர்ச்சி மத்திம பலனையே தருவார்.

விருச்சிகம் :

ஜாதக ரீதியாக விருச்சிக ராசிக்குக் குரு நல்லவர். கெடுதலும் செய்ய மாட்டார். அத்துடன் வரும் கெடுதலையும் தடுப்பார். அக்டோபர் வரை குரு இலாப ஸ்தானத்தில் சஞ்சாரம். இதனால் மாணவ மாணவிய



ருக்கு ஞானயோகம் ஏற்படும். கல்வியில் கவனம் செலுத்துவீர்கள். வருமானத்திற்குக் குறைவிருக்காது. ஆனால் ஜனவரியிலிருந்து மே முடிய வக்ரகதியில் சஞ்சரிக்கும் குரு பதவிக்குப் பங்கம் ஏற்படுத்தலாம். பணக் கஷ்டம், மனக்கஷ்டம் என ஏதோ ஒருவிதத்தில் மனஅமைதியை இழக்கச் செய்வார். கொடுத்த இடத்தில் பெண்ணிற்கு மனவேதனை ஏற்பட அதன் காரணமாக மனஉளைச்சல் ஏற்படும். ஆயினும் ஜூன் முதல் அக்டோபர் வரை மீண்டும் நிலைமை சரியாகி மன அமைதிக்கு மார்க்கம் ஏற்படும். வெளிநாட்டு யாத்திரைக்கும் வாய்ப்பு உண்டு. எடுத்த காரியத்தில் வெற்றி உண்டு. எண்ணிய இடத்திற்கு மாற்றலாக வேண்டுமா! முயற்சி செய்யுங் கள். இந்தக் காலகட்டத்தில் வெற்றி கிடைக்கும். வீடு, மனை வாங்கும் யோகமும் ஏற்படும். எனினும் ஏகாதசி பிரகஸ் பதி எதையும் அதிகம் தர மாட்டார் என்று கூறுவாரும் உண்டு. தசாபுக்தியைப் பொறுத்தே நல்ல நிலை அமையும்.

தனுசு :

இராசிநாதனே குரு ஆகிறார். ஆனால் 10ம் இடத்தில் அல்லவா இருக்கிறார். கர்மஸ்தானம் ஏற்றது அல்ல. ஏற்ற இறக்கம் நிறைந்து காணப்படும் காலம். ஜனவரி வரை இந்த நிலை. எதிலும் அகலக் கால் வைக்க வேண்டாம். புதுப் படத்திற்கும், வீட்டுமனைக்கும் ஏற்பாடு செய்வதை தை மாதம் வரை தள்ளிப் போடவும். ஜனவரி முதல் மே முடிய நல்லதொரு நேரம். அச்சமயத்தில் பாக்கியஸ்தானாதிபதியாக விளங்கும் சிம்மகுரு உங்களுக்கு உகந்ததைச் செய்ய இருக்கிறார். உங்கள் இராசி நாதன் இராசியைப் பார்ப்பதால் சென்ற ஆண்டில் இருந்த நிலை மீண்டும் நீடிக்கும். கலைஞர்கள், ஆசிரியர்கள், வழக்கறிஞர்கள், இலாபத்தை அடையலாம். மீண்டும் ஜூன் முதல் அக்டோபர் வரை இழுபறி நிலைதான். இலாபம் ஏற்படா விட்டாலும் கைப்பொருளை இழக்காமல் பார்த்துக் கொள்ளுங்கள். ஏமாறும் நிலை ஏற்படலாம். ஏமாறவும் வேண்டாம், ஏமாற்றிடவும் வேண்டாம். வினை உங்களையே பழி தீர்க்க நினைக்கும். பதவிக்கும், இருக்கும் பணத்திற்கும் பங்கம் வராமல் எச்சரிக்கையுடன் செயல்படுங்கள். திருச்செந்தூர் சென்று வரலாம். முடியாதவர்கள், அவரவர் இடத்தில் உள்ள நவக்கிரகத்திற்கு அர்ச்சனை செய்யலாம். இரண்டாம் இடத்துச் சனியும் இன்னலைத் தருவார். எனவே சனீஸ்வரனை வழிபடுங்கள். சரியாகிவிடும்.

மகரம் :

இராசியிலேயே சனி. ஆயினும் குரு ஜனவரி வரை அதைப் பார்க்கிறார். அதுவும் பாக்கியஸ்தானகுருவின் பார்வை. இராசிநாதன் ஆட்சி ஒரு நல்ல சூழ்நிலை. தொழில் புதிதாக ஆரம்பிக்கலாம். படக் கலைஞர்கள் புதுப் படத்திற்கு ஆயத்தம் செய்து முடிக்கலாம். வீட்டில் திருமண நிகழ்ச்சி, அல்லது வேறுவித சுபநிகழ்ச்சி நடக்கும். ஜனவரி முதல் ஜூன் வரை 8ம் இடத்துச் சஞ்சாரம். அஷ்டமக்குரு. சென்ற ஆண்டில் பட்ட துன்பத்தையே மீண்டும் அடைவீர்கள். உத்தியோக மாற்றம், உறவினர் மரணம், மனமும் உடலும் சேர்ந்தே நோய்க்கு ஆளாகுதல் எனப் பல விதத்தில் அமைதி போகும். ஆனால் ஜூன் முதல் அக்டோபர் வரை மீண்டும் நல்ல நிலை. தொழில் அபிவிருத்தி, பதவி ஏற்றம், படங்களின் வெற்றி, புத்திர உற்பத்தி என நன்மைகள் நடக்கும் வாய்ப்பு அதிகம். எனவே இந்தக் கால கட்டத்தில் மாணவ மாணவிகள் தங்கள் மனதை அலைய விடாமல் கல்வியில் கவனம் செலுத்த வேண்டும். ஆட்சிச் சனியும் கெடுதல் செய்ய மாட்டார். எனவே துணிந்து புது முயற்சியில் இறங்கலாம். இது எத்துறையினருக்கும் பொருந்தும்.

பழைய சாதத்திலிருந்து புளியோதரை!

மீந்து போன சாதத்தில் முதல் நாள் மாலையே மஞ்சள் பொடி, உப்பு போட்டுப் புளியைக் கரைத்து ஊற்றிக் கறிவேப்பிலையை உருவிப் போடவும். சாதத்திற்கு மேல் இரண்டு விரற்கடை தண்ணீர் நிற்குமாறு புளியைக் கரைக்கவும். மறுநாள் சாதத்தை இறுகப் பிழிந்து பாத்திரத்தில் வைக்கவும். எண்ணெயில் கடுகு, உளுந்தும் பருப்பு நீளமாக நறுக்கிய பொடி வெங்காயம், பச்சை மிளகாய், கறி வேப்பிலை தாளித்துச் சாதத்தைப் போட்டுச் சூடு வரும் வரை கிளறவும்.

- வனஜா





கும்பம் :

ஏழரை சனியின் பிடிப்பில் உள்ள நீங்கள் அஷ்டமத்துக் குருவின் நேரான ஆளுகைக்கு உட்பட்டுள்ளீர்கள். முதலில் உடலைச் சீராக வைக்க வைத்தியரின் உதவியை நாடுங்கள். ஜனவரி வரைச் சங்கடமான சூழ்நிலைதான். அதன் பிறகு மே வரை மனதில் அமைதியின்மை வீட்டில் அனாவசியச்சண்டைகள் தொழிற்சாலைகளில் முதலாளி, தொழிலாளி உறவில் விரிசல், மானபங்கம் எனப் பல விதத்தில் சோதனைதான். அக்டோபர் வரையிலும் இதே நிலைதான். மாணவ மாணவிகள் மிகக் கவனமுடன் படிப்பதைப் பெற்றோர்கள் அன்புடனும், ஆதரவுடனும் அறிவுரை கூறிக் கண்காணிக்க வேண்டும். மொத்தத்தில் இதுவரை இருந்த நற்சூழ்நிலை இந்த ஆண்டில் இருக்காது. தக்ஷிணாமூர்த்தியையும் சனீஸ்வரனையும் தரிசியுங்கள். தடைகள் நீங்கலாம்.

மீனம் :

ஜனவரி முடிய 7ம் இடத்தில் சஞ்சாரம். இராசிநாதனே மீனராசியைப் பார்ப்பதால் கெடுதல் குறைவு. 11ல் ஆட்சி செலுத்துகின்ற சனீஸ்வரன் இலாபத்திற்கும், தொழில் மற்றும் இதரத் துறையின் மேம்பாட்டுக்கும் உத்திரவாதம் அளிக்கிறார். எனவே இதுவரை இருந்த இழுபறி நிலை இனி இருக்க நியாயமில்லை. எனினும் பிப்ரவரி முதல் ஜூன் வரை சற்று சிரமமே. வாக்குறுதி எதையும் கொடுக்காதீர்கள். ஜாமீன் கையெழுத்து இடுவதைத் தவிர்க்கவும். அதன்பின் அக்டோபர் வரை பதவி உயர்வு, படத்துறையினருக்கு இலாபம், சிமெண்ட், இரும்பு இயந்திரத் துறையில் விற்ற பங்கினை வாங்கியவர்களுக்குக் கூடுதலான இலாபம் என நற்பலன்கள் நடக்கும். ஆயினும் சனி, ராகு, கேதுப் பெயர்ச்சிகள் சற்று சங்கடங்களை உண்டாக்கலாம். அதனால் மனக் கவலை ஏற்படும். அமைதியாக ஆத்மார்த் தமாக தக்ஷிணாமூர்த்தியை வெண்தாமரை மலரால் அர்ச்சனை செய்யுங்கள். சிவஸ்தலங்களுக்குச் சென்று மூலவர்களையும், தக்ஷிணாமூர்த்தி, நவக்கிரக நாயகர்களையும் மனமுருக வேண்டுங்கள். வேண்டியது கிடைக்கும். வேலையா, திருமணமா, புதுத் தொழிலா, புதுப் படத்தில் ஒப்பந்தமா, அரசியலில் வெற்றியா, பதவியா எது வேண்டுமோ அது கிடைக்கும்.

– ஜெயலட்சுமி கிருஷ்ணன்

பழப் பச்சடி

முதல் முறை : கட்டித் தயிருடன் உதிர்த்த கறுப்புத் திராட்சை, துண்டுகளாக நறுக்கிய வாழைப் பழம், தக்காளி சேர்க்கவும். ஃப்ரிட்ஜில் வைக்கவும் முன் ½ - 1 கப் சர்க்கரை (புளிப்புக்கு ஏற்றபடி) சேர்த்து ஏலப்பொடி போட்டுக் கலக்கவும். விருந்து போன்ற வைபவங்களின் போது, ஆப்பிள், அன்னாசி, ஆரஞ்சு, மாம்பழம் போன்றவற்றையும் சேர்க்கலாம்.

இரண்டாம் முறை : தேவையான பொருட்கள் : ஆப்பிள் - 2, ஆரஞ்சு - 2, கறுப்புத் திராட்சை - 150, வாழைப் பழம் - 4, மாம் பழம் - 2.

செய்முறை : திராட்சையைத் தனித்தனித் துண்டுகளாக உதிர்த்துக் கொள்ளவும். ஆப்பிள், வாழை, ஆரஞ்சு, மாம்பழங்களைத் தோல் நீக்கித் துண்டுகளாக்கவும். தேவையான ஏலக்காய்ப் பொடி, ½ கப் சர்க்கரை, தேன் 4 ஸ்பூன் சேர்த்துக் கலக்கவும். சாப்பிடும் போது எடுத்துப் பரிமாறவும்.

- வனஜா



கசகசா அல்வா

தேவையான பொருட்கள் : கசகசா - 1 தம்ளர், நெய் 1½ தம்ளர், சர்க்கரை 2 அல்லது 3 (விருப்பப்பட்டால்) தம்ளர்.

செய்முறை : கசகசாவை முந்திய தினம் மாலை 5 மணி அளவில் தண்ணீர் ஊற்றி ஊற வைக்கவும். மறுநாள் (காலை) கசகசாவைக் கல் அரித்து உரலில் போட்டுப் பொங்கப் பொங்க அரைக்கவும். வாணலியில் சிறிதளவு நெய் ஊற்றிக் கசகசாவைப் பச்சை வாடை போகும்வரை வதக்கவும். பின் பால், சர்க்கரை சேர்த்துக் கிண்டவும். நெய்யைக் கொஞ்சமாக விடவும். சட்டியில் ஒட்டாத பதம் வந்தபின் இறக்கவும். இந்த அல்வா முந்திரிப் பருப்பு அல்வாவைப் போன்று மிகுந்த ருசியுடன் இருக்கும்.

- வனஜா



எங்கள் வீட்டு

பெங்களூரில் எங்கள் வீட்டில் நவராத்திரி பண்டிகை ஒன்பது நாளும் கோலாகலமாக நடக்கும். சாதாரணமாக, நவராத்திரி பண்டிகையின் போது வீட்டி லிருக்கும் பெண்கள்தான் பொம்மை கொலு வைப்பார்கள். ஆனால் எங்கள் வீட்டில் என் மாமனாரும், என் கணவரும் நாங்கள் கொலு வைப்பதற்கு மிகவும் உதவி செய்வார்கள்.



புராணங்களில் வரும் சில காட்சிகளையும், நாங்கள் சுற்றுலா சென்ற போது பார்த்த சில கோவில்களையும், விசேஷமான திருவிழாக்களையும் காட்சி களாக வைப்பது எங்கள் கொலுவின் சிறப்பு அம்சமாகும். இந்தக் காட்சிகளுக்கு வேண் டிய பொருட்களை என் மாமனாரே கை யால் செய்து கொடுத்துக் காட்சிகளை எப்படி அமைக்க வேண்டும் என்றெல்லாம் எங்களுக்கு ஐடியா கொடுப்பார். அதனால் நவராத்திரி ஆரம்பத்திற்கு ஒரு மாதம் முன்பே நாங்கள் எங்கள் வேலைகளைத் தொடங்கிவிடுவோம்.

எங்கள் வீட்டுக் கொலுப்படி நூதன மானது. அரைவட்டங்களாக ஐந்து படிகள் உடையது. மூலாதாரம் முதல் ஸஹஸ்ராரம் வரை உள்ள யோக மார்க்க நிலைகளைக் குறிக்கும் வகையில் படிகள் நடுத் தூண்டைச் சுற்றி அமைக்கப்பட்டுள்ளது. அதில் பதித்துள்ள கண்ணாடிகள் அரை வட்டங்களை முழு வட்டங்களாகப் பிரதி பலிக்கும்.

என் மாமனாரின் தாயார் நவராத்திரி தேவி வெள்ளி விக்கிரகம் செய்து அதற்கு ஒன்பது நாளும் பூஜை செய்து வந்தார். நாங்களும் அதை விடாது பின்பற்றி வரு கிறோம். அந்தத் தேவியை, ஒவ்வொரு வருடமும், மீனாட்சியாகவும், கன்னியா குமரியாகவும், காயத்திரி தேவியாகவும் அலங்காரம் செய்வோம்.

நவராத்திரியின் ஒன்பது நாளில் சில நாட்களில் கலைநிகழ்ச்சிகளை மாலை யில் வைத்துக் கொள்வோம். கச்சேரிகள் நிச்சயம் உண்டு. அதில் ஒருநாள் குழந்தை களுக்கென்று கொண்டாடுவோம். அன் றைக்கு என் மகள் அவளுடைய தோழி களுடன் டிராமா, டான்ஸ் போன்ற கலை நிகழ்ச்சிகளைச் செய்வாள். பங்கேற்ற எல்லாக் குழந்தைகளுக்கும் பரிசுகள் கொடுப்போம்.

நவராத்திரியின் ஒன்பது நாள் மதிய மும் லலிதா ஸஹஸ்ரநாம அர்ச்சனை உண்டு. மற்றும் தேவி மஹாத்மியம், சௌந்தர்யலஹரி, அபிராமி அந்தாதி போன்றவை பாராயணம் செய்வோம்.

சுண்டல் இல்லாத நவராத்திரியா? எங்கள் வீட்டுக் கொலு போல எங்கள் சுண்டலும் மிகவும் ருசியாக இருப்பதாக, வந்தவர்கள் சொல்வார்கள். நவராத்திரி சுமங்கலிகளுக்கு முக்கிய நாள். ஆனால் அவர்கள் மட்டும்தான் விஜயம் செய்ய வேண்டும் என்பதில்லை. அதனால் நாங் கள் கணவனை இழந்த பெண்களை யும் கொலு பார்க்கக் கூப்பிடாமல் விட்டு விடுவ தில்லை.

விஜயதசமியன்று எங்கள் வீட்டுக் கொலுவிற்கு உதவி செய்த வீட்டு வேலைக் காரி, ப்யூன், எலக்ட்ரீஷியன் ஆகியோ ருக்கும் நல்ல சன்மானம் கொடுப்போம்.

– ஜெயந்தி ராஜாராம்

நவராத்திரி பண்டிகை

சென்ற இதழ் 'மங்கையர் மலர்' அட்டைப் படப் பெண்மணி அனிதா ரத்னம் ராஜ். வண்ணப்படம் உத்ரா. அனிதாவைப் பற்றி -

அமெரிக்காவில் நியூயார்க்கிலும் மற்ற நகரங்களிலும் அதிகம் தெரிந்த இந்தியப் பெண்மணி அனிதாவாகத்தான் இருக்க முடியும். பாம்பே பிராட்காஸ்டிங் நெட்வொர்க் என்ற டெலிவிஷன் (இப்போது இந்தியா பிராட்காஸ்டிங் நெட்வொர்க் என்ற பெயரில் மாற்றம் செய்யப்பட்டுள்ளது) நிறுவனத்தைத் துவக்கி, அமெரிக்காவில் டெலிவிஷன் மூலம் இந்திய கலாசாரத்திற்குப் பெருமை சேர்த்தவர். எட்டு வருடங்களாக வாரா வாரம் அவர் எழுதி, தயாரித்து இயக்கி வழங்கிய நிகழ்ச்சிகளில் பங்கு கொண்டவர்கள், பேட்டி அளித்தவர்களில் இந்திரா காந்தி, ராஜீவ் காந்தி, ரவி சங்கர், ஜே. ஆர். டி. டாட்டா, அமிதாப் பச்சன், கமலஹாசன், பென் கிங்ஸ்லி ஆகியோர் அடங்குவர்.



ஆறு மாதம் அமெரிக்கா! ஆறு மாதம் சென்னை!

இந்தியத் தொலைக் காட்சிக்காக - அனிதா தயாரித்த 'அமெரிக்காவில் நடந்த இந்திய விழா' தொடர், இந்தியாவிலும் அமெரிக்காவிலும் ஐம்பது கோடிக்கும் அதிகமானவர்களால் கண்டு ரசிக்கப்பட்டது. 1988ல் Outstanding Media Achievement Award - சிறப்பு விருது அமெரிக்காவில் அனிதாவிற்கு வழங்கப்பட்டது.

சிறந்த பரதநாட்டியக் கலைஞரான அனிதா, ''நாட்டிய பிரம்மம்'' என்ற புத்தகத்தை எழுதியிருக்கிறார். கிரேக்க, மற்றும் இந்திய நடனங்களின் ஒற்றுமைகள் வேற்றுமைகள் குறித்து எழுதப்பட்டிருக்கும் புத்தகம் அது. 'பரதநாட்டியம் - தென்னிந்தியாவின் புனிதமான நடனம்' என்ற பெயரில், வெளிநாட்டவர்களுக்காக, 5000 ஆண்டு பரத நாட்டியத்தின் சிறப்பை, வீடியோ காஸெட்டாக தயாரித்து வெளியிட்டிருக்கிறார்.

இவர், தற்போது, இந்தியாவிலும் வெளிநாடுகளிலும் இருக்கும் பரத நாட்டிய மற்ற நடனக் கலைஞர்களின் நிறுவனங்கள் பற்றி முழு தகவல்கள் அடங்கிய ''நர்த்தகி'' என்ற புத்தகத்தைத் தயாரித்துக் கொண்டிருக்கிறார். கலைஞர்கள் தவிர ஆர்க்கெஸ்ட்ரா, நடன ஆடைகள் தயாரிக்கும் தையல்காரர்கள், நாட்டிய விமர்சகர்கள், சபாக்கள் ஆகிய விவரங்களும் அதில் இடம் பெறும்.

இந்த டிசம்பர் சீஸனில் அனிதாவும் அவரது இளைய சகோதரி ப்ரீதாவும் இணைந்து 'சக்தி' என்ற நாட்டிய நாடகத்தை சென்னையில் வழங்குகிறார்கள்.

வருடத்தில் ஆறு மாதம் அமெரிக்கா ஆறு மாதம் சென்னை என்று இருக்கும் அனிதாவின் கணவர் ராஜ், அமெரிக்காவில் நியூயார்க்கில் இந்தியா பிராட்காஸ்டிங் நெட்வொர்க் நிறுவனத்தை நடத்தி வருகிறார். சென்னையில் இருக்கும் போது அனிதா 'பிஸினஸ் ப்ளஸ்' என்ற வீடியோ பத்திரிகைக்கு தொழில் நிர்வாகம் பற்றிய பேட்டிகள் எடுக்கிறார்.

– எஸ். ரஜத்

புகைப்படம் : உத்ரா



சுவையான உணவு தயாரிக்க
உங்களுக்கு புது துணை
கிளாசிக்
நல்லெண்ணெய்
உங்கள் சமையல் படைப்புகளுக்கு தனிச் சுவையூட்டுகிறது - கிளாசிக் நல்லெண்ணெய்.
தரம் பிரித்து, நன்றாக சுத்தமாக்கப்பட்ட எள்ளி-லிருந்து தயாராகிறது - கிளாசிக் நல்லெண்ணெய்.
கடுமையான தரக்கட்டுப் பாட்டினால், பொன்நிறம், நல்ல மணம்கொண்டுள்ளது கிளாசிக் நல்லெண்ணெய்.
Classic
GINGELLY OIL
75 ஆண்டுகள் - பாரம்-பரியமாக நல்லெண்ணெய் தயாரிப்பவர்களின் படைப்பு கிளாசிக் நல்லெண்ணெய்.
2 கிலோ, 1 கிலோ மற்றும் 500 கிராம் பாலி ஜாரில் கிடைக்கிறது
அறுசுவை உணவிற்கு உறுதுணை கிளாசிக் நல்லெண்ணெய்.
தயாரிப்பாளர்கள்: K. வேலாயுதம் செட்டியார் சன்ஸ் & கோ., கோவில்பட்டி.
விற்பனை பிரதிநிதிகள்: இந்தியா கம்பெனி (பி) லிட்., 156, கிரீம்ஸ் சாலை, சென்னை - 600 006.
Anugrah 878/92 Tam



பொருள் : காரம்

முதல் பரிசு ரூ. 300/-

காரம் கபூர்

தேவையான பொருட்கள் :

பயத்தம் பருப்பு - 1 கப்,
கோதுமை மாவு - 2 கப்,
டால்டா - 2 டீஸ்பூன்,
சீரகம் - 1 டீஸ்பூன்,
மிளகாய் வற்றல் - 6,
பெருங்காயம் - 1 துண்டு,
பொடியாக நறுக்கிய முருங்கை இலை - ½ கப்,
எண்ணெய் - 2 கப் (பொறிப்பதற்கு),
தேங்காய்த் துருவல் - 4 டீஸ்பூன்,
உப்பு - தேவைக்கேற்ப.

செய்முறை :

பயத்தம் பருப்பை அரை மணி நேரம் ஊறவைத்து வடிகட்டி மிளகாய், உப்பு, பெருங்காயம் சேர்த்து கரகரப்பாக அரைத்து அத்துடன் முருங்கை இலையைக் கலந்து இட்லி தட்டில் வைத்து ஆவியில் வேகவைக்கவும். பிறகு அதை நன்கு உதிர்த்து, வாணலியில் எண்ணெய் ஊற்றி சீரகம் தாளித்து, உதிர்த்த பருப்புக் கலவையைப் போட்டுச் சிறிது கிளறி, பிறகு தேங்காய்த் துருவல் போட்டு கிளறி எடுக்கவும்.

கோதுமை மாவுடன் சிறிது உப்புத் தூள், டால்டா சேர்த்து சிறிது தண்ணீர் சேர்த்து கெட்டியாக பிசைந்து ஒரு எலுமிச்சம் பழ சைஸ் மாவு உருட்டி அப்பளக் கல்லில் அப்பளமாக இட்டு நடுவில் பாதியாக வெட்டி, அதை கோன் போல் செய்து அதன் நடுவே பூரணத்தை நிரப்பி, பிறகு தண்ணீர் தொட்டு நன்கு ஒட்டி, நன்கு காய்ந்த எண்ணெயில் இரண்டு, இரண்டாக போட்டு நன்கு சிவந்ததும் எடுக்கவும். இது சத்துள்ள சுவையான தின்பண்டமாகும். குழந்தைகள் விரும்பிச் சாப்பிடுவார்கள்.

- இதா சாம்பசிவம்,
சென்னை - 16.

இரண்டாம் பரிசு ரூ. 200/-

மிளகு சீடை

தேவையான பொருட்கள் :

புழுங்கல் அரிசி - ½ படி,
தேங்காய் - 1,
மிளகு - 1 ஸ்பூன்,
சீரகம் - 1 ஸ்பூன்,
தேவையான அளவு உப்பு.

செய்முறை :


முதலில் புழுங்கல் அரிசியை 2 மணி நேரம் ஊற வைக்கவும். பின் நன்கு களைந்து கிரைண்டரில் போட்டு மிகவும் நைசாக இல்லாமலும், மிகவும் கொரகொரப்பாக இல்லாமலும் அரைத்து எடுத்துக் கொள்ள வேண்டும். பின் கனமான வாணலியை அடுப்பில் வைத்து அரைத்த மாவை தேவையான அளவு உப்புப் போட்டுக் கிளறவும். மாவு உருண்டையாக உருட்டும் பதம் வரவும் தேங்காயைத் துருவி மாவில் கொட்டி மேலும் கிளறவும்.

பின் அதைச் சீடை அளவில் உருட்டி வைத்துக் கொள்ளவும். அடுப்பில் இட்லி பானையை வைத்து இட்லி தட்டில் துணி போட்டு உருட்டிய சீடைகளை வேக வைத்துக் கொள்ளவும். அடுப்பில் வாணலியை வைத்துச் சிறிது எண்ணெய் வைத்து மிளகு, சீரகத்தைப் பொடி செய்து போட்டு வெந்த சீடைகளையும் கொட்டிக் கிளறவும். தட்டில் கொட்டி கறிவேப்பிலை தூவி அலங்கரிக்கலாம்.

- வித்யா,
திருத்துறைப்பூண்டி.



• சீதா



• வித்யா



• இராஜேஸ்வரி



• கிரிஜா

மூன்றாம் பரிசு

ரூ. 100/-

கிரவுன்நட் போண்டா

தேவையான பொருட்கள் :

கொண்ட கடலை - 50 கி,
கடலைப் பருப்பு - 50 கி,
பாசிப் பருப்பு - 50 கி,
உளுத்தம் பருப்பு - 50 கி,
அரிசி மாவு - 100 கி,
காரப் பொடி - 2 ஸ்பூன்,
உப்பு
- தேவையான அளவு,
டால்டா - 50 கிராம்,
நிலக்கடலை - 50 கிராம்,
கொத்துமல்லித் தழை
சிறிது,
பச்சை மிளகாய் - 2,
வெங்காயம் - 1,
தேங்காய் - 1 மூடி,
பொறித்தெடுக்க
எண்ணெய்.

செய்முறை :

கொண்ட கடலையை ஆறு மணி நேரம் ஊறவைத்து அதை மிக்ஸியில் நைசாக அரைத்துக் கொள்ளவும். பின்னர் கடலைப் பருப்பு, பாசிப் பருப்பு, உளுத்தம் பருப்பு மூன்றையும் தனித் தனியே வாணலியில் எண்ணெய் விடாமல் பொன்னிற மாக வறுத்து எடுத்துக் கொண்டு சிறிது ஆறியவுடன் மிக்ஸியில் போட்டு நைசாக அரைத்து எடுத்துக் கொள்ள வேண்டும். இத்துடன் அரிசி மாவு, கொண்ட கடலை விழுது (அரைத்து வைத்துள் ளது) காரப் பொடி, ருசிக் கேற்ற உப்பு, டால்டா எல்லா வற்றையும் சேர்த்து கெட்டி யாக பிசைந்து வைக்கவும். எண்ணெய் காய்ந்ததும் கல வையைச் சிறு உருண்டையாக எடுத்துக் கொண்டு அதனுள் நிலக்கடலை பருப்பு வைத்து மூடி எண்ணெயில் போட்டுப் பொன்னிறமாக எடுக்கவும். (அடுப்பை மெதுவாக எரிய விடவும்.)

பின்னர் தேங்காய், பச்சை மிளகாய், கொத்துமல்லித் தழை வதக்கிய வெங்காயம் எல்லாவற்றையும் மிக்ஸியில் நைசாக அரைத்துக் கொண்டு ருசிக்கேற்றபடி உப்பு சேர்த்து சிறிது சீரகம் தாளித்து சட்னி தயார் செய்து கொள்ளவும்.

போண்டாவைச் சட்னி யுடன் சாப்பிட ருசிகரமாக இருக்கும்.

- எல். ராஜேஸ்வரி,
சென்னை - 71.

ஆறுதல் பரிசு

ரூ. 50/-

ப்ரெட் எக் கட்லெட்

தேவையான பொருட்கள் :

மாடர்ன் பிரெட்
- 6 ஸ்லைஸ்,
முட்டை - ஐந்து,
மிளகு - ஒரு டீஸ்பூன்,
சீரகம் - ஒரு டீஸ்பூன்,
பால் - ஒரு டம்ளர்,
உப்பு - ருசிக்கேற்ப,
ம. தூள்
- ஒரு சிட்டிகை,
மி. தூள் - அரை ஸ்பூன்.

செய்முறை :

பிரெட்டை முக்கோண வடிவத்தில் எல்லாவற்றையும் துண்டாக நறுக்கவும். முட் டையை அகன்ற பாத்திரத்தில் உடைத்து ஊற்றி, மிளகுத் தூள், உப்பு, சீரகம், மஞ்சள், மிளகாய்த் தூள் (தனி மிளகாய்த் தூள்) இவற்றைக் கலந்து நுரை வரும் வரை அடித்துக் கலக்கவும். பின் தோசைக் கல்லை அடுப்பில் ஏற்றியதும் பிரெட் துண்டு களை ஒவ்வொன்றாக முத லில் பாலில் லேசாக நனைத்து, பின் முட்டைக் கலவையில் நன்கு (இருபுற மும் படும்படி) நனைத்துக்



தோசைக்கல்லில் போட்டுச் சுற்றி சிறிதளவு நெய் விட்டுச் சிவந்ததும் மறுபுறம் திருப்பிப் போட்டு வெந்ததும், எடுக்கவும். இதைப் போல் அனைத்து பிரெட் ஸ்லைஸ்களைச் செய்து முடித்ததும், கொத்துமல்லித் தழை, வெங்காய ஸ்லைஸ், தக்காளி ஸ்லைஸ் கொண்டு அலங்கரிக்கவும். எளிமையான சத்துமிக்க காரம் நிறைந்த கட்லெட் ரெடி.

- எஸ். சுகந்தி சுந்தர்,
நாகப்பட்டினம்.

ஆறுதல் பரிசு ரூ. 50/-

டிஸ்கோ போண்டா

தேவையான பொருட்கள் :

புளித்த இட்லி மாவு - 5 கரண்டி,
கடலை மாவு - 50 கிராம்,
க. பருப்பு - 25 கிராம்,
வெங்காயம் - கால் கிலோ,
ப. மிளகாய் - 5,
க. எண்ணெய் - ¼கிலோ,
உப்பு - தேவையான அளவு,
சோடா மாவு - ஒரு சிட்டிகை,
கொத்துமல்லி - சிறிதளவு,
கருவேப்பிலை - சிறிதளவு,
மி. தூள் - ஒரு ஸ்பூன்.

செய்முறை :

கடலைப் பருப்பை 10 நிமிடம் ஊறவைக்கவும். வெங்காயம், ப. மிளகாய், கொத்துமல்லி, கருவேப்பிலை அனைத்தையும் பொடியாக அரிந்து கொள்ளவும். இட்லி மாவு, கடலை மாவு, வெங்காயக் கலவை, ஊறவைத்த பருப்பு, உப்பு, சோடா மாவு, மி. தூள் அனைத்தையும் இட்லி மாவு பாத்திரத்தில் கலந்து வைத்துக் கொள்ளவும். அடுப்பில் எண்ணெய் வைத்துக் காய்ந்ததும் ஒரு ஸ்பூனால் மாவை எண்ணெயில் விடவும். இருபுறமும் சிவந்ததும் எடுத்து விடவும். இது மொறு மொறுப்பாகவும், மிகவும் ருசியாகவும் இருக்கும்.

- எஸ். கிரிஜா, இராணிப்பேட்டை.

தமிழகத்தில் ஆண், பெண் முதியோர் தனித்தனியே தங்க முதியோர் இல்லங்கள் உள்ளன. முதற்கட்டமாகச் சென்னைக்கு அருகிலுள்ள காட்டாங் குளத்தூர் சிவானந்த குருகுலத்தில் வயதான தம்பதிகள் ஒன்றாக இணைந்து தங்கிட முதியோர் இல்லம் கட்டப்பட்டு வருகிறது. இங்கு வசிக்கும் ஆதரவற்ற குழந்தைகட்கும், முதியோர்கட்கும் ஓர் அன்புப் பிணைப்பு ஏற்பட்டு இரு தரப்பினருக்கும் தங்களுக்கு யாரும் இல்லை என்ற தாழ்வுணர்ச்சியைப் போக்கும் பொருட்டு, காஞ்சிப் பெரியவர் அவர்களின் அருளாசியால் இத்தர்ம காரியம் செய்யப்படுகிறது. வரும் ஜூலை மாதத்தில் துவக்கப்படவுள்ள தம்பதிகளுக்கான முதியோர் இல்லத்தில் சேர வயதான தம்பதிகளிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.


தொடர்பு கொள்ள முகவரி :
- டாக்டர் எஸ். ராஜாராம்,
கௌரவ நிர்வாகி,
30, கம்பர் தெரு,
கிழக்குத் தாம்பரம்,
சென்னை - 600 059.

வாட்டர் ஃபில்டரில் உள்ள கேண்டில் உடைந்து விட்டால் தூர எறிந்து விடாதீர்கள். ஒரு வட்டமான தெர்மோகோலை எடுத்து அதன் மீது கறுப்புக் கலர் வெல்வெட் பேப்பரை ஒட்டுங்கள். தெர்மோகோல் நடுவில் உள்ள துளையில் கேண்டிலைச் செருகிவிடுங்கள். கேண்டில் நுனியில் கலர் சம்கியால் 3 வரிகள் விபூதிப் பட்டை போல் ஒட்டுங்கள். ஒரு பெரிய சிவப்பு கலர் சம்கியால் பொட்டு போல் ஒட்டுங்கள். இப்பொழுது அழகான சிவலிங்கம் உங்கள் கொலுவை அலங்கரிக்கும்.

- டி. பாலா



A scheme that gets you funds now instead of in the distant future.



SANMAC CHITS.
A chit company that has your best interest at heart!

When you are facing a money crunch at this moment, it's very difficult to wait for 1 or 2 years for your RD to mature.

That's where chits offer you equally safe but more attractive returns. And a commitment towards regular savings.

When you join a Sanmac Chit group, you'll love to lay your hands on the funds you want, when you want it.

No wonder, thousands of Sanmac subscribers have already discovered that chits help to tide over many difficult situations; like expanding your business, building an extension to your house, buying a new car, opening a new office etc.

You too can fall back on the professional strength and reliability of the multi-crore, multi-faceted SANMAC group.

Chit groups ranging from Rs.10,000 to Rs.5,00,000.
Join Sanmac Chits today and avail special gifts!
Special groups for VINAYAKA CHATURTHI.

SANMAC CHITS
MEETS YOUR NEEDS

SANMAC CHITS PRIVATE LIMITED

Regd. Off.: 14, Khader Nawazkhan Road, Madras 600 006. Phone: 8250601, 8251232

Branches: • Mount Road, Ph: 477363 • T.Nagar, Ph: 478515 • Ashok Nagar, Ph: 4824624 • Mylapore, Ph: 77488 • Anna Nagar, Ph: 6214454 • Tambaram, Ph: 401934 (PP) • Flat 55, 'Bhaiya Complex', 286, Purasawalkam High Road, (Opp Roxy Theatre), Madras 600 007 • Madurai, Ph: 23334 • Trichy, Ph: 25324 • Srinivasa Trade Centre, 160/27, DB Road, R S Puram, (Near Kennedy Theatre), Coimbatore-2 • Tiruvannamalai, Ph: 2579 (PP) • Pondicherry, Ph: 27779 • Bangalore, Ph: 583856

Advise/3113/92

காவியங்கள் ஒருபோதும் மாறுவதில்லை.



ஸின்தால் சோப் காலம் காலமாய் தலைசிறந்து நிற்கும் ஓர் அசல் இந்திய படைப்பு. என்றும் மாறாத அதே குணம், நறுமணம், எடை, உறை. ஏனெனில் எங்களுக்குத் தெரியும் . . . நீங்கள் வேறு எதையும் விரும்ப மாட்டீர்கள் என்று.

ஸின்தால் — 40 ஆண்டுகளாக உங்களுக்கு விருப்பமான டியோடரன்ட் சோப்.

சொல்ல விரும்புகிறோம்!



அட்டை வண்ணப்படம் : யோகா

★ மாங்கொட்டை கதை அருமை. ஒரு மாற்றத்துக்கு நாம் ஒப்புக் கொண்டால், அதைத் தொடர்ந்த அடுத்த மாற்றத்தையும் ஏற்றுக் கொள்ளத்தான் வேண்டும் என்ற வரிகள் யதார்த்தம். மாறுகின்ற வாழ்க்கை முறைகளை அதனதன் போக்கில் ஏற்றுக் கொண்டு வாழப் பழகி விட்டோமானால் நெருடல்களுக்கு இடமில்லை.
சென்னை – 85, உதயா. அழகப்பன்.

★ தாலியின் புனிதத்தையும், திருமணத்தின் தன்மையையும் விளக்க வேண்டுமென்பதே நீங்கள் குறிப்பிட்ட திரைப்படங்களின் நோக்கம். இவை மதிக்கப்பட்டு வருவதை மேற்கூறிய திரைப்படங்களின் வெற்றியிலிருந்தும், அதை உடைத்து எடுக்கப்பட்ட புதிய ராகத்தின் தோல்வியிலிருந்தும் எளிதாக உணரலாம். படத்தின் வெற்றியை நிர்ணயிப்பது அலை அலையாக வரும் பெண்கள் கூட்டம் எனும் போது திரையுலகில் லேடீஸ் சென்டிமெண்ட் அவசியம்தானே.
திருப்பரங்குன்றம், டி. கே. சுப்பிரமணியன்.

★ பெண்களை புதுமைப் பெண்களாகவும் சித்திரிக்கும் திரையுலகில் 'லேடீஸ் சென்டிமெண்ட்' என்ற பெயரில் சில அபத்தங்களும் இடம்பெறாமல் இல்லை. ஜி.எஸ்.எஸ். எழுதிய கட்டுரை பெண்களின் உள்ளக் கருத்தை பிரதிபலிப்பதாக இருந்தது.
ஈரோடு – 11, எஸ். உமா.

★ பார்வையற்ற பெண்மணி கயிற்றைப் பிடித்துக் கொண்டு பனிமலையில் ஏறியதையும் அந்தச் செய்தி மங்கையர் மலரில் பக்கம் 64 மற்றும் 115லும் பிரசுரமானதையும் படித்து உண்மையில் அதிசயப்பட்டுப் போனேன்.
ரெட்டியார்பாளையம், ஜி. இராமநாதன்.

★ புத்திசாலிக் குழந்தைகள் திடீரென்று குறைந்த மதிப்பெண்கள் வாங்குவது பற்றி தாங்கள் கூறிய ஏழு காரணங்களும் அடங்கிய கட்டுரை பத்திரப்படுத்த வேண்டிய ஒன்றாகும். அதுவும், "குழந்தைகள் வகுப்பில் சரிவரக் கவனம் செலுத்துவதற்கும் அவர்கள் உண்ணும் உணவுக்கும் தொடர்பு இருப்பதாகக் கூறியது முதன் முதலில் குழந்தைகளை பள்ளிக்கு அனுப்பும் என்போன்ற தாய்மார்கள் குழந்தைகள் விஷயத்தில் கவனமாக இருக்க உதவியது. நன்றி!
வேலூர் – 6, சாயிப்ரபா.

★ ஆறு ரூபாய்க்கு இரண்டு 'மங்கையர் மலர்' படித்த சந்தோஷம் உருப்படியான "100 யோசனைகள்" தந்த ஆகஸ்ட் மலர் படித்ததும் ஏற்பட்டது.
தஞ்சாவூர், கே. காமாக்ஷி.

★ குழந்தைகளைக் கண்டித்து வளர்க்க இயலாத பெற்றோர்கள், தங்கள் குழந்தைகள் நன்றாகப் படிக்க வேண்டும் என மட்டும் விரும்பும் போது, டியூஷன்தான் பலருக்கும் எளிதான வழியாக இருப்பது மறுக்க முடியாத உண்மை.
மதுரை – 16, எஸ். சுஜாதா.

★ திரையுலகில் லேடீஸ் சென்டிமெண்ட்டை விட்டுத் தள்ளுங்கள். சில ஊர்களில் ஆணுக்கு முதல் மனைவியின் சம்மதமின்றியே இன்னொரு பெண் திருமணம் செய்விக்கப்படுகிறாள். ரிஜிஸ்தாரரிடம் செல்லும் போது கணவனின் தந்தையோ, தம்பியோ கணவராக பதிவு செய்யப் படுகிறார். இதனால் முதல் மனைவி சட்டரீதியாகக் கேஸ் போடுவது, முடியாது. ஏனென்றால் (இரண்டாமவள் வாழ்வது தன் கணவனுடன் என்றாலும்) சட்டப்படி வேறொருவன் மனைவியாகி விடுகிறாளே! இதற்கென்ன செய்யப் போகிறோம்?
சென்னை – 88, கமலா. வேங்கடேசன்.

★ 'நிர்மலா பாஸ்கர்' எழுதிய 'சிறுமை கண்டு பொங்குவாய்' குறுநாவல் எங்களையும் பொங்க வைத்தது. போராட்டத்தை நேரிலேயே பார்க்கிற மாதிரி கதை வடிவில் தந்தது பாராட்டுக்குரியது!
திருநெல்வேலி – 11, ஜி. சூர்யா.

★ கே. என். ராமசந்திரனின் "ஆண் பாஷையும் பெண் பாஷையும்" தம்பதிகளாக உள்ளவர்களுக்கு மட்டுமல்ல, வருங்காலத்தில் தம்பதிகளாக ஆகப் போகின்றவர்களுக்கும் பயன்தரத்தக்க வகையில் அருமையாக இருந்தது.
தூத்துக்குடி – 3, எஸ். சையது முகமது.

★ "திட்டமிட்டு நேரத்தைச் செலவிடுங்கள்" மிகவும் பயனுள்ள கட்டுரை. என்னுடைய நண்பர் ஒருவர் 9.15 லிருந்து 9.30 வரை உங்களிடம் வந்து பேசிச் செல்கிறேன் என்றால் அதே போல் வருவார். 9.30க்கு அவர் படியிறங்கி விடுவார். அவருடைய உயர்வுக்கு என்ன காரணம் என்று தெரிகிறதல்லவா?
புதுதில்லி, மீனா வெங்கடேசன்.

9.30க்குப் படியிறங்கி விடுவார்!



பூந்தோட்டத்தில்...

ஜாதி மல்லி

*'பெரிய விஷயங்களில் தியாகம் செய்வது எளிது;
சிறிய விஷயங்களில் தியாகம் செய்வதே கடினம்.'
- கன்பூஷியஸ்*

'உனக்கு என்னதான் அப்படி கஷ்டம் சீமா? கண்நிறைந்த புருஷன். குழந்தைங்க, வீடு. ஆஹா, ஓஹோன்னு இல்லைன்னாலும் அழகான வாழ்க்கை. கம்மா ஏதாவது குறைபட்டுக்கிட்டே இருக்காதே. நீ புத்திசாலி. இப்படி ஹாம்னா, ஹூம்னா அம்மா வீடு தேடி வந்து உட்கார்ந்து கொள்வது நல்லதில்லை.'

'நான் இங்கே வர்றது உங்களுக்கு இடைஞ்சலா இருந்தா சொல்லுங்க. நான் இனிமே இங்கே வரலை. நான் எங்கேயாவது போய்த் தனியா இருந்துக்கறேன்.'

'இப்படி வாய்க்கு வந்த மாதிரி பேசாதே சீமா. உனக்கும் குழந்தைங்க இருக்கு. இந்த மாதிரி பேசினா பெத்தவங்க மனசு எப்படி புண்படும்ங்கறதை புரிஞ்சுக்கோ.'

'பின்னே என்ன அம்மா. எனக்கு மனசில எத்தனை வேதனை. யார்கிட்டே போய் நான் என் கஷ்டத்தைப் பங்கு போட்டுக்க முடியும். உங்களை விட்டா எனக்கு யார் இருக்காங்க' விம்மினாள் சீமா.

சீமாவின் தந்தை கிருஷ்ணன் தன் மனைவி வேதத்தைப் பார்த்து 'சும்மாயிரு' என ஜாடை காட்டினார்.

'சீமா, போ. குழந்தே, போய் முகத்தைக் கழுவிக்கிட்டு சாப்பிடப் போ. மீதிய நாளைக்குப் பேசிக்கலாம்.'

சீமா வேதத்தினை அமைதியாய் தொடர அன்றைய பேச்சு முற்றுப் புள்ளியாகியது. தோட்டத்தில் நடந்து கொண்டிருந்த கிருஷ்ணனின் மனம் மட்டும் மகளையே சுற்றி வந்தது. சீமா அவர்களின் ஒரே மகள். அதனால் எத்தனை கவனத்துடன் வளர்க்கப்பட்டாள்.

அவள் ஓர் ஜாதி மல்லியாய் படிப்பால் அழகால், திறமையால், குணத்தால் மணம் பரப்பினாள். காலத்தில் அவளை ராஜூவின் கையில் ஒப்படைத்தனர் கிருஷ்ணன் தம்பதியினர். ராஜூ போல் ஒரு மாப்பிள்ளை கிடைப்பது அரிது. நல்ல படிப்பு, வேலை, ஒரு கெட்டப் பழக்கம் கிடையாது. பின் என்ன இவர்களுள் பிரச்னை? அடுத்த வீட்டு நண்பரின் அழைப்பு கிருஷ்ணனின் சிந்தனையைக் கலைத்தது.

''என்ன, கிருஷ்ணன் பொண்ணு வந்திருக்காளா?'

கிருஷ்ணன் தலையை ஆட்டினார்.

''பழைய கதைதானே.''

''ஆமாம்.''


''சரி விடுங்க. வழக்கம் போல நாளைக்குக் கிளம்பி அவ வீட்டுக்குப் போயிடுவா. இதுக்கு ஏன் கவலைப்படறீங்க?''

''அதில்லை. ஒரு தடவை, இரண்டு தடவைன்னா ஏதோ வேகம், கோபம்னு சொல்லலாம். ஆனா அடிக்கடி இப்படி ஆகுது. மேலும் முன்னேயெல்லாம் சீமா இப்படி வந்தா ராஜூ கையோடு வந்து கூட்டிண்டு போயிடுவான். பிறகு போனாவது செய்து விசாரிப்பான். இப்ப எல்லாம் எதுவுமே இல்லை. இதையெல்லாம் பார்க்கிற போது விஷயம் சாதாரணமா போற மாதிரி எனக்குத் தெரியலை.''

''சீமா என்ன சொல்றா?''

''அவ சொல்றதும் எனக்குப் புரியலை. எந்த நேரத்திலேயும் சீமா ராஜூவை திட்டறதில்லை. அவர் ரொம்ப நல்லவர். கண்ணியமானவர்னுதான் சொல்றா. ஆனா எப்பவும் ஏதோ பறி கொடுத்த மாதிரி இருக்கா. இங்கே வந்த பிறகு ராஜூ போனுக்காக தவிக்கறா. வயசான காலத்தில் என்னால இதெல்லாம் சகிக்கக்க முடியலை.'' கிருஷ்ணனின் குரல் தழுதழுத்தது.

இரவு முழுவதும் பிரமை பிடித்தவள் போல் சீமா இருக்க



வேதத்திற்குப் பொறுக்க முடியவில்லை.

''ஆஞ்சநேயா, இவளுக்கு என்ன ஆச்சு. எப்ப கேட்டாலும் ஏதோ தின்வோம், வாழ்ந்தோம்னா போதுமா. மனிதருக்கு அன்பு வேணும்கறா. எனக்குப் புரியலை. என் பொண்ணு வாழ்வு நல்லாகணும் பகவானே.''

'ஏம்மா ஆஞ்சநேயரை இந்த நேரத்தில் தொந்தரவு பண்றே?'


'துஷ்ட கிரகங்கள் தொல்லை போகணும்னா ஆஞ்சநேயரை வழிபடணும்னு எங்க அம்மா அடிக்கடி சொல்லுவா.'

''மனிதர்கள் அன்பாயிருக்க ஆஞ்சநேயர் உதவுவாரா அம்மா.''

''என்னத்தை நீ அன்புக்கு அடையாளம் காட்டணும்கற? உன்னைத் தலைல வைச்சுகிட்டு எட்டு தெரு சுத்தி வரணும்ங்கறயா? ஒழுங்காய் இருக்கான் பாரு. அதான் உனக்குத் திமிரா யிடுத்து. உன் அத்தைப் பையன் கோபுவை போய்ப் பாரு. கல்யாணமாகி 10 வருஷம் ஆயும் பொண்டாட்டி சமையல் குத்தம்ங்கிறான். அவங்க அம்மா வீட்டு சீர் சரியில்லைங்கறான். இத்தனை ஏன், உங்கப்பா எனக்கு ஒரு நாள் தலைவலி, ஜுரம்னா பாத்திருப்பாரா. இந்தக் காலத்து பெண்களே விநோதம்தான். அக்கடான்னு காலத்தைத் தள்ளுவதை விட்டு ஊரில் இல்லாத அதிசயமாத்தான் இருக்கு நீ பேசறது. நல்லா வளர்த்திருக்கான்னு ஊர்ல என்னைப் பார்த்து எல்லாரும் சிரிப்பாங்க.

சீமாவின் கண்களில் நீர் கொட்டியது. ''ஒழுக்கமா இருந்தால் மட்டும் போதுமா. இந்தா சம்பளம், நீ போட்டதை சாப்பிடுகிறேன் என்பது வாழ்க்கையாகி விடுமா. இவைகளை விட உயர்ந்த ஒன்று ஒருவர் மனதை ஒருவர் புரிந்து கொள்வது, நட்பாக வாழ்வது, அந்த நட்பில் தூய்மை காண்பது இவையெல்லாம் அல்லவா?''

சீமாவின் குறைதான் என்ன? தொட்டதற்கெல்லாம் பெற்றோரைச் சார்ந்து, பேசி, சீண்டி, விளையாடி, சண்டை போட்டு,





டிஸ்கோ சப்பாத்தி!



ஊறவைத்து போன ரவையுடன் கோதுமை மாவும், ஒரு துண்டு இஞ்சி, ஐந்தாறு பச்சை மிளகாய், ஒரு சின்னக் கட்டு கொத்தமல்லி இலை சேர்த்து அரைத்த மசாலாவும், உப்பும் சேர்த்துத் தண்ணீர் ஊற்றிச் சப்பாத்தி மாவு போல் பிசைந்து கனமான அப்பளங்களாக இட்டு அடைக்கல்லில் நெய் ஊற்றி வார்த்தெடுக்கவும்.

- வனஜா

போசனை கேட்டுச் சிரித்து மகிழ்ந்து வாழ்ந்த சீமாவிற்கு இவை அல்லாத மாறுபட்ட சூழ்நிலை பெரிய இழப்பாகத் தோன்றியது. அவள் பூ. மென்மையான பூ. அதிலும் உயர்ரக பூ. குளுமையான தென்றலில் மணம் வீசிய இம் மல்லிக்கு இளங் காலை கதிரவன் கட்டெரிப்பாய் தெரிந்தது. தான் செய்யும் ஒவ்வொரு சிறிய செயலும் பாராட்டப்பட்ட இடத்திலிருந்து சற்றே மாறுபட்ட, சற்றே கடுமையான சூழ்நிலை வாட்டியது. அதிக நிசப்தம் அச்சுறுத்தியது.

'சீமா, நீ வீட்டை வைக்கிற அழகே அழகு.'

'சீமா ரசம் வைச்சா வாசனை எட்டு ஊருக்கு அடிக்குமே.'

'எப்படித்தான் சீமா இப்படி பளிச்சுனு இருக்காளோ.' என்ற உறவினர், நண்பர்களின் வார்த்தைகளை தன் கணவரின் வாயிலும் பெற ஏங்கினாள் சீமா.

'ஆனாலும் ஒருவருக்கு இத்தனை மன அழுத்தம் கூடாது. வாய் திறந்து பேசினால், பாராட்டினால் கணவனின் கௌரவம் குறைந்து விடுமா என்ன' என எண்ணி குமுற அது புகைந்து, பற்றிக் கொழுந்து விட்டு எரிய ஆரம்பித்தது.

இதில் நியாயம் இருப்பதும் உண்மை தான். மல்லிசின் மணத்தை நுகரத் தெரியாத, போற்றத் தெரியாத இல்லை இல்லை - தெரிந்தும் தெரியாதநாய் நடந்து கொள்ளும் கணவன்மார்கள் எத்தனை பேர்.

மறுநாள் மதியம் 11 மணி. வெளியில் சென்று வந்த கிருஷ்ணன் மெதுவாய் பேச்சைத் துவக்கினார்.

'சீமா, நான் போய் ராஜூவை பார்த்து விட்டு வந்தேன்.'

''ஏன் போனீங்க. எதுக்காகப் போனீங்க. சீமா கத்துவா. ஆனா மனசில ஒன்னுமில்லை. சின்னக் குழந்தை மாதிரி. நீங்க ஒன்னும் தப்பா எடுத்துக்காதீங்கன்னு' அவர் கால்ல விழுந்துட்டு வந்தீங்களா.''

''இல்லை. இந்தத் தடவை நான் அப்படியெல்லாம் கேட்கலை.''

''பின்னே என்ன சொன்னீங்க?''

''எங்களுக்கு உங்க சண்டையின் விவரம் புரியலை. சின்ன விஷயங்கள் பெரிசா போகுறது. ஆனா இந்த சின்னச் சின்ன விரிசல்கள் பெரிய பிளவை ஏற்படுத்துமோன்னு நானும் வேதமும் பயப்படறோம். சீமா உங்க மேல எந்தத் தப்பும் சொல்லலை. ஆனா தனக்குத்தான் கணவன் நல்ல நண்பனா, உற்றதுணையா, தன்னிடம் எதையும் மறைக்காதவரா இருக்கணும்னு ஆசைப்படறா. இது உங்க மேலே இருக்கிற அளவு கடந்த அன்பின் வேகம். தன் பக்கத்திலிருந்து முழுமையாய் தன்னை அர்ப்பணிக்கும் ஒரு பெண் அதற்குப் பதிலாக தன் மன உணர்வுகளை மதிக்கச் சொல்கிறா. இதெல்லாம் இல்லாத பொழுது வாழ்க்கையை வெறுக்கிறா. இதனால் குழந்தைகளும் பாதிக்கப்படு வாங்க. அதனால சீமா இனிமே எங்க கூடவே இருக்கட்டும். பிள்ளைகள் இங்கேயும் அங்கேயுமா இருக்கட்டும். ஏதோ எங்கள் காலம் முடிவதற்குள் இந்தப் பிரச்னைக்கு ஒரு தீர்வு கிடைக்கட்டும்' என்று சொன்னேன்.''

''அதற்கு அவர் என்ன சொன்னார் அப்பா?''

''சீமாவுக்கு இதுல சம்மதம்னா எனக்கு ஒன்னும் இதில ஆட்சேபனை இல்லைன்னு சொன்னார்.''


''அப்பா''

''என்னம்மா?''

''என்னால அவரை விட்டுட்டு இருக்க முடியாதுப்பா.''

''இத பாரு சீமா. நீ சொல்ற வார்த்தைகளே முன்னுக்குப் பின்னா இருக்கு. ரொம்ப நல்லவர்ங்கறே. அப்புறம் ஆசை இல்லைங்கறே. தொட்டதுக்கெல்லாம் இங்கே ஓடி வர்றே. அவரை விட்டு இருக்க முடியாதுன்னா அங்கேயே ஒழுங்கா குப்பை கொட்டணும். உன்னை நம்பி நாங்க மேலே என்ன செய்ய முடியும். நான் என்ன டைவர்ஸா பண்ணச் சொன்னேன்?''

குழந்தைகளுக்கு விஞ்ஞானத்தில் நல்ல பயிற்சிக்கான முதற்பாடம்.



பள்ளித் தேர்வுகள் இத்தனை கடினமாக இருக்கும் என நினைத்தும் பார்த்திருக்க மாட்டீர்கள். விஞ்ஞானத் திலும், கணக்கிலும் நல்ல மதிப்பெண் பெற உங்கள் குழந்தை மிக கஷ்டப்பட்டு படிக்க வேண்டும்.

அவனுக்குத் தேவை முட்டை. முட்டையிலே ஃபாஸ்ஃபரஸ் செறிந் துள்ளது. இது உங்கள் குழந்தையை சுறுசுறுப்பாக சிந்திக்க வைக்கும். அவன் வளர்ச்சிக்கு அத்தியாவசியமான புரதச் சத்தும் இதிலே நிறைந்துள்ளது.



ஸ்க்ராம்பிள்டு எக்: அத்துடன் 30-க்கும் மேலான சமையற் குறிப்புப் புத்தகம் இலவசமாகப் பெற எழுதவும்: என் ஈ சி சி E-13/14, வால்பாக் கோ-ஆபரேட்டிவ் ஹவுசிங் சொஸைட்டி S. No. 589/A8 குல்டேக்டி, புனே-411 037.

ஆரோக்கியமான இரத்தத்திற்குத் தேவையான இரும்புச்சத்து நிறைந் துள்ளது. உங்கள் குழந்தைக்கு நோய் எதிர்ப்புச் சக்தியை வளர்ப்பதற்கு வைட்டமின் 'ஏ', நல்ல ஜீரண சக்திக்கு வைட்டமின் 'பி' குரூப், வலுவான எலும்புகளுக்கு வைட்டமின் 'டி' ஆகியவை அடங்கியுள்ளது.

நித்தம் ஒரு முட்டை. நினைவில் நிற்கும் உணவு.

எந்த நாளும் சிறந்தது.
முட்டை உண்ண உகந்தது.

NECC
நேஷனல் எக்
கோ-ஆர்டினேஷன் கமிட்டி

Enterprise/NECC/135/92 Tm



ஒடுங்கி விட்டாள் சீமா. 'நான் கேட்டது இது அல்ல. பிரிவு அல்ல. இந்த முடிவு அல்ல' கதறினாள்.

''இந்தா சீமா, எழுந்திரு. இரண்டு நாளா இப்படி ஒன்னும் சாப்பிடாம படுத்திருந்தா உடம்பு என்ன ஆகும்?''

''எனக்கு ஒன்னும் வேண்டாம்மா.''

''சாப்பிடாம இருக்கறதிலே எதை யாவது சாதிக்கப் போறீயா? உடம்பு இன்னும் கெடும். இந்தக் காப்பியாவது குடி.''

''அம்மா, அம்மா, அவரால் எப்படிம்மா என்னை பார்க்காம போன் கூட பண்ணாம இருக்க முடிகிறது. என் மனம் கஷ்டப்படும்னு தெரிஞ்சும் அவர் ஏம்மா இப்படி இருக்கார். எனக்கு ராஜு வரணும், பேசணும்னு மனசு அடிச்சுக்குது அம்மா.''

கலங்கினாள் தாய். ''சீமா, இத பார், குழந்தைங்க எல்லாம் உன்னைப்பார்த்து பயந்து போயிருக்கு. அவங்க கூட கொஞ்ச நேரம் பேசு. இப்படி ரூமிலேயே அடைஞ்சு கிடக்காதே. வாழ்க்கைன்னா ஏறத் தாழதான் இருக்கும். நாமும் கொஞ்சம் வளைஞ்சு கொடுத்துதான் போகணும். எடுத்தேன், உடைச்சேன்னு இருக்கக் கூடாது. இப்பவும் ஒன்னும் கெட்டுடலை. நீ உன் வீட்டுக்குப் போ. ஒன்னும் நடக்காத மாதிரி வழக்கம் போல இரு. நம்ப வீட்டு மனிதர்கள்கிட்டே நமக்கேன் வறட்டு கவுரவம். பொண்ணுன்னா வீட்ல ஏதாவது சங்கடம் இருந்தாலும் மூடி மறைச்சு மானத்தைக் காப்பாத்திக் கொண்டு போகணும். அதை விட்டு ஒன்னும் இல்லாத விஷயத்தை ஊதி ஊதி பெரிசு பண்ணாதே. உனக்கும் வயசாச்சு. கொஞ்சம் நிதானமா யோசனை பண்ணு.''

வார்த்தைகளைக் கொட்டி நகர்ந்தாள் வேதம். சிலையானாள் சீமா. 'ராஜு, பாருங்க. நான் எப்படி ஆயிட்டேன். கல்யாணமாகி இத்தனை வருஷம் எனக்கு ஏதாவது வேணும்னு உங்களைக் கேட்டிருப்பேனா. உலகமே நீங்கதான்னு வாழறவ நான். வீட்டைக் கோவிலாக்கினேன். ஆனா நீங்க அந்தக் கோவில்ல வெறும் கல்லு சாமியா வாழறீங்க. வசதியான வேலைக்காரியா என்னை வச்சிருக்கீங்க. உடை, உணவு, இடம் இவை கொடுப்பதால் மட்டும் இல்லறம் ஆகி விடாது. எனக்குன்னு மனசு இருக்கு. அந்த மனசில சின்னச் சின்ன ஆசைங்க இருக்கு. இதை நான் எதிர்பார்ப்பது தப்பா. அதுக்காக நான் உங்களைப் பிரிஞ்சு இருக்கணுமா என்னால முடியாது. நான் உங்களை மிகவும் நேசிக்கிறேன். மருகினாள்.'

உண்மைதான். தன் மதிப்பை உணரவில்லை என்பதற்காக மல்லி மணத்தை அவருக்குக் கொடுக்காமலா இருக்கின்றது.

'அம்மா, வாம்மா. நம்ம வீட்டுக்குப் போகலாம். குழந்தைகளின் முகம் கண்டு மனம் கலங்கினாலும் இனம் தெரியாத கோபம் பொங்கியது. வேதனையின் உச்சம் உடலை உலுக்கியது. தலைவலி பிளந்தது. தன் நிலை மறந்தாள்.

''போங்க. எல்லாரும் போங்க. ஏன் என் உயிரை இப்படி எடுக்கறீங்க. என் கண் முன்னாடி யாரும் நிக்காதீங்க.''

கையில் அகப்பட்டவைகளை வீசி எறிந்தாள். சுவரில் முட்டிக் கொண்டாள். அலங்கோலமானாள். பயந்து விட்டனர் அனைவரும். கிருஷ்ணன் ராஜுவிடம் ஓடினார்.

''இதப் பாருங்க மாமா. அவளை யார் வீட்டை விட்டு போகச் சொன்னது. இது தீராத தலைவலி. வெளில போனாத்தான் உலகத்தில் எத்தனை கஷ்டம்னு புரியும்.'' அதிகக் கடுமையானான் ராஜு.

சீமா அடிக்கடி தலைவலியால் துடித்தாள். அழுதாள். பார்ப்பவர் அவளை மனநோயாளி என்றனர். யாரிடமும் அன்பு செலுத்துவதே பாவம் என்று ஒதுங்கினாள். கிருஷ்ணன் உடல்நலம் குன்றினார். வேதம் செய்வதறியாது விழித்தாள்.

''ஏன் சீமா உன்னையே நீ இப்படிக் கொன்னுக்கறே. அப்பா, அம்மாவைப் பார் எப்படி ஆயிட்டாங்க. வீண் வைராக்கியம் வேண்டாம். உன் வீட்டுக்குப் போ.' என போவோரும் வருவோரும் உலுக்க இயந்திரமாய் கணவன் வீடு திரும்பினாள்.

நவராத்திரி அலங்காரம்



இப்பொழுது வரும் ரெடிமேட் ஆடைகளில் கண்ணாடி, ஜரிகை, ஜிகினா வேலைப்பாடுகள் அதிகமாக உள்ளன. ஆடைகள் பழையதாகிப் போனாலும் இவை நன்றாகவே உள்ளன. இவற்றை கட் பண்ணிப் பல அலங்காரங்களுக்குப் பயன்படுத்தலாம்.

- அரவிந்தலோசனி



சீமாவை திரும்பப் பெற்ற ராஜுவும், குழந்தைகளும் மகிழ்ச்சியில் திளைத்தனர். ஆனால் சீமாவின் அந்தச் சிரிப்பு, அந்தக் குதூகலம், அந்த உற்சாகம் - எல்லாம் அடிசுவடு தெரியாமல் மறைந்தன. பெண்ணைக் காண வந்த வேதம் அதிர்ந்தாள். இப் பூ வாடி உதிர்ந்தே போய்விடுமோ எனப் பயந்தாள்.

''அம்மா, என் வாழ்க்கையை எனக்கு சரி செய்துக்கத் தெரியலை. என் ஏமாற்றங்கள் எனக்கு வேதனை தர்றது. என்ன காரணமோ ராஜு மேல நான் வைச்ச அன்பை என்னால மறக்கவோ மாத்தவோ முடியலை. அது அப்படியே இருக்கணும்னுதான் ஆசைப்படறேன். அதனால் நான் அவரைப் பிரிஞ்சு இருக்கும் மன உறுதியும் இல்லை. என்னால நீயோ, அப்பாவோ, இவரோ, குழந்தைகளோ கஷ்டப்படக் கூடாது. அதனால நான் இப்படியே இருந்து என் மரணத்தை வரவேற்கிறேன். அதுக்காக நான் தற்கொலை செய்துப்பேன்னு சொல்லலை. என் வாழ்வின் முடிவு நாளே எனக்கு மகிழ்ச்சின்னு நினைக்கிறேன்.'

'சீமா உனக்கு அறிவு இருக்கு. ஆற்றல் இல்லை. தன்னம்பிக்கை இல்லை. வாழ்க்கைங்கிற ஏணியில் ஏறும் துணிவு இல்லை. விவேகம் இல்லை. உன்னைப் போல ஒரு பெண் கிடைப்பது அரிதாய் இருக்கலாம். ஆனால் அது மட்டுமே வாழ்வாகி விடாது. சிறிது கால பிரிவு அன்பை வளர்க்கும். ஆனால் நீண்ட பிரிவு அன்பை சிதைக்கும். நீ ரோஜாவில் முள் என்று குறைகூறுகிறாய். நான் முள்ளில் ரோஜா என்று ஆனந்தப்படச் சொல்கிறேன். வாழ்வில் நாம் விரும்பியதையும் பெறலாம். நாம் பெற்றதையும் இனிமையாகவே கொள்ளலாம். நீ புத்திசாலி. இரண்டாவதை ஏத்துக்குவேன்னு நான் நினைக்கிறேன். இது நான் முடிவா சொல்லும் அறிவுரை'' எனச் சொல்லி பதிலுக்குக் காத்திராமல் நகர்ந்தாள் வேதம்.

நாட்கள் நகர்ந்தன. மல்லிச் செடி மீண்டும் துளிர்த்தது. படர்ந்தது. இதோ பூத்தும் குலுங்குகின்றது. எளிதில் வாடி விடுவோம் என்ற காரணத்தால் மல்லி பூக்காமலே இருந்து விடுவோம் என்ற முடிவை எடுக்கவில்லை. இது இயற்கையின் விதி. இதற்காக நான் மாற மாட்டேன் என உறுதி கொண்டது.

இன்றைய பல குடும்பங்களில் எங்கோ எதிலோ விரிசல்கள் ஏற்படத்தான் செய்கின்றன. மனம் புழுங்கி வாழ்வதும் கொடிது. முறித்துக் கொண்டு செல்வதும் வேதனை தரக்கூடியது. முடிந்தவரை விட்டுக் கொடுத்து யதார்த்தமாக வாழ்வை மேற்கொள்பவர் நம்மில் எத்தனை பேர்! திறமை இருக்கலாம், அழகு இருக்கலாம், மென்மை இருக்கலாம். ஆனால் சற்றே தன்னையும் புரிந்து கொண்டு விட்டுக் கொடுத்து குணத்தினாலும் உயர்ந்த சீமா ஓர் உயர்ரக மல்லியே. இதனை இன்று இல்லாவிடினும் விரைவில் சீமாவின் கணவனும் உணருவான்.

– டாக்டர் கமலி ஸ்ரீபால்

நவராத்திரி அலங்காரம்


இப்பொழுது வீடுகளில் மாடர்ன் மணி தோரணங்கள், அதிகமாகக் காணப்படுகின்றன. இந்த மணிகளை அழகிய மணி மாலையாகக் கோத்து வைத்துக் கொண்டால், கண்ணன், குஜராத்தி வேஷத்திற்குக் கழுத்தில் அணிவிக்கலாம்.





பழையதாகிப் போன பட்டுப் புடவைகளில் ஓரத்தில் இருக்கும் ஜரிகை வேலைப்பாடுகளை வெட்டி எடுத்துக் கொள்ள வேண்டும். இதைக் குறத்தி வேஷத்திற்கு நெற்றியிலும், மலையாள வேஷத்திற்கு இடுப்பிலும் கட்டலாம். கண்ணன் வேஷத்திற்கு வங்கிக்குப் பதில் இதைக் கட்டலாம். முடிக்கப் போட்ட பிறகு நடா சிறிது தொங்கும்படி அமைத்தால் நன்றாக இருக்கும்.

- அரவிந்தலோசனி



"ஆபீஸ் விட்டா வீட்டுக்கு நேரா போகணும்னே தோணலைப்பா..."

"ஏன்... துறவியாகப் போறியா?"

"அதெல்லாம் ஒண்ணுமில்லே."

"பின்னே!"

"வீட்டுக்குப் போனா மனுஷனை நிம்மதியா இருக்க விட்டாத்தானே...? சின்னச் சின்ன விஷயத்துக்குக் கூடத் தகராறு, சந்தேகம், வம்பு, குற்றம், குறை, பராமுகம்... ஒவ்வொரு நாளும் ஏன் வருதுன்னு தோணுது... குழந்தைகள் மனசெல்லாம் பாதிக்குது... மீதி நாட்களை எப்படித் தள்றதுன்னே புரியலை..."

இப்படி மனைவி மீது கணவனும், கணவன் மீது மனைவியும் வெறுப்பு கொள்ளும் வகையில் இன்று பல இல்லங்கள் உள்ளன.

சச்சரவு இருக்கும் வீட்டை நிம்மதியான இடமாக மாற்றும் உபாயம் ஒன்று உள்ளது. அதை மேற்கொள்ள முன்வருபவர்களுக்குச் சச்சரவு குறைந்து நாளாவட்டத்தில் அவர்கள் இல்லம் அன்புச் சூழலில் நிறையும்.

சச்சரவுகள் அதிகமாக உள்ள இடங்கள் பலவிதமாக அமைந்திருக்கும். பொதுவானவை பற்றி மட்டும் நாம் இங்கு காணுவோம்.

முதலில் மனோதத்துவ அடிப்படையில் பிரச்னையைப் பிரித்து உணர்ந்து தீர்ப்பது எப்படியெனப் பார்ப்போம்.

சச்சரவுகளுக்கு அஸ்திவாரமாக அமைவது இரண்டு விஷயங்கள் :

1) பணப் பற்றாக்குறை,
2) குணப் பற்றாக்குறை.

பணப் பற்றாக்குறையால் ஏற்படும் பிரச்னைகளும் அவற்றைத் தீர்க்கும் முறையும் :

பிரச்னைகள் :

1) கல்லூரியில் படிக்கும் மகனுக்கு மாதந்தோறும் பணம் அனுப்பும்போது வீட்டில் தகராறு.

சுமுகத்தை



அருளும் மலர்



2) அண்ணன் மகன் திருமணத்திற்குக் குடும்பத்துடன் செல்ல வேண்டும். பரிசு வாங்கப் பணம் வேண்டும். கணவன் மனைவி பூசல்.

3) பரீட்சை வந்துவிட்டால் வீடு அமர்க்களம்.

4) கணவன் உறவினர் வந்தால் வீடு களேபரம்.

5) அதிக விருந்தாளிகள் ஒரு மாதத்தில் வந்துவிட்டால் - அவர்களைப் பற்றிய விமரிசனம் சண்டையாக முடியும்.

6) சம்பளத் தேதியன்று சந்தோஷத்திற்குப் பதில் வம்பு.

7) வெளியில் கணவனும் மனைவியும் சென்றால் பிணக்கு.

8) வெளியில் அழைத்துச் செல்வதில்லை என்று குறை.

9) வரவுக்கு மீறிய செலவு.

திடீர் அதிரசம் :

மிஷினில் அரைத்த அரிசி மாவில் சிறிது பாலையும் தண்ணீரையும் சேர்த்துப் பிசிறி வைக்கவும். வெல்லப் பாகை இதில் விட்டு அதிரசத்திற்கு மாவு பண்ணிக் கொள்ளவும். அதிரசம் நன்றாய் இருக்கும் .

– ஜி. இந்திரா



பணப் பற்றாக்குறையால் வரும் எல்லா சச்சரவுகளையும் முன்கூட்டித் திட்டமிடுவதால் விலக்கலாம்.

பாதிக்கு மேற்பட்ட சச்சரவுகள் யோசனையில்லாமல் செயல்படுவதால் ஏற்படுகின்றன.

அண்ணன் மகனுடைய திருமணம் என்று இரண்டு மாதத்திற்கு முன்பே தெரியுமென்றால் அதற்கான பணத்தைச் சேமித்துக் கொள்ள விரும்புபவர்களுக்கு நேரமில்லை என்று சொல்ல முடியாது. திருமணம் எதிர்நோக்கி வந்தால் அதற்குத் தகுந்தாற்போல் முன் மாதச் செலவுகளைத் திட்டமிட்டுக் குறைக்க வேண்டும் என்ற முடிவை மனம் ஏற்றுக் கொண்டால் சச்சரவுக்கு இடமில்லை. அதற்கு மாறாகக் கடன் வாங்கிச் செலவு செய்தால் போயிற்று என்று நினைப்பவர்களுக்குக் கட்டுப்பாடு இருக்காது. அங்கு சண்டையை விலக்க இயலாது.

திட்டமிடுபவர்களுக்குக் கட்டுப்பாடு இருப்பதால் அவர்கள் இல்லத்தில் சண்டை வராது.

திருமணத்திற்கு மட்டுமல்லாமல் எல்லா உபரி செலவிற்கும் உரிய சட்டம் இதுவே. திட்டமிட்டு நம் செலவைக் குறைத்துச் சமாளிக்கும் மனப்பான்மையை ஏற்றுக் கொண்டால் சண்டை விலகும்.

குணப் பற்றாக்குறையால் ஏற்படும் பிரச்னைகளும் அவற்றைத் தீர்க்கும் முறையும் :

பிரச்னைகள் :

1) குறை கூறுவதால்,

2) பேச்சை வளர்ப்பதால் அல்லது பாராமுகத்தால்,

3) வீணான சந்தேகம்

4) பழக்க வழக்கங்களில் குறை,

5) பொறாமை

6) தகுதிக்கு மீறிய ஆசைகள்

7) வதந்தி

8) சிறிய விஷயத்தைப் பெரிதுபடுத்துவது

9) மற்றவர்களுடைய இயலாமையை ரசிக்கும் வக்கிரபுத்தியால்,

10) மற்றவர் நிலையிலிருந்து யோசிக்கத் தெரியாத மடமையால்

'உன் வீட்டார் சரியில்லை' என்று ஆரம்பித்த சண்டை குணக் குறையால் ஏற்படுவது.

பிறர் குறையைச் சொல்லாமலிருப்பது நல்ல பழக்கம். இல்லாத குறையைச் சொல்லி வம்பு வளர்க்கப் பிரியப்படும் குணம் வீட்டில் ஒருவருக்கு இருந்தால் அதன் மூலம் ஓயாத சண்டை வரும்.


பொதுவாக இதுபோல் நடக்கக் கூடாது. இல்லத்தின் அமைதி காத்தல் அவசியம் என்பதை அனைவரும் ஒத்துக் கொண்டால் பிறகு சண்டை வராது.

ஒருவர் மீது மற்றவர் குறை கூறுவது நாகரீகமல்ல என்ற கருத்தை ஏற்றுக் கொண்டால் சச்சரவு அழியும்.

இதைத் தவிர சந்தர்ப்ப சூழ்நிலைகளாலும், மனப்பான்மையைப் (complex) பொறுத்தும் சச்சரவுகள் ஏற்படும்.

சந்தர்ப்ப சூழ்நிலை சச்சரவுகள் :

1. விருந்தாளிகள் வந்தால் குழந்தைகள் அடங்குவதில்லை.



2. வீட்டுப் பாடம் அதிகமான நாளில் குழந்தைகளுக்குள் சண்டை வருவது.

3. மாதக் கடைசியில் யாருக்கும் பொறுமையிருப்பதில்லை.

4. ஆபீஸில் இன்ஸ்பெக்ஷன், கணவர் கடுகடுவென்றிருக்கிறார்.

5. பெண் பார்க்க வந்து போய் பதில் வராவிட்டால் காரணமின்றி எரிச்சல்.

6. ஒருவர் அளவு கடந்து சந்தோஷப்பட்டால் அடுத்த நாள் வீட்டில் கலாட்டா.

7. பையன் படிப்பு விஷயமாக அடிதடி ரகளை.

8. தீபாவளி வந்தால் எங்கள் வீட்டில் எப்போதும் சண்டை.

மனப்பான்மை (complex) குறையால் வரும் சச்சரவுகள் :

1. தம்பியின் நண்பர்கள் வீட்டிற்கு வந்தால் அண்ணன் தகராறு செய்கிறான்.

2. காலை டிபன் நேரத்தில் தினம் தவறாமல் சண்டை.

3. இதுவரை ஒருநாள் கூட பாத்ரூமுக்குச் சண்டையில்லாத நாளில்லை.

4. வாரப் பத்திரிகையை யார் முதலில் படிப்பது என்று சண்டை.

5. டீ. வி. யை என்விஷ்டப்படிதான் பார்ப்பேன் என்று சண்டை.

6. எனக்கு எல்லோரும் கட்டுப்பட்டே ஆக வேண்டும்.

7. படித்த உறவினர்/பணக்கார உறவினர் நண்பர் வந்து போனால் வீணான வாக்குவாதம் சண்டையாய் முடிவது.

> "நீங்கள் செம்மையில் இருக்கும் போது, உங்களை நண்பர்கள் அறிவார்கள். வறுமையில், நண்பர்கள் யார் என்பதை நீங்கள் அறிந்து கொள்வீர்கள்."
> - ஜான் சர்ட்டன் கோல்லீன்ஸ்

இந்தக் குறைகளையெல்லாம் உஷாரான சாதுரியத்தாலும், நிதானமான ஆராய்ச்சியாலும் சமாளிக்கலாம்.

நண்பன் இல்லாதவன் தம்பியின் நண்பர்களைக் கண்டு பொறாமைப் படுவதால் சண்டை வளர்க்கிறான் என்றால், அதைப் புரிந்து கொண்டால், அஸ்திவாரமான காரணம் தெரிந்து விடுவதால் அதை விலக்க முடியும். சூட்சுமமாகக் கண்டுபிடிக்க முனைந்தால் புரியும். அது புரிந்து விட்டால் 99% பிரச்னை தீரும்.

மலர்களின் தெய்வீகத் தன்மையால் சச்சரவு விலகுவதை இனி காண்போம்.

மலர்களினால் சச்சரவை நீக்குவது ஓர் எளிய முறை. மலர்களைப் பற்றி அறிவதால், மலர்களின் விசேஷத் திறனால் சச்சரவுகளை அழிக்க முடியும்.

மலர்கள் ஒவ்வொன்றிற்கும் ஒரு தெய்வீகக் குணம் உண்டு. மலர்களுள்ள இடத்தில் மணம் நிறைவதைப் போல் மனம் நெகிழ்ந்து குதூகலம் நிறையும்.

மனோதத்துவ முறையிலும் ஆன்மீகச் சட்டப்படியும் பல்வேறு கலாசாரங்களில் பல மலர்களின் தன்மை வரையறுக்கப் பட்டுள்ளது.

Coral Vine என்றும் 'கொடி ரோஸ்' என்றும் வழங்கும் (ornamental flower) அலங்காரத்திற்காக வேலிகளில் படரவிடும் மலர் சுமுகம் (harmony) என்ற அதிர்வு அலைகளைத் தாங்கி (vibration) வருகிறது.

சண்டைச் சச்சரவுள்ள இடங்களில் இம்மலரைத் தினமும் ஒரு கொத்து கொண்டு வைப்பதால் அதிசயிக்கத்தக்க வகையில் சச்சரவு அழிவதைக் காணலாம்.

நெருங்கிய உறவினர்களிடையே ஏற்பட்ட நாட்பட்ட பகைகூட மறைந்து, பழைய மனஸ்தாபங்கள் விலகி மீண்டும் உறவைப் புதுப்பித்துக் கொள்ள உதவும் ஆற்றல் படைத்தது இந்த மலர்.

இம்மலரை வளர்க்கும் இல்லங்களின் சூழல் அமைதி நிறைந்து காணப்படுகிறது. அழகிய சிறு முத்துக்களைச் சரமாக்கியதைப் போன்ற இம்மலர்கள் இளம் ரோஜா வண்ணத்திலும், சற்று சிவந்த நிறத்திலும், பூரண மென்மையிலும் வேலியோரங்களை அலங்கரிப்பது கண்களுக்கு விருந்தாகும்.

- ரேவதி சங்கரன்



உச்சாணிக் கொம்பில் ஏறி நின்று கொண்டு இறங்க மாட்டேன் என்று அடம் பிடிக்கும் விலைவாசி, கைநிறையப் பணம் எடுத்துக் கொண்டு போனாலும், பை நிறையாமல் திரும்ப வைக்கும் பணவீக்கம், அத்யாவசியமான பொருட்களின் தட்டுப்பாடு எனப் பொழுது விடிந்ததில் இருந்து இரவு வரை எத்தனையோ பிரச்னைகள். இந்த நிலையிலும் பண்டிகைகளை விடாமல் கொண்டாடுவது இந்தியாவிற்கே உரிய தனிச் சிறப்பாகும்.

பிழைப்பிற்காகவும், வசதிகளைப் பெருக்கிக் கொள்ளவும் கடல் தாண்டி வந்திருக்கும் இந்தியர்களும் இதற்கு விதிவிலக்கல்ல. இங்கு மஸ்கட்டிலும் நவராத்திரியைக் குஜராத்தி சமூகத்தினரும், தமிழ்நாட்டினரும் ஜாம், ஜாமென்று வருஷம் தப்பாமல் கொண்டாடுகிறார்கள். வீடுகளில் தனியாகக் கொண்டாடுவதோடு மஸ்கட் தமிழ்ச் சங்கத்திலும், 2 வருடங்களாக நவராத்திரி ஒரு கலை விழாவாக நடத்தப்படுகிறது.

சென்ற ஆண்டு இந்த விழாவில், மஸ்கட் கிருஷ்ணன் கோவில் அரங்கில் படிகள் அமைத்து ஒவ்வொரு வருடம் லீவிலிருந்து வரும் போதும் இரண்டிரண்டு பொம்மைகளாகக் கொண்டு வந்து இன்று கணிசமாகப் பொம்மை சேர்த்திருப்பவர்களிடமிருந்து (மரப்பாச்சி, செட்டியார் பொம்மை உட்பட) பொம்மைகளை வாங்கிக் கொலு வைத்திருந்தனர்.

கண்ணனாகவும், கந்தனாகவும் வேடமிட்டு, வீடு வீடாகச் சென்று கண்டல் வேட்டையாடி வந்த நம் இளமைப் பருவ நினைவுகளை மீண்டும் மலர வைக்கும் விதத்தில் சின்னஞ்சிறு குழந்தைகளின் மாறுவேடப் போட்டி நடந்தது. உலகின் ஆதி மனிதர்கள் ஆதாம், ஏவாள் தொடங்கி நீச்சல்



அரபு நாட்டில் அன்னை வழிபாடு







வாருங்கள், மாதருக்கு மாதர் என்ற முறையில் என்னுடைய ரகசியத்தைப் பகிர்ந்து கொள்ளுங்கள். சுரண்டுவதை நிறுத்துங்கள். எரிந்து போவதை நிறுத்துங்கள். மேலும், பருமனை மற்றும் கொலெஸ்ட்ராலை விரும்பி அழைத்திடும் எண்ணெய்யினை ஊற்ற வேண்டாம். என்னைப் போல், சுவைமிக்க மற்றும் மொறு மொறு வென்ற நிர்லெப் தோசைகளை தவ்வாவிலிருந்து எளிதாக எடுங்கள். நிர்லெப் அளித்திடும் வசதியினை நீங்களாகவே அனுபவியுங்கள்.


நிர்லெப் உபயோகிப்பதின் மூலம், அதே எடையுள்ள வெண்ணெய்க்கு அதிக நெய் கிடைப்பதை நீங்களே கண்டு கொள்வீர்கள் — தொல்லை கொடுக்கும் எந்த வித பிசுக்கும் தவ்வாவில் ஒட்டிக் கொள்ளாது.

மேலும் என்ன, நிர்லெப் உபயோகிப்பதினால், உங்களுடைய தினசரி சமையலும் மிக எளிதாவதைக் காண்பீர்கள். அத்தியாவசியமான ஊட்டச் சத்துக்களை நிலைக்கச் செய்வதாலும் (ஏனெனில் உணவுப் பொருட்கள் எரிந்து போவதில்லை) மற்றும் கடைசியில் சுத்தப் படுத்துவது எளிதாக அமைவதாலும், இது ஒரு உண்மையான சமையலறைத் தோழன் — 20 வருடத்திற்கு மேலாக பொறுப்புடன் உங்களுடன் ஊழியம் செய்து கொண்டிருப்பவனாவான்.

அதனால் தான் என்னுடைய குடும்பம் ஒரு நிர்லெப் குடும்பம்.
உங்களுடையதோ?
இல்லையென்றால், இதைப்பற்றி சிந்திக்கவும் சீக்கிரமாக.

NIRLEP

ஒரு வசதியான படைப்பு



டிஸ்ட்ரிப்யூட்டர்கள்: பாஸ்பனா மார்க்கெட்டிங், சென்னை. தொ. பே: 588394 ஏ.ஜி.க. (எர்ணாகுளம்), கொச்சி. தொ. பே: 354765 மஹாவீர் டிரேட் லிங்க்ஸ், ஹைதராபாத். தொ. பே: 231196, 231747 மஹாவீர் டிஸ்ட்ரிப்யூட்டர்ஸ், பெங்களூர். தொ. பே: 602652 ஆர்மன் டிரேடர்ஸ், பம்பாய். தொ. பே: 4141176, 4141430





பட்டுப் புடவையை ஷாம்பு போட்டு அலசினால் புடவை பளிச் சென்று இருக்கும். எண்ணெய்க் கறை, மற்ற கறையெல்லாம் நீங்கிப் புதுப் பொலிவுடன் காணப்படும்.

– எம். ராஜீவி

உடையில் தோன்றிய உலக அழகி வரை பற்பல வேடங்களில் வந்த குழந்தைகள் எல்லோர் உள்ளங்களையும் கொள்ளை கொண்டனர். பெண்கள் குழுவினர் பக்திப் பாடல்களைப் பாடினர். "நவராத்திரி நாயகியர் ஆகிய துர்க்கை, லக்ஷ்மி, சரஸ்வதி கோலத்தில் மூன்று சிறுமிகள் அமர்ந்திருக்க, அன்னை புகழ்பாடி ஆடினாள் குமாரி உமா. அன்றைய நிகழ்ச்சிகளின் சிகரமாக அமைந்தது திருமதி. வைஜெயந்தி பாலியின் மாணவி, திருமதி. சரஸ்வதி வாசுதேவனின் மினி பரத நாட்டிய நிகழ்ச்சி.

வந்திருந்த பெண்கள் அனைவருக்கும் தேங்காய், மஞ்சள், குங்குமம், ரவிக்கைத் துண்டு கண்டல் கொடுக்கப்பட்டது. (இங்கு கடைகளில் வெற்றிலை விற்பதோ, பொது இடங்களில் போட்டுக் கொள்வதோ சட்ட விரோதமான செயல்) குழந்தைகளுக்கும் சிறு அன்பளிப்புகள் வழங்கப்பட்டன. தேங்காய், பழம் இவற்றை 2 வருடமாக இலவசமாக வழங்கி வருகிறார். இங்கு காய்கறி கடை வைத்திருக்கும் தமிழர் திரு. முகம்மது. இரவிக்கை பிட்களை இலவசமாக வழங்கியவர்கள் இங்கு 20 வருடங்களாக புடவைக் கடை வைத்திருக்கும் குஜராத்தி அன்பர் சுரேஷ் பாய். தமிழ்ச் சங்கத்தின் பெண்கள், குழந்தைகளின் நிகழ்ச்சிகளுக்கும் பொறுப்பேற்றுள்ள திருமதி. ஜெயா ஜெயகுமார் நன்றி கூற விழா இனிது முடிந்தது.

இன்று மதக் கலவரங்கள் தலைவிரித்தாடும் போது, ஒரு முஸ்லீம் தேசத்தில் நடந்த இந்த விழா, என்றேனும் ஒருநாள் உலகம் அமைதிப் பூங்காவாகத் திகழும் என்ற நம்பிக்கையைத் தோற்றுவித்திருக்கிறது.

– கீதா சந்திரசேகர்

பெங்கால் காட்டன் சாரீஸ்





இன்று இந்தியாவில் மட்டுமல்லாது, உலகத்தின் பல பாகங்களிலும் பிரபலமாகி, எல்லாராலேயும் விரும்பி அணியப்படும் 'பெங்கால் காட்டன் ஸாரீஸ்' வேகமாக வளர்ந்து வரும் மிகப் பெரிய தொழிலாக வங்காளத்தில் நடந்து வருகிறது.

ஆரம்பத்தில் பெங்கால் காட்டன் ஸாரீஸ், மற்றும் ''பருத்தி - ஸில்க்'' கலந்த புடவைகள், தரமான ''ஸில்க்'' புடைவைகள், மிகக் குறைந்த அளவிலேயே இந்த மாநிலத்தில் தயாராகி வந்தது. 'நதியா' மாகாணத்தில் சாந்திபூர், புலியா போன்ற இடங்களில் 'டாங்காயில்', புடைவைகளும் மற்றும் அக்கம்பக்கத்து கிராமங்களில் தனியாகாலி என்னும் பருத்திப் புடைவைகளும், சிறு சிறு தறிகள் வைத்து மிகச் சிறிய அளவிலேயே ஐந்தரை நீளம் கொண்ட புடைவைகளே முன்பு தயாரிக்கப்பட்டன.

பின்னர் மிக ஏழை தறிக்காரர்கள் முழுக்க முழுக்க புடைவை தயாரிக்கும் சக்தி இல்லாத காரணத்தால் மிகப் பெரிய பணக்காரர்களாக இருந்த தனிநபர்கள் இவர்கள் 'மகாஜன்' என்று அழைக்கப்படுவார்கள். இவர் களுக்குக் கீழே அடிமை ஆட்களாக இருந்து புடைவைகளின் தரத்தை எண்ணிக் கையைப் பெருக்கினார்கள். இந்த நிலைமை 1970 வரை இருந்தது. பின்னர் நிலைமை மிகவும் முன்னேறி சூழ்நிலையே மாறி விட்டது.


அரசு ''தன்துஜ்'' தன்துஸ்ரீ, மன்ஜுஷா போன்ற கூட்டுறவு அமைப்புக்களை உண்டாக்கி ஏழை தறிக்காரர்களுக்கு பண உதவி, பொருள் உதவி போன்று பல உதவிகளையும் செய்து இவர்களது நிலைமையை வெகுவாக சீராக்கியது. டெலிவிஷன், ரேடியோ, கண்காட்சி முதலியவற்றின் மூலம் பெரும் அளவில் புடவைகளைப் பற்றி மிகப் பெரிய பிரசாரம் தொடர்ந்து செய்து வந்ததன் காரணமாக இன்று பாரத்தின் மூலை முடுக்குகளிலும் இந்த மாநிலத்தில் தயாராகும் புடைவைகள் பற்றி எல்லாவிதமான மக்களுக்கும் தெரியும்.

முன்பு ஐந்தரை கெஜமே தயாரித்து வந்தவர்கள் இன்று அநேகமாக பெரும் அளவில் ஆறு கெஜம் புடவைகள் தயாரிக்கிறார்கள்.

தனியாக்காளி, பேகம்பூரி, சாந்திபூரி போன்ற புடைவைகள் 60 X 40, 80 X 100 என்ற நூல் இழைக் கணக்கை (yarn counts) கொண்டவை இவை விலை மலிவு. இவை அதிக விலை கொண்ட டாங்காயில், டாக் காய் போன்ற புடைவைகளைப் போலவே இருக்கும். ஆனால் நூலிழை கணக்கு வேறு பாடும். இப் புடைவைகளைப் பற்றி அறிந்த வர்கள் சட்டென்று பார்த்தவுடனே கண்டு கொள்வார்கள்.

டெலிவிஷன், ரேடியோ மூலமாக மட்டுமல்லாமல் பல புடைவை வியாபாரிகள் புடைவைகளை மூட்டைகளாகக் கட்டி தலையில் வைத்து வீடு வீடாகத் தெருத் தெருவாக சென்று விற்று மக்களுக்கிடையில் இதனைப் பிரபலப்படுத்தினார்கள். ஒரு காலத்தில் இப்படி விற்றவர்களே இன்று மிகப் பெரிய கடைகள் வைத்து பிரபலமாகிப் பணத்தில் புரளுகிறார்கள்.

டாங்காயில், டாக்கா போன்ற நகரங்கள் இன்றைய பங்களாதேஷில் இருப்பவை. வங்காளப் பிரிவினைக்குப் பிறகு இந்த ஊர்களில் இருந்த தறிக்காரர்கள், வியாபாரிகள், மிகத் திறமை வாய்ந்தவர்கள், பங்களாதேஷை விட்டு இன்றைய மேற்கு வங்காளத்துக்கு வந்து நதியா, பீர்பும் போன்ற மகாணங்களில் வந்து தங்கி மிகப் பெரிய அளவில் புடைவைகளைத் தயாரிக்கிறார்கள்.




இன்று புலியா என்னும் இடத்திலும், நதியா மாகாணத்திலும் தயாராகும் டாங்காயில் புடைவைகள் மிகத் தரமானவை. சாந்திபூரி, பேகம் பூரி போன்றவை தரத்தில் குறைந்தவை.

இம் மாதிரி பங்களாதேஷிலிருந்து வந்து இன்றைய கல்கத்தாவின் 'படாபஜார்' என்னும் மிகப் பெரிய கடைப் பகுதியில் தங்கி பெங்கால் காட்டன் புடைவை வியாபாரத்தை மிகப் பெரிய அளவில் விரிவுப்படுத்தியவர்களுள் ராதே ஷ்யாம் மோகன்சந்த் நானி கோபால் பஸாக் என்பவர் முக்கியமானவர்.

இவருடைய வம்சத்தினர் பல கிளைகளாகப் பிரிந்து மிகப் பெரிய கடைகள் வைத்திருக்கிறார்கள். இவர்களுள் 'நானி கோபால் பஸாக்' என்பவர் தமது கடையிலிருந்து பம்பாயில் உள்ள மிகப் பிரபலமான சினிமா நடிகைகளுக்கும், வங்காளத்துப் பிரபல நடிகைகளுக்கும், வெளிநாடுகளுக்கும், நமது முந்தைய பிரதம மந்திரி இந்திரா காந்தி அவர்களுக்கும் புடைவைகளைத் தமது கடையிலிருந்து சப்ளை செய்திருப்பதாகச் சொல்கிறார்.

டாங்காயில் என்னும் வகை எப்போதுமே 100 X 100 நூலிழை கணக்கைக் கொண்டது. இவை மெல்லிதாக தரமாக இருக்கும்.





இந்த டாங்காயில் புடைவையில், சுத்த பருத்தி, பருத்தி ஸில்க் கலந்த வகை, பருத்தி ராஸில்க் (raw silk) கலந்த வகை, பருத்தி - பாலியெஸ்டர் கலந்த வகை என்று பல வகைகள் இன்று தயார் செய்யப்படுகிறது.

டாங்காயில் புடைவைகளுக்கு மற்றப் புடைவைகளை விட மதிப்பு அதிகம். முன்பு, குறிப்பிட்ட கன்வென்ஷனல் டிசைன்களில் மட்டுமே இந்த வகைப் புடைவைகள் தயாரிக்கப்பட்டு வந்தன. இன்று பலவிதமான டிசைன்களும் எடுத்துக் கொள்ளப்படுகின்றன. மக்களிடையே போட்டிகள் வைத்து புதுப்புது டிசைன்கள் தயாரிக்கிறார்கள்.

பாரதத்தின் பல பாகங்களின் புடைவைகளிலுள்ள டிசைன்களை வங்காளத்துப் பழங் காலத்து டிசைன்களோடு கலந்து, புது மாதிரியான டிசைன்களை உருவாக்கியிருக்கிறார்கள். இவை இன்று மக்களிடையில் நல்ல வரவேற்பைப் பெற்றிருக்கின்றன.

டாங்காயில் காட்டன் புடைவைகளில் உடல் பாகம் கையினாலும், பார்டர்கள் மெஷின்களிலும் செய்கிறார்கள். ஒரு தறிக்குப் பக்கத்திலேயே கைத்தறியும் மெஷினும் இணைத்து வேலை செய்கிறார்கள்.

இவற்றில் பல வகை உண்டு. ரிப்பன் பார்டர் போன்று ப்ளெயின் பார்டர், உடலில் எந்தவிதமான பூ வேலையும் செய்யப்படாத பார்டர் புடவைகளுக்கு 'மாத்தா பித்தா பாட்' என்று பெயர். உடலில் சிறு கோடுகள், பூக்கள், தறியிலேயே நெய்து, பார்டர் சிறியதாக அமைந்த புடைவைகளும் உண்டு.

> சுவாமி சன்னிதிக்குப் போடும்படியாகக் கோலம் (ஸ்டிக்கர்) வாங்கிக் கொடுக்கலாமே. தெய்விக விழாவான நவராத்திரிக்குத் தெய்வத்தைத் தொழும் போதெல்லாம் உங்கள் நினைவு வரும். பிரார்த்தனையின் பலன் உங்களுக்கும் உண்டே! மற்றபடி ரவிக்கைத் துணி கொடுத்தால் நாம் கொடுப்பதை அவர்களே அணிவ தில்லை. இடப்பெயர்ச்சி ஆகும். எனவே, நம் நினைவுடன், தெய்விகப் பொருத்தம் இருக்கும்படி இப்படிக் கொடுக்கலாமே!
>
> - ஸரோஜா ரங்கராஜன்



இவை, நல்ல வெள்ளை பழுப்புக் கலர் மற்றும் பல வண்ணங்களில் கிடைக்கும்.

இரண்டாவது வகை, ''டாங்காயில் டாக்காய்'' என்பது. இதில் சிறு கோடுகளாக இல்லாமல், பெரிய பூக்கள், இலைகள் உருவங்கள், உடல், தலைப்பு பார்டர் எல்லா இடங்களில் அமைத்து முழுக்க முழுக்கக் கையினாலேயே நெய்யப்படுகிறது. இதன் விலை அதிகம்.

பார்டர்களில் நூல் வேலைப்பாடு, ஜரிகை வேலைப்பாடு இரண்டும் உண்டு. இரண்டையும் கலந்தும் மிக அழகிய வேலைப்பாடுகள் கொண்ட புடைவைகளும் தயாரிக்கப்படுகின்றன. இம்மாதிரி பார்டர்களுக்கு ஆர்ட் ஸில்க் நூலிழைகள் பங்களூரிலிருந்து தருவிக்கப்படுகின்றன. நூலிழை, ஜரிகை இழை இவற்றை வைத்து பார்டர்களை தயாரிக்க 'Zacard' என்ற மெஷினை உபயோகப்படுத்துகிறார்கள்.

தற்போது இவ்வகை பார்டர்கள் மிகப் பிரபலமாகி வருகின்றன. இவை பார்ட்டிகளுக்கு, திருமணங்களுக்கு உடுத்திச் செல்ல உகந்தவை.

இந்த ''டாங்காயில் டாக்கா'' என்னும் வகையுடன் raw silk இழைகளும் சேர்க்கப்பட்டு, புதிய வகை மிக மிக அழகான உயர் தர புடைவைகளை உருவாக்குகிறார்கள். பெரிய அளவில் off-white புடைவைகளையே தறிபோடுபவர்கள் விரும்பி உருவாக்குகிறார்கள்.

இதில் நூல் இழையை ''ப்ளீச்'' செய்வதில்லை. நூல் இழைகளை தறியில் ஒழுங்கு படுத்தி அமைத்துக் கொண்டு, உடல் பாகத்தில், பார்டரில் கையினாலேயே, நூல், ஜரிகை ஊசியில் கோர்த்து இழைத்து இழைத்து உருவாக்குகிறார்கள். இதில் சிறு பூ, இலை, மற்றும் சிறு உருவங்களோடு, மிகப் பெரிய ''கீதோபதேசம்'', ராமாயணக்



நில்லுங்கள்!


கிஸான் ஜாம்களிலிருந்து
உங்களைத் தூண்டும்
ஒரு சலுகை!
ரூ. 3 தள்ளுபடி*
எல்லா 500 கி. கிஸான் ஜாம்களுக்கும்
Rs. 3
Kissan
MIXED FRU
இப்போது ஒவ்வொரு 500 கி. பாட்டிலுக்கும் ரூ 3/- சேமிப்பு கிடைக்கிறது
விரைந்திடுங்கள்: இந்த சலுகை சரக்கு உள்ளவரையே
உங்கள் குடும்பத்துக்கு மிகவும் பிடித்தமான சுவைகளை கிஸான் வரிசையிலிருந்து தேர்ந்தெடுங்கள்: • மிக்ஸட் ஃப்ரூட் • பைனாப்பிள் • கோவா ஜெல்லி • மேங்கோ • ஆப்பிள் • ஆரஞ்சு மார்மலேட் • ஸ்ட்ராபெரி.
* தற்போதைய MRP; விலை - ரூ.25.75
Kissan
JAMS
கனிரசம் இது தனிரசம்
THE UB GROUP
Chaitra-K-327/92-Tam.

காட்சிகளை கையினாலேயே உருவாக்கு கிறார்கள். இவை மெல்லிய புடைவைகளாக இருப்பதால் சிறு வயதினர், யுவதிகள் அணியத் தகுதி வாய்ந்தவை. இவை 950 ரூபாயிலிருந்து 3000 ரூபாய் வரை விலையில் கிடைக்கும். பார்க்க மிக அழகானவை.

'டாங்காயில் ஸில்க்' என்னும் வகையில், பட்டு நூல் இழைகள் பங்களூரிலிருந்து தருவிக்கப்பட்டன. இன்று இது விலை அதிகமாக இருப்பதால், வேறு இடங்களிலிருந்து தருவிக்கிறார்கள். மிகவும் உயர்ந்த, ஒரிஜினல் பட்டு நூலிழைகளிலிருந்து தயாரிக்கப்படும் பட்டுப் புடைவைகள், காஞ்சீபுரம் பட்டுப் புடைவைகளை ஒத்து இருக்கும். இவற்றிற்கு 'ப்யூர் சுத்தான் டாக்காய்' என்று பெயர். இவை விலை ரூ 2000க்கு மேல்.

இதிலேயே ப்யூர் ஸில்க்குடன், மிகச் சிறந்த வகை பாலியெஸ்டர் நூலிழைகளைக் கலந்து உருவாக்கும் புடைவைகள் 'இம்ப்யூர் சுத்தான்' எனப்படும். இவை விலை குறைவு. இந்த வகைப் புடவையின் சிறப்பு இதன் பார்டர்தான். அழகிய உருவங்கள் அமைந்த பார்டர்கள் மிகத் திறமையான தறிக்காரர்களால் தயாரிக்கப்படுகின்றன. இவை கையாலேயே எம்ப்ராய்டரி வேலைகள் செய்யப்படுகின்றன. இதற்கு வேலை செய்ய கூலி அதிகம். இந்த வகை உயர்ந்த அதிக வேலைப்பாடுகள் கொண்ட புடைவைகளைத் தயாரிக்கும் திறமைவாய்ந்தவர்களை கைவிரல் விட்டு எண்ணி விடலாம். அதிகம் பேர்கள் இல்லை. இதனால் இதைத் தயாரித்து விற்பவர்கள் மிகக் குறைந்த பேர்கள்தான்.



இந்த டாங்காயில் புடைவைகளை, 'டாங்காயில் Fold' அதாவது ஒரு குறிப்பிட்ட வகை 'மடிப்பு' என்ற முறையில் மடிக்கிறார்கள். பொதுவாக பாரதத்தின் எந்தப் பகுதியிலும் இத்தகைய மடிப்பு இல்லை. தனியாக்காளி, மற்றும் சில வகைப் புடைவைகளை Book Fold என்னும் வகை மடிப்பு உடையதாகச் செய்கிறார்கள். நம்முடைய காஞ்சீபுரம், மற்றும் புடவைகள் Book Fold மடிப்புக் கொண்டவைதான்.

டாங்காயில் புடைவைகளை துவைத்து வெளுத்து, கஞ்சி போட்டு இஸ்திரி போட்ட பிறகும் இவை இந்த ''டாங்காயில் மடிப்பு'' கொண்டதாகவே இருக்க வேண்டும்.

ஒரு புடவை நெய்ய மூன்றரை ''மோரா'' என்னும் அளவு கொண்ட நூல்கண்டுகள் வேண்டும்.

''தனியாக்காளி'' காட்டன் புடைவைகள் மட்டுமல்லாமல், காட்டன் வேஷ்டிகளும் தயாரிக்கப்படுகின்றன. இது ஒருவித வெள்ளைப் புடைவை போலிருக்கும். இதற்கு பார்டர் உண்டு. இது ''ஸ்கர்ட் பார்டர்'' எனப்படும். இந்த வகை வேஷ்டியை ஆண்கள் முக்கியமாகக் கல்யாணங்களில் அணிகிறார்கள்.

''டாங்காயில் டஸ்ஸார் காட்டன்'' வேஷ்டிகளும் உண்டு. இவை இன்னும் தரமானவை. இவையும் வெள்ளை புடைவைகளைப் போலிருக்கும். இது 6 கெஜம் முழுக்க இருக்கும். ஆண்கள் சிறப்பு விருந்துகளில், கல்யாணங்களில் அணிவார்கள்.

புடைவை தயாரிப்பவர்கள் பலர் இனக் கூலிப் பெற்று வேலை செய்கிறார்கள். ஒரு புடைவைக்கு நூலிழை ஒழுங்கு பண்ணி வேலை ஆரம்பிக்க 4, 5 நாட்கள் ஆகும். புடைவையின் தரத்துக்கும், வேலைப்பாட்டுக்கும் தகுந்தாற்போல் கூலி கிடைக்கும். ஒரு மாதத்துக்கு ஒருவர் பத்துப் பதினைந்து புடைவைகள் நெய்தால் பெரிய விஷயம்.

எவர்சில்வர் பாத்திரம் வாங்கும்போது உள்ள ஸ்டிக்கரை எடுத்து விட்டாலும் அந்த இடம் பசையாக இருக்கும். அது போகச் சுலபமான வழி. பாத்திரத்தைச் சிறிது நேரம் அடுப்பில் காட்டினால் ஸ்டிக்கரோடு சேர்ந்து வந்துவிடும். ஸ்டிக்கர் இருந்த இடம் தெரியாது.

- குமுதவல்லி





மைதிலீஸ் ஸ்கூல் ஆப் பியூட்டி கல்சர்
ஹேர் டிரஸ்ஸிங்

மைதிலீஸ் லேடீஸ் ஹெர்பல் பியூட்டி கிளினிக்
எண். 14, ராம் பஜார், (பனகல் பார்க் எதிரில்)
தி.நகர், சென்னை - 600 017. P.P. No. 882863

Ms. B. MYTHILI

TEACHERS TRAINING DONE BY IVETE
BEAUTY CENTRE (SOUTH AMERICA)
பயிற்சி துவங்கும் நாள் :
(SUNDAY WORKING DAY)

(பள்ளி கல்லூரி மாணவிகளும் விடுமுறை நாட்களிலும் இப்பயிற்சியை மேற்கொள்ளலாம்.)

அ) அழகு நிலையம் துவங்க தேவையான பயிற்சிகள் :

1. அழகு கலை 2. சிகையலங்காரம் 3. முடிவெட்டுதல் கட்டணம் ரூ. 4000/-
காலம் 1 மாதம் (60 வகுப்புகள்)

ஆ) அழகு நிலைய சொந்தக்காரர்கள், அழகு கலை நிபுணர்களுக்கு அட்வான்ஸ் கோர்ஸ் - 2 நாட்களுக்கு மட்டும்.

1. எலெக்ட்ராலிஸிஸ் - ரூ. 1800/-
2. நறுமண சிகிச்சை முறை இளைத்தல் போன்ற சிகிச்சைகள் (Aromatherapy) ரூ. 1500/-
3. வலியின்றி காது குத்துதல் - ரூ. 1000/-
4. Natural Pigment Implant - ரூ. 2500/-
5. வயது வரம்பு - 14 வயதிற்கு மேல்
6. ஆறு மாணவிகள் மட்டுமே அனுமதிக்கப்படுவர்
7. எங்களது மாணவிகளே தமிழகமெங்கும் மற்றும் வெளிநாட்டிலும் அழகு நிலையம் துவங்கி பெருமையுடன் நடத்துகின்றார்கள். வகுப்புகள் நடத்துவதில் இது ஆறாவது வருடம். மாணவிகள் பாடங்களை செய்முறை பயிற்சியால் நன்கு விளக்குகின்றோம்.
8. வீடியோ மூலமும் வகுப்புகள் நடைபெறும்.
9. COSMETICS Preparations (35 products) ரூ. 2500/-

அழகு நிலையத்தில் கையாளப்படும் சிகிச்சைகள் :

1. ஹெர்பல் பிளீச்சிங், முகப் பருவை நீக்குதல், உடலில் கருப்பு நிறத்தை மாறச் செய்தல், ஹெர்பல் பேஷியல், புருவம் சீர் செய்தல், வாக்ஸிங், பெடிக்யூர், மெனிக்யூர் செய்தல்.
2. ஹெர்பல் பேஷியல், ஹெர்போ பேஷியல், அரோமா பேஷியல் எங்களது சிறப்பானவை.
3. மேல் நாட்டு முறைப்படி முடிவெட்டுதல், முடிகொட்டுதல், பொடுகு, முடிக்கு சாயமிடுதல், போன்ற சிகிச்சைகள் செய்தல்.
4. மெஷின்கள் இல்லாமல் இயற்கை முறையில் உடம்பை இளைக்க வைத்தல், தேவையில்லாத சதைகள் குறைத்தல், வலிகளை நீக்குதல்.
5. Natural Pigment Implant என்ற முறையில் புருவங்களை பெரிதாகவும், அழகு மச்சங்களும் வைக்கப்படும்.
6. எலெக்ட்ராலிஸிஸ் முறைப்படி முகத்தில் உள்ள தேவையில்லாத முடிகளை நிரந்தரமாக நீக்குகின்றோம்.
7. திருமணங்களுக்கு வட நாட்டு முறைப்படி கொண்டைகள் முகங்கள் புது முறையாக மேக்கப் செய்கிறோம்.
8. மேல் நாட்டு முறைப்படி குழந்தைகள் பெரியவர்களுக்கு வலியின்றி காது குத்துகின்றோம்.
9. தமிழகம் எங்கிலும் துபாய், சிங்கப்பூர், மலேஷியா போன்ற வெளி நாடுகளிலும் எங்களது திறமை மாணவிகளே மிகுந்த லாபத்துடன் அழகு நிலையம் நடத்துகின்றார்கள். ஆங்கிலம், தமிழ், தெலுங்கு மொழிகளில் பாடங்கள் நடத்தப்படும்.
10. ஆறு ஆண்டுகளாக செய்முறை பயிற்சியின் மூலம் நிறைய மாணவிகள் பலரை அமைத்துச் சாதனை படைத்த எங்களது அழகு நிலைய இயக்குனர் திருமதி மைதிலி அவர்களின் ஆலோசனை பெற முன் பதிவின் பேரில் மட்டுமே சந்தித்து சிகிச்சை பெற முடியும்.
11. வெளி நாட்டு மாணவிகளும் சேர்த்துக் கொள்ளப்படும். தமிழகமெங்கும் உள்ளவர்கள் வந்து சிகிச்சைகளைப் பெறுமாறு அமைத்துள்ளது.

ஹாஸ்டல் வசதி பயிற்சி பெறும் மாணவிகளுக்கு உண்டு.

ஆண்களுக்கென்றும் தனி அழகு நிலையம் நடத்தி வருகிறோம். எங்களது

GENTS HERBAL BEAUTY CLINIC,

Shop No. 1, Basement No. 9 Hong Kong Complex,
Ramanathan Street, T.Nagar,
Madras - 600 017.
என்ற முகவரியில் இயங்கி வருகிறது. வரவேற்கிறோம்.



இந்த காட்டன் புடைவைகளில் ''ஜாம்தானி'' என்ற வகையும் உண்டு. இது டாங்காயில் ஜாம்தானி, டாக்காய் ஜாம்தானி என்று பல வகைகள் உண்டு. ''ஜாம்தானி'' என்றால் மிக அழகிய, நெருங்கிய, உயர்ந்த வேலைப்பாடு என்று பொருள். இவ்வகையும் பங்களா தேஷிலிருந்துதான் வருகிறது.

அந்தக் காலத்தில் இத்தகைய உயர்ந்த, அழகிய வேலைப்பாடுடைய புடைவைகள் பெரிய ஜமீன்தார்கள் வீட்டுப் பெண்மணிகளுக்காக ஸ்பெஷலாக ஆர்டர் கொடுத்து தயாரிக்கப்பட்டன. மிக அதிக விலையுள்ள உயர்ந்த வேலைப்பாடுடைய புடைவைகள் சிறப்பு விருந்துகளில், திருமணக் காலங்களில் பெண்களால் அணியப்பட்டன.

பலமுறை பெங்கால் காட்டன் புடைவையைக் கட்டிக் கொண்டு, பிறகு இதனை நன்றாகத் துவைத்து வெய்யிலில் உலர்த்தும் போது இரண்டு உருளைகளை உபயோகப் படுத்தி புடைவைகளைத் தறி போடும் போது இழுத்துக் கட்டி ஒழுங்குபடுத்தி வைப்பது போல,இந்த உருளைகளில் ஒன்றில் ஒரு பக்கத்தை நுனியை லேசாக மடித்துச் சுருட்டி, மற்றொரு நுனியை மற்றொரு உருளையில் லேசாக மடித்துச் சுருட்டி மிகவும் டைட்டாக இழுத்துக் கட்டி விட்டு, இந்தப் புடைவைகள் காய்ந்தவுடன், ஆரோரூட் கஞ்சி மாவில் கஞ்சி தயாரித்து அதனை இந்தப் புடைவையின் முழு நீளத்துக்கும் ஒரே மாதிரி ஒரு இண்டு இடுக்கு விடாமல் ஸ்ப்ரே செய்கிறார்கள். நன்றாகக் காய்ந்தவுடன் இவை ஸ்டிப்பாகச் சுத்தமாகி விடுகின்றன.

பின்னர் இஸ்திரி செய்து டாங்காயில் ஃபோல்ட், தனியாக்காளி மடிப்பு செய்து விட்டால் புதிய புடைவை போல ஆகி விடும். இங்கு கல்கத்தாவில் பல இடங்களில் இது போலச் செய்து கொடுக்கிறார்கள். இதற்கு ரூ 5 சார்ஜ் செய்கிறார்கள்.

இந்தக் காட்டன் புடைவைகளைத் தவிர டஸ்ஸார் புடைவைகள் விஷ்ணு பூரிலும், பாலுசேரி புடவைகள் பங்கூராவிலும் தயாரிக்கிறார்கள். இதில் காட்டன் புடைவைகள் கிடைப்பதில்லை. இவை விலை அதிகம். பல இதிகாச, புராணக் காட்சிகள் நெய்யப்படும்.

இப்போது புதிதாக ப்ளெயின் பெங்கால் காட்டன் புடைவைகளில் ப்ளாக் பிரிண்டிங் செய்து விற்கிறார்கள். இவை அழகாக இருக்கின்றன. நிதானமான விலைகளில் கிடைக்கின்றன.

இங்கு பொதுவாக கடைகளில், ப்ளாட்பாரத்தில் மற்றும் பல வீடுகளிலும் புடைவைகள் விற்பனை செய்கிறார்கள். ப்ளாட்பாரத்துக் கடைகளில் புடைவையைப் பற்றி, விலையைப் பற்றிச் சரியாகத் தெரியாவிட்டால் ஏமாந்து போகும் வாய்ப்பு உண்டு. 5½ கெஜம் புடைவையை ''ஏகோரா ஹாத்'' (பதினோரு கையளவு) 6 கெஜம் புடைவையை ''பாரோ ஹாத்'' (பன்னிரண்டு கையளவு) என்று கூறுகிறார்கள்.

இன்று இந்த பெங்கால் காட்டன் புடைவைத் தயாரிக்கும் தொழில் மிக விரிவடைந்து பிரபலமாகி வருகிறது. முன்பு, டாக்கா மஸ்லின் என்று உலகப் பிரசித்தமான வகை இன்று முற்றிலும் தயாராவதில்லை. முன்பு தயாரான 21 கெஜம் மஸ்லின் துணி 21 கிராம் எடைதான் இருக்கும்.

40 கெஜம் ப்யூர் மஸ்லின் புடைவைத் துணி ஒரு சிறிய மோதிரத்தின் வளையத்துக்குள் அனாயசமாக புகுந்து வெளிவரும். இத்தகைய சுத்தமான மஸ்லின் தயாரிக்கும் திறமை, அறிவு பெற்ற துணிக்காரர்கள் இன்று இல்லை. பிரிட்டிஷ்காரர்கள் வங்காளப் பிரிவினையின் போது, இவர்களுடன் மஸ்லின் வியாபாரத்தில் போட்டி போட முடியாததால் இவர்களில் பலரின் கட்டை விரலை வெட்டியெறிந்து விட்டதாகச் சொல்லுகிறார்கள்.

– புவனா நடராஜன்

கொலுவில் புல்தரை அமைக்க வேண்டுமானால் பச்சைநிற ஒயர்களைச் சிறிது சிறிதாகக் கத்திரித்துத் தரையில் மணல் பரப்பி அதன் நடுவே இதை நிறுத்தினால் பார்க்க மிக அழகாக இருக்கும்.

– ஆர். ஜெயலட்சுமி



அடுத்த நவராத்திரிக்குள்

‘கேயெஸ்’



‘ஆறுமோ ஆவல், ஆறு முகனை நேரில் காணாது ஆறுமோ ஆவல்....’

என கனத்த குரலில் சுதா உரக்கக் கூவி (மன்னிக்கவும்!) பாட நரேனின் காது அடைத்தது. அந்த ஆறுமுகனே இறங்கி வந்து ‘போதும் சுதா, இதோ வந்து விட்டேன். நீ போகச் சொல்லும் வரை எங்கும் போக மாட்டேன். தயவு செய்து இனிமேல் என்னை இப்படி மிரட்டாதே’ என கெஞ்சும் காலம் கூடிய விரைவில் வரும் எனத் தோன்றியது. இருக்கட்டும் என்ன நாலு நாளாக சுதா தினமும் காலையில் இப்படி அகர சாதகம் செய்கிறாள்? என்ன விஷயம். நரேனின் மூளை கறுகறுப்பாய் சிந்தித்தது. அடடா, இன்னும் 10 நாளில் நவராத்திரி ஆரம்பம். அதான்.

"என்ன சுதா, நவராத்திரிக்குப் பலமா பயிற்சியா?"

"ஆமாங்க. கொலு வைச்சுட்டா போதுமே. எல்லார் வீட்டிலேயும் சுதா பாடு, பாடுன்னு என்னை விடமாட்டாங்களே. அதனாலதான் புதுபாட்டா நாலு பாட்டு ப்ராக்டிஸ் பண்ணிக்கறேன்."

"புதுபாட்டா. இந்தப் பாட்டு நான் சின்ன வயசிலேர்ந்து அடிக்கடி கேட்ட மாதிரி இருக்கே."

"இப்ப பழைய மாடல், பழைய ஸ்டைல், பழைய பாட்டு தான் ஃபேஷன். ஒண்ணும் பேசாதீங்க. நான் பாடிட்டு ஆபீஸ் கிளம்பணும்.."


மாலை அலுவலகத்திலிருந்து திரும்பிய நரேன் தன் பீரோ பாதி காலியாய் இருப்பதைப் பார்த்து துணுக்குற்றான்.

"சுதா. என் ஆறு வெள்ளை வேஷ்டியையும் காணும்."

"நான்தான் வண்ணானுக்குப் போட்டிருக்கேன். கொலுப் படில போடற துணி பளிச்சுன்னு இருக்க வேண்டாமோ!"

"பாண்ட்ங்க கூட நிறைய குறையறதே!"

"நவராத்திரியின் போது நிறைய சுமங்கலிகளுக்கு ஏதாவது நல்ல எவர்சில்வர் பொருள் கொடுக்கணும், டபரா இப்படி கொடுக்கணும். அதான் உங்க பழைய



பாண்ட், ஷர்டையெல்லாம் போட்டுட்டு பாத்திரம் வாங்கிட்டேன்."

நரேனுக்கு இது ஒன்றும் புரியவில்லை. இதை விட எத்தனையோ பட்டாயிற்று. நவராத்திரி நாட்களில் நரேன் வீட்டில் கிட்டத்தட்ட 5 நாட்களுக்கு இரவுச் சமையல் கிடையாது. சுதா மற்றவர்கள் வீட்டில் வாங்கி வரும் சுண்டலும், மோர் சாதமுமே. நவராத்திரிக்குள் சுதாவின் பட்டுப் புடைவைகள் மெருகு கூட்டப் படும். சட்டைகள் பழுது பார்க்கப்படும். அழைப்பாளிகளின் பட்டியல் தயாரிக்கப் படும். சுதா வேலைக்குச் செல்பவள். ஆனாலும் நாள் கிழமையை விட்டுக் கொடுப்பவளில்லை.

"போன தடவை வரைக்கும் அம்மா நம்ம கூட இருந்தாங்க. அதனால இதெல்லாம் கொண்டாட வசதியா இருந்தது. இப்ப நாம இரண்டு பேர் மட்டும்தானே சுதா. சாஸ்திரத்திற்கு இரண்டு பொம்மையை சாமிகிட்ட வைச்சுடேன்."

"நல்லாயிருக்கு நீங்க பேசறது. பரம்பரை பரம்பரையாய் எங்க வீட்ல கொலு வைக்கறதைப் பார்த்து வளர்ந்தவ நான். திடீர்னு நிறுத்தினா மனசுக்குச் சரியாய் இருக்காது. மேலும் எங்கப்பா என் கல்யாணத்தின் போது எத்தனை பொம்மைகளை ஆசை ஆசையாய் தந்தாங்க. அவையெல்லாம் பரம்பரை சொத்துங்க. பொம்மையாவா இருக்கும். ஆளில் பெயிண்டும் தானுமா கோவில் விக்ரகம் மாதிரி இல்ல இருக்கும்." என சுதா தன் பிறந்த வீட்டின் பெருமையை லட்சத்து இருபத்தி நாலாயிரம் முறையாக சொல்ல நரேன் அடங்கினான்.

"உங்கப்பா வீட்டு லட்சணம் தெரியாதா? இரண்டு தேய்ந்த மரப்பாச்சி பொம்மை. முகமே தெரியாத நாலு மண் பொம்மை, சோழி, கொக்கு, வாத்து இதையெல்லாம் கொடுத்து, கூட இருபத்தைந்து ரூபாயும் கொடுத்து மனம் போல பொம்மை வாங்கிக்கோங்கோன்னு சொன்னாரே கருமி மன்னர்." எனச் சூடாக கேட்க நா துடித்தாலும் பின் விளைவுகளுக்கு அஞ்சி நரேன் பொறுத்தான்.

"என்னங்க. காலைல என்ன இப்படி மசமசன்னு தூக்கம். எழுந்திருங்க!"

"என்ன உமா, ஞாயிற்றுக்கிழமை மனுஷன் தூங்கினா தப்பா."

"என் நல்ல காலம். ஞாயிற்றுக் கிழமையில் மஹாளய அம்மாவாசை வந்தது. இல்லைன்னா உங்களுக்கு ஒரு நாள் வீவு வீணா போயிருக்கும். எழுந்து எனக்குக் கொஞ்சம் ஹெல்ப் பண்ணுங்க. வீடு சுத்தம் செய்யணும், வடை செய்யணும், பாயசம் செய்யணும். கொலுபடி கட்டணும், பொம்மை அடுக்கணும்" என சுதா அடுக்கிக் கொண்டே சென்றாள்.

நரேன் தன் தாயின் அருமையை எண்ணி ஏங்கினான். "அம்மா, நீ இருந்திருந்தா எனக்கு எவ்வளவு உதவி பண்ணியிருப்பே. வடைக்கு அரைச்சு கொடுத்திருப்பே, வீட்டை சுத்தம் பண்ணி கொலு அடுக்கியிருப்பே. அம்மா, ஏம்மா உனக்கு இந்த ஓர வஞ்சனை. என்னை இப்படி தவிக்க விட்டு விட்டு பாம்பேல இருக்கிற உன் பெரிய பையன் கிட்ட போயிட்டியே. காலைல பால் வாங்கறது காப்பி போடறது இப்படி எனக்கு எத்தனை வேலை."

"என்ன, பகல் கனவு."

"அம்மா ஞாபகம் வந்தது சுதா."

"எனக்குக் கூட காலைல இருந்து


> சுட்டை, சீடை செய்வதற்குத் தேங்காய்ப் பால் அல்லது சாதாரண பால் விட்டுச் செய்தால் கரகரப்பும், ருசியும் கூடும்.
>
> - பார்வதி



உங்கம்மா ஞாபகம்தாங்க. அவங்க இருந்தா எனக்கு யானை பலம்."

என்ன சொல்லுகிறாள் இவள். அம்மாவுக்குக் கொஞ்சம் கனத்த உடம்புன்னு கட்டிக் காண்பிக்கறாளோ?

"கொலு வைச்சா உங்கம்மாக்கு எத்தனை சந்தோஷம். வீட்டுக்கு வர்ரவங்களை 5 - 10 நிமிஷத்திலே அனுப்பவே மாட்டாங்க. நிதானமா ஒரு மணி நேரம் பேசி ஊர் கதை பூரா வாங்கிடுவாங்க. அலுக்காம பேசுவாங்க. அந்தக் காலத்து உடம்பு, ஊட்டச்சத்து. என்னைப் பாருங்க, ஹான்னு சோர்ந்துடறேன். இத்தனை வயசுக்கப்புறமும் யார் வீட்ல என்ன சண்டை, எத்தனை குழந்தைன்னு டாண் டாண்னு ஞாபகம் வைச்சுக்குவாங்க. வீட்டு வேலை தான் மறக்கவும் மறந்துடும். கையும் முடியாது. பாவம்," என வஞ்சப் புகழ்ச்சி அணியில் சுதா தொடர நரேன் குளிக்க ஓடினான்.



''ஏன் சுதா. நம்ம இரண்டு பேருக்காக வடை, பாயசம்னு எதுக்கு. சாமி இதை யெல்லாம் கேட்குதா. வெறும் தேங்காய்ப் பழம் வைக்க பூஜை பண்ணேன்.''

''நாளு, கிழமை, பண்டிகைன்னா நிறைக்க செய்யணும். நம்ம வயத்தைப் பத்தியே நினைக்கக் கூடாது. பக்தி இருக் கணும்.''

நரேன் க்ரெண்டரில் உளுந்தைக் கழுவிப் போட்டான்.

மணி இரண்டு. உண்ட களைப்பு நரேனின் கண்ணைச் சுழற்றி இழுத்தது.

''நல்லாயிருக்கு சாப்பிட்ட உடனே படுக்கறது.''

''கொஞ்ச நேரம் ரெஸ்ட் எடுத்து விட்டு, பொம்மை வைக்கலாமே.''

''அது சரி. அதுக்குள்ள எங்க அம்மா வீட்டுக்குப் போய் இந்த வடை, பாயசத்தை கொடுத்துட்டு வாங்க.''

''சீ, சீ... பெரியவங்களுக்குப் போய் இதையெல்லாமா கொடுப்பாங்க'' தப் பிக்க முயற்சித்தான் நரேன்.

''ஏதோ என்னால ஆனது. அவங்களை ஆசையா நாலு நாள் உட்கார வைக்க செய்ய முடியுதா. ஹ்ம். அது போகட்டும் வரும் போது அங்க என் அக்கா பொண்ணு செல்வி வந்திருக்காம். அதைக் கூட்டி வாங்க. சின்னக் குழந்தை நவராத்திரி போது நம்ம வீடு வரது அம்பாளே வர மாதிரி.''

'அம்பாளா அது. யானைக் குட்டி அல்லவா' என மனத்தில் பொருமிய நரேன் ஸ்கூட்டரை மனம் கொண்ட மட்டும் உதைத்தான்.

''செல்வி, செல்வி கண்ணு வா, வா, சித்தி வீட்டிற்கு வந்தியா'' என எட்டு வயதுக் குழந்தையைக் கொஞ்சித் தீர்த்தாள் சுதா.

மஞ்சள் கண ணாம்பு குழைத்து நலுங்கு மஞ்சள் கலந்து ஒவ்வொரு வருக்கும் பாத அலங்காரம் செய்து, பின் தாம்பூலம் கொடுக்கலாம். (நலுங்கு மஞ்சள் நல்ல ஆன்டிசெப்டிக் களிம்பு. அழகுக்கு அழகு).

- மாலதி



''சித்தப்பா இப்போ கொலு வைப்பாராம். நாம பார்ப்போமாம்' என மறை முகமாய் நரேனை வேலை வாங்கினாள்.

ஒரு சிறிய ஹால், பெட்ரூம், கிச்சன் என்றுள்ள இந்த இடத்தில் கொலு வைக்க சிறந்த ஞானம் வேண்டும். வீட்டு மேஜை, நாற்காலிகளை படியாக்கி அவற்றின் சுய ரூபத்தினை நயம் பட மறைத்து, தட்டு முட்டு சாமான்களை அதனடியில் தள்ளி சமையலறையைத் துணி கொண்டு மூடி, அன்றாட பொருட்களை ஓர் மூலையில் அடைத்து, சீரியல் விளக்குப் போட்டு அழகு பார்த்து அப்பப்பா நரேனின் முதுகு கெஞ்சியது. ஆயாசமாய் படுத்தவனிடம்,

''சித்தப்பா, சித்தப்பா. எல்லார் வீடு மாதிரி பார்க், தோட்டம் எல்லாம் செய் யணும்.''

''ம்...ம்...ம்..''

''சின்னப் பொண்ணு ஆசைப்படுது. நாளைக்கு ஆபீஸிலிருந்து வரும்போது பீச் மண் எடுத்து வாங்க.''

''ம்ம்ம்ம்''

மறுநாள் மாலை. பார்க், தோட்டம் தயாரானதில் ஹாலின் நெருக்கடி அதிக மாயிற்று. மீதி இடத்தில் ரங்கோலி என்ற பெயரில் சுதா வண்ணக் கலவையை அப்ப மீதி இடம் ஒற்றையடிப் பாதையாகியது.

''என்னங்க.''

''ம்ம்ம்ம்.''

''நம்ம செல்வி நவராத்திரி நேரத்தில வந்திருக்கு.''

''அவ எங்க வந்தா, நாமதானே கூட்டி வந்தோம்.''

''இருக்கட்டும். வந்த குழந்தைக்கு நாம ஏதாவது செய்ய வேண்டாமா!''

''அதான் அவளுக்காக ஸ்பெஷலா பார்க், தோட்டம் எல்லாம் போட்டிருக் கோமே.''

''விளையாடாதீங்க. ஒரு பாவாடை, சட்டை, கொலுக இப்படி சிம்ப்பிளா வாங்கிக் கொடுத்தா சித்தப்பா தந்தார்னு பெருமையா சொல்லுவா.''

''சரி, பார்ப்போம்.''

''நவராத்திரி வெள்ளிக்கிழமை நிறைய பேர் வீட்டுக்கு வருவாங்க. என் ஆபீஸ், க்ளப், அக்கம் பக்கம் எல்லாரையும் கூப் பிட்டிருக்கேன்.''

''கொலு வைச்சா கூப்பிடத்தானே செய்யணும்.''

''அன்னைக்கு நானும் பளிச்சின்னு புதுப் புடைவை கட்டிகிட்டா உங்களுக்கு சந்தோஷமா இருக்குமே.''

பணம் பழுக்கின்றது எனத் தெரிந்தும் நரேன் பூம் பூம் மாடானான்.



''உங்களுக்கு எந்த அலைச்சலும் வேண்டாம். நானே எல்லாம் வாங்கிடறேன். பணம் மட்டும் கொடுத்துடுங்க'' என முற்றுப் புள்ளி வைத்தாள் சுதா.

வியாழன் மாலை.

''இந்த உத்தியோகமே இடைஞ்சல் தான். எத்தனை பிடுங்கல். வீட்டில் இருக்கிற பொண்ணுங்க மாதிரி சுதந்திரமே இல்லை. உங்களுக்கு உதவ நான் வேலைக்குப் போவதால் எத்தனை அவஸ்தை பாருங்கள்.''

''என்ன ஆச்சு சுதா. அந்த மானேஜர் திட்டினானா.''

''இல்லை.''

''உன் பரண்ட் மங்களம் உன்னைக் காட்டிலும் உசத்தியா புடைவை வாங்கிட்டாளா.''

''இல்லை..''

''என்னதான் ஆச்சு.''

''நாளைக்கு எங்க ஆபீஸ்ல இன்ஸ்பெக்ஷன்.''

''அதனால என்ன.''

''நாளைக்கு எல்லாரையும் வீட்டிற்குக் கூப்பிட்டிருக்கேன். சுண்டல் செய்யணும். இன்னும் எத்தனையோ வேலை. நான் என்ன பண்ணுவேன். எங்கம்மாவும் ஊர்ல இல்லை.''

''அடடா என்ன செய்யறது. ஹூம். நான் வேணும்னா கணபதி விலாஸிலிருந்து 30 செட் பூரி, காப்பி ஆர்டர் செய்யவா?''

''அதெல்லாம் தப்பு. நீங்க எனக்கு ஒரு உதவி செய்வீங்களா?''

''உனக்கில்லாத உதவியா. சொல்லு சுதா.''

''நாளைக்கு நீங்க லீவு போட்டுடுங்க.''

''நானும் ஆபீஸில் வேலைதானே பார்க்கிறேன்.''

''இல்லைன்னு சொன்னேனா. அவசரத்துக்கு உதவாத லீவு எதுக்கு.''

''சரி. நான் லீவு போட்டுட்டு என்ன செய்யறது.''

''கொஞ்சம் தப்பா நினைக்காம சுண்டல் செய்து வைச்சுருங்க. செல்வி தாம்பூலத் தட்டெல்லாம் வைக்கட்டும். நான் ஆறு மணிக்கெல்லாம் ஓடி வந்துடறேன்.'' குழைந்தாள் சுதா.

''சுதா. எனக்கு சுண்டல் எல்லாம் செய்யத் தெரியாது. எங்கம்மா எனக்கு அதெல்லாம் சொல்லித் தரலை.''

''நீங்க எவ்வளவு நல்லா குழம்பு வைப்பீங்க. சுண்டல் அதை விட ஈஸிங்க. உட்காருங்க நான் சொல்லித் தரேன். பட்டாணியை முதல்ல ஊறப் போடணும். அப்புறம்....'' எனச் சுண்டல் செய்முறையை சுதா விவரித்தாள்.

இரவு முழுவதும் நரேனுக்குத் தூக்கம் வரவில்லை. 1 லிட்டர் பட்டாணிக்கு 3 லிட்டர் தண்ணியா. 3 லிட்டர் பட்டாணிக்கு 1 லிட்டர் தண்ணியா. ஏதேதோ குழம்பியது.

மறுநாள் காலை அலுவலகத்திற்கு சுதா பறந்து செல்ல நரேன் பட்டாணியை பய பக்தியாய் பார்த்தான். குக்கரில் போட்டான். அதிக நேரம் வேக வைக்கச் சொன்னாளே.. காத்திருந்தான். திடீரென தீய்ந்த வாசனை வர, பார்த்து அடுப்பை அணைத்தான். பாதி கருகிய நிலையில் பட்டாணியைப் பார்த்ததும் மனம் படபடத்தது.

''இப்போ என்ன செய்வது. எவ்வளவோ மார்டன் ஆகும் இந்தக் காலத்தில் கொலுவிற்கு ஒரு கூல் டிரிங்க் கொடுக்கக் கூடாதோ. மணி வேறு ஆகி விட்டதே!'' திடீரென நரேனுக்கு ஞானோதயம் தோன்றியது. தினமும் அலுவலகத்திலிருந்து வரும் வழியில் தள்ளுவண்டியில் கடச் கட ஆவிபொங்க கமகம மணத்துடன் வியாபாரம் செய்யும் சுண்டல் வண்டி ஞாபகத்திற்கு வந்தது. ஸ்கூட்டரில் ஓடினான். இதோ, நல்ல காலம் வண்டிக்காரனும் இருக்கான்.

''ஏம்ப்பா, சுண்டல் நல்லா இருக்குமா.''

''நல்லா இருக்குமாவா. இஞ்சி பூண்டு, வெங்காயம் எல்லாம் அரை[illegible] விட்டு ஸ்பெஷலா பண்ணினது சா[illegible]. தக்காளியும் கொத்தமல்லி இலையும் வேற யார் போடுவாங்க. இந்த ஏரியாவில் நம்பளை விட்டா வேறு யார் கிட்டேயும் இவ்வளவு கும்பல் பார்த்திருக்கியா நீ.''

சிறிய குழந்தைகளுக்குச் சின்ன விளையாட்டுச் சாமான்கள் கொடுக்கலாம். ரூ. 2, 3 விலையில் சின்னக் கம்ப்யூட்டர், டெலிபோன் போன்ற பிளாஸ்டிக் பொருட்கள் கிடைக்கும். பெறுகிற குழந்தைகளின் சந்தோஷத்தைப் பார்க்க வேண்டுமே!

– மாலதி





''சரி இதை எப்படி செய்யணும்.''

வண்டிக்காரன் நரேனை ஏற இறங்க பார்த்தான். 'பாண்ட், சட்டை போட்டுகினு ஸ்கூட்டர்ல வர்ரே. உனக்கேன் இதெல்லாம்? எங்கத் தொழில்லேயும் போட்டியா. நவுருப்பா. வேலை நேரத்தில வந்துட்டான்.''

''கோவிக்கக்காதே. 30 கண்டல் கொடு.''

''சரி, சரி. மேலே பர்சை வெங்காயம்



தூவவா.''

''ஏதோ செய்.''

கண்டல் ஒப்பேறிய நிம்மதியில் வீடு திரும்பினான். மாலை வீடு வந்த சுதாவின் மூக்கில் மசாலா நெடி வீசியது.

''எங்க, மசால் வடை செய்துட்டீங்களா.''

''மசாலா கண்டல், கம்மா கமகமன்னு இருக்கு பார்.''

பட்டாணியும், குழம்புமாய் இருந்த கண்டலைப் பார்த்த சுதா ''ஐய்யய்ய. இந்த மாதிரியெல்லாம் கொலுவில கொடுக்க மாட்டாங்க.''

''கொடுக்கக் கூடாதுன்னு எந்த சாஸ்திரத்தில இருக்கு. புதுமையா செய்தேன்னு சொல்லு. அப்புறம் பாரேன்.''

சுதாவிற்கு வேறு வழியில்லை. முதன் முறையாய் நரேனின் பேச்சைக் கேட்டாள். தொன்னையில் கண்டலை ஊற்றி வந்தவர்களுக்குப் பத்திரமாய் கொடுக்க... குழந்தைகள் பாராட்ட, மற்றவர்கள் புதுமை என்ற பெயரில் இதனை வியக்க எப்படியோ அன்றைய கதை ஒப்பேறியது.

இரவு உண்மையை உணர்ந்த சுதா ''நீங்க ரொம்ப புத்திசாலிதான். ஆனா அடுத்த கொலுவுக்குள்ள....''

''அடுத்த நவராத்திரக்குள்ள!''

''கண்டல் செய்ய கண்டிப்பாய் கத்துக் கணும்'' என முடித்தாள் சுதா.

இந்த இதழின் பக்கங்களின் மேலே கட்டம் கட்டிப் பிரசுரமாகியுள்ள கொலு பொம்மைகளைப் புகைப்படங்கள் எடுத்தவர்: ஓம். சுப்பிரமணியன்.

ஜகதலப்ரதாபி!

இந்நாட்களில் பெண்களிடையே மிகவும் பிரபலமாகி வருகிறது விதவிதமான புடைவைகளை (பட்டுப் புடைவைகள் முதல் சாதாரண வாயில் புடைவைகள் வரை) மொத்த வியாபாரம் செய்யுமிடங்களில் வாங்கி வீட்டிலிருந்தே தவணை முறையில் விற்று (லாபம்?!) சம்பாதிப்பது. இது சம்பந்தமாகச் சமீபத்தில் எனக்கு நேர்ந்த ஒரு அனுபவம், மற்ற பெண்களுக்கும் எச்சரிக்கையாக இருக்க உதவுமே என எழுதுகிறேன்.

சென்ற மாதம் ஒரு நாள் என் வீடு தேடி வந்தாள் சில வருடங்களுக்கு முன்பு எங்களுடன் குடியிருந்த ஒரு பெண். பரஸ்பர விசாரிப்புகளுக்குப் பிறகு, ''அக்கா, என் நாத்தனாருக்குக் கல்யாணம் அடுத்த வாரம். மதுரையிலிருந்து நான் வரும்போது கல்யாணத்திற்காக வாங்கிய புடைவைகளையும் மற்ற பொருட்களையும் பஸ்ஸிலேயே விட்டுவிட்டேன். உங்களுக்குத் தெரிந்த இடத்தில் எங்காவது பட்டுப் புடைவைகளும், பாலியஸ்டர் புடைவைகளும் தவணை முறையில் கொடுப்பார்களா? கொஞ்சம் வாங்கிக் கொடுங்கள்'' என்று சொல்லிவிட்டு, ''நாளை வருகிறேன், கேட்டு வையுங்கள்'' என்று கிளம்பிவாள்.

அவள் சென்ற சிறிது நேரத்திற்கெல்லாம் அடுத்த போர்ஷன்காரி வந்தாள். ''இந்தப் பெண் ஏன் இங்கே வந்தாள்?'' என்று கோபமாகக் கேட்டாள். அவள் கோபத்தின் காரணம் புரியாமல், ''என்ன சமாசாரம்?'' என்று விசாரித்தேன். விவரத்தையும் சொன்னேன்.

''ஐயோ, இந்த மாதிரி ஏதாவது இருக்கும் என்று தான் ஓடிவந்தேன். அவள் வாடிக்கையே இதுதான். இப்படி ஏதாவது ஒரு காரணத்தைச் சொல்லி, முதலில் தவணை முறையில் புடைவைகளைக் கொடுக்கும் விலாசத்தை வாங்கிக் கொள்வாள். அங்கே உங்கள் பெயரைச் சொல்லி இரண்டு மூன்று புடைவைகளை வாங்கிக் கொள்வாள். முதல் தவணையை ஒழுங்காகக் கட்டிவிடுவாள். அடுத்த மாதம் போய், ''எனக்கு நிறைய பெரிய வீட்டுப் பெண்களைத் தெரியும். எளிதாக வாரத்திற்கு முப்பது புடைவை எடுப்பேன். உங்களுக்கு நம்பிக்கை இருந்தால் என்னிடம் கொடுங்கள். விற்று இரண்டே நாட்களில் பணம் கொடுப்பேன்'' என்று மிகவும் நம்பிக்கை ஏற்படும்படி தைச்சியமாகப் பேசி ஐம்பது புடைவைகள்வரை வாங்கிச் சென்றுவிடுவாள். அவற்றை வேறு எங்கேனும் இதேபோல வேறு ஏதாவது காரணம் சொல்லிப் பாதி விலைக்கு விற்று, பணத்தைச் சுருட்டிக் கொண்டு போய்விடுவாள். இப்படி இவளிடம் பணத்தைக் கோட்டை விட்டவர்கள் ஏராளம் பேர்.



மறந்து போய்க் கூட இந்தச் சிக்கலில் மாட்டிக்கொள்ளாதே!'' எனப் பலமாக எச்சரித்துவிட்டுச் சென்றாள்.

மறுநாள் அந்தப் பெண், குறிப்பிட்ட நேரத்திற்கு முன்பே வந்துவிட்டாள். (என்னை ஏமாற்றுவதில் அப்படி அவளுக்கு என்ன அவசரமோ!) நானும் முகம் மாறாமல் சிரித்தபடியே எனக்குத் தெரிந்த பெண் இப்போதெல்லாம் புடைவை விற்பதை நிறுத்தி விட்டாளாம். ஐம்பதாயிரம் ரூபாய்க்கு மேல் யாரோ ஒரு பெண் அவளை ஏமாற்றி விட்டாளாம்!'' என்று சொல்லிவிட்டு அவள் முகத்தைப் பார்த்தேன். அவள் முகமே மாறிவிட்டது.

''ஏன் அப்படி ஏமாந்துவிட்டுச் சும்மா இருந்தாள். போலீசில் புகார் செய்திருக்கலாம்!'' என்று அங்கலாய்ப்பது போலச் சொன்னேன்.

அதற்கு அவள், ''இல்லை. அப்படிப் போலீசிற்குப் போனால் அந்தப் பெண்ணுக்குத்தான் கஷ்டம். விற்பனை வரி பதிவு செய்யாமல் இப்படி வியாபாரம் செய்வது சட்டப்படி குற்றம். 'டர்ன் ஓவர்' பற்றிக் குடைந்துவிடுவார்கள். அதனால் பயந்து கொண்டு போகாமல் இருந்திருப் பாள்'' என்று சொன்னாள் அந்த பலே கில்லாடி. அவளின் ஏமாற்று வித்தையின் இரகசியத்தைத் தெரிந்து கொண்டேன். மெதுவாகப் பேசி அவளை அனுப்பி வைத்தேன்.

பின்பு சேல்ஸ் டாக்ஸ் பற்றித் தெரிந்தவர்களிடம் விசாரித்த போது ஒரு லட்சம் ரூபாய்க்குமேல் வியாபாரத்தில் பணம் புரண்டால்தான் விற்பனை வரி பதிவு செய்ய வேண்டும் என்றார்கள். இருந்தாலும் இப்படி ஏமாற்றுபவர்களின் பின்னாலும் போலீசுக்கும் யார் அலைந்து கொண்டிருப்பார்கள்? இந்த அடிப்படையைத் தெரிந்து கொண்டுதான் இப்படிப்பட்ட பெண்கள் ஏமாற்றுகிறார்கள்போலும்!

கூடியவரை இப்படி ஒரே நாளில் லாபம் சம்பாதிக்க வேண்டும் என்ற எண்ணத்தை விட்டுவிடலாம். பசப்பான வார்த்தைகளில் உருகிவிடுவதும், யாரையுமே எளிதில் நம்பி விடுவதும் நம் பலவீனம். அதேபோல, கணவருக்கும் பெரியவர்களுக்கும் தெரியாமல் நாம் செய்யும் சில பேரங்கள் இப்படி நம்மைச் சங்கடத் தில் ஆழ்த்திவிடுவது உண்டு. எனவே, எல்லாவற்றிலுமே எச்சரிக்கையாக இருப்பது நல்லது.

– வைதேகி தேசிகன்

திருமணமலர்

மணமகள் தேவை

★ சௌராஷ்டிரா பையன், பூராடம் நட்சத்திரம், சௌகை கோத்திரம், பி.எஸ்ஸி., 30/168/3500 டிக்கெட் பரிசோதகர், தெற்கு ரயில்வே, திருச்சி. இந்த வரனுக்கு அரசு/வங்கி வேலையிலுள்ள சௌராஷ்டிரா மணமகள் தேவை. ஜாதகத்துடன் விண்ணப்பிக்கவும். பெட்டி எண் : 10811

★ பாரத்வாஜ கோத்திரம், வடமாள் ஐயர், 44/திருவோணம் (மதுரைக்கு அருகில் ஸ்கூல் டீச்சர்) அனுஷம்/40 (பப்ளிக் லிமிடெட் கம்பெனியில் வேலை திருவனந்தபுரம்) வேலையில் உள்ள/அல்லாத குடும்பப்பாங்கான, தெய்வ சிந்தனையுள்ள, அன்பு உள்ளம் கொண்ட பெண்கள் தேவை. ஜாதகத்துடன் தொடர்பு கொள்ளவும். பெட்டி எண் : 10812

★ வடமாள், கௌசிக கோத்திரம், சதயம், 37 வயது, எஸ்.எஸ்.எல்.சி., 5'' உயரம், சொந்தத் தொழில் ரூ. 2500/- மாத வருமானம், நல்ல பழக்கங்கள் உள்ள பையனுக்கு எஸ். எஸ். எல்.சி., படித்த குடும்பப்பாங்கான பெண் தேவை. பெட்டி எண் : 10813

★ ஐயர், பிரஹசரணம், கௌண்டின்ய கோத்திரம், ஹஸ்தம் 32/5'7''/3000 மைசூர் லேம்ப்ஸ் பெங்களூரில் மெக்கானிகல் அஸிஸ்டெண்ட் ஆக பணிபுரியும் பையனுக்கு சென்ட்ரல் கவர்ன்மெண்ட்/எல்.ஐ.சி./ரயில்வே/வங்கியில் வேலை பார்க்கும் அல்லது பெங்களூருக்கு மாற்றக் கூடிய அல்லது பெங்களூரிலேயே வேலையில் உள்ள பெண் தேவை. ஜாதகம் குடும்ப விவரங்களுடன் தொடர்பு கொள்க. பெட்டி எண் : 10814

★ இந்து சோழிய வெள்ளாளர், அசைவம், 27/3500, பி.ஏ./5'10'' உத்திராடம், செவ்வாய் தோஷம், தனியார்த் துறையில் நிரந்தர வேலை, அழகும், சிகப்பும் உள்ள வரனுக்கு அதே தோஷமுள்ள அழகுள்ள பட்டதாரி பெண் தேவை. இதே இனத்தையும், நற்குடும்பத்தையும் சேர்ந்த தகுந்த வரன்கள் ஜாதகத்துடனும், மற்ற விவரங்களுடன் தொடர்பு கொள்ளவும். பெட்டி எண் : 10815

★ வடமாள், நைத்ருவ காச்யப கோத்திரம், சதயம், 33 வயது, பி.ஏ. படித்து சென்னையில் பப்ளிக் லிமிடெட் கம்பெனியில் ரூ. 2000/- சம்பளமுள்ள 6' உயரம் தஞ்சை மாவட்டத்தைச் சேர்ந்த பையனுக்கு வேலை பார்க்கும் பெண் தேவை. பெட்டி எண் : 10816

★ தெலுங்கு பிராமினர், காஸ்யப கோத்திரம், மூலகநாடு உட்பிரிவு, பூராடம், 36 வயது, டி.எம்.ஈ., சென்னையில் நல்ல கம்பெனியில் ரூ 3500 மாதச் சம்பளம் வாங்கும் பையனுக்கு நல்ல வேலையில் உள்ள பெண் தேவை. உட்பிரிவு சம்மதம். ஜாதகத்துடன் தொடர்பு கொள்ளவும். பெட்டி எண் : 10817

★ பிரஹசரணம், பாரத்துவாஜம், திருவோணம் 28 வயது, 5'10'', எம்.ஏ. மத்திய சர்க்கார் உத்தியோகம், மாத வருமானம் 2000 உள்ள மணமகனுக்கு, பட்டதாரி வேலை பார்க்கும் பெண் (மத்திய சர்க்கார், பாங்க்) தேவை. ஜாதகம், குடும்ப விவரங்களுடன் தொடர்பு கொள்ளவும். பெட்டி எண் : 10818

★ தமிழ் யாதவர் 29/165/2300/பி.காம்., தனியார் நிறுவனத்தில் பணிபுரியும் வரனுக்கு, உத்யோகம் பார்க்கும் மணமகள் தேவை. பெண்ணின் முழு விவரத்துடன் எழுதுக. பெட்டி எண் : 10819

★ சொத்து, கடனில்லாத, (பி.காம்.) 33, 2400, அரசு, சைவ பிள்ளைக்கு வேலையிலுள்ள/வேலையற்ற செவ்வாய் தோஷ மணமகள் தேவை. எல்லாம் இருக்கு நிறம் மட்டு. ஜாதகமில்லை என்போரும் எழுதலாம். இறையன்பு மிக்க நன்னெறிகளை, பழக்கங்களை விரும்பும் பெண்கட்கு முன்னுரிமை. பெட்டி எண் : 10820

★ சாண்டில்யம், வடமாள் சித்திரை, 30, எஸ்.எஸ்.எல்.சி., ஷெட்யூல்டு பாங்க் மெஸஞ்சர்/1800/5'6'' ஓரளவு ஸ்தாவர சங்கம சொத்துள்ள நல்ல அழகுள்ள பையனுக்கு நல்ல நிறம், அழகுள்ள எஸ்.எஸ்.எல்.சி., +2 மாற்றலாகக் கூடிய வேலையிலுள்ள பெண் தேவை. முழு குடும்ப விவரங்களுடன் தொடர்பு கொள்க. பெட்டி எண் : 10821

★ கள்ளர் இனத்தைச் சேர்ந்த 30/3000/பி.ஈ. திருச்சி அரசு நிறுவனத்தில் பணிபுரியும் மணமகனுக்கு அதே இனத்தைச் சேர்ந்த +2 அதற்கு மேல் படித்த மணமகள் தேவை. ஜாதகத்துடன் தொடர்பு கொள்ளவும். பெட்டி எண் : 10822

★ சொந்த வீடும் சொந்தத் தொழிலும் உள்ள 27 வயது நாய்க்கர் இன மணமகனுக்கு நல்ல குணமும் அழகும் உள்ள மணமகள் தேவை. ஜாதி மதம் பேதமில்லை. பெட்டி எண் : 10823

★ தஞ்சாவூர் ஜில்லா, பிராமின் பையன், வடமாள் காசியப கோத்திரம், வயது 30, எஸ்.எஸ்.எல்.சி.,/174 செ.மீ., மாத வருமானம் ரூபாய் 2500/- இராணுவத்தில் வயர்லெஸ் ஆபரேட்டராக பணிபுரியும் பையனுக்கு நல்ல பெண் தேவை. ஜாதகம் மற்றும் விவரங்களுடன் தொடர்பு கொள்க. பெட்டி எண் : 10824

★ ஐயர், வடமாள், பாரத்வாஜ கோத்திரம், 31/5'10''/6000 உயர் மத்திய வகுப்பு வங்கி அதிகாரிக்கு நல்ல உயரமான வீட்டுப் பணிகளில் தேர்ச்சியுடைய, வேலைக்குச் செல்லாத பட்டதாரி மணமகள் தேவை. உட்பிரிவுகள் சம்மதம். ஜாதகத்துடன் தொடர்பு கொள்ளவும். பெட்டி எண் : 10825

★ கொங்கு வெள்ளாள கவுண்டர் (செல்லம் கூட்டம்) டிப்ளமோ எஞ்சினியர் விசாகம், 28/167/4200/- அழகான, சேலம் மாவட்டத்தைச் சேர்ந்த. வசதியான மத்திய அரசு கிளாஸ் ஒன் ஆபீசர் மணமகனுக்கு பட்டதாரி மணமகள் தேவை. ஜாதகத்துடன் எழுதவும். பெட்டி எண் : 10826

★ நற்குணம், பழக்க வழக்கங்கள், திறமையுள்ள, 34/177/5000 எஞ்சினியர், வில்லங்கம் இல்லாமல் விவாகரத்து கிடைத்துள்ள மிருகசீரிஷம், பிரஹசரணம் பையனுக்கு அழகான நற்குணமுள்ள, சிவந்த 30 வயதுக்குட்பட்ட பிராஹ்ம வோட் ஐயர் பெண் தேவை. விதவை, விவாகரத்து பெற்றவர் கூடாது. ஜாதகம் அவசியம். பெட்டி எண் : 10827

* Wanted good looking educated, employed/ unemployed girls for Engineer Yaohava Naidu boy B.Sc., B.Tech./28/165/4500 working in large reputed concern at Madras based, subsect no bar. Apply with horoscope. Box No. 10828

* Alliance for Vanniar boy 30, M.A.B.L. PGDPM (ACS) 164/2500 Central Govt. Working in New Delhi. Seeks fair graduate girl from decent family send family details with horoscope. Box No. 10829

* Vanniar boy 31 B.Com., 167/2200 Steno employed in Reputed Ltd. in New Delhi. Seeks fair educated girl from decent family send full bio-data with horoscope. Box No. 10830


* Alliance for very fair Athreya Gothram, Pooram boy Vadama 30/173/2500 permanent Govt. Job at Trichy own house, employed graduate girl at Trichy, transferable subsect no bar. Apply with full details and horoscope to Box No. 10831

* Athreya Gothram, Moolam, 4th padam 32 yrs 168 cms. Iyer Cement Corpn. of India owning flat in Delhi, needs good-looking Girl, preferably Delhi employed Public sector, Govt., Transferable. Contact Box No. 10832

* Non-kousika alliance for Tamil Iyer boy, Ashtasahasram, only son, M.Com., 28/173/4500/- Steno in GIC, from girls working in LIC/GIC/Bank/Public Sector/Central or State Government Officers. Subsect no bar. Apply with full details & horoscope to Box No. 10833

* Wanted employed bride for Brahacharanam, Gautama Gothram, Utthiratadhi 30/167/3000/BA boy employed in Central Govt. in Delhi, owning flat in Delhi. Subsect no bar. Box No. 10834

* Alliance invited for a Mudaliar boy age 30 years, 5'2" slim, Bank employee, from Mudaliar girl, graduate, working preferrable early marriage. Box No. 10835



★ வடகலை ஐயங்கார், கௌண்டின்ய கோத்திரம், 31/5'6''/மெடிகல் ரெப். ஆக பணிபுரிபவருக்கு வங்கி/எல்.ஐ.சி./மற்றும் கவர்ன்மெண்ட் வேலையில் உள்ள அதே இன அழகிய சிறந்த திறமுள்ள பெண் தேவை. ஜாதகம், மற்றும் முழு விவரங்களுடன் விண்ணப்பிக்கவும். தென்கலையாயினும் பரவாயில்லை. பெட்டி எண் : 10836

* Alliance invited from decently employed girls for Iyer, Vadamal, Athreya Gothram Anusham, junior assistant in Reputed Concern, Madras. Not transferable. 9.3.61, 162 cms, Rs. 2100/- pm. and Rs. 600/- pm. interest from Bank deposits. Horsocope optional. Replies from widows also considered with broadminded. Box No. 10837

* Srivatsam, Anusham, Brahacharanam, higher secondary, tall, handsome 35/Rs.4000/-p.m. assured income from inverstment. Father propertied pensioner, require for immediate marriage, plus two, smart, fair domestically trained girl around 29. Subsects no bar. Reply with horoscope and family details. no dowry. Box No. 10838.

* Tanjore, Vadamal, Koundinya, Kettai, 34 years, 5'6", B.Sc., Quasi govt. (Madras) analyst Rs. 3500/- ing own house seeks Govt/Public Ltd Company, employed girl. Apply with horoscope to Box No. 10839

* Alliance invited from home loving Non-Bharadwaja bride for Aswathy, Brahacharanam, Sudha Jatakom, 35 yrs owns a well run xerox business in Trivandrum. Respond with horoscope & Biodata. Subsect and finance no bar. Box No. 10840

* Post-graduate bank officer, 37 young, looking handsome, Hindu, A.D. Rs. 6100/- Madras needs suitable broadminded Girl, no dowry, caste. Widow considered. Apply to Box No. 10841

* Alliance invited for Devanga Chettiar (Sevalar), B.Com., 31 years Rs. 2500/- from the parents of well educated, fair girl. Reply to Box No. 10842

* Vadama Srivatsa Rohini 34/171/5100 P.G. employed in LTD Company, Madras. Needs good looking educated bride. Reply Subsect no bar. Box No. 10843

* Wanted, fair, looking, bride, age, 20 to 23, Govt. employee transferable, for Tamil, Hindu, Pillai, 28 years B.Com., 5'6", monthly earnings Rs. 3000/- from, private, concern, Bangalore, caste no bar. Box No. 10844

★ ஆர்ய வைசியர், பூராட நட்சத்திரம், வயது 31, சொந்த வீடு, சொந்தத் தொழில், மாத வருமானம்

ரூ 5000/- அடக்கமும், பண்பும் நிறைந்த மணமகளுக்கு அழகும், குணமும் உள்ள குடும்பப் பாங் கான ஆர்வமைல்ய மணமகள் தேவை. ஜாதகத்துடன் வி ண் ண ப் பி க் க வு ம். பெட்டி எண் : 10845

★ துளுவ வேளாள கவுண்டர், வயது 29, உயரம் 5'7'', எம்.எஸ்ஸி., உதவியாளர் எல்.ஐ.சி., சைவம், படித்த, உண்மையும், நேர்மையும், தைரியமும் கடைபிடிக்கும் பெண் தேவை. பெட்டி எண் : 10846


★ கேரள அய்யர்/வாத்திமாள்/ஹரித கோத் திரம்/மகம்/பி.எஸ்ஸி. PGDCS 27/160/2500 தனியார் கம்பெனியில் கம்ப்யூட்டரில், சென் னையில் வேலை பார்க்கும், அனைமுற்றோர், போலியோ பையனுக்கு படித்த குடும்பப் பாங்கான பெண் தேவை. கு டு ம் ப விவரங்களுடனும் ஜாதகத்துடனும் அணுகவும். பெட்டி எண் : 10847

★ தஞ்சை ஜில்லா, கௌசிகம், வடமாள், ஆயில்யம், 27/170/உ.பி.யில் வங்கியில் பணிபுரி யும் வரதட்சிணை விரும்பாத, நல்ல ஒழுக்க முள்ள வரனுக்கு பட்டப் படிப்பு படித்துள்ள, வைதிக ஆசார ஒழுக்கமும், குடும்பக் காரியங் களும் நன்கு தெரிந்த வேலை பார்க்கும்/ பார்க்காத லட்சணமான மணமகள் தேவை. முழு விவரத்துடன், ஜாதகத்துடன் எழுதவும். வைதிக சாஸ்திரிகள் குடும்பப் பெண்களுக்கு முன்னு ரிமை தரப்படும். பெட்டி எண் : 10848

★ வன்னிய க்ஷத்திரியர், 29, பி.காம்., மத்திய அரசு, சிவப்பு, செவ்வாய் தோஷமுள்ள, மண மகனுக்கு படித்த செவ்வாய் தோஷமுள்ள மணமகள் தேவை. உட்பிரிவு சம்மதம். பெட்டி எண் : 10849

★ செங்குந்த முதலியார், அனுஷ நட்சத்திரம், தோஷமில்லாத, வயது 30/5½, சிவப்பான +2 முடித்து சொந்தத் தொழிலில் (டீ.வி./ரேடியோ சர்வீஸில்) மாத வருமானம் ரூ 2500/- மற்றும் தட் டச்சு பள்ளி அமைக்கும் தகுதி பெற்ற மணமக னுக்கு படித்த வேலைக்குச் செல்லும் குடும்பப் பாங்கான அழகுடைய மணமகள் தேவை. உட் பிரிவு சம்மதம். கோவைப் பகுதியை சார்ந் தவராயிருத்தல் நலம். பெட்டி எண்: 10850

★ ஆதி திராவிடர், 28, எம்.எஸ்ஸி., கவர்ன் மெண்ட் போலீஸ் சப்-இன்ஸ்பெக்டர், 4000/- மணமகனுக்கு பணியில் உள்ள/அல்லாத பட்ட தாரி மணமகள் தேவை. பெட்டி எண் : 10851



* Telugu Brahmin, 27 years, fair, engineering, graduate reputed company employed seeks alliance with Telugu Brahmin, graduate girls employed with decent salary. Send horoscope bio-data sub-sect and family details essential. Box No. 10852

★ பிரஹசரணம், சடமர்ஷண கோத்திரம், பூசம் நட்சத்திரம், 35 வயதுள்ள, பி.ஏ. PG Dipl. Material Management பாஸ் செய்து, மதராஸ் தனியார் கம்பெனியில் ஸ்டோர்ஸ் ஆபீசர், சம்பளம் மாதம் ரூ. 3000/- பெறும் தமிழ் அய்யர் மணமகனுக்கு, பட்டதாரி அல்லது அரசாங்க தனியார் அலுவலகத்தில் வேலை பார்க்கும் 33 வயதுக்குட்பட்ட மணமகள் தேவை. அய்யர் உட்பிரிவுகள் சம்மதம். ஜாதகம், குடும்ப விவரங்களுடன் வி ண் ண ப் பி க் க வு ம். பெட்டி எண் : 10853

* Alliance invited for Bharadwaja, Anusham, Vadamal Iyer Boy - AO/GIC/32/170/6000 from graduate employed girls in Public Sector/Banks/Railways based at Hyderabad/Madras. send horoscope to Box No. 10854

★ வாணியச் செட்டியார், 36/160 செ.மீ./5000 மனைவியை இழந்தவர், குழந்தைகள் 3 (ஆண் 2, பெண் 1) வங்கி அதிகாரி சொத்துக்கள் உண்டு. நர்சரி ஆங்கிலப் பள்ளி நடத்தும் வரனுக்கு பி.எட்., படித்த பெண்கள்/விதவைகள்/ விவாக ரத்து பெற்றவர் விவரமாக விண்ணப்பிக்கவும். ஜாதி தடையில்லை. பெட்டி எண் : 10855


* Wanted smat, tall, good looking, preferably employed girl from progressive Tamil, Kannada, Maharashtrian, Brahmin families for Bombay based boy Undergraduate/ Executive/5000/28/6'3"/ Wheatish/good physique/wearing specs. father Tamil, Iyer/Brahacharanam/Kaundanya. Mother Maharashtrian Deshastha Brahmin. No demands whatsoever. Simple marraige. Apply to Box No. 10856

* Alliance invited for Palghat Iyer, Vadama, Srivatsa Gothram, Jyeshta 4th Padam, SSLC, 44 years, 5'4", Rs. 1500/- working in reputed firm at Bangalore from, girls around 35 years employed in Bangalore/ transferable to Bangalore from respectable families reply with horoscope and full details to Box No. 10857

* Vadagalai, Iyengar, Koundanya Gothram, star Revathi, age 31, hight 5'6" no encumberances Bombay. employed salary 3000 required preferably. employed girl, dowry no bar. Box No. 10858

★ இந்து நாயுடு, எம்.ஏ.பி.எல்., திருமணமாகாத வசதியானவருக்கு சேவை மனப்பான்மையும், தொண்டுள்ளமும் கொண்ட படித்த 30 முதல் 40 வயதுள்ள பெண் தேவை. ஜாதி வேறுபாடு இல்லை. பணிபுரிவோர், சட்டப்படி விவாகரத் தானவர்கள், விதவைகள் வேறுபாடு கிடையாது. கோயம்புத்தூர் பகுதியினராக இருப்பின் நலம். பெட்டி எண் : 10859

★ மலையாளர், நாயர், 31 வயது, innocent divorcee, வில்லங்கம் இல்லாதவர், தனியார் கம்பெனியில் ரூ. 1200/- சம்பளம். சென்னையில் சொந்த வீடு உள்ள வரனுக்கு அதே இனத்தில்


ஓவியம் போன்ற முகத்திலே ஒளி சேர்க்கும் முத்திரை!
EYETEX
SHAKE WELL
EYETEX
ஜிடெக்ஸ்
பெண்மையின் பெருமை
பெருகிட – இந்திய பண்பாட்டின்
வளமை கூடிட...
ஜிடெக்ஸ்
பூர்ணிமா குங்குமம்
மங்கல சௌபாக்கியத்தின் சின்னம்
அரவிந்த் லாபரடரீஸ்,
சென்னை - 600 033.

திருமண மலர் பகுதியில் விளம்பரம் செய்யக் கட்டணம் ரூ. 75/- தொகையை, 'மங்கையர் மலர்' பெயருக்குச் சென்னையில் உள்ள ஏதாவது ஒரு வங்கியில் மாற்றக்கூடிய MICR டிமாண்ட் டிராப்டாக அனுப்பவேண்டும் அல்லது மணியார்டர் மூலமாக அனுப்பலாம். போஸ்டல் ஆர்டர் ஒத்துக் கொள்வதில்லை. ஒரு விளம்பரத்தில் ஒரு வரனுக்கு 30 வார்த்தைகளுக்குள் விவரங்கள் தரவேண்டும். திருமண மலர் பகுதியில் விளம்பரம் செய்பவர்களின் விலாசங்களைக் கொடுப்பதற்கில்லை. விளம்பரங்களுக்குப் பதில் அனுப்புபவர்கள், ''விளம்பரதாரர், பெட்டி எண் : C/o. மங்கையர் மலர், 47, ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காடு தாங்கல், சென்னை - 600 097 என்ற விலாசத்திற்கு அனுப்ப வேண்டும். தனிப்பட்ட கடிதப் போக்குவரத்து கிடையாது.

நடுத்தர வர்க்கத்தைச் சேர்ந்த நல்ல தோற்றமுள்ள, குடும்பப்பாங்கான மணமகள் தேவை. ஜாதகத்துடன் தொடர்பு கொள்ளவும். பெட்டி எண் : 10860

★ 35 வயது, அரசுப் பணி, இளநிலை உதவியாளர், 2200 மாத வருமானம். பூர்வீக வீடு, நிலம் இவற்றிலிருந்து உபரி வருமானம். அமைதியான முற்போக்கு சிந்தனை கொண்ட பிரச்னைகள் அற்ற பிறர் விரும்பிடும் நலன்கள் கொண்ட யாதவ இளைஞருக்கு பணிபுரியும் யாதவ பெண் தேவை. பெட்டி எண் : 10861

* Alliance for Vadmal, Srivatsa, Graduate Iyer boy, Uthiradam 33/167/3200 Deputy Office Superintendent Customs & Central Excise from girls employed in Govt/Banks/undertakings. Subsect no bar. Reply to R. Lakshminarayanan, 60, Chathiram Street, Melur, Tuticorin - 628 002

* Very Fair, tall, good looking Iyer girl, permenantly employed (Bank/Insurance/Central Govt. Preferred) for Brahacharnam Tamil, Iyer, 31/160/4000 Nationalised Bank Employee, Madras. Haridha Gothram, suddha jathakam, star Chithirai, 4th padam, girl should not have moolam, aiyilyam, pooradam as birth stars. send horoscope, bio-data to G. M. Krishnan, C-498, 8th Street, Periyar Nagar, Madras - 600 082


★ பிரஹசரணம், ஷடமர்ஷணம், வயது 38, பூரம், தஞ்சை ஜில்லா, சுயத் தொழில் ரூ 4000/- மாத வருமானம் பி.எஸ்ஸி., வரனுக்கு நல்ல குணமான டிகிரி படித்த வேலையில் உள்ள/ இல்லாத பெண் தேவை. உட்பிரிவு சம்மதம். தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி : ஜி.ஆர். மகாதேவன், 5, கேசவ பெருமாள் மேல வீதி, மயிலாப்பூர், சென்னை - 4, தொலைபேசி : 74823

★ ஐயர்/வடமாள்/ஸ்ரீவத்ஸ கோத்திரம், பூரட்டாதி/27/5'9''/பி.காம்., தூத்துக்குடி கூட்டுறவுத் துறை அரசுப் பணியில் ஸ்டெனோவாக பணிபுரியும் வரனுக்கு மத்திய/மாநில/வங்கி/இன்சூரன்ஸ்/மாற்றத்தக்க பணியிலுள்ள குடும்பப்பாங்கான மணமகள் தேவை. தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி : மீனாட்சி சுந்தரம், 21, சுந்தரபுரம் தெரு, கள்ளிடைக்குறிச்சி - 627 416.

★ கப்பலில் தலைமை அதிகாரியாக பணிபுரிந்து வெளிநாட்டுக் கப்பல் தளத்தில் நேர்ந்த ஒரு விபத்தில் தோளிற் கீழ் இடது கையும், முழங்காலுக்கு கீழே வலது காலையும் இழந்து, செயற்கை கால் கையுடன் திடகாத்திரமாக சென்னையில் கப்பல் கம்பெனி ஒன்றில் அலுவலக அதிகாரியாக நல்ல சம்பளம், மகிழ்வுடன் வேலை செய்யும் 38 வயது பாரத்வாஜ கோத்திர வரனுக்கு, படித்த சேவை மனப் பான்மையும் உடல் ஊனத்தைக் குறையாக கருதாத எண்ணமும் கொண்ட 30 வயதுக்கு மேற்பட்ட சௌராஷ்டிர மணமகள் தேவை. எளிய திருமணம். தொடர்பு கொள்க நவநீத கிருஷ்ணன், 166/5 பெரிய தெரு, திருவல்லிக் கேணி, சென்னை - 600 005.

★ வயது 27, 167 செ.மீ., உயரம், இந்திய உணவு கழகத்தில் பணிபுரியும் கிறிஸ்தவ மணமகனுக்கு மணமகள் தேவை. எம்மதமும் சம்மதம். விதவை, வேலையில் உள்ள பெண் இவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும். தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி : ஜி. இயேசுபாதம், 9, வேளாங்கண்ணி தெரு, சார்லஸ் நகர், பட்டாபிராம், சென்னை - 600 072

★ கன்னட தேவாங்க செட்டியார், வத்தேகாரர் குலம், வயது 33, படிப்பு எஸ்.எஸ்.எல்.சி., உயரம் 5 அடி, 6 அங்குலம். வேலை விவசாயம் அண்ட் பைனான்ஸ், மணமகனுக்கு குறைந்தது எஸ்.எஸ்.எல்.சி. படித்த குடும்பப்பாங்கான 22 - 27 வயதுடைய பெண் தேவை. தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி : கி. எஸ். தேவராஜன் செட்டியார், 3/89 தேவாங்கபுரம், சித்தூர் கேரளா - 678101.



★ வெளிநாட்டில் வேலை பார்க்கும், நல்ல நிறமான, 26/172 வடமாள் வாதூல கோத்ர பையனுக்கு. 19-21 அழகும் படிப்பும் உள்ள மணமகள் தேவை. தொடர்பு கொள்க : C-44/006 Yogi Nagar, Borivali (West), Bombay - 400 092

★ விஸ்வகர்மா, தமிழ், 27/5'8''/பி.ஈ. சிவில் எஞ்ஜினியரிங் சென்னையில் சொந்தத் தொழில் செய்யும் வசதியான மணமகனுக்கு அழகான, பட்டதாரி மணமகள் தேவை. விபரங்கள் அனுப்புக. டி. தண்டபாணி, ரிட்டையர்டு டிப்டி கலெக்டர், 11, சுதர்சனம் தெரு, மஞ்சக்குப்பம், கடலூர் - 607 001.

★ ஐயர், பிரஹசரணம், கௌசிக கோத்திரம், புனர்பூசம், எஸ்.எஸ்.எல்.சி., வயது 34, உயரம் 5'11'' சம்பளம் 3000, பரோடாவில் வேலை பார்க்கும் (தனியார்த் துறை) பையனுக்கு பெண் தேவை. உடனே தொடர்பு கொள்ளவும். முகவரி : N. Krishnamurthy, C-39, Mangalam Park, Gothri Road, Near T.B. Hospital, Baroda - 390 007

மணமகன் தேவை

★ கார்காத்தார் 26.8.1966, 153 செ.மீ., ஒல்லி சிவப்பு பூராடம் (பி.ஏ. பொருளாதாரம்) பெண்ணிற்கு உத்யோகம்/தொழில் மணமகன் தேவை. பெட்டி எண்: 21887

★ ஐயங்கார், தென்கலை, கௌண்டின்ய கோத்திரம், ரேவதி, 175, 29, பி.எஸ்ஸி., இன்சூரன்ஸ் கம்பெனியில் வேலை செய்யும் மாநிறமான பெண்ணிற்கு CA/Engineer/Doctor அல்லது வங்கி/இன்சூரன்ஸ் கம்பெனி/ கவர்ன்மெண்டில் பணிபுரியும் வரன் தேவை. வடகலை சம்மதம். பெட்டி எண் : 21888

* Alliance invited from well settled grooms for Pallan, Hindu, Tamilian girl, 28/147/MA doing B.Ed., caste no bar. Early simple marriage. Box No. 21889

★ தெலுங்கு பிராமணர், காஸ்யப கோத்திரம், மூலகநாடு உட்பிரிவு, திருவோணம், பி.ஏ. படித்த 27 வயதான தனியார் கம்பெனியில் மாதம் ரூ 600 சம்பளம் வாங்கும் பெண்ணிற்கு நல்ல வேலையில் உள்ள மணமகன் தேவை. உட்பிரிவு சம்மதம். முழு விவரங்களுடன் தொடர்பு கொள்ளவும். பெட்டி எண் : 21890

★ ஐயங்கார், தென்கலை, ஹரித கோத்திரம், விசாகம் 20/163 செ.மீ., மாநிறம், +2 (பி.காம்.) தமிழ், ஆங்கிலம், (டைப்) ஹையர் பாஸ் செய்துள்ள வேலைக்குச் செல்லாத (Domestically welltrained) பெண்ணிற்கு அரசு (அ) தனியார் நிறுவனத்தில் வேலை செய்யும் மத்தியதரக் குடும்பத்தைச் சேர்ந்த வரன் தேவை. உட்பிரிவுகள் சம்மதம். ஜாதகத்துடன் தொடர்பு கொள்ளவும். பெட்டி எண் : 21892

★ வடமாள், விசுவாமித்ர கோத்திரம், பூராடம், பி.காம்., /23/150 மணமகளுக்கு அரசு/பப்ளிக் செக்டரில் பணிபுரியும் பட்டதாரி மணமகன் தேவை. பெட்டி எண் : 21893

★ கன்னட தேவாங்கர் இனம், பாலிதார் குலம், பரணி நட்சத்திரம், வயது 22, உயரம் 165 செ.மீ., சிங்கப்பூர் அரசாங்கத்தில் மாதம் ரூ. 20,000 சம்பளம் வாங்கும் பெண்ணுக்கு கம்ப்யூட்டர்/



மெக்கானிக்கல்/எலக்ட்ரானிக் படித்த சிங்கப்பூர் செல்ல விருப்பமுள்ள மணமகன் தேவை. பெட்டி எண் : 21894

★ சௌராஷ்டிரா, ஆங்கிரஸ ரிஷி கோத்திரம், திருவாதிரை நட்சத்திரம், வயது 23, எம்.காம்., படித்த அழகான சிவந்த பெண்ணிற்கு, அதே குலத்தைச் சார்ந்த அரசாங்க உத்தியோகம் அல்லது நிரந்தர வியாபாரத்தில் உள்ள மணமகன் தேவை. விருப்பமுள்ளவர்கள் ஜாதகத்துடன் விண்ணப்பிக்கவும். பெட்டி எண் : 21895

★ கார் விபத்தில் கணவனை இழந்த உயர் குடும்ப டாக்டர் 29/5000 அரசு பணி, முற்போக்கு குடும்ப சைவ டாக்டர், இன்ஜினியர், வக்கீல், பேராசிரியர் மணமகன் தேவை. கிளினிக் வைத்துக் கொடுக்கலாம். தொழிலுக்கு பண உதவி செய்யலாம். பெட்டி எண் : 21896

★ ஸ்மார்த்த தேசஸ்த மராத்தி பெண் 20 வயது, உயரம் 5'', வசிஷ்ட கோத்திரம், விசாகம், 4-ம் பாதம், 10 வகுப்பு வரை படித்த பெண்ணுக்கு 29 வயதுக்குள் வரன் தேவை. உட்பிரிவுகள் சம்மதம். நல்ல வேலையிலுள்ள, கெட்ட பழக்கங்கள் இல்லாதவராக இருக்கவேண்டும். பெண்ணுக்கு ஓரிரு இடங்களில் உடலில் வெண் தழும்பு உள்ளது. இதைப் பொருட்படுத்தாத பரந்த மனம் உள்ளவர் விண்ணப்பிக்கலாம். பெட்டி எண் : 21897

★ சோழிய வெள்ளாள பிள்ளை வகுப்பைச் சேர்ந்த 21 வயது நிறைந்த பட்டதாரி பெண்ணிற்கு அதே இனத்தைச் சேர்ந்த அரசாங்க/தனியார் நிறுவனத்தில் பணிபுரியும் அழகான பட்டதாரி வாலிபன் தேவை. ஜாதகத்துடன் விண்ணப்பிக்கவும். பெட்டி எண் : 21898

★ திருநெல்வேலி சைவ வெள்ளாளப் பிள்ளை, பட்டதாரியான மத்திய அரசுப் பணியிலுள்ள 27/158 பெண்ணுக்கு வங்கி/அரசு/பொது நிறுவனங்களில் பணியாற்றும் சைவ இனத்தைச் சேர்ந்த வரன் தேவை. ஜாதக குடும்ப விவரங்களுடன் தொடர்பு கொள்ளவும். பெட்டி எண் : 21899

★ வடமாள், பாரத்வாஜ கோத்திரம், ரோகிணி நட்சத்திரம், வயது 22, தனியார் மருத்துவமனையில் கணக்காளராக பணிபுரியும் பெண்ணுக்கு திருவண்ணாமலை சுற்றுவட்டாரத்தில் உள்ள நல்ல வரன் தேவை. பெட்டி எண் : 21900

★ ஸ்மார்த்த கன்னட பிராமணர், hoyishala, காஸ்யப கோத்திரம், மகம், 31 வயதான, மாநில அரசில் பணிபுரியும், நல்ல குணமுள்ள, பட்ட-

நாரி பெண்ணிற்கு வரன் தேவை. உட்பிரிவுகள் சம்மதம். ஜாதகத்துடன், குடும்ப விவரத்துடன் விண்ணப்பிக்கவும். பெட்டி எண் : 21901

★ பவிஜா நாயுடு, எர்ணாகுளம், சதயம், 23 (151), P.D.C., Pre primary teachers course, telex, telephone operator, படித்து தற்சமயம் கேசராக உள்ள பெண்ணிற்கு டிகிரியும், நல்ல வேலையும் உள்ள வரன் கேரளா (அ) தமிழ்நாடு ஜாதகத்துடன் பதில் எழுதவும். பெட்டி எண் : 21902

★ ஆற்காடு முதலியார், 30 வயது, எஸ்.எஸ். எல்.சி. படித்த, அழகான, குடும்பப்பாங்கான பெண்ணிற்குப் படித்த நல்ல வேலையிலுள்ள அதே முதலியார் இனத்தைச் சேர்ந்த மணமகன் தேவை. 35 வயதிற்குள் இருப்பவர்கள் விண்ணப்பிக்கலாம். படித்து நல்ல தொழில் செய்பவர்கள் விண்ணப்பிக்கலாம். உயரம் 5 அடி. நிறம் சிவப்பு. பெட்டி எண் : 21903

★ வன்னிய க்ஷத்திரியர், 24, பி.காம்., சிவப்பு நிறம், 5'5" பெண்ணிற்கு படித்த வேலையிலுள்ள மணமகன் தேவை. உட்பிரிவுகள் சம்மதம். பெட்டி எண் : 21904

* Alliance invited from broad-minded employed, business Iyer for Ashtasahasram, Kasyapa Gothram, Bharani state government, employee 27/150/2200 fair, slim, widow having 3 years old son, widower divorcee preferable. subsect acceptable. Box No. 21905

* Vadagalai, Kouthsava Gothram/B.Com.,/24/ uthiratadi/5'2"/2000/State Govt. job. suitable alliance Bank/Insurance Co. Expected. Reply with horoscope. P. B. No. 21906

* Alliance invited from parents of qualified boys upto 31 years Non-vasista Gothram, Govt/Bank/Public or Private Sector Executive, Scientist/Engineers/ Professor for 25 years Vadama Tamil Iyer girl, charming, Ayilyam, domestically well trained, interested in Karnatak/Western Music, Veena instrument, M.Sc., (Physics), working as Scientific Officer (Central Govt) Bombay. Sub-sect acceptable. Contact Box No. 21907

★ சென்னையில் மத்திய அரசுத் துறையில் வேலை பார்க்கும் பாரத்வாஜ், வடமாள், 31/2200 பெண்ணிற்கு குறிப்பாக சென்னை அல்லது மாவட்ட தலைநகரங்களில் இன்ஷூரன்ஸ்/ பாங்கு/மத்திய அரசு/கல்லூரி பேராசிரியராக வேலை பார்க்கும் வரன் தேவை. பெட்டி எண் : 21908



* Alliance for Vadama, Garga, Puratady, fair, girl, M.A., nationalised bank, madras, age 32, 5'2", Rs.3500/- p.m. from decently. well employed graduate Iyer boys. Box No. 21909

* Telugu, Brahmin girl of Tamilnadu, Origin M.A. English, PGDES, Lecturer lohita, jeshta, 5'2" fair, 26 years, boy to be equally/more qualified. well settled, any south indian brahmin acceptable. Box No. 21910

* Alliance invited from Bank employed grooms for Iyer, Vadamal, Pooradam, 26/154 B.Com., CAIIB, Nationalised Bank employed girl. Box No. 21911

* Alliance invited from affluent saiva Vellala vegetarian professionals employed Abroad/India below 29 for 23/175 fair, tall, M.B.B.S., bride willing to pursue higher studies abroad. send details and horoscope to Box No. 21912

* Alliance invited (Father Kerala Chettiar, Mother Kerala Nair) for our daughter Fair/22/B.A./165 cms/swathi. Interested nair parents contact with horoscope and family details to Box No. 21913

* Sathada, Srivaishnava vegetarian girl, B.Com., 28 years 5" fair complexion, need graduate boy decently employed for decent middle-class marriage. Relatives in Madras and details to Box No. 21914

* Wanted bank, officers, engineers, central - state government officers, preferably in Thanjavur, Trichy for privately employed graduate girl, 22/158/Vadama, Koundinya, Uthirattathi parents both, only son, studying, twelth, thanjavur native. Box No. 21915

* Horoscope invited from Hindu, Vellar/Illathu Pillaimar educated employed youths for a girl 27 years, 155 cm, M.A., M.Phil., English I class, S.L.S.T. passed, convent educated Swathi/Viruchigalagnam/Thula Rasi and her only brotehr 28 yrs, 175 cm, Thiruvonam/M.A./Central Service, New Delhi. Mutual or separate contact Box No. 21916

* Alliance with horoscope invited for fair, affiluent and beautiful, trivandrum, Vadama, Iyer girl, Kowsika Gothram, 23, 153 cms, graduate, studying ICWA. star - Rohini with dosham in 7th keralites preferred. Box No. 21917

* Bridegroom, wated for Gongu, Vellala Gounder, girl 23 yrs, B.Sc., working in central government job. Horscope and bio-data invited from Engineer/Bank/Government Officer below 31 years of the same sect. Box No. 21918

* Wanted non-vadhoola well-employed Iyer boy for a smart 25 years old undergraduate employed girl, Visakam Fourth padam with Doshams. Respond with horoscope to Box No. 21919

* Brahmin, Vadamal, Bharadwaja, Chithirai, SSLC/23/5'2" domestically trained home loving fair, Girl, well to do family seeks alliance from employee/well settled businessmen, subsects no

bar. Contact with horoscope family details to Box No. 21920

* Alliance for fair religious musically inclined girl, 30, Bharadwajam, Poosam, B.Com., only daughter of affluent family intending to do the best for the girl contact Box No. 21921

★ பிரஹசரணம், பாரத்வாஜ கோத்திரம், சித்திரை நட்சத்திரம், வயது 29, பி.காம்., slim, good-looking, டைப்ரைட்டிங், ஆங்கிலம் ஹையர், பெண்ணுக்குப் பட்டதாரி வரன் தேவை. சீனியர் தமிழ்ப் பத்திரிகையாளரின் 3வது பெண். உட்பிரிவுகள் சம்மதம். பெட்டி எண் : 21922

★ பிரஹசரணம், கௌண்டின்யம், அஸ்வினி/ 32½/5'4"/நல்ல பர்சனாலிட்டி, பட்டதாரி, டிப்ளோமா படித்துள்ள பெண்ணுக்கு 35 - 37 வயதில் மத்திய, மாநில, தனியார் துறையில் வேலை பார்க்கும் வரன் தேவை. பெண்ணுக்கு தனியார்த் துறையில் வேலை கிடைக்கும். பெட்டி எண் : 21924

★ பிரஹசரணம், பாரத்வாஜ கோத்திரம், ஆயில்யம், 24/153/எம்.காம்., படித்து, ஆங்கிலம், தமிழ் டைப்ரைட்டிங் ஹையர் பாஸ் செய்த, மிகவும் குடும்பப்பாங்கான வீட்டு வேலைகளில் நன்கு தேர்ச்சி பெற்ற, சிவந்த பெண்ணிற்கு தகுந்த வரன் தேவை. ஜாதகம் மற்றும் குடும்ப விவரங்களுடன் தொடர்பு கொள்ளவும். பெட்டி எண் : 21928

★ கௌசிக கோத்திரம், மழநாடு, பிரஹசரணம், பூராடம் நட்சத்திரம், வயது 28, உயரம் 5', பி.காம்., மாநிறம், ரூ 3000க்கு மேல் மாத வருமானம், சென்னை மின்வாரியத்தில் நிரந்தரமாக பணிபுரியும் பெண்ணிற்கு மணமகன் தேவை. ஜாதகத்துடன் விண்ணப்பிக்கவும். பெட்டி எண் : 21929

★ தெலுங்கு பிராமணர், வெலநாடு, கௌசிக கோத்திரம், வயது 24, பி.எஸ்ஸி., தட்டச்சு, சுருக்கெழுத்து, தமிழ், ஆங்கிலம் தெரிந்த பெண்ணுக்கு பட்டதாரி மணமகன் தேவை. ஜாதகத்துடன் எழுதவும். பெட்டி எண் : 21930

★ செவ்வாய் தோஷம் உள்ள, முதலியார் இனத்தைச் சேர்ந்த எஸ்.எஸ்.எல்.சி., டைப்பிங் படித்த 27 வயது, 5.5 உயரம் உள்ள பெண்ணிற்கு அதே இனத்தைச் சேர்ந்த மணமகன் தேவை. பெட்டி எண் : 21932

★ தென்கலை வாதூல கோத்திரம், விசாக நட்சத்திரம், 27/5'3"/எம்.ஏ. எம்.பில்/பி.எட்.,/ பிரவீண் பிரசாரக்/தட்டச்சு முடித்துள்ள நல்ல குணமுள்ள குடும்பப்பாங்கான பெண்ணிற்கு வங்கி/அரசு/சிறந்த நிறுவனத்திலுள்ள வரன் தேவை. வடகலையும் சம்மதம். ஜாதகம் குடும்ப விவரத்துடன் எழுதவும். பெட்டி எண் : 21933

★ ஐயர்/வடமாள்/ஆத்ரேயம்/விசாகம் 2-ம் பாதம்/25 வயது/பி.ஏ./150 செ.மீ./செவ்வாய் 7-ல் உள்ள அழகான குடும்பப்பாங்கான பெண்ணிற்கு படித்த அரசு/தனியார்த் துறையில் நல்ல உத்தியோகத்தில் இருக்கும் மணமகன் தேவை. ஜாதகத்துடன் தொடர்பு கொள்ளவும். பி. வி. சுப்ரமணியன், 21, சண்முக நிலையம், காமராஜர் வீதி, ஈரோடு - 2.

* Wanted non-kousika boy for Thiruvonam/ 25/5ft/B.A. and Dip in Music working as music teacher, to K. Sridhar, 10, Arisikara St, Mylapore, Madras - 600 004.

* Vadama, Iyer, Bharadwaja, Pooram 21/165/2000 graduate, fair, slim girl seeks madras based decently employed allaiance below 26, reply with horoscope and family details to V. Rajagopalan, 2, Third Link St, LIC Nagar, Pammal, Madras - 600 075.

* Alliance for Iyer Brahacharanam, Kapi gothram, Moolam 3rd padam, 28/5'7" lecturer, Trichy. Subsect no bar. Decent early marriage. Horsocope to Vaidyanathan, 4, Seshapuram, Tennur, Trichy - 620 017

மணமகள் - மணமகன் தேவை

* Karkartha, Pillai, decent non-smokers, family, boy, Hastham, M.Sc., 29/173 Engineer in Riyadh, saudi arabia, sister Triuvonam, M.Sc., advanced post graduate diploma in computer applications 24/158 preferable NRI. Send family particulars, horoscope. muthual, separate considered. Box No. 30065

* Mutual/Separate alliance invited Vadama Kasya boy 35/B.com CAIIB/Bank officer/5'3"/hastam, sister 33/5'/SSLC/Makam mutual preferes. Box No. 30066



பாரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் சார்பாகப் பாரதன் அச்சகத்தில் ஆசிரியர் பொறுப்பேற்று அச்சிட்டு வெளியிடுபவர் : வி. முரளி. இணை ஆசிரியர் : மஞ்சுளா ரமேஷ்.
முகவரி : 47, ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காட்டுதாங்கல், சென்னை - 600 097. ஆசிரியர் குழு அலுவலகம் : 2345624; சர்க்குலேஷன் மானேஜர் : 2345623; விளம்பரம் - சந்தா : 2345622; டைரக்டர் : 2345621.
ஆண்டுச் சந்தா - உள்நாடு : ரூ. 72/-; வெளிநாடு - கப்பல் தபால் : ரூ. 200/-; விமானத் தபால் ரூ. 500/-.
ஆறு மாதச் சந்தா - உள்நாடு : ரூ. 36/-; வெளிநாடு - கப்பல் தபால் : ரூ. 100/-; விமானத் தபால் ரூ. 250/-.



தாம்பூலம் தருவது ஏன்?


வீட்டில் ஏதாவது விசேஷம் என்றாலே வரும் விருந்தினர்களுக்கு வெற்றிலை, பாக்கு, வாழைப் பழத்துடன் (சுமங்கலிகளுக்கு மஞ்சளும் சேர்த்து) தாம்பூலம் கொடுக்காமல் அனுப்புவதில்லை. ஒன்றுக்கொன்று சம்பந்தமில்லாமல் எங்கெங்கோ பிறந்த வெற்றிலையும், பாக்கும், வாழைப் பழமும் ஒன்றாகச் சேர்த்து தாம்பூலமாகக் கொடுக்கப்பட ஏதாவது தனியான காரணம் உண்டா? - தாம்பூலம் என்றாலே அதில் வாழைப் பழத்திற்குத் தான் முதல் உரிமை என்பது ஏன்? என்பன போன்ற சந்தேகங்கள் எழுந்தன. இத்துடன் நவராத்திரி நெருங்குகிறது. தினமும் ஒரு சுண்டல் விதவிதமாக 9 நாட்களும் நவராத்திரியில் வீட்டிற்கு வரும் விருந்தினருக்குத் தாம்பூலத்துடன் சுண்டலும் கொடுப்பது ஏன்? இவைகளுக்குத் திரு. பாலகிருஷ்ண சாஸ்திரிகள் விடையளிக்கிறார்.



''நாம் எதை எதையெல்லாம் கொள்கிறோமோ அவை அனைத்தையும் நம் ஆண்டவனுக்குப் படைக்கிறோம். சில ஆகாரங்கள், விதையுடன் கூடிய சில காய்கறிகள், பூமி அடியில் விளை பவைகளில் சில, வித்தியாசமான வாசனையுடைய பூண்டு போன்றவைகளை ஆண்டவனுக்குப் படைப்பதில்லை. இது நம் பழக்கத்தில்தான். சாஸ்திரத்தில் எதுவுமில்லை. 'பூகிபலம்' எனப்படும் பாக்கையும், நாகவல்லி எனப்படும் வெற்றிலையையும் கற்பூரம் எனப்படும் வாசனைப் பொருட்களையும் சூர்ண எனப்படும் சுண்ணாம்புடன் சேர்த்துக் கொடுப்பது வழக்கம்.

வாழைப் பழம் கொடுக்கப்படுகிறது என்றால் அது எல்லா வகையான பருவங்களிலும், எந்த இடத்திலும் வெகு எளிதில் கிடைக்கக் கூடியது - விலையும் மலிவு. அதில் சத்துக்களும் அதிகம். அந்தக் காலத்தில் கிராமங்களில் ஒவ்வொரு வீட்டிலும் வாழை மரங்களும், தென்னை மரங்களும் இல்லாமல் இருக்காது. பழத்திற்கு என அவர்கள் எங்கும் தேடி ஓடி கடையில் வாங்கியது கிடையாது. ஆனால் அன்று அவர்கள் கொடுத்ததே இன்றளவும் வழக்கமாகி நாமும் கொடுத்து வருகிறோம். வீட்டில் விளையும் பொருட்கள்தான் (அது பூவானாலும், பழமானாலும்) முதல்பட்சமாகக் கருதப்படும். கடையில் சென்று வாங்குவது இரண்டாம் பட்சம்தான். ''வெற்றிலையைக் கன்னி என்பார்கள். இது பூக்காது, காய்க்காது. இதன் இலையும் பழுக்காது. அதனால்தான் இதைத் தருகிறார்கள்'' என்றார் தவத் திரு. பன்றிமலை ஸ்வாமிகள் ஒருமுறை.

நாம் தினசங்களுக்குச் செய்யும் காய்கறிகளை 'ஃபைபர்புட்' (Fibre Food) என்றும்



இவைகளை உண்பதால் 'சர்க்கரை' வியாதி வ ர ா து எ ன் று ம் மேல் நாட்டில் கண்டுபிடித்துள்ளதாகக் கூறு கின்றனர்.

கண்டல் என்பது வெகு கலபமான நைவேத்தியம். அந்தக் காலத்தில் கிரா மங்களில் வீடுகளில் நவதான்ய வகைகள் நிரம்பி இருக்கும். புரட்டாசி மாதம் என்பது மழைக் காலமாகும். அந்த மழை நேரத்தில் கடைக்கு ஓடி, தேடியலைந்து பொருட்களை வாங்கி வந்து நைவேத் தியத்திற்கான பண்டங்களைச் செய்வதும் கடினம். எனவே வீட்டிலுள்ள நவதானி யங்களில் வகைக்கு ஒன்றாகத் திவமும் கண்டல் வைத்து - அம்பாளுக்கு நைவேத் தியம் செய்து, வந்தவர்களுக்கும் அதையே கொடுத்தனர். இன்று நாம் அவர்கள் அடிசுவட்டிலேயே சென்று அவர்கள் செய்தவைகளையே தவறாமல் கடைப் பிடிக்கிறோம். குலஆசாரம், தேச ஆசாரம், சதா ஆசாரம், ஸம்பிரதாயம் - இவை கள்தான் இருக்கின்றன. அவர்களுக்கு எளிதாகக் கிடைத்தவைகளைக் கொண்டு அன்று அவர்கள் எளிதாகச் செய்தவை களையே குல ஆசாரமாக (குடும்ப வழக்க மாக) மேற்கொண்டு - பழைய சம்பிரதா யங்களைத் நாம் நாம் கடைபிடித்து வருகிறோம்'' என்றார் திரு. பாலகிருஷ்ண சாஸ்திரிகள்.

– வைதேகி தேசிகன்



மீந்தவற்றைப் புதுப்பிக்க 'சேமியா டிலைட் :

மீந்து போன சேமியா உப்புமாவுடன் வெந்து மசித்த உருளைக் கிழங்கைச் சேர்க்கவும். எண்ணெயில் வெங்காயத்தை வதக்கி உப்பு, வற்றல் பொடி, சேமியா, உருளைக் கிழங்கு கலவையைச் சேர்த்துக் கிண்டவும். கீழே இறக்கி ஆறியபின் விருப்பமான வடிவில் தட்டி மைதா கார்ன் ஃப்ளவர் சேர்த்துக் கரைத்த மாவில் முக்கி தோசைக்கல்லில் எண்ணெய் ஊற்றி வார்த்தெடுக்கவும்.

– வனஜா

இம்மாத இல்லத்தரசி

சமையல் கூப்பன்


பொருள் : குளிருக்கு இதமான உணவு கடைசித் தேதி : 15.9.92

என்ற தலைப்பில் சமையல் குறிப்பை இத்துடன் அனுப்பியுள்ளேன். இச்சமையல் குறிப்பு இதுவரை எந்தப் பத்திரிகையிலும் எந்தப் புத்தகத்திலும் வெளியானதல்ல என்று உறுதி கூறு கிறேன்.

கையொப்பம்


பணத்தைப் பார்த்தால் பழுது!

தரத்தை பார்த்தால் என்றும் புதிது !!



தரத்தைப் பார்ப்பவர்களோ
சேலம் ஸ்டேயின்லெஸ்ஸினால்
தயாரிக்கப்பட்ட தரமான
ஜெயின் பிராண்ட்
எவர்சில்வர் பாத்திரங்களையே
வாங்குகிறார்கள். ஏனெனில்,
அவை
* உடைவதில்லை
* தெறிப்பதில்லை
* துரு பிடிப்பதில்லை

பணத்தைப் பார்த்து
வாங்கினால்...
பாத்திரமெல்லாம் பழுது !
உடையும் !... தெறிக்கும் !
ஏன் துரு கூட பிடிக்கும்
உணவில் விஷமேறும்
வாய்ப்பும் நீடிக்கும் !



உறுதியோடு எக்காலத்திலும்
புதுமை மாறாமல் மின்னுகின்றன.

உங்கள் தேர்வு

சிறிது வித்தியாசப்படும் பணத்துக்காகவா ?
சீரான குடும்ப ஆரோக்யத்துக்காகவா ?
முடிவெடுப்பவர் நீங்கள் !

Jain

ஜெயின் ஸ்டெயின்லெஸ்

46, ரகுநாயகலு தெரு, சென்னை - 600 003. போன் : 565490/568545

Range of Jain brand products

* Copper Bottom Utensils * Dinner Sets * Decorted Flowered Utensils
* Teaums (Insulated with PUF) * Water Filters and many more Kitchenware

JAC

எல்லா முன்னணி எவர்சில்வர் பாத்திரகடைகளிலும்
ஜெயின் பிராண்ட் தயாரிப்பு பாத்திரங்கள் கிடைக்கும்.

உறக்கமற்ற இரவுகளுக்கு உடனடி நிவாரணம்.



6-டு-6. கொசுக்களிடமிருந்து முழு இரவுப் பாதுகாப்புக்கு.

ஜப்பானின் சுமிடோமோ கம்பெனியின் மூலப்பொருளுடன் வரும் 6-டு-6 மட்டுமே நீண்ட நேரம் நிலைத்து நிற்கிறது. எனவே கொசுக்கடியில்லாத நிம்மதியான நித்திரை பெற 6-டு-6 பாதுகாப்பை நாடுங்கள்.

மிகச்சிறந்த பலன்களுக்கு ஜப்பானில் தயாரிக்கப்பட்ட தெர்மிஸ்டர் கொண்ட 6-டு-6 எலக்ட்ரானிக் வேப்பரைஸரையே பயன்படுத்தவும்.

6 TO 6
SIX-TO-SIX

இரவிலே இல்லை கொசுக்களின் தொல்லை.

50 வருடங்களுக்கும் மேலாக உங்களைப் பாதுகாத்து வரும்
கிரௌன் பிராண்ட் பூச்சிமருந்து தயாரிப்பாளர் வழங்குவது.

Enterprise/Blr/SFL/42TM

இவர்கள் ஷட்டு

நம் இல்லத்தில் நமக்காக, நம் குழந்தைகளின் க்ஷேமத்திற்காக நமக்குப் பிடித்தமான முறையில் கொலு வைத்துக் கொண்டாடுவது என்பது சகஜமான விஷயம். ஆனால் சமூக நலத் தொண்டு நிறுவனங்கள், அமைப்புகள் போன்றவை, நம்மை அண்டி வந்த ஆதரவற்ற குழந்தைகளுக்காக, பெண்களுக்காக, வயது முதிர்ந்தோர்களுக்காகக் கொண்டாடும் விழாக்கள், பண்டிகைகள், அதற்காக அந்நிறுவனங்கள் மேற்கொள்ளும் சிரத்தை எடுத்துக் கொள்ளும் சிரமங்கள் ஆகியவை போற்றிப் பாராட்டப்பட வேண்டிய விஷயம்.

சில தொண்டு நிறுவனங் களில் நடைபெறும் நவராத்திரி விழாவினைப் பற்றி -

5 கொலு



சிவானந்த குருகுலத்தில்

கொலு விழா :

"1985 இல் தாம்பரத்தில் கிருஷ்ணன் கோவில் பிரதிஷ்டை செய்வதற்காக ஜெயேந் திர சரஸ்வதி சுவாமிகள் எழுந்தருளிய போது, எங்கள் குருகுலத்திற்கும் வருகை புரிந் தார்கள். எங்கள் ஆசிரமத்தில் அன்று வண்டு வண்டாய் குழந்தைகள் ஆடிப் பாடியதைப் பார்த்து மகிழ்ச்சிப் பரவசமான பெரியவர், "இங்கு கொலுவெல்லாம் வைக்கும் வழக்கம் உண்டல்லவா?" என்று கேட்க நான்

'இல்லை' என்று தயக்கத்துடன் பதிலளித்தேன்.

'சங்கர மடத்திலிருக்கும் பொம்மைகளை நான் கொடுத்தனுப்புகிறேன். குழந்தைகளுக்கு ஒரு குறைவும் வைக்காது எல்லாப் பண்டிகைகளையும் ஆனந்தமாகக் கொண்டாடுங்கள். இதன் மூலம் நம் இந்து மதத்தின் தாத்பர்யம், வழிபாட்டு முறை, இறையுணர்வு போன்றவை குழந்தையிலிருந்தே அவர்கள் உணர்ந்திட முடியும்' என்று சொன்னதோடல்லாமல் சென்றவுடன் பொம்மைகளை அனுப்பியும் வைத்தார்கள். இன்றைக்கு எங்களிடம் நாங்கள் போற்றிப் பாதுகாத்து வரும் அத்தனை பெரிய பொம்மைகளும் 'அவர்கள் அனுப்பியதுதான்' என்றார் ஆசிரமத்தின் செயலாளர் லக்ஷ்மி இராஜாராம்.

''எங்கள் மாமியார் இந்நிறுவனத்தை நடத்துகையில் வீட்டில் நான் கொலு வைத் துக் கொண்டாடுவது வழக்கம். ஆனால் ஆசிரமத்துக் குழந்தைகள் வெகு ஆர்வத்தோடு பொம்மைகளைப் பாங்குற வைத்து, பார்க், தோட்டம், மலை என்று கட்டி ஆனந்தப்படு வதைப் பார்த்ததும் நான் எங்கள் வீட்டிலிருந்த பொம்மைகளை இங்கு கொடுத்து இவர்களுடனே நானும் கொண்டாடுவதை வழக்கப் படுத்திக் கொண்டேன். அதுமட்டுமல்ல. நவராத்திரிக்காக நாங்கள் வாங்கித் தரும் புது வளையல்களையும் ரிப்பன்களையும் அணிந்து கொண்டு அவர்கள் மற்ற இல்லத்தரசிகளைக் கூப்பிடச் செல்வதும், வந்தவர்களை பெரிய மனுஷிகளைப் போல வரவேற்று உபசரிப்பதையும் பார்க்கும் போது நமது மனம் மகிழ்ச்சியால் நிறைந்து போகும். சரஸ்வதி பூஜையன்று தொண்டு மனப்பான்மையுள்ளவர்கள் எல்லாவித ஹோமங்களும் இங்கு வந்து செய்வதும் சிலர் கன்னிப் பெண்களை அழைத்துச் சென்று புத்தாடைகள் வாங்கிச் சிறப்பிப்பதும் உண்டு. எங்கள் இல்லத்தில் கிட்டத்தட்ட 120 க்கும் மேற்பட்ட குழந்தைகள் இருக்கிறார்கள். அவர்கள் எல்லோரும் ஒற்றுமையாக கும்மாளமிட்டுக் கொண்டு குதூகலமாய்க் கொண்டாடும் போது நவராத்திரி விழா களைகட்டிவிடும்!



முதியோர் இல்லமான விஷ்ராந்தியில்...

''கிட்டத்தட்ட 90 க்கும் மேற்பட்ட முதியோர்கள் எங்கள் இல்லத்தில் இருக்கிறார்கள். இதில் பாதிப் பேர் நடக்கக் கூட முடியாத நிலையில் படுத்த படுக்கைதான். நடமாடும் சில முதியோர்களும் உறவினர்கள் இல்லத்திற்குச் சென்றால்கூட 'பூஜையன்று வந்துவிடுவேன்' என்று சொல்வார்கள். 'தங்கள் வீட்டு விசேஷத்திற்குத் தாங்கள் இல்லாமல் காரியமா?' என்கிற ஒரு அன்னியோன்னிய ஈடுபாடுதான் காரணம். இந்த நினைப்பு இங்குள்ள ஒவ்வொருவர் உள்ளத்திலும் உண்டு' என்கிறார் விஷ்ராந்தியில் இருக்கும் திருமதி செல்லம்மா.

விஷ்ராந்தியை நிர்வகிக்கும் மண்டே சாரிடி கிளப்பின் செயலாளரான திருமதி சாவித்திரி வைத்தி, 'பொம்மைகளை வைத்துக் கொலு கொண்டாடுகிற குதூகல வயதினைக் கடந்தவர்கள் இவர்கள். மேலும் பெரும்பாலும் வறுமை காரணமாக, நம்மை அணுகியவர்கள். ஆனால் எல்லோரும் சாதாரணமாய்க் கொண்டாடுகிற சரஸ்வதி பூஜை, ஆயுத பூஜை பண்டிகைகளை இவர்கள் மிகுந்த

சிரத்தையோடு பணிகளைத் தங்களுக்குள் பகிர்ந்து கொண்டு இந்த வயதிலும் அன்று பம்பரமாய் வேலை செய்வதைப் பார்த்தால் ஆச்சரிய மாய் இருக்கும். பூஜைக்கு வேண்டிய அனைத்துக் காரியங்களுடன் நடக்க முடியாதவர்களைக் கையைப் பிடித்து, பஜனை பாடும் இடத்திற்கு அழைத்து வருவது, படுத்த படுக்கையாய் இருக்கும் முதியவர்களுக்கும் பாடல்கள், ஸ்தோத்திரங்கள் கேட்கும் வகையில் 'மைக்' ஏற்பாடு செய்வது என்று எல்லா ஏற்பாடுகளிலும் ஈடுபடுத்திக் கொள்வதைப் பார்த்தால் 'இழப்பு' என்பது இவர்களை இந்நிலைக்கு ஆளாக்கினவர்களுக்குத்தான் என்று தோன்றும்'' என்றார்.

விஷ்ராந்தியில் தங்கியிருக்கும் திருமதி ரங்கநாயகி அம்மாள், ''அந்தக் காலத்திலே எல்லாம் கொலுவிற்குக் கூப்பிட்டுத்தான் போகணும் என்கிற நியதி எல்லாம் கிடையாது. நாங்கள் எங்கள் தோழிகளுடன் கும்பலாய் வீடு வீடாகச் சென்று தெரிந்த சில தெய்வப் பாடல்களைச் சி றி து ம் தயக்கமில்லாமல் இரைந்து பாடிவிட்டுக் கை நிறையச் சுண்டலுடன் இரவுதான் வீட்டுக்கு வருவோம். என் வய தினை ஒத்த வயதானவர்களுடன் நான் கூட்டுப் பிரார்த்தனையில் ஈடுபடும்போதெல்லாம் அந்த நாட்கள்தான் என் நினைவுக்கு வரும்'' என்றார்.




அரசினர் மகளிர் காப்பகத்தில் : -

வறுமைக் கோட்டுக்குக் கீழே உள்ள பெண்கள் (30க்கும் அதிகம்) இங்கு கலை நயத்துடன் கொலு வைக்கும் அழகினைக் கண்டால் அயர்ந்து போவீர்கள். 'இவர்களுக்குள்ளே இத்தனை கலை ஆர்வமா?' என்று கூறும் அளவுக்கு வியக்கச் செய்கிறார்கள். சேவா ஸதனத்தின் துணை மேலதிகாரி திருமதி ராஜலக்ஷ்மி, ''1948 இல் இது ஆரம்பிக்கப்பட்டு பின் அரசுப் பொறுப்பேற்ற நாளிலிருந்து எல்லா மத பண்டிகைகளும் பாகுபாடின்றி கொண்டாடினாலும் தென்னாட்டில் மிக நீண்ட ப ண் டி கை ய ா ன (9 நாட்கள்) நவராத்திரி விழாவில் இங்குள்ள பெண்கள் காட்டும் உற்சாகமே தனிதான். இவ்விழா விற்கு ஏனைய தனியார் சமூக நிறுவனங்கள் பொம்மை முதலியன வாங்கிக் கொடுத்து உதவி புரிந்தாலும் அரசும் ஒவ்வொரு வருடமும் புதுப்புது பொம்மைகளைத் த வ ற ா து வாங்கிக் கொடுக்கிறது. ஒரு முறை நாங்கள் அழைத்ததின் பேரில் இங்கு வந்திருந்த முன்னாள் அமைச்சர் திரு. சௌந்திரராஜனும், அவர் மனைவியும் கொலுவில் பெண்கள் தத்ரூபமாகச் செய்திருந்த இமய மலைப் பனி லிங்கங்களைப் பார்த்து அதிசயித்துப் போய், உடனே ஒரு வெள்ளியினாலான திருப்பதி வெங்கடாசலபதி படத்தினைப் பரிசாக அளித்தார். 14 வயதிலிருந்து 21 வயது வரை பல மதத்துப் பெண்கள் ஒன்றாய் வாழும் எங்கள் இல்லத்தில் கோகு லாஷ்டமியும் சரி, 'நல்ல வெள்ளி' (குட் ப்ரைடே)யும் சரி, பாகுபா டின்றிக் கொண்டாடுவோம். இதனால் எல்லா மதத்து வழிபாட்டு முறைகளும் அதன் தாத்பர்யங்களும் அறிந்து கொள்ள முடிவதோடு ஓர் ஒற்றுமையுணர்வு, மனிதநேயம் இவர்களிடம் மலர்கிறது. இத்தகைய உணர்வுகளைப் பொது இல்லங்களான இவை போன்ற அமைப்புக்களில்தான் ஆத்மார்த்தமாகப் பெற முடியும்' என்றார் திருமதி இராஜலக்ஷ்மி.

– கீதா

நாற்பது வயதினிலே



'நாற்பது வயதினிலே...' ஏற்பட்ட அனுபவங்கள் பற்றி இன்ஃபார் நிறுவனத்தினர் கேள்வித்தாள்களைச் சில ஊர்களில் விநியோகித்ததை இரண்டு இதழ்களுக்கு முன் அறிவித்திருந்தோம், இல்லையா? அதில் பரிசு பெற்ற கட்டுரைகள் -

கேட்கப்பட்ட கேள்வி : 'நாற்பது வயதினில் 'மெனோபாஸ்' சம்பந்தமாக உங்களுடைய உடல், மனோரீதி யான அனுபவங்கள் என்ன?' என்பதுதான்.

முதல் பரிசு :

எல்லா பெண்மணிகளுக்கும், வருகிற விருந்தாளி, என்னுடைய 12 வயதில், மாதம் ஒருமுறை, 'விசிட்' செய்து 3 நாட்கள் என்னுடன் தங்குவது வழக்கம். ஒவ்வொரு பெண்மணிக்கும் இந்த வி.ஐ.பி. பற்பல தொல்லைகள் தருவது வழக்கம்தான். அதிர்ஷ்டவசமாக என் 'விருந்தாளி' என்னுடைய 40வது வயது வரை அப்படி ஒன்றும் குறைகூறும் அளவுக்கு எவ்விதத் தொல்லையும் தரவில்லை. என்னுடைய கன்னிப் பருவத் திலும், மணவாழ்க்கையிலும், இரண்டு குழந்தைகளின் பிரசவத்தின் போதும், குடும்பத் தலைவியாய் மூன்று வருடங் களுக்கு ஒருமுறை மூட்டை முடிச்சுடன் மாற்றலாகி புதிய ஊர், தட்பவெப்ப நிலை, புதிய மனிதர்கள் என்று அலைந்த பொழுதும், இந்த வி.ஐ.பி. எனக்கு அதிகம் கஷ்டம் தராமல் ஒத்துழைத்தது என்னவோ உண்மை. இத்தனை வருடங்கள் 'Carefree'யாக இருந்ததை 'Whisper' ஆகச் சொல்ல வேண்டியது இல்லையே?

'இடத்தைக் கொடுத்தால், மடத்தைப் பிடிப்பது போல் 30 வருடங்களாக என் னுடன் ஒத்து ழைத்து, அதிகம் கஷ்டங்கள் தராது இருந்த 'விருந்தாளி' இப்பொழுது தொல்லைதரும் வழக்கமாக்கிக் கொண்டது. ஒவ்வொரு மாதமும் 10 நாட்கள் போல் தங்க



அட்டைப்படக் கட்டுரை



ஆரம்பித்த போது, நான் கோபம் கொள்ளவோ, சலிப்படையவோ இல்லை. மனத்தைப் பல வழிகளில் திருப்பி, விருந்தாளியை மதிக்கவோ, உபசரிக்கவோ இல்லை. நிறைய புத்தகங்கள் படித்தேன். சிநேகித வட்டாரத்தை விரிவாக்கினேன். மனத்தை ஒருநிலைப்படுத்தி 'தியானம்' செய்ய ஆரம்பித்தேன். ஆனால், 'சூடு, சுரணை' இல்லாத விருந்தாளியோ, என்னை விட்டு விலகமனமில்லாது, பிடிவாதத்துடன் மாதத்தில் இரண்டு 'விசிட்' செய்து, என்னால் கோவில், குளம் என்று செல்லவோ, பண்டிகை, கலியாணம், பொது நிகழ்ச்சிகள் என்று கலந்து கொள்ளவோ முடியாதபடிக்கு முட்டுக் கட்டை போடப் பார்த்தது. எத்தனை தடங்கல்கள் இருப்பினும் எதிர்த்துப் போராட துணிந்து விட்டேன். இந்தச் சமயத்தில், 3 வருடங்கள் என் கணவருக்கு, ரயில்வேயில் வேலை இருந்தமையால், அவர் 'டூர்' செல்லும் பொழுது நானும் போக ஆரம்பித்தேன். இப்போது விருந்தாளி 'விகவரூபம்' எடுத்துப் பலவிதங்களில் உபாதைகள் கொடுக்க, நானும் 'கை,கால்' குறைந்து, தளர்ந்து, 'மனவேதனைக்கு உள்ளானேன். இத் 'தலை வேதனை'யிலிருந்து தப்பிக்க, என் டாக்டர் சிநேகிதியின் உதவியை நாட, அவளும் கஷ்டங்களைப் புரிந்து கொண்டு, தைரியமளித்தாள்.

''இனி உன் விருந்தாளியை நான் கவனித்துக் கொள்கிறேன்'' என்று அபயம் அளித்தாள். ஆகாரத்துடன் சில காப்பான மருந்துகளைக் கொடுத்தும், தொந்தரவுகளை அடக்கத் 'தூக்க மாத்திரை' கொடுத்தும், அடக்கப் பார்த்தாள். சில சமயம் 'அடம்பிடித்து' ஆர்ப்பாட்டங்கள் செய்த இந்த விருந்தாளிக்கு 'ஊசி'யைக் காட்டியும் குத்தியும் பயமுறுத்தினாள். பல வருடங்கள் என்னுடன் 'அட்டையாக' ஒட்டிக் கொண்டிருந்த 'விருந்தாளி'யைப் புறமுதுகு இட்டு ஓட வைத்து விட்டாள். இப்பொழுது நான் 'Stayfree' யாக இருக்கிறேன்.

- விசாலம் நாராயணஸ்வாமி, கோவை.

இரண்டாம் பரிசு :

''நாற்பது வயதில் நாய் குணம்...அதை நாம்தாம் தெரிந்து நடந்துக்கணும்'' என்று கைபிடித்த கணவன் பாட, ''பெண்ணென்றால் பேயும் இறங்கும். இங்கு பெண்ணே பேயானால் பெற்ற பிள்ளைகள் எங்கு போகும்?'' என்று பெண்ணும், பிள்ளைகளும் வயிற்றெரிச் சலைக் கிளற நாற்பத்தைந்தின் ஆரம்பத் தில் நின்ற நான், அந்த வயதிற்கே உரிய ''மெனோபாஸ்'' தொந்திரவுடனும், அத னுடன் இணைத்துக் கூறப்படுகின்ற ''உடல் சோர்வு, மனச்சோர்வு, விரக்தி, கோபம், தூக்கமின்மை, பசியின்மை என்ற எல்லாவிதமான உபாதைகளுடனும் அவதியுற்றுக் கொண்டிருந்தேன்.

வீட்டு வேலைகளில் உதவ பெண்ணை அணுக, பிரச்னைகளைத் தீர்க்க பிள்ளைகளை அணுக, மனம் விட்டுப் பேச மணாளனை அழைக்க, மேற்சொன்ன பாடல்களே கிண்டலாக தாளத்துடன் வந்து என்னை மேலும் ஆயாசப்பட வைத்தன. உடல் அளவில், மனத்தளவில் மிகவும் தளர்ந்த நான் தற்கொலையே தனக்குதவி என்ற அளவிற்குப் போக நேரிடுகையில், கடவுளே நேரில் வந்து கண்ணைத் திறந்து விட்டது போல் நெருங்கிய பள்ளித் தோழி ஒருத்தியை நெடுநாட்கள் கழித்தபின் சந்தித்தேன். அவளிடம் மனம் திறந்து பேச,



அவள் கூறிய புத்திமதிகள் என் வாழ்வில் மீண்டும் ஒளியேற்றிய நவரத்தினங்கள். அதை சகோதரிகளுக்கும் கூற விரும்புகிறேன்.

1. இரண்டு மாதத்திற்கு ஒருமுறை மருத்துவ பரிசோதனை செய்து கொள்ளுதல்.



2. உடல்நலத்திற்கென சத்துள்ள ஆகாரம் உட்கொள்ளுதல்.

3. இயற்கையின் இந்த மாற்றம் இன்னல் தருவதற்கு அல்ல. மாறாக பின்னால் இன்பம் தருவதற்கே என்று மனதை மாற்றிக் கொள்ளுதல்.

4. நடுவயதை அடையும் நம்மை, பார்க்கும் மற்றவர்கள் தாமாகவே மரியாதையுடனும், பண்புடனும் பழகுவார்கள். அவர்களுக்கு நாம் சிறந்த வழிகாட்டியாக விளங்க வேண்டும் என்று உறுதி கொள்ளுதல்.

5. ஆண்டொன்று போனால் வயது ஒன்று போகும். அதற்கு முன் சாதிக்க என



பல உள்ளது என்று மனத்தை உறுதிப்படுத்தி எல்லாம் இன்பமயம் இயற்கையினாலே நிகழும் இந்த மாற்றம் எனத் தினமும் காலை எழுந்தவுடன் பலமுறை கூறி சுறுசுறுப்புடன் செயல்படுதல்.

6. கணவன், பிள்ளைகள் கேலி செய்யும் போது கோபப்படாமல் நாமும் பதிலுக்கு அவர்களைக் கிண்டல் செய்து, சூழ்நிலையை சந்தோஷமாக்குதல்.

7. நமக்குத் தெரிந்த பொழுதுபோக்கு அம்சங்களில் மனதைச் செலுத்தி ஒரு நிலைப்படுத்துதல்.

8. நம் வயதை ஒத்த பெண்களுடன் மனம் விட்டுப் பேசி, அவர்களின் குறைகளை நீக்க வழிசொல்கையில் நம் பிரச்னைகள் பனி போல் விலகுவது கண்டு மகிழ்தல்.

9. இறுதியாக மனதை ஒருமுகப்படுத்தி ஆண்டவனை தியானித்தல்.


இந்த ஒன்பது அறிவுரைகளையும் கடைப்பிடித்து இழந்த மகிழ்ச்சியை மீண்டும் பெற்று எனது 52 வயது வரை மெனோபாஸ் தொந்திரவை சமாளித்து இப்போது மங்கையர் மனம் வைத்தால் மலையும் மடுவாகும் என்று மனம் உறுதி பெற்று இருக்கிறேன்.

ருக்மணி நாராயணன், கும்பகோணம்.

மூன்றாம் பரிசு :

மாதா மாதம் வீட்டுக்கு விலக்காகி பண்டிகை நாட்கள், முக்கியமான கல்யாணம் போன்றவற்றில் கலந்து கொள்ள முடியாமல் போகும் போது இந்தச் சனியன் நின்று போய் விடாதா என்று நினைப்பதுண்டு. அந்த நாளும் வந்தது. அதிகம் தொல்லைப் படுத்தாமல் 28 நாள், 40 நாள், 70 நாள் என்றாகிக் கடைசியில் நின்று போன போது நான் பட்ட சந்தோஷம்! அம்மம்மா! நல்லவர்களுக்கு 40ல் போகும் என்பார்கள். நாம் அவ்வளவு ரொம்ப நல்லவள் இல்லை போலிருக்கிறது. அதனால்தான் 46ல் நின்று போய் இருக்கிறது என்று நினைத்தேன். பிறகுதான் ஆரம்பித்தது அந்த வேதனை.


எப்பொழுது பார்த்தாலும் அனல் மேல் நின்று கொண்டிருப்பது போல் உச்சந் தலை, முதுகு எல்லா இடங்களில் சூடு பரவும். ரோடில் நடந்து போய் கொண்டிருக்கும் போது இந்த மாதிரி சூடு பரவ ஆரம்பித்து மயக்கம் போட்டு விடுவோமோ என்று பயப்படுவேன். இந்த வேதனையை உணர மட்டுமே முடியும். எதனால் என்று தெரியாது. எந்த டாக்டரிடம் போவது என்று தெரியாமல் விழித்தேன். வீட்டில் உள்ளவர்களுக்கோ என் நிலை கேலிக்குரிய பொருளாகி விட்டது. 'பார்! பார்! இப்பொழுது அம்மா தலையில் கை வைத்துக் கொண்டு உட்கார்ந்து விடுவாள்' என்றும், 'அம்மாவின் உடம்பு சூட்டிலேயே சமையலை முடித்து விட



புதிய
பட்டு
ஜவுளி
ஷோரூம் (A/C)
நவராத்திரி, தீபாவளி
மற்றும் திருமணத்திற்கு
தேவையான அனைத்துரக
பட்டு ஜவுளிகளும்,
பாவாடை ரகங்களும்
நூல் ஜவுளிகளும்
குறைந்த விலையில்
சிறந்த ரகங்கள்
கிடைக்குமிடம்
மகாலட்சுமி
சில்க்ஸ்
(பூநகல்
கல்யாண
மண்டபம்
காம்ப்ளக்ஸில்)
13/1, தெற்கு
போக் ரோடு,
தி.நகர்,
சென்னை-17.
தொலைபேசி :
444664.



கேசத்தின் மென்மையில்
இதமான கனவுகள்.
பஜாஜ் சேவாஸ்ரம்
ஆல்மண்ட் ட்ராப்ஸ்
கேசத் தைலம்



லாம்' என்றும் கிண்டல்! 28 நாட்களுக்கொருமுறை வீட்டுக்கு விலக்காவதே மேல் என்ற நிலை. ஒன்றரை வருடம் இந்த மாதிரி கஷ்டப்பட்டு பிறகு காரணம் அறிந்து டாக்டரிடம் சென்று சிகிச்சை பெற்று இப்பொழுது கொஞ்சம் தேவலை. மெனோபாஸ் பற்றிய விழிப்புணர்வு பெண்களிடம் .அவசியம் தேவை.

- ஜெயலக்ஷ்மி, சென்னை - 93.

மேலும் சில சுவையான கட்டுரைகள்

நாற்பது வயதுக்கு மேற்பட்ட வயதுடைய பெண்ணின் மெனோபாஸ் பிரச்னையைக் கண்டவிதம், சமாளித்த பாங்கு - அதை நினைக்கும் பொழுது மனதில் ஒரு வித சங்கடமான நினைவுகளே படிகின்றது. இன்று நினைத்தாலும் நெஞ்சில் நிறைந்து, மனக்கண்ணில் அக்காட்சி தெரிகின்றது. நெகிழ்கின்றது.

ஒரு சமயம் நாங்கள் (வீட்டில் உள்ள பெண்மணிகள்) மட்டும் உட்கார்ந்து பேசிக் கொண்டிருந்தோம். வீட்டுப் பிரச்னை - அதுவும் வேலைக்காரியைப் பற்றிய பிரச்னை. அந்தப் பெண்மணி யாரும் கிடையாது. எங்களுடைய அருமை மாமியார் அவர்கள்தான். நாங்கள் வேலைக்காரியிடம் சரியாக வேலை வாங்குவதில்லை. அவளுடைய வேலைகளை எல் லாம் நாங்களே செய்கிறோம் என்பது குற்றச்சாட்டு. அவளுக்கு மாதா மாதம் பணம் கொடுக்கிறோம். இரண்டு நேரம் காப்பி. காலையில் மட்டும் டிபன். இரவு மீதி ஏதேனும் இருப்பின் கொடுக்கிறோம். தீபாவளி பண்டிகை சமயம் புடைவை - ஜாக்கெட் இரண்டு மாதச் சம்பளம். இவ்வளவும் கொடுத்து விட்டு அவளிடம் சரியாக வேலை வாங்குவது கிடையாது என்று சரமாரியாக திட்டித் தீர்த்து விட்டு எழுந்து நின்றாரோ இல்லையோ பக்கெட்டில் நீர் ஊற்றினாற் போல் அறை முழுவதும் இரத்தப் போக்கு ஓடலாயிற்று.

அந்தச் சமயம் வீட்டினுள் நுழைந்த வேலைக்காரி இதைப் பார்த்தவுடன் ஓடிப் போய் சாக்கு கொண்டு வந்து போட்டு, எங்கள் மாமியாரை கைத்தாங்கலாக பாத்ரூமிற்கு அழைத்துச் சென்று சுடுநீர் வைத்துக் குளிக்கச் செய்தார். பின்னர், வந்து அறை முழுவதையும் சாக்கினால் துடைத்து எடுத்து, சர்பினால் ஒரு முறையும், பின்னர் டெட்டால் நீரினால் மறு முறையும் அறை வாசல், கதவு எல்லாவற்றையும் கழுவிச் சுத்தம் செய்தாள். இதைக் கண்ட எங்கள் மாமியார் கண்ணில் நீர் அருவியாகக் கொட்டத் தொடங்கியது.

நன்றி உணர்ச்சியை எப்படிக் காட்டினார் என்பதை விட பின்னர் அவர் எப்படி நடந்து கொண்டார் என்பதே முக்கியம். வீட்டில் அவளை ஒருத்தியாகவே நினைக்கத் தொடங்கி விட்டார். மகள் செய்யாததை, மருமகள் செய்யாததை, அந்தப் பெண்மணி (வேலைக்காரி என்று எப்படிச் சொல்ல முடியும்!) செய்தது உயிர் உள்ள வரை எங்கள் நெஞ்சை விட்டு அகலாத நினைவுகளில் ஒன்றாகி விட்டது. உறவுகள் கூட துணிந்து செய்யத் தயங்கும் காரியத்தைத் துளிகூட அருவருப்புக் காட்டாது, சங்கடமான சூழ்நிலையில் சாதுர்யமான காரியத்தைச் செய்து விட்டு ஒன்றுமே நடவாதது போல் நடந்து கொண்ட நிலைமையை எப்படிப் போற்றுவது?

- ஆர். வனஜா, கோயமுத்தூர்.

கேரட் தோசை!

தக்காளிக்குப் பதில் கேரட் 1/4 கிலோ சேர்த்து அரைக்கவும். மற்றபடி தோசைக்குப் போடுவது போலவே அரைத்துச் செய்யலாம்.

- வனஜா



எனக்கு வயது 45. சென்ற ஆண்டு அதாவது 44 வயதில் மாதவிலக்கு நிற்க ஆரம்பித்தது. மூன்று மாத காலமாக மாதம் இருமுறை மாதவிலக்கு வரும். சிலர் சத்துக்குறைவினால் இப்படி ஏற்படலாம் என்று கூறினார்கள். நான் மருத்துவரிடம் காண்பித்தேன். அவர் உடலில் எந்தவித பிரச்னையும் இல்லை. மாதவிலக்கு நிற்பதற்காக இப்படி வரலாம் என்று கூறினார். அதன்படியே 44 வயதில் மாதவிலக்கு நின்று விட்டது. இதனால் உடலில் சோர்வு, கோபம், உடலில் பருமன் இவை ஏற்பட ஆரம்பித்தது. 2 மாதங்கள் சென்றபின் மார்பகங்களில் தளர்ச்சி நீங்கி தசைகள் உறுதியாக பருமன் அதிகரித்தது.



மருத்துவரின் ஆலோசனைப்படி இரத்த அழுத்தம், சர்க்கரை, கொழுப்பு இவற்றைப் பரிசோதனை செய்து கொண்டேன். மேலே கூறப்பட்ட பிரச்னைகள் எதுவும் இல்லை என்றும் உடல் நல்ல நிலையில் இருப்பதாகக் கூறினார். மேலும் உடற்பயிற்சி செய்யும்படி கூறினார்.

அன்று முதல் நான் உடல், உணவு, மனநிலை இவற்றில் கவனம் செலுத்த ஆரம்பித்தேன். நான் தினமும் காலையில் 1 டம்ளர் டீ, 2 இட்டிலி, மத்தியம் சாப்பாட்டில் கீரை, காய்கறிகள், பாதி அளவு அரிசி சாதம், 1 டம்ளர் மோர். மாலை 1 டம்ளர் கேழ்வரகு கஞ்சி இதில் சிறிதளவு சர்க்கரை, பால் சேர்த்துச் சாப்பிடுவேன். இரவில் 2 கோதுமை சப்பாத்தி, 1 வாழைப் பழம் (200 மிலி) 1 டம்ளர் பால். ஆனால் தினமும் உணவில் 1 வெங்காயம் (இரவில்) சேர்த்துக் கொள்வேன். தினமும் சைக்கிளில் 8 கி.மீ. சென்று வருவேன்.

வாழ்க்கையில் பிரச்னைகள் ஏற்படும் போது கோபமோ, அதிர்ச்சியோ அடைவது இல்லை. அவைகளை நிதானமாக, யோசித்துச் செயல்படுத்துவேன். இதனால் இரத்த அழுத்தம் அதிகமாவதைத் தடுக்கலாம். மாமிசம் மாதம் ஒருமுறை வேக வைக்கும் முறையில் சமைத்துச் சாப்பிடுவேன். உணவில் இக் கட்டுப்பாடு இருப்பதால் உடலில் கொழுப்புச் சத்து அதிகமாக சேர்வது கிடையாது. சைக்கிளில் சவாரி செய்வதாலும் வீட்டின் வேலைகளை முழுவதும் நானே மேற்கொண்டு செய்வதாலும் உடலிலுள்ள கெட்ட நீர்கள் வியர்வை மூலம் வெளியேற்றப்படுவதால் உடலின் உறுப்புகள் சுத்தமாக இயங்கி சுறுசுறுப்பாக இருக்கிறது.

மாலை நேரங்களில் ஒயர் - பனை ஓலை போன்றவற்றில் கூடை - பொம்மை இவற்றைச் செய்வேன். இதனால் நரம்புகளுக்குப் பயிற்சி தருவதோடு சிறுசேமிப்பும் செய்யலாம். சைக்கிள் விடத் தெரியாதவர்கள் தினமும் காலை (அ) மாலை ஒரு கி.மீ. தூரம் நடந்து வரலாம். மேலும் உணவில் பாதி அளவுதான் உப்பைச் சேர்த்துக் கொள்ள வேண்டும்.

- ஆர். ஜார்ஜ்மேரி, பாண்டிச்சேரி - 13.

கிட்டத்தட்ட 40 வயதிலேயே இந்த மெனோபாஸ் தொடங்கி விட்டது என்று நினைக்கிறேன். ஏனெனில் அதுபற்றிய எனக்கு ஒரு தீர்மானமான அறிவு அப்போது இல்லை. முதுநிலை பட்டதாரியாக இருந்தும் கூட உடற்கூறு விஷயத்தில் எனக்கு ஒன்றுமே தெரியாததால் யார் யார் எதை எல்லாம் சாப்பிடச் சொல்கிறார்களோ அதையெல்லாம் சாப்பிடுபவள். அதனால் டிஸ்சார்ஜ் அளவுக்கு மீறிப் போகும். இடுப் பில் வலி ஏற்பட்டு, கை கால்கள் ஓய்ந்து போகும். பிறர் அறியா வண்ணம் அடிக்கடி ஆடைகளை மாற்றுவேன்.

இந்தக் கோலத்தில் என்னுடைய பேரனை சென்னையிலிருந்து தனிப்பட்ட கவனத்துடன் கூடிய படிப்பிற்காக என் விடம் கொண்டு வந்து விட்டார்கள். உடம் பின் இந்த உபாதையால் அவதிப் பட்டிருந்த, அவதிப்பட்டுக் கொண்டிருந்த

கீரை தோசை

புளித்த தோசை மாவுடன், சிட்டிகை சோடா உப்பு, பொடியாக நறுக்கிய சின்ன வெங்காயம், பச்சை மிளகாய், பொடியாக நறுக்கிக் கழுவிய கீரை 2 கொத்து ஆகியவற்றைக் கலந்து தண்ணீர் விட்டுக் கரைத்துக் கல்லில் மெல்லிய தோசைகளாக ஊற்றி இருபுறமும் எண்ணெய் ஊற்றிச் சிவக்க வார்த்தெடுக்கவும்.

- வனஜா



பழைய சாதத்திலிருந்து அடை :

பழைய சாதத்தைத் தண்ணீர் இல்லாமல் பிழிந்து கொண்டு கையால் நன்றாகப் பிசையவும் அல்லது மிக்ஸியில் போட்டு ஒரு சுற்றுச் சுற்றவும். இத்துடன் உப்பு, வற்றல் பொடி, காயம், பொடியாக நறுக்கிய வெங்காயம், கொத்துமல்லித் தழை, கறிவேப்பிலை சேர்க்கவும். இரண்டு கை பச்சரிசி மாவு, ஒரு கை கடலை மாவு சேர்த்துக் கலக்கவும். வட்டமாக அடைக்கல்லில் தட்டி எண்ணெய் ஊற்றி வார்த்தெடுக்கவும்.

- வனஜா







கடுசாதத்திலிருந்து பக்கோடா!

மதியம் மீந்த சாதத்தை மாலையில் கடலை மாவு, பச்சரிசி மாவு, உப்பு நறுக்கிய வெங்காயம், பச்சை மிளகாய் சேர்த்துப் பிசையவும். பின்னர் இந்தக் கலவையைக் கிள்ளிப் போட்டு எண்ணெயில் பொரித்தெடுக்கவும். விருப்பப் பட்டால் பொடியாக நறுக்கிய இங்கிலீஷ் காய்கறிகளையும் சாதத்துடன் சேர்த்துப் பிசையலாம்.

-வனஜா

நான் உறவு என்கிற தட்ட முடியாத தாட்சண்யத்தில் ஒப்புக் கொண்டேன். அவனுக்கு எதிரே உட்கார்ந்து பாடம் சொல்லிக் கொடுக்கவும் முடியாமல் பல நாட்கள் யமவேதனைப்பட்டிருக்கிறேன்.

ஒருநாள் சோர்ந்து போய் அப்படியே உட்கார்ந்தபடியே தூங்கியிருக்கிறேன். எத்தனை நேரம் அப்படி இருந்தேனோ தெரியாது. பேரன் என்னை உசுப்பி, 'பாட்டி, என்ன பாட்டி இந்த வயதில் போய் படுக்கையை நனைச்சுண்டு படுத்துக் கிடக்கே' என்றதும் தூக்கிவாரிப் போட்டுக் கொண்டு எழுந்தேன். அவன் சொன்ன படியே என் மேலாடை நனையும் அளவிற்கு 'டிஸ்சார்ஜ்' ஆகி யிருந்தது. அசடு வழிந்தவாறே அவனிடம் உண்மையைச் சொல்லவும் முடியாமல் அவன் பார்க்காத இடம் சென்று ஆடைகளை மாற்றிக் கொண்டேன்.

மருத்துவர்கள் எனக்குத் தற்காலிகமான நிறுத்தத்திற்கே உதவினார்கள். ஹார்மோன் சிகிச்சை இந்த ஊரிலும் இல்லை அப்போது! பொறுத்துக் கொள்ளும் அளவிற்குத் தினமும் discharge இருந்ததால்தான் நான் அதை நினைக்கவே இல்லை. இதன் காரணம்தானோ என்னவோ ஒருநாள் என்னுடைய உறவினர்கள், மாதர் சங்க உறுப்பினர்கள் முன்னிலையில் பலவீனம் காரணமாகச் சோர்ந்து மயக்கமாகி விழுந்திருக்கிறேன். உடம்பெல்லாம் வியர்த்துக் கொட்டியிருக்க வேண்டும். உள்ளங்கையிலும் வியர்த்ததைப் பார்த்து எனக்கு 'லேசான ஸ்ட்ரோக்' என்று பயந்து விட்டார்கள். ஆனால் டாக்டர் உண்மையான காரணத்தை அறிந்து என்னிடம் ''டி.அண்டு சி'' செய்து கொள்ள வேண்டும் அல்லது கருப்பையை அகற்ற வேண்டும் என்று சொன்ன பிறகு சென்னைக்கு வந்து அதையும் செய்து கொண்ட பிறகுதான் எனக்குப் பூரணமாகக் குணம் கிடைத்தது. இதனிடையில் பேரனும் பள்ளியில், வகுப்பில் நல்ல அம்சங்களுடன் தேர்ச்சி பெற்று சென்னைக்கே வந்து விட்டான்.

கடவுள் என்முன் தோன்றி நீ வேண்டுவன கேள் என்றால் நான் எதையுமே எனக்கென கேட்காமல் இதை மட்டும் கேட்பேன். 'கடவுளே' எங்களுக்குத் தாய்மையைத் தந்து அந்தத் தாய்மைக்காக மறு பிறவி எடுக்க எண்ணற்ற பிரசவ வேதனையையும் தந்திருக்கிறீர்கள்' சரி.. பெருமையுடன் ஏற்கிறோம். சுமப்பது எங்களுக்குப் பாரமாக இருப்பதில்லை. ஆனால் எங்களுக்குக் கூடுதலாக ஏன் இந்த 'மெனோபாஸ்' தாபம்! இதனால் எங்களுக்கு மட்டும் மனம், உடம்பில் எத்தனை பாதிப்பு? ஆண்கள் அறுபது ஆனாலும் கூட இப்போதும் நான் உன்னைத் தாயாக்குவேன் என்று நாகுக்காகக் கூறி இந்த வேதனைகளெல்லாம் இல்லாமலிருக்கிறார்களே. இதென்ன நியாயம் என்று உறுதியாகக் கேட்பேன்.

- எஸ். ராஜேஸ்வரி, மன்னார்குடி.

அட்டைப்பட ஓவியம் : கரோ

வெஜிடபிள் அடை!

வழக்கமான அடை மாவுடன் தக்காளி சேர்த்து அரைக்கவும். வழிக்கும் முன் துருவிய கேரட் அல்லது பீட்ரூட் போட்டு ஒரு சுற்றுச் சுற்றவும். மாவைக் கரைத்துக் கல்லில் மெல்லிய தோசைகளாக ஊற்றிச் சிவக்க வார்த்தெடுக்கவும்.

- வனஜா



குறுநாவல்

ஒரே ஒரு வருஷம்

ரிஷபன்

1

வாசலில் குரல் கேட்டது.

'ராமப்ரபோ...'

ரகுநாத அய்யங்கார் வந்து விட்டார். கமலம் சமையல் உள்ளுக்கு ஓடினாள். நல்ல வெய்யில் வேளை. அவர் கால் அலம்பிக் கொண்டு வந்ததும் தீர்த்தம் கேட்பார். எத்தனை வருஷப் பழக்கம்.

சிமெண்ட் சொம்பில் நீர் இறைத்து கால் அலம்பிக் கொண்டு உள்ளே வந்தார். மரத்தினாலான ஈஸிசேரில்தான் உடம்பைக் கிடத்துவார். ஹாலில் ஒரு மூலையில் போடப்பட்டிருந்தாலும், வீடு முழுக்க அவர் பார்வையில் இயங்குகிற பிரமை தட்டி விடும்.

கொஞ்சம் ஜலம் கைகளில் சேர்க்க சுத்தி செய்து கொண்டு வெள்ளிச் சொம்பை வாங்கிக் கொண்டார். கடகடவென நீர் தொண்டையில் இறங்கியது.

'போன காரியம் என்ன ஆச்சு,' என்ற கேள்வி பார்வையில் தொனிக்க கணவரைப் பார்த்துக் கொண்டு நின்றாள். ஹால் பிறையில் மைதிலியின் கடிதம் வேறு காத்திருந்தது.

'ஸ்ஸ்..... அப்பாடா...' என்று பெருமூச்சு விட்டார்.

சிவந்த மேனி. ஸ்கூலில் வேலை பார்த்த நாட்களிலும் சரி. ஓய்வுபெற்ற இந்த நேரத்திலும் சரி.. மடிப்புக் கலையாத சலவை வேஷ்டி. அங்கவஸ்திரம்தான். பளிச்சென்ற திருமண், ஸ்ரீசூர்ணம் நெற்றியில் ஜொலிக்க அவர் வருகின்ற கம்பீரமே தனி.

டியூஷனுக்கு வருகின்ற பெண்கள், அவர் அழகை விமர்சித்துக் கொண்டு போகிறதைக் கமலமே கேட்டிருக்கிறாள். ஆனால் இப்போது லேசாகக் கறுத்து உடம்பு தளர்ந்து, பழைய மிடுக்கு கூட விடைபெற்றுக் கொண்டு விட்டது.

''என்னவண்ணா ஆச்சு...'' என்றாள் பொறுமை போனவளாய்.

அவளின் படபடப்பும், அவரின் நிதானமும் இயல்பான குணங்கள். மெல்லச் சிரித்தார்.

''பதில் சொல்லி அனுப்பறேம்னு சொன்னா...''

''ஏன்... நாமளே நேரா போய்க் கேட்டா.. சொல்லக் கூடாதா...''

''பையனைப் பெத்தவா... நாம மனசு கேட்காம போனோம். பதில் சொல்லணும்னு என்ன அவசியம்.''

''காயத்ரிக்கு இந்த வரனே அமைஞ்சுரும்னு சொன்னாளே...'' என்றாள் தவிப்புடன்.

''பகவான் என்ன நினைக்கிறானோ. பிராப்தம்னு ஒண்ணு இருக்கோல்லியோ...'' என்றார் நாற்காலியில் சாய்ந்தபடி.

கமலம் கீழே அமர்ந்து கொண்டாள்.

''ஏதாவது லெட்டர் வந்ததா...''

''ம்... மறந்துட்டேனே.''

வேகமாய் எழுந்து பிறையில் இருந்த இன்லண்டை கொண்டு வந்தாள்.

''யார் போட்டிருக்கா...''

கைப்பையிலிருந்து மூக்குக் கண்ணாடியை எடுத்து அணிந்து கொண்டார். வெளிச்சம் வருகிற திசையில் பிரித்து வைத்துக் கொண்டு படிக்க ஆரம்பித்தார்.

'அன்புள்ள அப்பா ஸன்னிதியில், மைதிலி அநேக நமஸ்காரம். க்ஷேமம். க்ஷேமத்திற்கு பதில் எழுத பிரார்த்திக்கிறேன். இவ்விடம் யாவரும் சௌக்கியம். இவர் கம்பெனி வேலையாய் பம்பாய் போய் விட்டு வந்தார். அங்கே நல்ல மழையாம். வரும் போது பாபுவுக்கு டிரஸ் வாங்கி வந்தார். அங்கே துணி எல்லாம் விலை மலிவாம். அம்மா கால்வலி தேவலையா.. இவர் அம்மா ஏதோ தைலம் பேர் சொன்னாள். அதைத் தேய்த்து வந்தால் நல்ல குணம் தெரியுமாம். நான் வரும் போது வாங்கிக் கொண்டு வருகிறேன்.

இவர் என்னை ஊருக்குக் கொண்டு வந்து விட முடியாது... ஆபீஸில் வேலை அதிகம்.. என்று சொல்லுகிறார். ரயிலில் ஏற்றி விட்டு விடுவார். ஸ்டேஷனுக்கு காயத்ரியையும், ரங்குவையும் அனுப்பவும். பத்தாம் தேதி காலை வண்டியில் வருகிறேன். வேறு விசேஷம் இல்லை. ரமா, சுதா, காயத்ரி, ரங்கு எல்லோரையும் கேட்டதாகச் சொல்லவும். இப்படிக்கு மைதிலி.''

படித்து விட்டு கடிதத்தை மடித்தார். முகத்தில் என்ன உணர்வுகள் படர்கின்றன என்று புரிபடவில்லை.

''...இப்பத்தான் ரெண்டு மாசம் முன்னால வந்துட்டுப் போனா... மறுபடி இப்ப வரேன்னு எழுதியிருக்கா...''

''ம்...''

''எ..தனாலன்னு புரியறதா...''

நிமிர்ந்து அவளைப் பார்த்தார். கண்களில் சாந்தம் தெரிந்தது.

''...எப்பவாவது பூகம்பம் வர பிரதேசம்னா பயம் வரும்... இது எப்பவும் புயல் தாக்கற இடம்மா... பழகிப் போச்சு'' சிரிப்பில் விரக்தி தெரிந்தது.

''...மாப்பிள்ளை ஓயாம அவளைப் பிடுங்கறாராம்.. போன தடவையே.. ஏன் வெறுங்கையா வந்தேன்னு கேட்டாராம். என்னால தாங்க முடியலேன்னு அழறா..''

''ம்...ம்...''

''...புருஷனுக்கு என்ன.. நேருக்கு நேரா.. பார்த்தா கௌரவமா பேசிட்டுப்



போயிடறேன். ஆனா.. எங்களை மாதிரி பொம்மனாட்டி பாடுதான் ரொம்பத் திண்டாட்டம். புருஷாளோட இஷ்டத்துக்கும் ஆடணும். அவா கஷ்டத்துக்கு அழணும்...''

''பார்க்கலாம்... பார்க்கலாம்... ஏதாவது ஏற்பாடு பண்றேன்...'' என்றார்.


தான் சொல்ல நினைத்ததைச் சொல்லி விட்ட திருப்தியுடன் கமலம் எழுந்து உள்ளே போனாள்.


ரகுநாத அய்யங்கார் ஓய்வு எடுக்க நினைத்தாலும் மனசு விடவில்லை. இதே மைதிலிக்கு வரன் பார்க்க அலைந்ததென்ன.. சம்பந்தி வீட்டில் கேட்ட மாதிரியே சீர் செய்ததென்ன.. மனுஷாளுக்குப் பணம், காசு விஷயத்தில் ஏன் கவலையாய் திருப்தி வரமாட்டேன் என்கிறது.

கல்யாணத்தன்றே என்னமாய் கலாட்டா... சரியாய்க் கவனிக்கவில்லை என்று. சம்பந்தி பிராமணன் நேரே அவரெதிரில் வந்து நின்று முகத்துக்கு எதிரே சுட்டு விரலை நீட்டினார்.

'இவர் யார் தெரியுமோ...'

குரலின் வேகம் இவரை அதிரச் செய்தது. என்ன நடந்தது... ஏன் இப்படி ஆவேசப்படுறார். சுற்றி நின்றவர்கள் முகங்களில் கூட லேசான அதிருப்தி.. ரகுநாத அய்யங்கார் எதிரே பவ்யமாய் நின்று





பழைய பாட்டில் மூடிகளை எடுத்துக் கொண்டு அதில் மணலை நிரப்பி அதன் நடுவே மிகச் சிறிய பொம் மைகளை வைத்தால் தடுமாறிக் கீழே விழாமல் நேராக நிற்கும்.

- ஆர். ஜெயலெட்சுமி

பேசித்தான் பழக்கம். யாரும் இந்த மனிதர் போல அவமரியாதையாய் நடந்ததில்லை.

''சொல்லாத் தெரிஞ்சுக்கறேன், ஸ்வாமி... யாரு...''

''என் பையனோட மாமா. டில்லி லேர்ந்து இந்தக் கல்யாணத்துல கலந்துக்க ணும்னு பிரியப்பட்டு வந்திருக்கார். எங்காத்து மனுஷாளுக்கே கௌரவம்னு பெருமைப்பட்டுண்டு இருந்தோம். இப்படிப் பண்ணிட்டேளே. என்னடா.. வந் தோம்னு தோணற மாதிரி...''

''என்ன நடந்ததுன்னு.. கொஞ்சம் விளக்கமாத்தான் சொல்லுங்களேன்...'' ரகுநாத அய்யங்கார் கொஞ்சமும் முகஞ் சுளிக்காமல் கேட்டார்.

''டிபன் தீர்ந்து போச்சாம்.. கொண்டு போய் உட்கார வச்சா. எழுந்திருக்கறா.. ச்சே.. எப்படிப்பட்ட அவமரியாதை...''

மணி ஒன்பதரை ஆகி விட்டது. இன் னும் கொஞ்ச நேரத்தில் மாப்பிள்ளை காசி யாத்திரை கிளம்பப் போகிறான். பத்தரை மணிக்கே ஆயிரம் மனிதர்களுக்கு சாப்பாடு போட்டாக வேண்டும் என்று மாப்பிள்ளை முன்பே உத்தரவு போட்டிருந்தார். இன் னும் அரை மணியில் சாப்பாடே சாப்பிட லாம். ஆனால் வீம்புக்கு இப்போது டிபன் வேண்டும் என்று ரகளை.

பெண்ணைக் கொடுப்பவரும், பிள்ளை வீட்டுக்காரரும் நேற்று வரை அந்நியம். ஆனால் சம்பந்தம் என்று பேசி, உறவாகலாம் என்று முடிவு செய்தபின் 'நம் மனிதர்கள்' என்ற உணர்வு ஏன் வருவ தில்லை. ரயிலில்... பஸ்ஸில் முகந் தெரி யாத மனிதர்களிடம் கூட கருணை வழி கிறதே. இனி வருங்காலம் முழுக்க யாவ ரும் கைகோர்க்க வேண்டிய உறவுக்குள் பேதமும், வரட்டுக் கௌரவமும் யார் சொல்லித் தந்தது.

''...அல்லவா வருதாரே.. இதோ... இப்போ அவர் டிபன் சாப்பிடலாம்.. நானே அவரைக் கவனிக்கிறேன். நீங்க போங்கோ...''

ரகுநாத அய்யங்காரே டில்லி மாமாவை அழைத்துப் போய், அவசரமாய் ஒரு ரவா உப்புமாவைக் கிளறிக் கொடுத்து.. கவனித்ததில் மாமாவே இவர்கள் கட்சிக்கு வந்து விட்டார்.

''கல்யாணம்னா அப்படித்தான் இருக் கும். இவன் எடுக்கெடுத்தாலும், பெரிசாக் கத்துவான். ஆனா மனசுலே ஒண்ணுமே இருக்காது. எனக்குக் கொஞ்சங் கூட கோபமோ, வருத்தமோ இல்லை. உங்க வீட்டே படிச்சவா நிறைய பேர். பெரிய போஸ்டுல டில்லில இருக்கா. இந்த மாதிரி உங்காத்து சம்பந்தம்னு சொன்னதுமே கண்ணால ஜலம் விட்டான். ஆனா... ரொம்ப நல்ல மனுஷர்.. சூதுவாது தெரியாது. நீங்க ரொம்ப பாக்கியம் பண்ணியிருக்கணும்னு உருகிட்டா.''

வாஸ்தவம்தான். ரகுநாத அய்யங்கா ரிடம் படித்த பலர் இன்று இந்தியா முழுவ தும் பெரிய பதவிகளில் இருக்கிறார்கள். பெரிய டாக்டர்கள்.... என்ஜினியர்கள் என்று படிப்பு.

ஏன்.. சம்பந்தியே முதலில் ஆஹா.. ஓஹோ என்று புகழ்ந்தவர்தானே. மாப் பிள்ளை பையனின் அப்பா என்ற பந்தாவும் கூடவே வந்து விட்டது.

கேட்ட சீர்வரிசைகளில் எதையும் குறைக்கவில்லை. ஆனாலும் திருப்தி இல் லாத மனிதர்கள். சம்பிரதாயம் அது.. இது என்று ஏதேதோ காரணம் காட்டி... அடிக்கடி ஏதாவது கேட்டுக் கொண்டுதான் இருந் தார்கள். அதில் உச்சம்... நேற்றைய முதல் நாள் ஜானவாசத்தின் போது வைரத் தோடு கேட்டதுதான்.

ரகுநாத அய்யங்கார் ஒருகணம் ஆடித் தான் போய் விட்டார்.

''என்னது... வைரமூக்குத்தி போட்டா போதும்னு சொன்னேள்... இப்ப.. தோடுன்னா...''

''நான் என்ன எனக்கா கேட்கறேன். உங்காத்து பொண்ணுக்குத்தானே கேட்க றேன்...''

'கல்யாணம் ஆனதும்... அவள் உங்காத் தில்தானே இருக்கப் போகிறாள். உங்கள் மருமகளாய்' என்று நினைத்துக் கொண் டார்.

சம்பந்தி வீரராகவனைத் தயக்கத்துடன் பார்த்தார்.

''இப்ப திடீர்னு கேட்டா... நான் என்ன பண்றது...''



வெள்ளிக்கிழமை மங்களம் தங்க...

உள்ளம் மகிழ, உடலும் குளிர

மங்கள நன்னாளாம் வெள்ளிக் கிழமைகளில் எண்ணெய் ஸ்நானம் பெண்களுக்குச் சிறப்பு. அதனுடன் கேசத்தில் பயன்படும் சீயக்காய் நலம் தரும். அதிலும் மீரா சீயக்காய்ப் பவுடர் மேலும் நலம் தரும்!

கருங்கூந்தல் அழகாய் கால்வரை தவழ

பொடுகைப் போக்கி, கேசத்தின் ஆரோக்கியமான வளர்ச்சிக்கு சீயக்காய் உதவும் என்பது உங்களுக்குத் தெரியும். அத்தகைய நலம் தரும் சீயக்காயுடன், இயற்கை தரும் இதர பல இணையற்ற மூலிகைகளையும் கொண்டுள்ளது — மீரா சீயக்காய்ப் பவுடர்.

பூந்திக்கொட்டை, வெட்டிவேர் (குளிர்ச்சியூட்டி, நறுமணம் சேர்க்கும்) வெந்தயம் (முடி நன்கு வளர்வதற்கும், முடி உதிர்வதைத் தடுப்பதற்கும் உதவும்), பொடுதலை (பொடுகை எதிர்க்கும்) மற்றும் துளசி, மருதாணி, செம்பருத்தி, நெல்லி, ஆவாரம்பூ, வெண்மிளகு, ரோஜா, கோரைக் கிழங்கு, கிச்சிலிக் கிழங்கு, பச்சைப் பயறு முதலியவையும் உள்ளன. இவற்றின் நன்மைகளை எல்லாம் எடுத்துச் சொல்ல இங்கு இடம் போதாது!

மீரா சீயக்காய்ப் பவுடர் — இத்தனை மூலிகைகளின் சிறப்பையும் ஒருங்கிணைத்து உள்ளடக்கி ஒரு சாஷே பாக்கெட் வடிவிலும் மற்றும் 100/200 கிராம் கன்டெய்னரிலும் கிடைக்கிறது.

அருமையான கேசத்திற்கு சுலபமான வழி — மீரா

புதிய

மீரா

மூலிகை சீயக்காய் மற்றும் பூந்திக்காய் பவுடர்



O&M 393 TM

''உம்மை யார் இப்பவே போடணும்னு சொன்னா...'' வெள்ளையாய்ச் சிரித்தார் வீரராகவன்.

''உம்ம வார்த்தை போதும்... அப்புறமா... எத்தனை பண்டிகை வருது.... தலை தீபாவளி... கார்த்திகை.... ஆடின்னு..... ஒரு வருஷத்துல உம்மால பண்ணிப் போட முடியாதா என்ன...''

ஏதோ பெருந்தன்மையுடன் விட்டுக் கொடுப்பதைப் போல அவர் பேசிய தொனி ஏகநாத அய்யங்காரை அதிர வைத்தாலும்... மௌனமாயிருந்தார்.

வகுப்பில் அவர் நுழைந்தால் மாணவர்கள் வாயடைத்துப் போவார்கள். தெருவில் நடந்தாலோ... இடைவிடாமல் 'வணக்கங்கள்'. இன்று அவர் இன்னொருவர் எதிரே வாயடைத்து நிற்கிற சூழ்நிலை. குழந்தைகள் பெறுவது பாக்கியம் என்பது போக, பெண்ணைப் பெற்றதே தப்போ என்று யோசிக்க வேண்டியதாகி விட்டது.

சொன்ன மாதிரி தோடு செய்ய முடியவில்லை. பேரனைப் பார்க்கும் போது அவருக்கு வேறெதுவும் பெரிதாகத் தோன்றவில்லை. ஆனால், வீரராகவனுக்கு தோடு வராதது மட்டுமே நினைவில் நின்றது.

பிள்ளைச் செல்வமாய்ப் பூக்கள். வார்த்தைகள். மைதிலி இரண்டாவது பிரசவத்திற்குக் கூடத் தயாராகி விட்டாள். வருகிற பெண்ணை 'வராதே' என்றா சொல்ல முடியும்... அதுவும் பிள்ளைத்தாய்ச்சியை.

2

''சாப்பிட வரேளா...''

கமலம் எதிரில் வந்து நின்றாள்.

''குழந்தைகள் சாப்பிட்டாச்சா...''

''சுதா தூங்கிட்டா.. எழுப்பணும்... மத்தது எல்லாம் மாடில படிச்சுண்டிருக்கா....''

எட்டு வயதுப் பெண். அப்பாவுடன் தான் சாப்பாடு. ஸ்கூல் விட்டு வந்ததும் தூக்கம். ஏழு மணிக்கு சாப்பாடு ஆனதும் எழுந்து சுறுசுறுப்பாய் விளையாடுவாள். செல்லம். கீழே ஏகநாத அய்யங்கார் சாப்பிட்டு முடித்ததும் கமலம் முடிந்த வரை இதர வேலைகளைச் செய்து கொண்டிருப்பாள். எட்டரை மணிக்கு மாடிப்படி அருகே போய்... சாப்பிட வாங்கோ என்று குரல் கொடுப்பாள். மற்றவர்கள் கீழிறங்கி வருவார்கள்.

ஏகநாத அய்யங்கார் வேலை பார்த்த நாட்களில் டியூஷனுக்கு பசங்கள் வருவார்கள். பணம் பிரதானமில்லை. 'ஸார்.... இந்த மாச சம்பளம் தரமுடியலே...' என்றிழுத்தால் 'சீசீ... போடா...' என்று விரட்டிவிடுவார்.

படித்தால் போதும். யாரோ சேட்டு பையன் பாஸ் செய்ததும் பழம்... பூ... பணம் என்று தட்டு நிறைய கொண்டு வந்து வைத்ததும்... இவர் மறுத்து விட்டார். 'எடுத்துண்டு போ... நீ நன்னா படிச்சே.. பாஸ் பண்ணே... அவ்வளவு தான்...'

வற்புறுத்தி ஆப்பிள் கூடையை வைத்து விட்டுப் போனான். ரங்குவைத் தான் அனுப்பினார். 'திருப்பிக் கொண்டு போய்... வச்சுட்டு வந்துடு....'

கமலம் கூட வருத்தப்பட்டுக் கொண்டாள்.

'பழத்துக்கு என்ன வந்தது...'

''வேணாம்டி... அது சரியில்லே... உனக்கு என்ன வேணும்.. சொல்லு... நான் வாங்கித் தரேன்....''

துருவி விசாரித்தால் ஏதாவது சொல்லுவார். மனிதர் சரியில்லை. அவன் பணம் வேண்டாம்... இப்படி.

''என்ன யோசனை... கை சாதத்தை அளைஞ்சுண்டே இருக்கு....''


சுதா அரைத்தூக்கத்தில் அம்மா உருட்டிக் கொடுத்த உருண்டைகளை விழுங்கினாள்.

''ஒன்றுமில்லே... இவா என்ன என்ன கேட்கப் போறாளோ... காயத்ரி கல்யாணம் ஆயிடுத்தன்னா இன்னும் மூணு நாலு வருஷத்துக்குக் கவலையில்லே....''

கமலம் சுதாவை வாயைத் துடைத்து விட்டாள். எழுந்து ஓடியது. சாதத்தில் ஒரு பகுதியை மோருக்கு ஒதுக்கிக் கொண்டார்.

கொலு வைக்கும் படிக்கட்டுகளின் விளிம்புகளைக் கலர் கலரான ஜிகினா பேப்பரால் ஒட்டிவிட்டு நடுவே கலர் பேப்பரை ஒட்டிவிட்டால் துணி கூட விரிக்க வேண்டாம். ஜம்மென்று பார்க்க அழகாகவும் புதுமையாகவும் இருக்கும்.

- ஆர். ஜெயலெட்சுமி



'கம்'மென்ற சாம்பிராணியின் வாசனை கூடத்தில் பரவியது.

"வேற ஏதாவது பார்க்கலாமா..."

"எங்கே.... வர ஜாதகத்துல பொருத்தமா இருக்கறதே கம்மி... இதுல அவாளோட டிமாண்டு வேற..."

"எப்படியும் இந்தத் தை மாசத்துக்குள்ளே நல்ல வரனா அமைஞ்சுடும்னு சொன்னாரே...."

"குரு பலன் வருது.... அமையணும். அமையலாம்.."

"இப்படிச் சொன்னா... என்ன அர்த்தம்.."

"நமக்கு மேல ஒருத்தன் இருக்கான்னு அர்த்தம்...."

நன்றாக ஊறிய எலுமிச்சை ஊறுகாயினைத் தட்டில் இட்டாள். கையில் மோர் வாங்கி சர்ரென்று உறிஞ்சினார். 'நாம ப்ரமோ...'

"சார்ட்ல ரெண்டு, மூணு வரன் பொருத்தமா இருந்ததே..."

"அதுல ஒருத்தன் ஏற்கெனவே கல்யாணம் ஆனவன்.... எழுதினா எங்கே பதில் போடறா... கல்யாணம் ஆனாக் கூட தகவல் சொல்றதில்லே.... நாம... அலைஞ்சு பொருத்தம் பார்த்து லெட்டர் போட்டா, பதினைஞ்சு பைசா கார்டு எழுதக் கூட சோம்பல்...."

எச்சலிட்டாள். கையலம்பிக் கொண்டு வந்தவர் மறுபடி சாய்வு நாற்காலியில் அமர்ந்தார். வெற்றிலைப் பெட்டி பக்கத்திலேயே இருந்தது.

வாசல் பக்கம் குரல் கேட்டது.

"ஸார்...."

"ஏ... குட்டி... யாருன்னு பாரேன்....."

சுதா வாசலுக்கு ஓடினாள். திரும்பி வந்தாள்.

"யாரோ மனோகரம்பா.... உங்களைப் பார்க்கணுமாம்..."

"வரச் சொல்லு..."

உள்ளே வந்தவன் மாநிறத்திற்கும் கீழே. நல்ல உயரம். தாட்டியான உடம்பு. இரு கைகளையும் கூப்பி நமஸ்கரித்தான்.

"என்னை அடையாளம் தெரியுதா... ஸார்..." என்றான்.

"யாரு....."

"உங்க ஸ்டூடண்ட்தான்.... நாலாவது வருஷம் படிச்சேன்....."

"சொல்லு... நல்லா இருக்கியா..."

"உங்க ஆசி ஸார்.. நீங்க போட்ட பிச்சை... விளையாட்டா திரிஞ்சவனை.. மிரட்டி படிக்க வச்சீங்க... பேங்கில வேலை கிடைச்சது...." நம்ம ஸார் பக்கம்னு டிரான்ஸ்பர் கேட்டு வந்தேன்."





''நன்னா இருப்பா... கல்யாணம் ஆகி டுத்தா.''

''இன்னும் இல்லே... ஸார்.''

''ஏ.. குட்டி.. போ... தீர்த்தம் கொண்டா...''


சொம்பில் கொண்டு வந்த ஜலத்தை நீட்டினாள். மரியாதைக்கு வாங்கிக் கீழே வைத்தான்.

''உ ங் க ளை ப் பார்க்கணும்னு தோணிச்சு... ஸார்... வந்தேன்... இன்னிக்குத்தான் ஜாயின் பண்ணேன்.''

''எந்த பிராஞ்ச்... இங்கே கடைத் தெரு வுல இருக்கே அதுவா... இல்லே... காலேஜ் வாசல்ல எக்ஸ்டென்ஷன் கௌண் டரா....''

இரவில் ரசம் மிகுதியாகி விட்டால் பித்தளைப் பாத்திரங்களுக்கு அதை விட்டுச் சிறிதுநேரம் ஊறவிட்டுத் தேய்த்தால் புளி இல்லாமலே பாத் திரங்கள் பளிச்சென்று ஆகிவிடு கிறது.

- பானு சுரேஷ்



''கடைத்தெருதான் ஸார். உங்க டாட்டர் காயத்ரி கூட அங்கேதான் வேலை பார்க்கறாங்க...''

''ஓ. அவளை நோக்குத் தெரியுமா.''

''பேங்க்ல சொன்னாங்க...''

''சரி... ஜாகை எங்கே....''

''எங்க கிராமத்திலேர்ந்துதான் வரேன் ஸார்... டிரெயின்ல சீஸன் டிக்கட் எடுக்க லாம்னு...''

ரகுநாத அய்யங்கார் சாய்ந்து கொண் டார். பகல் முழுவதும் வெய்யிலில் அலைந்த களைப்பு.


மனோகரன் கைகட்டி நின்றவன் விடைபெறுகிற பாணியில் குரலைச் செருமினான்.

''வரேன் ஸார்....''

''போயிட்டு வாப்பா... நன்னா இரு....''

கமலம் கூடத்துக்கு வந்தாள்.
''யார் வந்திருந்தா...''
''பழைய ஸ்டூடண்டாம்....''
''என்னவாம்... ஏதாவது வேலைக்கு போயிசா...''
''போஸ வைத்திருக்கோ....'' சிரித்தாள். ''அவனே நல்ல வேலைல இருக்கான்.''
''நம்மளவா பையனா...''
''இல்லே வேறே ஏதோ ஜாதி... அவா குடும்பத்திலேயே... சித்த படிச்சதே இவன் தான். ஒன்னு அழுவான் பார்... எதுவுமே புரியலேன்னு... டியூஷனுக்கும் வர முடி யாது... சாயங்காலம் டிரெயின்ல கிராமத் துக்குப் போகணும்... ஸ்டேஷன்ல டிரெ யின் வர வரைக்கும்... பேசிண்டிருப் போம்... செ நான் ஸ்கூல்லேயே.... ஆர்வம் இருந்தது. படிச்சான்... அவனுக்குக் கோட்டா இருக்கே... வேலையும் கிடைச் சது....''
கமலத்துக்கு சுவாரசியம் போய் விட்டது.
மாடிப்படி அருகே போய் நின்றாள்.
''சாப்பிட வரேளா....''
தட தடவென்று இறங்கி வந்தவர்.
''கொஞ்சமாவது படிச்சேளா.. இல்லே... அம்மா எப்ப கூப்பிடுவான்னு கீழேயே பார்த்துண்டு இருந்தேளா....''
''இல்லம்மா.. நல்லா படிச்சோம்..''
''பொய் சொல்லாதீ... தூங்கிப் போயிட்டே..... நானானே எழுப்பினேன்.''
''போடா... நீதான் பொய் சொல்றே.''
''ஸ்ஸ்... அப்பா இங்கேதான் இருக்கா... பயம் போயிடுத்தா...''
சாதுவாய் உள்ளே போனார்கள். 'கிள்ளாதே.....' என்று ரகுவின் இரைச்சல் கேட்டது.
குழந்தைகளாய் நின்றால் தூசியில்லை. மனிதனின் மிகப் பெரிய துக்கமே வளர்வதுதான். போட்டி நிறைந்த உலகம்... பெரிய வாய் திறந்து போறாளை... பொறாமை என்ற நாக்குகளை நீட்டி விழுங்கப் பார்க்கிறது. உலகத்தின் பயமே பிரதானம்..
''அப்பா...'' என்ற குரல் தட்டியெழுப் பியது.
''என்ன....''
''படுக்கை போட்டுட்டேன்பா....''
எழுந்தார். மாடிவரைதயில்தான் படுக்கை. குழந்தைகள் எல்லாம் கீழே ஹாலில் படுப்பார்கள். படியேறி மேலே போனார். பழைய மின் விசிறி சுழன்று சத்தம் எழுப்பியது கட கடவென்ற சத்தம் சிறிது நேரம் விடாமல் கேட்க... மனக ஆற்றாமை பாகமாகும்... மறிய அலைச்சலு

7 புள்ளி - 4 இல் நிறுத்தவும்
(இடுக்குப் புள்ளி)




9 புள்ளி - 1 இல் நிறுத்தவும்
(நேர்ப் புள்ளி)



6 புள்ளி - 2 வரிசை
2 இல் நிறுத்தவும்.
(நேர்ப் புள்ளி)



- ஜானகி


21%
AVAIL 21% INTEREST FOR FIXED DEPOSITS
PERIOD OF DEPOSIT : ONE YEAR
AMOUNT OF DEPOSIT : Rs. 5000 AND ABOVE
INTEREST PAYABLE : MONTHLY
பாலு ஜுவல்லர்ஸ்
72 உஸ்மான் சாலை, தி. நகர், சென்னை 600017. போன்: 441812, 441741



Ramu Karat Associates



மாக உழன்று தூக்கத்தில் கடைசியாக நிலைத்தது.

3

காயத்ரிக்கு பேங்கில் பேச்சுத் துணை குறைவுதான். இருக்கிற ஊழியர்களே வேலை பார்க்கிற மனிதர்களில் பெரும் பாலும் அப்பாவுக்குத் தெரிந்தவர்கள். காயத்ரி அப்படியே அப்பா நூலை... அதே மரியாதை கிடைத்தது.

தெரு முனையில் சாயந்திரம் நின்று அரட்டை அடிக்கிற விடலைகள் கூட இவளைக் கண்டால் விமர்சிக்காது. அப்பா நேர்மையான, கண்டிப்பான ஆசிரியர்.

பானு கூட கேட்டிருக்கிறாள்.

''ஏண்டி.... இவ்வளவு அழகா இருக்கே.... என்னைப் பார்த்தாலே விசிலடிக்கிற ஜென்மங்கள்... உன்கிட்டே வாலாட்டறதே இல்லையே.... எப்படி....''

காயத்ரியிடமிருந்து சிரிப்புதான் பதிலாக வரும். காலேஜிலேயே சிநேகிதிகள் 'ஏ' பேச்சுக்களில் இவளைச் சேர்ப்பதில்லை. இன்னமும் குழந்தை என்று நினைப்பா... அல்லது அவளை இம்மாதிரி பேச்சுக்கள் அணுகத் தரமில்லை என்ற நியமமா...?

பேசியது என்று பார்த்தால் முதல் ஆள், மனோகரனாகத்தான் இருப்பான்.

''நூலகத்துல நீங்க மெம்பர் இல்லியாமே...''


''ஏ... என்ன...'' திடீரென அவளிடம் வந்து காரணமாகப் பேசிய தொனியில் அதிர்ந்து நிமிர்ந்தாள்.

''கேள்விப்பட்டேன்.... ஏன் சேரலே....''

''வந்து.. அப்பாக்கு அதெல்லாம் பிடிக்காது...'' சிரித்தாள்.

''இங்கே வேலை பார்க்கிறது நீங்களா.... உங்க அப்பாவா....''

5 புள்ளி 3 வரிசை
3 - இல் நிறுத்தவும்.
(நேர்ப் புள்ளி)



- ஜானகி

சினம் மூண்டது. இவன் யார் என் செயலை விமர்சிக்க....

''ஸாரி.... வருத்தப்படாதீங்க. நான் யார் தெரியுமா... நூலகச் செக்ரட்டரி... மெம்பர்ஸ் சேர்க்கறதுல எனக்கு ஆர்வம்... அதனாலதான் வந்த உடனே லிஸ்ட்டைப் பார்த்துட்டு... உங்க பேர் இல்லையேன்னு பார்த்தேன்.... ஒருவேளை உங்களை யாரும் சேருன்னு சொல்லியே இருக்க மாட்டாங்க.... அப்படித்தானே.''

வாயடைத்தான். யாரும் அவனைக் கேட்கவில்லை.

''ஓக்கே... சந்தா எப்ப தரீங்க... மெம்பர்ஷிப் பாரம்... கொண்டு வந்து தரேன்....''

''ஐ ஹாவ் டு திங்க்....'' என்றாள் மெல்ல.

''டேக் யுவர் ஓன் டைம்.... ஆனா.. பாசிடிவ்.... பதில் வேண்டும்.''

போய்விட்டான்.

முதல் ஆண். சுருதாத அய்யங்கார் என்ற கவசம் கழன்று தன்னை இதர பெண்கள் போல பாவித்துப் பேசியவன்....

காயத்ரி வேலையில் மூழ்கிப் போனாள்.

4

மைதிலி வந்து விட்டாள். அழுவதோ எப்போது பார்த்தாலும் அழுகை. யார் கையிலும் நிற்கவில்லை. அம்மாதான் தூக்கி வைத்துக் கொள்ள வேண்டும். மைதிலி உட்கார்ந்தால் அவள் மடியிலேயே அமர வேண்டும்.

''சோக.. சனியனே... என்னால முடியலே... ஏண்டி என் பிராணனை வாங்கறே....''

அழும். கமலம் ஓடி வருவாள்.

''ஏன் அதைத் திட்டறே.... இங்கே வா... பாட்டி கல்கண்டு தரேன்....''

அடங்காது. அம்மாதான் வேண்டும். மைதிலிக்குத் தன்னை விட்டு அவள் போனால் போதும் என்று எண்ணம்.

''என்னோட வெளியே வாடி, கடைக்குப் போயிட்டு வரலாம்....'' என்றான் ரங்கு.


''போடி.... மாமா கூட போ....''

''மாட்டேன்....''

''எப்ப பார்... இதே ரோதனை. அங்கே சித்தே தலை சாய்க்க விடாது... மாமியார் முடுக்காத நேரத்துலே இவ வந்திருவா... சரி.. அவளைக் கூட ஒரு கணக்குல சேர்த்துக்கலாம். இந்தப் பீடை எப்ப பார் அழுகைதான்...''

கல்யாணம் ஆனதில் மைதிலிக்கு ஒரு அந்தஸ்து கிடைத்திருந்தது. மற்றவர்கள்

12 புள்ளி 4 வரிசை
4 - இல் நிறுத்தவும்.
(நேர் புள்ளி)



- ஜானகி

அப்பா சொல்லுக்கும் பதில் பேசிப் பழக்க மில்லை. வைதேகி அவர் எதிரிலேயே புலம்பினாள். விமர்சித்தாள். நகை செய் தாள்.

ரகுநாத அய்யங்கார் தனிமையில் கமலத்திடம் வருத்தப்பட்டார்.

"நம்மாத்து பொண்ணாவது இத்தே சமர்த்தா... பொறுமையா இருக்கக் கூடாதா....."

"இங்கே நாமதானே இருக்கோம். நம்மாத்துன்னு சொல்லி மனசை ஆத்திக்கறா... அங்கே கட்டுன பசு மாதிரி... வீட்டு வேலை எல்லாம் செஞ்சிண்டு.... பதவி சாத்தான் இருக்கா."

"எனக்குத் தோணலை. பாவம்.... பிஞ்சு... அதை என்னமா கசக்கிக் கொட் டறா..."

"என்ன பண்ணுவா... சொல்லுங்கோ. நல்ல மனுஷான்னு நம்பினோம். தெரியலை. சரி... கொண்டவனாவது அது சரிக்க ஆரம்பிப்பான்னு பார்த்தா எங்கப்பா அம்மா மனசு கோணாம நடத்துக்கோன்னு கைகழுவிட்டானாம். ஆப்பட்டது குருந் தைதான். தப்புதான்.. இப்பேன்னா நேக்கு வைத்திலேயே பிடிக்கருன்னு... அழறா....."

எது தப்பு... பெண்ணைப் பெற்றதா. இல்லை, வளர்த்த பெண் உன் உடைமை யில்லை இன்னொருவன் வீட்டுச் சொத்து என்று சமூகம் நிர்ணயித்ததா... அதற்குக் கட்டுப்பட்டு... கல்யாணச் சந்தையில்... மாப்பிள்ளைக்குப் போராடி... சம்பந்தி வீட்டார் இழுத்த இழுப்புக்கெல்லாம் அல் லாடுவதா.

தளர்ந்து போன அய்யங்கார்., பாதி ரேதி... மொட்டைமாடிக்குப் போனார்.

5

காயத்ரி நிமிர்ந்தாள்.

"என்னங்க... எப்பவும் வேலை தானா..."

எதிரில் மனோகரன் நின்று சிரித்தான்.

காயத்ரிக்கு ரங்குவின் நினைப்பு ஏனோ வந்தது. ரங்குவிற்கு வாய் அதிகம் பளிச்சென்று ஏதாவது சொல்லி விடுவாள். அப்பா இல்லாத நேரங் களில் இவர்களின் அரட்டைக் கச்சேரி நடக்கும்... கமலம் கூட வாய்விட்டுச் சிரித்து விடுவாள்.

'கரேல்னு.... ஒரு கலர்... உடம்பூல பல்லு மட்டும் வெள்ளை.'

மனோகரனைப் பற்றி ரங்குவின் கமெண்ட் இது. கலராக இல்லை என் றால்... அவன் மதிப்பில் ஒரு படி கீழ்தான்.

"என்ன... நீங்களாவே சிரிக்க றீங்க.."

"ஒண்ணுமில்லே."

"வீட்டுக்குத்தான் வரமாட்டேங்க... அட் லீஸ்ட்... என்ன பேசினோம். என்ன முடி வெடுத்தோம்னு தெரிஞ்சுக்கலாம். இல் லையா..."

காயத்ரி பேசாமலிருந்தாள்.

"ஜூனியரான லெவிஸ்ட் கிடைச்சா... அது எல்லாருக்குந்தான்."

மனோகரன் போனதும் சித்ரா வந்தாள்.

"என்ன சொல்லிட்டுப் போறான்."

"ஜூனியர்னு பேசினது."

"சரியான செவாடாம்... பிடேவாவிடமே சரியில்லையாம்."

சித்ராவிற்கு வாய் அதிகம். யாரைப் பற்றியும் விஷயம் சேகரித்து வைத்திருப் பாள். வம்பு புலட்டுவாள்.

"அந்த பிராஜக்ல பயங்கரமா கலாட்டா பண்ணுவானாம். எதிர்த்துப் பேசுவானாம். ரெண்டு சாத்து விட்டே கொடுத்திருக்கா."

"ம்..." காயத்ரி முனகினாள்.

எனக்கு எதற்கு அவன் புராணம். போயேன் உன் வேலையைப் பார்த்துண்டு.

"ஒரு தடவை என்ன நடந்தது தெரி யுமா... ஜூனியர் மீட்டிங் நடத்திட்டிருக் கப்போ... வந்து இன்டர்வ்யூல.. பேரேல நூல் கூப்பிட்டு அனுப்பினாராம். போடான் னுட்டானாம். அவர் கேபின்ல பேப்பர் வெயிட் எறிஞ்சு... கண்ணாடி உடைஞ்சு... ஒரே ரகளையாம்."

இவனா... இந்த மனிதன் சகஜமாய்ப் பேசிய விதத்தில் தெரிந்த நாகம்... நடவடிக் கையில் இல்லையா... அடிப்படை குணமா... பலம் தரும் நிமிரா...

சித்ரா மேலும் ஏதேதோ பேசி விட்டுத் தான் போனாள்.

அரைமணி நேரம் செலவிடத் தயாரா?



ஆம்... உங்களது முன்னேற்றத்திற்காக, தினசரி அரைமணி நேரம் செலவிடத் தயாராக இருக்கிறீர்களா? அப்படியானால் மேற்கொண்டு படியுங்கள்!...

★ வாழ்க்கையில் முன்னேற வேண்டும் என்ற விருப்பம் உடையவரா நீங்கள்?

★ ஆங்கில மொழியில் போதிய புலமையின்மை உங்களது முன்னேற்றத்திற்கு ஒரு தடையாக இருக்கிறதா?

★ பல வழிகளில் முயன்றும், பல புத்தகங்களைப் படித்தும் ஆங்கிலத்தில் சரளமாகப் பேசும் ஆற்றல் பெற முடிய வில்லையே என்று வருத்தப்படுகிறீர்களா?

★ கவலையை விடுங்கள்... நீங்கள் எதிர்பார்க்கும் முன்னேற்றத்தை அடைய உங்களது ஒய்வு நேரத்தில் தினசரி அரைமணி நேரம் ஒதுக்கினால் போதும்!.

ஆம்- இந்த அரைமணி நேரத்தில் நீங்கள் தினசரி மேற்கொள்ள வேண்டிய பயிற்சியினை மிகவும் எளிய முறையில் சொல்லித் தந்து, நீங்கள் தயக்கமின்றி ஆங்கிலத்தில் உரையாட தபால் மூலம் மிகச் சிறந்த முறையில் பயிற்சி அளிக்கிறோம்.

எனவே, ஆங்கிலத்தில் சரளமாகப் பேச வேண்டும், இலக்கணப் பிழை ஏற்பட்டுவிடுமோ என்ற பயமின்றி கடிதங்கள் கட்டுரைகள் எழுத வேண்டும், என்ற உங்களது நீண்ட நாளைய விருப்பம் இப்பயிற்சியின் மூலம் நிச்சயம் நிறைவேறும்.

என்ன? பயிற்சிக்காக தினசரி அரை மணி நேரம் செலவிடத் தீர்மானித்து விட்டீர்களா?

அப்படியானால், உங்களது முன்னேற்றத்தின் முதல் முயற்சியாக ஒரு ஐந்து நிமிடம் செலவு செய்து ஒரு போஸ்ட் கார்டில் "நான் ஆங்கிலம் கற்க விரும்புகிறேன்" என்று எழுதி. .

விவேகானந்தா கல்வி நிலையம்,
9, நடேசன் தெரு, தி.நகர்,
சென்னை 600 017.

என்ற முகவரிக்கு இன்றே அனுப்புங்கள் பயிற்சி பற்றிய விவரங்களை உங்களுக்கு உடனே அனுப்பி வைக்கிறோம்.

"நேர்முகப் பயிற்சியும் உண்டு"

NAGA

பேங்க் முடிந்து கிளம்பும் போது மனோகரன் வெளியில் காத்திருந்தான். காயத்ரியைப் பார்த்ததும் சிரித்தான்.

''உங்க வீட்டுக்குத்தான் வரேன்.''

பேசாமல் நடந்தாள்.

''முன்னாலயே போயிருப்பேன். சரி... வெயிட் பண்ணி... உங்க கூட பேசிவிட்டு போகலாமேன்னு நின்னேன்.''

என்ன நினைக்கிறான். கட்டுமஸ்தான தன் உடம்பு இவளை எதுவும் பேச விடாது என்றா...

சட்டென்று நின்றாள்.

''எனக்குப் பிடிக்காது...''

''என்ன...''

''இந்த மாதிரி கூட வரது எல்லாம்...''

குரலில் தெரிந்த அழுத்தம்... நேர்ப் பார்வை... முடிவெடுக்கிற திறன்.... ஏதுவோ அவனை அசைத்து விட்டது.

''சரி... நீங்க போங்க... நான் வேற வழியா வரேன்...''

திரும்பிக் கூட பார்க்காமல் நடந்தாள்.

வீட்டுவாசலில் அவன் செருப்புகள் கிடந்தன. ஹாலில் அம்மாவுடன் பேசிக் கொண்டிருந்தான். இவளைப் பார்த்ததும் கவனிக்காதவன் போல சகஜமாக அம்மாளிடமே பேசினான்.

கொல்லைப்புறம் போய் முகம் கழுவிக் கொண்டு உள்ளே வந்தாள். கமலம் கொடுத்த காப்பியைக் குடித்தாள்.

''உங்க பேங்க்தானாமே... அவளும்...''

''அதுக்கென்ன...''

''ஏதோ பரீட்சை எல்லாம் எழுதறானாம். அப்பாகிட்டே சந்தேகம் கேட்கணுமாம்.''

போச். இந்த வீட்டுக்கு வர ஏதோ சாக்கு. இவன் நோக்கம்தான் என்ன.

''பார்த்தா... நல்ல பையனாத் தெரியறான்... என்ன வேற ஜாதி.''

காயத்ரி சிரித்தாள்.

''ஆளை அவ்வளவு சீக்கிரத்துல எடை போட்டுடாதேம்மா.''

''என்னடி சொல்றே...''

''போன ஆபீஸ்ல... பேப்பர் வெயிட் எறிஞ்சு ரகளை பண்ணினவனாம். சரியான ரௌடியாம்..''

''நிஜம்மாவா. நம்பவே முடியலையே... இங்கே வந்தா... கையைக் கட்டிண்டு நிக்கறான்.''

''எல்லாம் வேஷம்.''

''என்னவோ... போ.. அப்பாவால அவனுக்கு ஒரு காரியம் ஆகப் போறதில்லே. தேடிண்டு வந்து மரியாதை பண்றானேன்னு பார்த்தேன். இப்படியா?''

அழுகை அழுது கொண்டிருந்தாள். மைதிலி ஏதோ நாவலில் மூழ்கியிருந்தாள். ஏதுகாதக்யம்மாள் முன்பெல்லாம் கண்டிப்பு. சீசீ... இதே போடு... என்பாள், கையில் ஏதாவது கதைப் புத்தகத்தைப் பார்த்தாலே நிற்க எதற்கும் தைரியம் வராது.

மைதிலி நிறைய மாறியிருக்கிறாள். காயத்ரியிடம் முன்பு போல பேசுவதில்லை. 'வேலைக்குப் போறா... அலட்டல்' என்று விமர்சித்தாளாம். அதை விட வருத்தம், தன் கல்யாணத்திற்குச் செய்ததை விட காயத்ரிக்குச் சேர்த்து வைத்திருப்பது அதிகம் என்கிற கணக்கு.

அம்மாவிடம் யதார்த்தமாய்க் கேட்பது போல விசாரித்திருக்கிறாள். கமலமும் ஒளிவுமறைவின்றி பேசி விட..... அப்போது பேசாமலிருந்து விட்டு... பின்னொரு நேரம் புலம்பியிருக்கிறாள்.

'நான்னா உனக்கு எப்பவுமே மட்டம் தான்... என்னைப் படிக்க வச்சியா... உடனே கல்யாணம்னு என்னைப் புடிக்க விரட்டினாக்க. அவளாலே ஒனக்கு எப்பவும் ஒசத்திதான். சம்பாதிக்கிற ராங்கி வேற அவளுக்கு... போன தடவை அவர் வந்தப்போ... ஒரு வார்த்தை பேசலியே... ஊருக்குப் போனதும் சொல்லிச் சொல்லி வருத்தப்பட்டார். உன் சொத்தை அவ முழுக்க முழுக்க எடுத்துண்டு போறான்னு..'

ஓய்வு பெற்ற தந்தையின் பென்ஷன்... காயத்ரியின் சம்பளம் இரண்டுந்தான் இன்று குடும்பம் நடத்த உதவி. துளிக் கூட அதைப் பற்றி நினைக்காமல்.... கூடப் பிறந்தவள் என்ற ஸ்மரணை இன்றி... என்ன பேசுகிறாள்...

கமலம் அயர்ந்து போனாள். பிறகு தான் சுதாரித்துக் கொண்டாள். இப்போது

சில பொம்மைகள், பார்க்க அழகாகவும், பெரியதாகவும் இருக்கும். ஆனால் அதற்குக் கையோ, இடுப்போ உடைந்து ஒட்ட வைத்து பார்க்க அசிங்கமாக இருக்கும். அது போன்ற பொம்மைகளுக்கு, அழகான கலர்த் துணிகளில், புடவை, பாவாடை போன்று தைத்துப் போட்டோ ஸ்வாமி படங்களாக இருந்தால் பாசி, பூ மாலைகளைப் போட்டோ மறைத்து விட்டால், பொம்மை வழக்கத்தை விட மேலும் அழகாகத் தோன்றும்.

- உமா.



நான் பிரெஸ்டீஜ் அல்டிமேட் வாங்கியதற்குக் காரணம் என்ன தெரியுமா?

என் மனைவியின் பாதுகாப்பு என்னை பொறுத்தவரை மிகவும் முக்கியமானது.

"மனைவியை நான் ரொம்பவும் போற்றிப் பாதுகாப்பதாக சிலர் என்னைக் குறை கூறுகின்றனர். ஆம், இது உண்மைதான். அதனாலேயே நான் பிரெஸ்டீஜ் அல்டிமேட் வாங்கினேன்.

பிரெஸ்டீஜ் அல்டிமேட்டின் பிரத்தியேக பாதுகாப்பு அம்சங்கள் சிறப்பான முறையில் அமைக்கப்பட்டுள்ளன. எப்போதும் காணும் சேஃப்டி வால்வுகள் தவிர, இதில் பிரெஸ்டீஜின் நூதன கண்டுபிடிப்பான



ஜிஆர்எஸ்

காஸ்கெட் ரிலீஸ் சிஸ்டம் [ஜி ஆர் எஸ்] உள்ளது. வெயிட் வால்வில் அடைசல் இருந்தால் ஜி ஆர் எஸ் உடனே செயல்பட்டு அதிக பிரஷரை கீழ்நோக்கி பாதுகாப்பாக வெளியேற்றும்.

பிரெஸ்டீஜில் மட்டும் உள்ள மற்றொரு பிரத்தியேக அம்சம் - டபிள் லாக்கிங் சிஸ்டம். இதனால் பிரஷர் பாதுகாப்பான நிலைக்குக் குறையும் வரை குக்கரைத் திறக்க முடியாது. பாதுகாப்புக்கான புது யுத்திகள் பிரெஸ்டீஜில் வந்து



டபிள் லாக்கிங் சிஸ்டம்

கொண்டே இருக்கின்றன. என் மனைவியின் பாதுகாப்பைப் பற்றி என்னைப் போலவே பிரெஸ்டீஜுக்கும் ஆழ்ந்த அக்கறை இருப்பதை இது நிரூபிக்கவில்லையா?"

பிரெஸ்டீஜ்
அல்டிமேட்

TTK தயாரிப்பு

MAA COMMUNICATIONS 2573-92 TAM



மிருதுவான போஷாக்கு

உங்கள் குழந்தைக்கு 4 மாதங்களாகும் சமயத்தில் அவளது இயற்கை உணவான பாலுடன் எளிதில் ஜீரணிக்க உகந்த போஷாக்கு உணவான நெஸ்டத்தையும் கொடுங்கள்.

நெஸ்டம்

முக்கிய அறிவிப்பு: உங்கள் குழந்தைக்கு தாய் பால்தான் மிகவும் சிறந்தது. உங்கள் குழந்தைக்கு 4 மாதங்கள் ஆனதில் இருந்து தாய்ப்பாலுடன் குழந்தைக் தானிய உணவும் கொடுங்கள்.

எதுவும் வெளிப்படையாய் சொல்ல வில்லை.

"புதுசா என்ன பண்ணியிருக்கே..."

"எதுக்கு."

"இல்லே. ஒவ்வொரு தடவை நான் வரும்போதும் அதை வாங்கினேன். இதைப் பண்ணேன்னு சொல்லியே. எனக் கென்ன... ஆரும் பாருமா... பணத்தை அழிக்காமே... ஏதாவது வாங்கினியான்னு கேட்டேன்."

"எங்கேம்மா முடியறது. இந்த விலை வாசியில ரெண்டு பேரும் நா பணம் கந்தமா போற மாட்டேங்கிறது. பலசரக் கடை..... துவைக்கை பாக்கி, வைக்காம குடும்பம் நடத்தினா போதும்னு இருக்கு...."

தெளிவாத்தனமாக அந்த வெள்ளிச் சொம்பை வாஞ்சி கண்பட எடுத்து விட்டாள்.

"இது போன தடவை இல்லையே.... புதுசா இருக்கே..."

"பழைய நட்டு... அப்பாவோ டதை.... அழிக்கப் பண்ணச் சொன்னேன். புதுசு எங்கேர்ந்து வாங்கறது. நாளைக்குக் கல்யாணம் கார்த்தின்னு வந்தா உதவு மேன்னு..."

"நீ ரொம்ப மாறிட்டேம்மா. பெத்த பொண்ணு கிட்டேயே மறைக்கப் பேச ஆரம்பிச்சுட்டே.. என்னைச் சொல்லணும். ஒரு குண்டுமணி வாங்கினாக் கூட உனக்கு தபால் எழுதிப் போட்டுடறேன். இது உன் சுபாவம் இல்லே... வேலைக்குப் போற பெரிய மனுஷி கத்துக் கொடுத்திருப்பா."

காயத்ரியிடம் அப்புறம் கவலைச் சொல்லி வருத்தப்பட்டாள். 'அவனுக்கு என்னவோ செஞ்சாக்க. கொஞ்சங்கூட நிறக் கலியே.'

காயத்ரி இதையெல்லாம் காதில் போட்டுக் கொள்ளவில்லை. பேங்க், வீடு வந்தால்... ஆபீஸ் பரீட்சைகளை புத்த கங்கள்... அம்மாவுக்குக் கூடமாட சமையற் கட்டில் உதவி.. ஏதோ, கதாவுக்குப் புரியாத தைச் சொல்லித் தருவது... சங்கீதின் கேலிப் பேச்சு... பொழுது போய் விடு கிறது.

கறிவேப்பிலையை நாட்பேக்கில் வைத் தால் இரண்டு நாட்கள் வாடாமல் பசுமையாக இருக்கும் என ஒரு சிநேகிதி எழுதி யிருந்தார். என் அனுபவத்தை எழுதுகிறேன். கறிவேப்பிலையைச் செடியில் இருந்து பறித்த உடன் அப்படியே பாட்டிலில் போட்டு மூடி விடுவேன். தேவையான போது எடுத்து அவசி உபயோகப்படுத்துவேன். இப்படிச் செய்வதால் ஒரு மாதம் வரை புதிதாய் பறித்த போலவும், இலைகள் கொட்டாமல் 'பசுமையாக' இருக் கிறது.

- [illegible]



எப்போது மெயிலைப் போனானோ.... மாடியிலிருந்து அம்மா சாப்பிட அழைத்த தும் கீழே இறங்கி வந்தாள்.

"நாளைக்கு அவன் லீவாம். மேனேஜர் கிட்டே சொல்லிடணுமாம்.. மறந்துட்டா னாம்... உன்கிட்டே சொல்லச் சொன் னான்."

என்ன திமிர்... இவன் வைத்த ஆளா நான். வேண்டுமென்று லீவு சொல்லாமல் வந்து விட்டு இவளிடம் தகவல் சொல்லி அனுப்புகிறான். என்ன நினைப்பார்கள்.

போடா.... நான் எதுவும் சொல்லப் போவதில்லை. அது உன் பிரச்னை. எனக்கும் அதற்கும் எந்தவித சம்பந்தமும் இல்லை.

"ஏன் சொல்லலே..."

காயத்ரியின் எதிரில் மனோகரன்.

"என்ன சொல்லணும்."

"லீவு... சொல்லச் சொன்னேனே. இப்ப வந்தா மேனேஜர் என்ன சொறான்... தெரியுமா.."

"மறந்து போச்சு."

"பொய் சொல்லாதீங்க... வேணும்னு சொல்லாம விட்டுட்டீங்க..."

"அப்படித்தான் வச்சுக்குங்களேன்.."

"அதுதான்... ஏன்னு கேட்கறேன்..."

"எனக்கு இஷ்டமில்லே, அது என் வேலை வேலையும் இல்லே..."

"ஓ..... அப்படியா.. ஒரு கொலீக்கிற்கு கொடுக்கிற மரியாதை இதுதானா."

"மரியாதை தானா வரணும்.." என் றாள் அவளையும் மீறி.

முறைத்துப் பார்த்துவிட்டுப் போய் விட்டான்.

உன்னிடம் எனக்கு என்ன பயம் என்று நினைத்துக் கொண்டாள். அடுத்த இரண்டு, மூன்று நாட்களுக்கு அவன் அவளருகி லேயே வரவில்லை. விட்டது தொல்லை... என்று நினைத்துக் கொண்டாள்.

6

சாரதா அம்மாள் பரபரப்பாக இருந்தாள்.

"லெட்டர் வந்திருக்கு... பையன் ஏதோ லீவுல வர்றான் வராளாம்... பெண்ணைக் கொண்டு வந்து காண்பிக்க முடியுமான்னு கேட்டு எழுதியிருக்கா..."

"எப்ப வராளாம்."

"நாளைக்கே... உடனே அவள் பெங்களூர் போகணுமாம்... இதுக்காகத்தான் வராளாம்."

கமலம் தடுமாறினாள்.

"என்னன்னா... இப்படிச் சொல்றேள். இவ வேற ஆத்துல இல்லே... நாளைக்குத்தானே கிளம்பறா...."

"வேற வழி... இல்லேன்னா... இனிமே எப்பபோதான். நான்... இவளுக்கு மட்டும் டிக்கட் கிடைச்சது... வாங்கிண்டு வந்துட்டேன் வரப்பவே.... அன்னிலேர்ந்துலே நான் யோசிக்கலாம்னு..."

"என்ன கன்றாவியோ. இத்தோடவே பிரயாணமா கவி காயத்ரான்.."

"சரி.. சரி, அவளுக்கு... எனக்கு டிரஸ் ரெடி பண்ணு.. ராத்திரி டிரெயின்ல போகணும்..."

காயத்ரி கெஞ்சினாள்.

"வேண்டாம்மா... எனக்கு என்னவோ போல இருக்கும்மா..."

"நாமதான் அனுசரிக்கப் போகணும். பிள்ளையைப் பெத்தவா... கொண்டு வந்து காமிச்சா... இமயமலைக்கே கூட்டிண்டு போகணும். அதான்டி விதி."

காயத்ரிக்கு மூச்சு முட்டியது. முதல் முறையாக இந்தச் சம்பிரதாய திருமண அமைப்பின் மேல் எரிச்சல் வந்தது. முகந் தெரியாத அந்த இளைஞனை மனப் பூர்வமாய் வெறுத்தாள்.

பெண் பார்க்கும் படலம் ஒரு தெருத் தள்ளி உறவினர் வீட்டில் நடந்தது. 'போய்ப் பதில் போடுகிறோம்...' என்று சொல்லி விட்டுப் போனார்கள்.

ஊருக்கு அன்றிரவே திரும்பினார்கள்.

"ஏங்க... நேத்திக்கு ஆளைக் காணோம். நேத்து லீவு..."

மனோகரனின் மேல் எரிச்சல் வந்தது. நிமிராமல் எழுதிக் கொண்டிருந்தாள்.

அவன் மீண்டும் கேட்டும் மௌனமாயிருக்கவே... விலகிப் போனான். சித்ரா வந்தாள்.

"என்னடி லீவு... தூஷ்வால் விசேஷமா.."

"ம்......"


"என்ன இதுவாவது செட்டில் ஆகுமா."

"தெரியலே..."

"ம னோ க ர ன் கி ட் டே சொன்னியா... பெண் பார்க்க வருவாங்கன்னு..."

காயத்ரி நிமிர்ந்தாள்.

7 புள்ளி 3 வரிசை
3 - இல் நிறுத்தவும்.
(நேர்ப் புள்ளி)



- சூசனி

"இல்லையே... ஏன் கேட்கறே..."

"நேத்திக்கு கமெண்ட் அடிச்சுகிட்டிருந்தான். அவர் வீட்டுல அவ்வளவு சீக்கிரம் கல்யாணம் செஞ்சு கொடுத்திருவாங்களா... சம்பாதிக்கற பொண்ணாச்சே... கட்டிக் கொடுத்துட்டா... பணம் போயிரும்னு வீட்டோட வச்சுப் பாங்க... பொண்ணு மனசு நோகக் கூடாதுன்னு.. அப்பப்ப.. இந்த மாதிரி... வரன் பார்த்து... இவங்களே... பையன் சரியில்லை... ஜாதகம் பொருந் தலேன்னு தட்டிக் கழிச்சுருவாங்க. அப்படி... இப்படின்னு பேத்தினான்."

காயத்ரி சிரமப்பட்டாள். சித்ராவிற்கு எதிரில் தன்னை வெளிப்படுத்தி விடக் கூடாது.

"தொலையறது... எவன் உளறலுக்கெல்லாம் நாம பதில் சொல்லிகிட்டு இருக்க முடியுமா..."

சித்ரா போன பிறகு மனசு வேலையில் ஈடுபட மறுத்தது. மனோகரன் என்னதான் நினைத்துக் கொண்டிருக்கிறான். இவனை இப்படியே விட்டால்... தப்பு... நாலு வார்த்தை நாக்கைப் பிடுங்கிக் கொள்வது போல கேட்க வேண்டும்.

ரகுநாத அய்யங்கார் இரண்டு மாடி வேதி போர்ஷன் வாசலில் இருந்த போர்டைப் பார்த்தார்.

"கதிரேசன்... பி.எல்..."

அட்ரஸ் தப்பா... இதேதான் ரோஹிணி அபார்ட்மென்ட்ஸ். மூணாவது மாடி. ரூம் நம்பர் 32. என்னது... நம்பளவா ஜாதி பெயர் மாதிரி தெரியலையே.

காலிங் பெல் உள்ளே அடித்தது கேட்டது.

கதவு திறந்து... பருத்த பெண்மணி வெளிப்பட்டாள்.



சுவை நிறைந்த கேசரி நிமிடத்தில் தயாரிக்கலாம்.

இலவசம்

மில்க்மெய்ட் ரெஸிபி புத்தகம்

புது தில்லி-110019.



விருந்தை பலசெய்திட மில்க்மெய்ட்

''என்னங்க... யாரு நீங்க...''

''இங்கே. வேதாந்தம்னு...''

''ஓ... ஜாதகம் கொணாந்திருக்கீங்களா....''

ஏன் சிரிக்கிறாள்...

''அவுங்க இந்த அட்ரசை விட்டுப் போய் ஆறு மாசமாச்சுங்களே... பையன் பேரு முரளி... அவனுக்குத்தானே... வந்தீங்க...''

என்னது... பட்டு... பட்டென்று பதுமை போல பேசுகிறாள். தலையாட்டினார்.

''அந்தப் பையனுக்கு கல்யாணம் ஆயிருக்குங்க.... போன வாரம்.. மருமகளையும்.... குழந்தையையும் கொண்டு வந்து விட்டாங்களாம்... அவுங்க வேற ஏரியாவுக்குக் குடி போயிட்டாங்க....''

ரகுநாத அய்யங்கார் என்ன செய்வதென்று புரியாமல் ஒரு கணம் ஸ்தம்பித்தார்.

''வாரத்துக்கு ஒருத்தராவது... தேடிக்கிட்டு வராங்க... எங்கேதான் ஜாதகம் கிடைக்குதோ...?''

அவர் அனுமதியை எதிர்பாராமல் கதவை மூடிக் கொண்டு உள்ளே போனாள்.

யாரைக் குத்தம் சொல்ல முடியும்... தலைவிதியை நொந்தவராய்... மெல்லப் படியிறங்கினார்.

7

மைதிலி அழுது கொண்டிருந்தாள்.

காயத்ரிக்கும் சிரிப்பு வந்தது. அம்மாவும் பெண்ணும் மாற்றி மாற்றி அழுகிறார்கள்.

அனுஷா இப்போது விளையாடிக் கொண்டிருந்தாள். கமலம் கைவேலையில் ஈடுபட்டிருந்தாள்.

''ஏம்மா அழறா.''

''வந்து... நாலு நாளாச்சு... அவ நினைச்ச வந்தது நடக்கலே. அழுகையால எதையாவது சாதிக்க முடியுமான்னு பார்க்கறா....''

ஒரு நிமிடம் அவள் மேல் இரக்கம் வந்தது. புதுப் புடவையைத் தான் கட்டிக் கொள்ளுமுன் காயத்ரிக்கு தந்தவள்தான். திருமணமாகிப் போனதும் தான் இந்தக் குணம் வந்து விட்டது. குளவி மாதிரி ஓயாமல் கணவன் கொட்டினால்... அவளும் பாவம் என்ன செய்வாள். காசு வேண்டும்... படித்து வேலைக்குப் போயிருந்தாளாவது ஒரு தைரியம் வந்திருக்கும்... இரண்டு வார்த்தை மனதில் பட்டதை எடுத்துப் பேச முடியும்.

மனசு சட்டென்று இளகிவிட்டது.

''அம்மா... நான் ஒன்னு சொன்னா... கோவிச்சுக்க மாட்டியே...''

''என்னடி...''

''போனமா... எனக்கும் செஞ்சு வச்ச தோடை மைதிலிக்குக் கொடுத்துரு....''

''உளறாதே... பேசாம இரு....''

''இல்லம்மா... எனக்கு இன்னும் டைம் இருக்கு... அவ நிலைமை வேற... பாவம். அவளும் என்ன சுகத்தைக் கண்டா... இப்படிப் பந்தாடறமாதிரி... ரெண்டு பக்கமும் மனுஷா உதைச்சா... அவ எங்கே போவா.... விரக்தில அவ ஏதாவது ப ண் ணி ண் டு ட் ட ா... வேணாம்மா... அந்தப் பாவம்... கொடுத்திடலாம்... நானே அப்பாட்ட பேசறேன்.''

கமலம் என்ன சொல்வதென்று தெரியாமல் விழித்தாள். காயத்ரியின் பேச்சில் இருந்த யதார்த்தம் புரிந்தாலும் எதற்காக அவள் தனக்குரியதை இழக்க வேண்டும்? அதை மனசு ஏற்றுக் கொள்ள மறுத்தது.

காயத்ரி அப்பாவிடம் போனாள்.

''சொல்லும்மா...''

''எனக்கு என்னமோ மனசுக்கும் சரின்னு படுதுப்பா....''

பயமாக இருந்தது. ஆனாலும் மனசாட்சியின் குரல் போல ஒன்றை வெளிப்படுத்தாமல் இருக்கவும் முடியவில்லை. துணிந்து சொல்லி விட்டாள்.

அவளையே பார்த்தார்.

''நன்னா... யோசிச்சுத்தான் பேசறியா....''

''ஆமாம்பா...''

''உன் நிலைமையை நினைச்சுண்டியா...''

''ம்...''

''மைதிலி...'' என்றார்.

எதிரில் வந்தவளிடம்... சொன்னார்.

''எப்ப ஊருக்குப் போகணும்னு சொல்லு... டிக்கட் ரிசர்வ் பண்ணிடறேன்....''

''சேவிக்கறேம்பா....''

நமஸ்கரித்தவளை எந்தப் பாதிப்புமின்றி பார்த்தார்.

''விவேகமா நடந்துக்கோ... அவ்வளவுதான் நான் சொல்ல முடியும்...''

காயத்ரியை லட்சியம் பண்ணாமல் மைதிலி நகர்ந்து போனாள்.

காயத்ரிக்கு மீண்டும் சிரிப்பு வந்தது.

பேங்கிற்கு போன் வந்தது. ரகு தான் பேசினான்.

''அனுஷா... ரோட்டுல அடி பட்டுட்டா... நர்ஸிங்ஹோமுக்குக் கொண்டு


BPL
புதிய பிபிஎல்-அஜீத் 1404
ப்ளாக் & வைட் போர்ட்டபிள் டிவி
SMPS
ஏற்ற தாழ்வான மின்சாரத்திலிருந்து முழுமையான பாதுகாப்பு
மனதிற்கினிய ஒலி
பிபிஎல்-அஜீத்தின்
ஒளி



நாம் கஷ்டப்பட்டுச் சம்பாதிக்கிற நிலை யைப் பக்தி சிரத்தையுடன் உழைத்தாலன்றி வெற்றிபெற முடியாது. ஆனால் இரத்தம் மட்டும் போதாது. லட்சியத்தில் பக்தி வேண்டும். பெரும் முயற்சிகள் அனைத்திற்கும் சிரத்தை தேவை.

- ராஜாஜி கூறியது
- என். விஜய சீனிவாசன்

போயிருக்கா... அப்பாவும் கூடப் போயி ருக்கார்.''

''எப்படிடா ஆச்சு....''

''தெரியலே... இதை வீடுல விளை யாட விட்டுட்டு அந்த நாய்க்காரி... ஏதோ புக் படிச்சுண்டு இருந்திருக்கா. கார் வரது தெரியாமே.. இது ரோடுக்கே போயி ருந்து... தலையில அடிபட்டு... ஒரே ரத்த விளார்...''

''நான் இப்பவே வரேன்....''

''இல்லே... நான்.. சும்மா ஒரு தகவ லுக்காக...''

போனை வைத்து விட்டாள். படபடப்பாக இருந்தது. சித்ராவிடம் போய் சொன்னாள்.

மேனேஜரிடம் பர்மிஷன் வாங்கிக் கொண்டு வெளியில் வந்து ஆட்டோ பிடித்து... ஹாஸ்பிடலுக்குப் போன போது... வெளியிலேயே ரகு காத்திருந் தான்.

''பயப்பட வேணாம்...'' என்றான்.

''என்னவாம்...''

''ரத்தம் போயிருக்கு. அவ குரூப் ரத்தம் வேணும்னா... அரேஞ்ச் பண்ணி டாச்சு...''

''இப்ப பார்க்கலாமா...''

''தெரியலே... அப்பா.... அம்மா... மைதிலி எல்லாரும் உள்ளேதான் இருக்கா.''

போனார்கள். கமலத்தின் கண்கள் சிவந்து படபடப்புடன் இருந்தாள்.

''என்னம்மா இது...''

''என்னவோ... போறாத காலம்...''

மைதிலியைத் திரும்பிப் பார்த்தாள். சூழலுக்கு ஒவ்வாமல் காதுகளில் வைரத் தோடுகள்.

வெளியில் காத்திருந்தார்கள். டாக்டர் வந்து 'பயமில்லை' என்று சொல்லி விட்டுப் போனார். திடீரென மனோகரன் வந்தான்.

''வரட்டுமா.... ஸார்....''

''ரொம்ப நன்றிப்பா..''

''சேச்சே... என்ன ஸார்... பெரிய வார்த்தை எல்லாம் சொல்லிட்டு... என் கடமையைத்தான் செஞ்சேன்....''

இவளைக் கவனிக்காதவன் போல போய்விட்டான்.

கமலம்தான் சொன்னாள்.

''நீ ஃபோன்ல பேசிட்டு... பர்மிஷன் வாங்கப் போனியாம்.... உடனே இவன் வந்துட்டானாம். இவனோட ரத்தமும் அதே குரூப்தானாம். நல்ல பையன்....''

இரண்டு நாட்கள் கழித்து டிஸ்சார்ஜ் செய்தார்கள். மைதிலியின் கணவனும் வந்துவிட்டான். வைரத் தோடு வேறு அவளை மேலும் கர்வமாக்கியிருந்தது.

''என் பொண்ணைக் காப்பாத்தி கொடுத்துட்டீங்களே... ரொம்ப தேங்க்ஸ் ஸார்...''

''அவ என் பேத்தியில்லா... நினைச் சேன்...''

சுருதாத அர்ப்பங்களின் வார்த்தைகளில் சில நேரங்களில் ஒரு 'கரீம்' இருக்கும். கண்டு கொள்ளாதவன் போலப் பேசி னான். தானே மைதிலியையும் அனுஷா வையும் அழைத்துக் கொண்டு போனான்.

8

''ஹாய்...'' குரல் கேட்டது வெளியி லிருந்து வாசலுக்கு வந்தாள் காயத்ரி.

மனோகரன் நின்றிருந்தான்.

''எப்படி இருக்கு... அனுஷா... இல்லே... அவ பேரு.''

''ஊருக்குப் போயிட்டாங்க...''

''ஓ. நீங்க வேற ரெண்டு நாளா ஆபீஸ் வரலியா. விவரம் தெரிஞ்சுக்க முடி யலே...''

''தேங்க்ஸ்....''

''ஏ. என்ன....''

''நன்றி சொல்லேன். சமயத்துல ரத்தம் கொடுத்து உதவினதுக்கு...''

''நன்றியை எதிர்பார்த்தும் செய் யலே...''

''வேற எதையும் எதிர்பார்க்காதீங்க.''

''சொல்லயிருந்தான்... ஏன் இப்படிப் பேசினோம் என்று... உதட்டைக் கடித்துக் கொண்டான்.

''அப்பா வீட்டுல இல்லையா...''

''இல்லே... வெளியே போயி ருக்கார்..''

''உங்ககிட்டே புக்ஸ் ஏதாவது இருக் குமா... நம்ம பேங்க் எல்லாம் சம்பந் தமா...''

''எதுக்கு...?''

''பாஸ்ட் டுல ரெண்டு பேப்பர் பாக்கி. அதையும் எழுதிடலாம்னு...''

சொன்னாள். அவனுக்குத் தேவைப் பட்ட புத்தகத்தை எடுத்து வந்தாள். படிப்பு என்றால் வேறு எண்ணம் வராது. 'சலிப்பே இல்லை. யார் கேட்டாலும்... சொல்லித் தரணும்... நமக்குக் குறையே வராது....' என்பார் அப்பா.

''தேங்க்ஸ்..'' என்றான் சிரிப்புடன்.

''எனக்கும் வேணும். நீங்க எப்ப தருவீங்க...''

''ஒ வீக்ல வச்சுக்கறேன்.. அதுக்குள்ள அட்ஜஸ்ட் பண்ணி படிச்சுறலாம்.''

கேட்கலாமா... வேண்டாமா... என்று யோசித்தாள்.

''என்ன... ஏதோ தயங்கறீங்க... திருப்பித் தருவேனான்னா...''

'பிரெட்டுல் இத்தனை வகைகளா?'' என்பதில் இந்தக் கலவையைச் சேர்த்துக் கொள்ளுங்கள்.

வெங்காயம் இருக்கும் இட்லி மாவில் சிறிது பச்சை மிளகாய், கறிவேப்பிலையை நறுக்கிக் கலந்து கொள்ளவும். ஒரு பிரெட் துண்டை முக்கோண வடிவில் இரு துண்டுகளாக்கி இந்த மாவில் தோய்த்து, எண்ணெயில் பொரித்தெடுக்கலாம். அதிக எண்ணெய் வேண்டாதவர்கள் தோசைக் கல்லில் போட்டு மூன்றலை ஸ்பூன் எண்ணெய் விட்டு, மூடிவிட்டு சிறுதீயில் வேக வைக்கவும். ஒருபுறம் வெந்ததும் திருப்பிப் போட்டு ஒரு ஸ்பூன் எண்ணெய்விட்டு, இரண்டு பக்கமும் சிவந்ததும் எடுக்கவும்.

இதனைத் தேங்காய் சட்னி, தக்காளி சாஸ், சாம்பார், மற்றும் துரும்பு இவைகளில் ஏதாவது ஒன்றுடன் சாப்பிடலாம். வயிறும் நிறையும். சுவையான மாலைநேரச் சிற்றுண்டி.

- கார்த்திகை



''இல்லே... ஒரு விஷயம் கேள்விப் பட்டேன்..... பேசினது சரிதானான்னு கேட்கலாம்னு...''

''என்னது...''

சித்ரா சொன்ன விஷயத்தைக் கேட்டாள்.

''பெண் பார்க்க ஏற்பாடு பண்றதை நாடகம்னு சொன்னீங்களா.''

''யார் சொன்னாங்க...''

''யார் சொன்னா என்ன... நிஜமா பொய்யா...''

''பாதி நிஜம்.. பாதி பொய்...''

''புரியலே...''

''இந்த மாதிரி சில பேர் வூட்டுல செய்வாங்க.... ஆமா... யார்... பாவம்... பொண்ணுப் பட்டு அலையறாரு.... வரன்தான் கிடைக்கலே... அப்பாருங்க வூட்டுலேர்ந்து நிறைய நல்ல விஷயம் கத்துக்கலாம்... கூடவே... இப்படி சில வேண்டாத பழக்கங்களும்... இருக்குன்னு பேசினேன். உங்களிட்டே சொன்னவங்க... திரிச்சுப் பேசிட்டாங்க போலிருக்கு....''

பார்வையில் நிஜம் தெரிந்தது. ரெளடியா... இல்லை. வழி தவறிய பூனை குணமா... நல்லது சொல்லித் தந்தால் கேட்டுக் கொள்வானா....?

''பார்த்தா... நல்ல மனுஷன் மாதிரி... இருக்கீங்க.. ஆனா... கேள்விப்பட்டது விஷயம் எதுவும் சந்தோஷமா இல்லியே...'' என்றாள்.

அவளுக்கே ஆச்சரியமாக இருந்தது. தானா இப்படிச் சரளமாக பேசிக் கொண்டிருப்பது. அதுவும் எவனோ மூன்றாம் மனிதனிடம்.

''என்ன கேள்விப்பட்டீங்க...''

''ரெண்டு... மூணு.. சார்ஜ் ஷீட் இருக்காமே உங்க மேல...''

''ஓ... அதுவா..'' சிரித்தான் உரக்க.

''அவமானமா இல்லையா...''

''இல்லே.. அதெல்லாம் உங்களை மாதிரி அப்பாரு வூட்டு ஆளுங்களுக்குத் தான்... நாங்க நியாயத்துக்குப் போராடற ஆளுங்க... இதுக்கெல்லாம் பார்த்தா... காரியம் ஆகுமா..''

''எது நியாயம், அநியாயம்... யாரு... போராடறதும்.. பேப்பர் வெயிட் வீசறதுமா...''

''யூனியன் ஆளுன்னா ஒரு ரெஸ்பெக்ட் தர வேணாமா.''

''மரியாதை எது தெரியுமா.. நல்ல நாகரிகம்... பண்பு... அடுத்தவனை மதிக்கற குணம். தப்பானதைக் கூட பொறுமையா எடுத்துச் சொல்ற விதம்.. பழகற தன்மை...''

''அப்பாடி... அ டு க் கி க் கி ட் டே போறீங்க.''

''சிரிக்கிறதுக்காக இதைச் சொல்லலே.. யூனியன் நிச்சயமா உங்களை ஆதரிக்காது... பொது விஷயங்களை போராடினாத்தான் சப்போர்ட்.... தனி மனித குணக் கேடுக்கெல்லாம்.. யாரும் ஆதரவு தர மாட்டாங்க.''

அவளை உற்றுப் பார்த்தான். வழக்கமாய் எவரும் அவன் எதிரில் நின்று.... நீ செய்தது தப்பு என்று பேசியதில்லை. பேசிவிட்டு... திரும்பிப் போனதில்லை. வன்முறை... முதல் அடி... என்று பழகியவன் இன்று இவள் எதிரே வாயடைத்து நின்றது. அவனுக்கே ஆச்சரியமாக இருந்தது.

சேமிப்பே செழிப்புக்கு வழிகாட்டி

பார்க் டவுன் பெனிபிட் பண்டு லிமிடெட்

மத்திய அரசால் அங்கீகரிக்கப்பட்ட நிதி நிறுவனம் துவக்கம் 1985

273, தெற்கு தங்கசாலை வீதி (முதல் மாடி), சென்னை - 600 003. தொலைபேசி: 582676

உங்கள் வசதிக்கேற்றவாறு பயனடைய பற்பல சிறந்த திட்டங்களை அளிக்கும்
மேற்கண்ட நிறுவனத்தில் உறுப்பினராகுங்கள்.

பிக்சட் டிபாசிட் திட்டம்

45 நாள்	90 நாள்	6 மாதம்	1 ஆண்டு	2 ஆண்டு	3 ஆண்டு	4 ஆண்டு	5 ஆண்டு
13%	14%	15%	17%	18%	18.5	19%	20%

• தனபோகம் டிபாசிட் திட்டம் - வட்டி வீதம் 20%

குறைந்த அளவு டிபாசிட் ரூ 20,000/- காலம் 5 ஆண்டுகள். மாத வட்டிக்கான
செக்குகள் முன் கூட்டியே கொடுக்கப்படும்

சேவிங்ஸ் கணக்குகள் மீது 9.5% வரை வட்டி

உங்கள் டிபாசிட்டுகள் 45 மாதங்களில் 2 மடங்காகிறது. 90 மாதங்களில் 4 மடங்காகிறது.

காமதேனு மாபெரும் திருப்பப் பெறும் திட்டம்

பிரதி மாதம் ரூ 100/- வீதம் தொடர்ந்து 15 வருடம் செலுத்துவீர்
5 ம் ஆண்டு முடிவில் ரூ 6000/- ஐத் திரும்பப் பெறுவீர்
10 ம் ஆண்டு முடிவில் மீண்டும் ரூ 6000/- ஐத் திரும்பப் பெறுவீர்
15ம் ஆண்டு முடிவில் மிகப் பெருந்தொகையாக ரூ 50,000/- பெறுவீர்.

பென்ஷனர் நலத்திட்டம்

ஓய்வு பெற்றோருக்கென்றே அளிக்கப்படும் திட்டம்
டெபாசிட் ரூ. 15,000/- வட்டி வீதம் - 19% [illegible] 12 மாதங்கள் [illegible]
[illegible] சேவைகள், விருந்தினர்களும், [illegible]
மற்றும் கல்வி, [illegible] சேர்ந்து [illegible]

ரெக்கரிங் டிபாசிட் திட்டம்

பிரதி மாத டிபாசிட்	ரூ. 25/-ன் அதன் மடங்குகளும் செலுத்தக் கொள்ளப்படும் மாதங்கள் முடிவில் கிடைக்கும் தொகை						
	12	24	36	48	60	72	84
ரூ. 25	330	715	1,180	1,800	2,510	3,350	4,370
ரூ. 100	1,320	2,860	4,720	7,200	10,050	13,400	17,500

செல்வக்களஞ்சியம் டிபாசிட் திட்டம்

உங்கள் குழந்தையைக் குபேரனாகக் காண ஆசையா! இதோ
ரூ 7500/- ஐச் செலுத்தி 15 வருட முடிவில் ரூ 1,20,000/- பெறலாம்.
ரூ 9000/- ஐச் செலுத்தி 15 வருட முடிவில் ரூ 1,44,000/- பெறலாம்.

கடன் வேண்டுமா? எங்களை அணுகுங்கள். நகைக்கடன் சவரனுக்கு ரூ 2400/- வட்டி வீதம் ரூ 1.85
கடனுக்கு உச்சவரம்பு இல்லை. தருவதில் தாமதமில்லை.. RD கட்ட வேண்டியதில்லை...

கௌரவ ஆலோசகர்:
P. பாலசுப்ரமணியம், B.Sc.
முதன்மை அறங்காவலர்,
கந்த கோட்டம், சென்னை - 3.

இயக்குநர் குழுத் தலைவர்
R. விவேகானந்தன் B.Com.

பங்குதாரர்களுக்கு மட்டும்.

Business Hours: Week Days 8.30 a.m. to 12.30 p.m. & 2.00 p.m. to 6.00 p.m. Sunday 8.30 a.m. to 12 noon.
Friday Weekly Holiday.

உங்கள் குழந்தை சரியாக சாப்பிடவில்லையா ?

பசியைத்தூண்ட ஓமம் நிறைந்த நியுபான் கொடுங்கள்.





அனுபவமிக்க தாய்மார்கள் குழந்தைகளின் பசியைத் தூண்ட ஓமத்தை பயன்படுத்தி நல்ல பலன் கண்டிருக்கிறார்கள். சரியான விகிதத்தில் ஓமம் நிறைந்த நியுபான் உங்கள் குழந்தையின் பசியின்மையை நீக்கி அதன் ஆரோக்கியத்தை பாதுகாக்கும். குழந்தையின் வளர்ச்சிக்கும் உறுதுணையாகும்.

ஓமத்துடன் வசம்பு, அதிமதுரம், கடுக்காய், ஏலக்காய், போன்ற சிறந்த மூலிகைகள் தேவையான அளவு சேர்க்கப்பட்டுள்ள நியுபான், குழந்தைகளின் வாயு தொந்தரவு, வயிற்றுவலி, வயிற்றுப் பொருமல் ஆகியவற்றையும் போக்கும்.

நியுபான் குழந்தைகள் விரும்பி சாப்பிடக் கூடியது. தொடர்ந்து கொடுக்கலாம். பசியைத் தூண்டும். பின் விளைவுகள் ஏதுமில்லை. பாதுகாப்பானது.

PHARM PRODUCTS
தஞ்சாவூர் - 613 007

நியுபான்

குழந்தைகளின் பசியைத் தூண்டும்

பேசாமலிருந்தாள்.
"வேற ஒன்றும் கேள்விப்பட்டேன்... நீங்க வேலைக்கற மாதிரி.. செகரட்டரி போஸ்ட்... உங்களுக்குக் கிடைக்காதுன்னு..."
"என்ன சொல்றீங்க."
"ஆமாம். எப்பவும் எதற்கெடுத்தாலும்.. நீங்க சண்டைக்குப் போறது... நூவிலன் பேரைக் கெடுக்கிறதாம். அதனால் உங்களை சப்போர்ட் பண்ணப் போறதில்லேன்னு... பேசிக்கிட்டாங்க."
அலட்சியமாய்ச் சிரித்தாள்.
"அவங்க தயவு எனக்கு வேணாம்... என் உழைப்பிருந்தால் அவங்களுக்கு வேணும்.."
"எல்லார் தயவும் எல்லாருக்கும் வேணும்தான். மனுஷங்களை அப்படி ஒரே வடியா பகைக்கக் முடியாது. யார் தயவு.. எப்ப.. யாருக்கு வேணும்னு தெரியாது... நீங்க இப்ப எங்காத்து குழந்தைக்கு ரத்தம் கொடுக்கலையா."
"நான் இல்லேன்னாலும் வேற யாரா வது கொடுத்திருப்பாங்க..."
"அதே போலத்தான்.. நூவிலனுக்கும்.. நீங்க இல்லேன்னா.. இன்னொருத்தர் ஆனா... உங்களுக்கு... உங்க நடத்தைல மாற்றம் வேணும்... முன்னேறணும்னு ஆசை வேணும்...."
"எதுக்காக.... யாருக்காக..."
நேராக அவனைப் பார்த்தாள். தன் வாதம் வீணாகக் கூடாது என்ற உணர்வோ... இல்லை.... தொடர்ந்த பேச்சில் சிக்குண்டு... மீளத் தெரியாமல்... நாக்கு கட்டவிழ்ந்த நிலையோ சட்டென்று சொல்லி விட்டாள்.
"எனக்காக.."
"ஏ... என்ன."
அதிர்ச்சியுடன் அவளைப் பார்த்தான். எப்பொழுது இத்தனை சுலபமாய்க் கிட்டிவிடும்... நினைப்பிருந்தான் அவனுக்கு.
ஆனால்... அவள் சுதாரித்துக் கொண்டு விட்டாள்.
"ம். உங்களோட நல்ல சிநேகிதி நான். உதவியை வாங்கிக்கறது மட்டும் மனுஷ தன்மம் இல்லே... பரஸ்பரம் உதவறதும் தான்... நல்ல மனுஷாளோட கடமை. நீங்க நல்ல நிலைமைக்கு வந்தா... எனக்குப் பெருமை."
"அவ்வளவுதானா..."
அந்த முரட்டு உருவம் தன்னெதிரில் கரம் இழுந்து... ஒரு வார்த்தைக்கு ஏங்கி நின்றது. அவனின் பெண் மனதை உருக்கி விட்டது.
"முதல்லே.. மாற்றம்.. நல்ல சேஞ்ச்.. அப்புறம் பார்க்கலாம். மத்த என்னன்னு....."
"அப்படின்னா..."
"நீங்க இப்ப கிளம்பலாம்."
எதற்கு அகப்படாமல் வித்தை காட்டும் வது பெண்ணின் தந்திரம். எந்தச் சாமர்த்தியமும் செல்லுபடியாகாத இடம் அது. ஆண் வளர்வதும் தாழ்வதும் நிச்சயிக்கப்படுகிற பிரதேசம் அது.
புரியாமலே சிரித்தான். விடை பெற்றுப் போனதும் காயத்ரி வீட்டுக்குள் போனாள்.
'என்ன சொல்லி விட்டேன்... ஏன் அப்படிப் பேசினேன்.'
மனசு உழன்றது. சிவாகச் சாப்பிட

> சிறுவர்களின் கலர் பாக்ஸ் பெட்டி காலியாகி விட்டால் தூரப் போடாதீர்கள். அந்தச் சிறு சிறு அறைகளில் பாசிப்பருப்பு, உளுத்தம்பருப்பு, கடலைப் பருப்பு, கோதுமை என நிறைத்து பல சரக்குக் கடை அலங்கரிக்க (கொலுவுக்கு)ப் பயன்படுத்தலாம்.
>
> - பாமா



ததை அம்மா கவனிக்கக் கூடாது என்று 'வயிறு சரியில்லை' என்றாள். ரமா நோட்டுக் கணக்கிற்கு விடை தப்பாகப் போட்டாள். சுதாவை அருகிலேயே வர விடவில்லை. ரகுவின் ஜோக்கிற்கு சிரிப்பு வரவில்லை.
மனக்கோயில் மணி அடிப்பது... ரொம்ப நேரத்திற்குக் கேட்டுக் கொண்டிருந்தது.

9

ரகுநாத அய்யங்காரைப் பார்க்க... கமலத்திற்கே பரிதாபமாக இருந்தது.
"என்னமோ... சித்தே ரூக்கும் முழிப்பா இருக்கா.. வேலையும் பார்க்கறான்னு நினைக்க சந்தோஷப் பட்டுண்டு இருந்தேன். இவளுக்கே இப்படித் நடக்கறதே.. பகவான் என்னதான் நினைச்சுண்டிருக்கார். நீங்க கிளைச அலைஞ்சுட்டு வரதைப் பார்த்தா... பாவமா இருக்கு."

(ஜெயில் கம்பிகளோடு வரும் ஜோக்குக் கட்டுகளை (படி போல் உள்ளதை) நூறு எறிகளால் மண்ணால் கட்டும் கோவில் ஜோக்கு இந்தக் கட்டு மூலம் படிகள் அமைக்க, திருமண மணமேடை படி போலவே இருக்கும்.

- ஆர். பாலா



தீர்த்தச் சொம்பினைக் கொடுத்தார். நாற்காலியில் நன்றாகச் சாய்ந்து கொண்டார். கமலம் அப்படியே தரையில் அமர்ந்தாள்.

''என்னை என்ன பண்ணச் சொல்றே. எத்தனை இடம் போனாங்க. பெண்களும் வெட்கமாயிடுத்து.. அவா அழைக்கின்னு வரச் சொன்ன இடங்களுக்கெல்லாம் கூட்டிண்டு போனாங்க. நேக்கு நன்னாத்தான் போச்சு... ஆனா... அப்புறம் என்ன ஆகறதோ. பதிலை மட்டும் காணோம்.''

''நானும் ஒரு கோவில் விடலே. ஒரு நவராத்திரி விடலயே அவளை அழைச்சுண்டு போனாங்க... ஜனனமாகுக்குப் பொட்டு வைச்சினா... வந்து... மாலை சாத்தி சேவிச்சாக. சீ... என்னடா... பெண் ஜென்மமேன்னு ஆயிடுத்து...''

''அப்படியும்.. பலங்க ஒன்றும் இல்லாம போச்சே. மனுஷாளுக்கு ஆசை தூண்டி ஆயிருத்து.... நிறைய எதிர்பார்க்க ஆரம்பிச்சுட்டா.''

''மாதிரி ஊருக்குப் போனீ... வெட்டப் போட்டா..... அனுஷாக்கு இப்ப பூரணமா குணமாயிடுத்தாம். சம்பந்தி மனுஷா உங்களை ஒகோன்னு புகழுறாளாம்...''

ரங்கநாத அய்யங்கார் சிரித்துக் கொண்டார்.

''விளையாட்டு மாதிரி நாள் ஓடறது. இவ ஜாதகத்தைக் கையிலே எடுத்து ரெண்டு வருஷமாச்சு. இன்னும் எத்தனை நாளாகப் போறதோ... நீங்க சாப்பிட வரேளா.''

''கொஞ்ச நாழி ஆகட்டுமே...''

கமலம் சிறிது நேரம் பேசாதிருந்தாள்.

வாசலில் நிழலாடியது.

''யாரு...''

''நான்தான்.. ஸார் இல்லியா... மனோ.. மனோகரன்..''

''வாப்பா.. ஸார் இருக்கார். உள்ளே வா..''

கமலம் எழுந்து உள்ளே போக எத்தனித்தாள்.

''இருங்கோ. நீங்களும் நில்லுங்கோ.'' என்றான்.

''என்னப்பா... என்னது... ஏதாவது ப்ரமோஷனா...''

''ஒரு வகையில உயர்வு மாதிரிதான்.''

ரங்கநாத அய்யங்கார் புறம் திரும்பினான்.

''ஸார்.... நான் சொல்றதைக் கேட்டு... அதிர்ச்சியோ... ஆத்திரமோ அடையாமே... பதில் சொல்லணும்... ப்ரீதா என் மனைவி பட்டதை.. சொல்லாம்னு வந்தேன்.''

ரங்கநாத அய்யங்கார் அவனை உற்றுப் பார்த்தார். நின்ற தோரணையில் ஒரு உறுதியுடன் வந்திருக்கிற பாவனை தெரிந்தது.

''என்ன... சொல்லப் போறே...''

''வந்து... உங்களுக்கு மறுப்பு ஏதும் இல்லேன்னா... காயத்ரியை நான் கல்யாணம் செய்துக்கலாம்னு...''

கமலம் ஒரு கணம் நடுங்கிவிட்டாள். என்னப்பனே.. என்னடா இது... இந்த மாதிரி வீடு தேடி வந்து பேசறானே...

''டேய்... பாவி.. என்னடா இது. என்ன பேசறே... நீ....''

''ஸ்... இரு காமு. நான் கேட்கறேன்.''

ரங்கநாத அய்யங்கார் நிமிர்ந்து அமர்ந்தார்.

''ஏம்பா... இது உன்னோட ஒரிஜினல் யோசனையா... இல்லே... என் பொண்ணோட மனசுமா...''

''இதுக்கு அவங்க மறுப்பு சொல்ல... மாட்டாங்கன்னு நம்பறேன் ஸார்.''

''எனக்கு நேரடியா பதில் வேணும்... ரெண்டு பேரும் முன்னாலேயே பேசி முடிவெடுத்தாச்சா...?''

''இல்லே... ஸார்.''

''அப்ப... என்ன தைரியத்துல இந்த மாதிரி வந்து நிக்கறே...''

''கேட்டா... தப்பில்லேன்னு தோணிச்சு...''

''எங்க ஜாதி... ஆசாரம்... இதெல்லாம் தெரிஞ்சுமா...''

"ஜாதியில எனக்கு நம்பிக்கை இல்லே. ஸார். எல்லா உடம்புலயும் ஒரே ரத்தம்தான் ஓடறது."

"ஆமா.. உன் ரத்தம்தான் இந்த ஃபாமிலியில இப்ப ஓடறது." ரகுநாத அய்யங்காரின் 'கசப்' வெளிப்பட்டது.

"காயத்ரியைக் கூப்பிடு..."

"அவ எதுக்குண்ணா... கண்ட கழுதை எல்லாம் ஆத்து வாசப்படியேறி வரது.. விரட்டி விடாமே... அவளைப் போயி.. கூட்டுண்டு..."

"கூப்பிடு.."

காயத்ரி படியிறங்கி வந்தாள். மனோகரனைப் பார்த்ததும் குழம்பினாள்.

"அம்மா, காயத்ரி... எனக்குச் சத்தியம் வேணும்.... இவன் என்னமோ சொல்றானே... வாஸ்தவமா..."

காயத்ரிக்குப் புரியவில்லை. விஷயம் ஏதோ தீவிரம் என்று மட்டும் புரிந்தது.

"என்னன்னு... தெரியலேப்பா..."

"பொய் சொல்லாதே.."

"இல்லப்பா.. நெஜம்மாவே உங்க பேச்சு புரியலே...."

"அவனுக்கு உன்னைக் கல்யாணம் செஞ்சுக்கணுமாம். உனக்கு இதுல சம்மதமா.."

"என்னண்ணா இது.. அவளைப் போய் இதெல்லாம் கேட்டுண்டு..."

"ஏன்.. நீ பதில் சொல்லும்மா..."

"எனக்குத் தெரியலேப்பா..."

"என்ன சொல்றே..."

காயத்ரி நிதானித்தாள். எத்தனை பெண் பார்க்கும் படலங்கள். எத்தனை அவஸ்தைகள். மணமான பின்னும் மைதிலியின் போராட்டங்கள். திருமணமே வேண்டாமென்று இருக்கும் தோழிகள்... இவ்வளவும் எதனால்... நேசம் மனிதரில் தொலைந்து போனதாலா. பெண்ணைப் பதுமையாய் மட்டும் பார்த்ததாலா... மனசுக்குள் என்னமாய் அலைக்கழிந்து போனேன். என்னைக் கூட எவனாவது தேடி வருவானா... நீதான் வேண்டும் என்று நேசிப்பானா.?

இவன் வந்திருக்கிறான். ஆனால் என் துரதிஷ்டம் என் ஜாதி இல்லை. இது இந்த சமூகத்தில் பொருந்தாத திருமணம். பின்னால் என் குடும்பமே விமர்சிக்கப் படும். ஏமா... கதா திருமணம் ஆகாது... அவளா... ஆசாரம் விட்டுப் போனவளாச்சே... அந்தக் குடும்பமா.. வேண்டாம் என்பார்கள்.

அப்பாவை நிமிர்ந்து பார்த்தாள்.

"என்ன வயசுலே... எப்படிப் பெருமாளை வேண்டிக்கிறதுன்னு... நீங்க சொல்லித் தந்தேள்... பரிபூரண சரணாகதி. அப்புறம் நம்ம தேவைகளை எல்லாம் அவன் கவனிச்சுப்பான்னேள்... எனக்கு நீங்கதாம்ப்பா... பெருமாள்... குரு... அப்பா எல்லாம்.. உங்ககிட்டே சரணாகதி பண்றேன்.. எனக்கு என்ன தேவைன்னு நீங்க முடிவெடுங்கோ."

கீழே விழுந்து நமஸ்கரித்தாள். படியேறி மேலே போய்விட்டாள்.

மனோகரன் பேசாமல் நின்றான்.

ரகுநாத அய்யங்கார் பெருமூச்சு விட்டார்.

என் பெண்ணை எப்படி எல்லாம் காயப்படுத்தி விட்டேன். இந்தச் சம்பிரதாயம்.. என்கிற போர்வையில் இன்னும் எத்தனை முறை அவளை அலைக்கழிக்கப் போகிறேன்.

"எனக்குப் புரியலைப்பா... கொஞ்சம் அவகாசம் வேணும்.." என்றார் நிதானமாக.

மனோகரன் கைகூப்பி விட்டு வெளியில் போனான்.

"என்ன கூத்துண்ணா...இது... அவனைக் கழுத்தைப் புடிச்சு... வெளியே தள்ளாமே..."

"இல்லம்மா... இப்ப பிரச்னை அது இல்லே. நம்ம பொண்ணோட வாழ்க்கை. அதை எப்படி அமைக்கத் தர்றது."

"அதுக்காக ஜாதி விட்டு ஜாதியா தருவா.."

"வேணாம். இப்ப வீம்புக்காக.. இன்னும் அலைஞ்சு அவா கேட்கற சீர் வரிசையை... நம்ம சக்திக்கு மீறிச் செய்யலாம். இல்லே... பொண்ணு ஆத்தை

விசேஷங்களில் போட்டு வரும் சிறுசிறு பிளாஸ்டிக் கவர்களை எறிந்து விடாமல் அதில் ஒன்றில் மஞ்சள் தூள், ஒன்றில் குங்குமம் என நிறைத்துத் தைத்து விடலாம். அல்லது விளக்கில் காட்டி ஒட்டிவிடலாம். இந்த மஞ்சள் - குங்குமம் பாக்கெட்டை வெற்றிலை பாக்கு, பழங்களுடன் சேர்த்து வருபவர்களுக்கு வைத்துக் கொடுக்கலாம். தினம் தினம் மஞ்சள் குங்குமம் தேடிக் கொண்டிருக்க வேண்டாம்.

- பவானி



விட்டுப் போனாப் போதும்னு ரெண்டாந் தாரமாக் கூட வயசானவனுக்குக் கட்டி வக்கரலாம்... நம்ம ஈகோ திருப்திப் பட்டுரும்... அப்புறம் அவ மனசு...''

''நீங்க சொல்றது...''

''இவன் அவளை நேசிக்கறான். அவளைப் பொறுத்தவரை... இவ... அவன் தகுதி மீறி.. கிடைச்ச அதிர்ஷ்டம். பொக்கிஷம். அதனாலயே கடைசி வரை நன்னா வச்சுப்பான்.''

''அய்யய்யோ. நீங்க பேசறது... நன்னாவே இல்லையே..''

''அலறாதே... ரெண்டு சைடும் பேசறேன். பேசறதுல என்ன தப்பு. நான் இப்ப முடிவு எடுக்கலையே.''

''நீங்க பேசறதைப் பார்த்தா கல்யாணம் பண்ணிட்டுத்தான் மறுவேலைன்னு.''

''இல்லே... சித்தே பொறுமையா இரு... காயத்ரியைக் கூப்பிடு...''

''நான் கூப்பிட மாட்டேன்.''

''அம்மா... காயத்ரி...''

ரகுநாத அய்யங்கார் உரக்க அழைத்தார். கீழிறங்கி வந்தவளைப் பார்த்தார்.

''உன்மேல எனக்கு நம்பிக்கை இருக்கும்மா.. நீயா இந்த விஷயத்துல எந்த முடிவும் எடுத்துர மாட்டேன்னு...''

பேசாமல் நின்றாள்.

''இன்னும் ஒரு வருஷம். ஒரே வருஷம்... பொறுத்திரு... அதுவரைக்கும் அவன் அன்பு தாங்கறதான்னு பார்க்கலாம். ஆனா... அங்கே... இங்கே வெளியே போறது, பேசறது எதுவும் கூடாது. அவன் இதே பிடிவாதம், இதே முடிவோட அப்பவும் இருந்தான்னா நானே உன்னை மனோகரனுக்குப் பண்ணி வைக்கிறேன்... சரிதானா...''

தலையசைத்தாள்.

''இங்கே பாரு. கமலி... நான் நம்ப ஆசாரத்துக்கு விரோதமானவன் இல்லே... ஆனா... பொய்யான ஆசாரம்... நம்மை என்ன பாடுபடுத்தறதுன்னு... புரிஞ்சுண்டு வருத்தப்படறவன். தாயாரே பொண்ணாப் பிறந்தாலும் இங்கே பாடுபடணும். ஜனகர் கிட்டே பிறந்து பாடுபட்டவதான். ஸ்கூல்ல பசங்களுக்கு யார் யாரோ எழுதி வச்ச பாடத்தை... புரியற மாதிரி சொல்லி. மண்டையில ஏத்திவேன். இப்ப நானா... ஒரு பாடம் கத்துக்க ஆசைப்படறேன். இது தப்புன்னா... இப்ப கூட காலம் கடந்து போகலே... ஸார்... உங்க பொண்ணை... உங்களால முடிஞ்சதைச் செஞ்சு... கல்யாணம் பண்ணித் தாங்கோன்னு கேட்கட்டுமே. நான் குறுக்கே நிக்கலியே... போராடி அலுத்துப் போயித்தானே.. இப்படி நினைக்கற நிலைமைக்கு வந்துட்டேன்...''

கமலம் வாயடைத்துப் போய் நின்றாள்.

மனோகரன் இப்போது மன்னிப்புக் கடிதம் எழுதிக் கொடுத்திருக்கிறான். கோபமே வருவதில்லை. ஆபீசர் எக்ஸாமுக்கு பரபரப்பாகத் தயார் செய்கிறான். காயத்ரி அவனைப் பரிபூரணமாக மாற்றி விட்டாள். அவள் கிடைப்பதும்... கிடைக்காமல் போவதும்... இன்று காலத்தின் கைகளில் இருக்கிறது.

❑



கவலையற்ற இல்லத்து அரசி
கை நிறைய சம்பாதிக்கும் அவர்...
வீட்டில் சகல வசதிகள்...
கொஞ்சி விளையாட இரு கண்மணிகள்...
வீட்டிற்கு Shopping செய்ய...
விதான் சூப்பர் மார்க்கெட்...
வேறு என்ன வேண்டும்...
Vitan
—TARGET



CROWN
SUREFLUSH
CISTERN
100%
2,50,000

மேகலா

(குடும்ப மாத நாவல்)

G.R.Thanga Māligai®

G.R.தங்கமாளிகை

இணைந்து நடத்தும் மகத்தான பரிசுப் போட்டிகள்!

குடும்பத் தலைவிகளே!

'பிலிமாலயா'வின் தரமான வெளியீடான 'மேகலா' குடும்ப மாத நாவல் வாசகர்களின் அமோக மதிப்பைப் பெற்று, முதல் இதழே விற்பனையில் புதிய சாதனையை நிகழ்த்திக் கொண்டிருக்கிறது. 'மேகலா'வின் ஒவ்வொரு இதழிலும் வாசகர்கள் கட்டாயம் பங்கேற்க வேண்டும் என்ற எங்களின் தணியாத ஆர்வம் காரணமாக தொடர்ந்து ஒவ்வொரு இதழிலும் புதுமையான போட்டிகளை வாசகர்களுக்காக நடத்த முடிவு செய்துள்ளோம். தரமான தங்க நகைகளுக்காக மக்கள் மனதில் தனி இடம் பிடித்திருக்கும் சென்னை ஜி.ஆர்.தங்கமாளிகை நிறுவனத்தினர் 'மேகலா' குடும்ப மாத நாவலுடன் இணைந்து அடுத்து வரும் இதழிலிருந்து இந்தப் போட்டிகளை நடத்த மகிழ்ச்சியுடன் முன்வந்துள்ளனர். ஒவ்வொரு மாதமும் போட்டியில் வெற்றி பெறுபவர்களுக்கு முதல் பரிசாக ஒரு பவுன் மதிப்புள்ள தங்க நகையை வழங்க ஜி.ஆர்.தங்க மாளிகையின் உரிமையாளர் திரு ராஜேந்திரன் அவர்கள் மகிழ்ச்சியுடன் சம்மதித்துள்ளார். ஜி.ஆர்.தங்கமாளிகையின் நகைகளைப் போலவே, அதன் உரிமையாளர் திரு.ராஜேந்திரன் அவர்களின் மனமும் தங்கம். இது வெறும் புகழ்ச்சிக்காக சொல்லும் வார்த்தை அல்ல. மனம் திறந்த உண்மை! இனி, செப்டம்பர் மாத 'மேகலா' இதழில் குடும்பத் தலைவிகளான உங்களுக்காகவே மிகச் சுவையான ஒரு கட்டுரைப் போட்டி! உங்கள் திருமணத்துக்காக உங்கள் பெற்றோர் மேற்கொண்ட சிரமங்கள் நினைவிருக்கிறதா? உங்கள் திருமணம் பெற்றோரால் நிச்சயிக்கப்பட்டதாக இருக்கலாம். அல்லது காதல் திருமணமாக இருக்கலாம். எப்படியிருந்தாலும், நீங்கள் மாலை சூடிய அந்த நாளின் பின்னணியில் உணர்ச்சி நெகிழ்ச்சி நிகழ்ச்சிகள் இருந்திருக்கக்கூடும். 'என் திருமணம்' என்ற தலைப்பிட்டு அது பற்றி சுவையாக எங்களுக்கு எழுதி அனுப்புங்கள். மிகச் சிறந்த கட்டுரைக்கு ஜி.ஆர்.தங்கமாளிகை வழங்கும் ஒரு பவுன் மதிப்புள்ள தங்க நகை பரிசாகக் கிடைக்கும். தேர்ந்தெடுக்கப்படும் மற்ற கட்டுரைகளுக்கு ஆறுதல் பரிசு உண்டு. போட்டிக்கான நிபந்தனைகள் -

1. கட்டுரை, முழு வெள்ளைத்தாளில் இரண்டு பக்கங்களுக்கு மேற்படாமல் இருக்க வேண்டும்.
2. செப்டம்பர் மாத 'மேகலா' இதழில் இதற்கென வெளியிடப்பட்டுள்ள போட்டி முகவரிக் கூப்பனை. நீங்கள் கட்டுரை அனுப்பும் உறையின் மீது கட்டாயம் ஒட்டி அனுப்பவேண்டும். முகவரிக் கூப்பன்கள் இல்லாமல் வரும் கட்டுரைகள் பரிசீலனைக்கு ஏற்றுக் கொள்ளப்படமாட்டா.
3. ஆசிரியர் குழுவினரின் தீர்ப்பே இறுதியானது.
4. கட்டுரைகள் 'மேகலா' அலுவலகத்துக்கு வந்து சேரவேண்டிய கடைசித்தேதி 30-9-92.

வெற்றிக்கு வாழ்த்துக்கள்!

இந்த இதழில்...

பட்டுக்கோட்டை பிரபாகர் எழுதிய

அவளொரு கதாநாயகி

முற்றிலும் வித்தியாசமான காதல் கதை



இது ஒரு பிலிமாலயா வெளியீடு!



கோவில் உற்சவ விக்ரகத்தைப் போல நன்கு மாலையுடன் சர்வாலங்கார, ஆபரணங்களுடன் கண்ணையும் கருத்தையும் கவரும் வகையில் இருக்கும் அலங்காரம். ராமருக்குப் பட்டு வேட்டியும், ஜரிகைப் பட்டு தலைப்பாகையும் (நகரத்தார் குடும்பத்து மாப்பிள்ளைகள் அணியும் விசேஷ தலைப்பாகை) அணி

நகரத்தார் வீட்டுக் கொலு

மதுரை பொன்னுத்தாய் அவர்களின் நாதஸ்வர இசை காற்றில் அலை அலையாய்ப் பாய்ந்துவர சந்தனம், ஊதுவத்தி, மல்லிகை இவற்றின் மணம் புத்துணர்ச்சி அளிக்க பட்டுப் புடவைகளும், பாவாடை, சேலைக்குமாகப் பெண்களும் குழந்தைகளும் உள்ளே சென்று வந்த வண்ணமிருக்கப் பரப்பி வைத்த சீர்வரிசைகளையும், மாப்பிள்ளை பெண்ணின் அலங்காரத்தையும் கண்டு மகிழ்ந்தவர்கள் வாயாரப் புகழ, கைநிறைய வெற்றிலை, பாக்குத் தாம்பூலம் வழிய,

"புரட்டாசி மாதத்தில் கல்யாணமா?" என்று வியந்த வண்ணமே உள்ளே நுழைந்த நம்மை அன்பும், பண்பும் மிளிர வரவேற்றார் திருமதி வள்ளி முத்தையா அவர்கள். காரைக்குடியை அடுத்த கோட்டையூர் ஏற்கெனவே வள்ளல் அழகப்பச் செட்டியார் அவர்களைத் தந்து புகழ் பெற்ற ஊர். அவ்வூரில் மேலும் புகழ் சேர்க்கும் மற்றொரு பெருங்குடியில் பிறந்த திருமதி வள்ளி அவர்களின் வீட்டுக் கொலுதான் இவ்வளவு அமர்க்களமாகக் கொண்டாடப்படுகிறது.

இருவரும் வேலைக்குப் போதல், விலைவாசி ஏற்றம், இடப் பற்றாக்குறை, குழந்தைகளின் கல்விச் சுமை இப்படிப் பலப்பல காரணங்களால் கொலு வைப்பது மிகவும் குறுகி (சுவாமி மாடத்திலேயே இரண்டு பொம்மைகளை வைப்பது) விட்ட இந்நாளில் பத்து நாட்களையும் திருமண விழா போல நடத்தி வரும் திருமதி வள்ளி இவ்விழா பற்றி விவரித்த போது இதில் கலையார்வம், பக்தி மட்டுமல்ல, மிகச் சிறந்த சமூக சேவையும் கலந்துள்ளதை உணர முடிந்தது.




அன்று சீதா கல்யாணம். அதாவது இவர்கள் வீட்டில் உள்ள கொலுப் படிகளில் உயரமான படியில் உள்ள கிருஷ்ண விக்ரகத்திற்குத்தான் தினம் தினம் ஒரு அலங்காரம் செய்து மகிழ்கிறார்கள். இதற்கெனவே பிரத்தியேகமாக அருகிலுள்ள வேலங்குடி பெரிய நாயகி அம்மன் கோவில் குருக்கள் செல்லமணி அவர்கள் தினமும் வந்து அலங்காரம் செய்கிறார். (சுமார் ரூ. 500 வரை ஒரு நாளைக்குச் செலவாகும்) அலங்காரம் என்றால் சாதாரண அலங்காரமில்லை. விக்கப்படும். காஞ்சிப் பட்டுப்புடவையுடன், தலையலங்காரம், நகைகளுடன் சீதை காட்சியளிப்பாள். இது முதல் படியில் என்றால் அடுத்த படிகளில் கல்யாண வைத்திற்குப் பொருத்தமான நாயன செட், கல்யாண விருந்தினர், கார்கள், வாகனங்கள், மாப்பிள்ளை ஊர்வலம், திருமணப் படிகள் முழுவதிலும் 6' x 4' அளவில் இரண்டு பெஞ்ச் போடப் பட்டுப் பெண்ணிற்குச் சீதனங்கள் (வெள்ளிப் பாத்திரங்கள், சிறிய

சவால் விடும் பூட்டுக்கள்!

ஆம் திருடர்களாலும்

திறக்கமுடியாத லாக்கர்கள்!!



உங்கள் பணம் நகைகளைப் பாதுகாக்க பீரோவின் விலைக்கே

கல்கி, தேவி, போன்ற பத்திரிக்கைகள் பாராட்டிய லாக்கர்கள், மாண்புமிகு தமிழக அமைச்சர், திரு. மதுசூதனன் அவர்கள், சிறந்த லாக்கர் தயாரிப்பாளர்கள் என்ற விருதினை, எமது தயாரிப்புகளுக்கு வழங்கியுள்ளார்.


திருடர்களால் உடைக்கவோ மாற்று சாவி போட்டு திறக்கவோ முடியாது.

45 வருடம் அனுபவம் உள்ளவர்களால் தயாரிக்கப்படும் மாஸ்டர் சாவிகளின் தொழில் நுட்பம்

	(நார்மல் மாடல் விலை)	(சூப்பர் மாடல் விலை)
SUBBU - 14 சுவரில் பதிக்கும் லாக் சாம்பர்	ரூ - 1495/-	ரூ - 2150/-
SUBBU - 24 - (600x450x450 mm) (மினி மாடல் இரும்புப் பெட்டிகள்)	ரூ - 5970/-	ரூ - 7995/-
SUBBU - 30 - (750x600x600 mm) (மீடியம் மாடல் இரும்புப் பெட்டிகள்)	ரூ - 9965/-	ரூ - 11975/-
SUBBU - 36 - (900x675x600 mm) (பிஸினஸ் மாடல் இரும்புப் பெட்டிகள்)	ரூ - 12700/-	ரூ - 14955/-

சூப்பர் மாடல் இரும்பு பெட்டிகளில் தானாக இயங்கும் ஒரு சீக்ரெட் நகைப் பெட்டி (Automatic Secret Jewel Box) சாவி இல்லாத நம்பர் லாக்கும் பொருத்தப்பட்டிருக்கும். இரும்பு பிளேட்டின் கனம் நார்மல் மாடலை விட அதிக கனம் கொண்டதாக இருக்கும்.

''சுப்பு அண்டு கம்பெனி'' என்ற பெயருக்கு மேற்காணும் விலையில் 50% அட்வான்ஸ் தொகையாக A/C Payee டிராப்டுடன் ஆர்டர்கள் அனுப்பவும். வங்கிகள் மற்றும் பெரிய நிறுவனங்களுக்கு இன்னும் புதுமையான அமைப்புகளுடன் கூடுதல் பாதுகாப்புகளுடனும் செய்து கொடுக்கப்படும்.



துணிமணிகள் - வைப்பதற்கு மட்டுமே - பணம் நகைகளைப் பாதுகாக்க அல்ல

இலவசம்

செப்டம்பர் 30 ஆம் தேதிவரை மங்கையர் மலர் வாசகர்களுக்காக ரூ. 650/- மதிப்புள்ள மாஸ்டர் சாவிகள் பொருத்திக் கொடுக்கிறோம். நீங்கள் பூட்டிய சாவிகள் தொலைந்துவிட்டால்கூட உங்கள் மாஸ்டர் சாவிகள் உதவும். தொலைந்த சாவிகளை பிறர் உபயோகிக்க முடியாது.

SUBBU & Co.

16, Govindan Road, West Mambalam, Madras - 600 033.
Ph : 4821655. (near Srinivasa Theatre/Mettupalayam Bus Stop)



வையில் பீரோ, நாற்காலி, கட்டில் பட்டுப் புடைவைகள், பாத்திரங்கள் இப்படிப் பலவகை) தவிர நகரத்தார் சமூகத்தில் மட்டுமே உள்ள "மாமியார் சாமான்கள்" இப்படிக் கடை பரப்பப்பட்டிருக்கும்.

"இதேபோல்தான் ஒன்பது நாட்களும் இருக்குமா?" என்று வினவிய போது, "இல்லை. தினமும் கிருஷ்ண விக்கிரகத் திற்கு ஒவ்வொரு அலங்காரம். அதற்கு ஏற்றாற்போல் படிகளிலுள்ள பொம் மைகள் மாற்றப்படும் 12 படிகளுக்கும் கிட்டேயும் வேறு வேறு மாடல்களில் செட் செய்து வைப்போம். உதாரண மாக "வனராணி" அலங்காரம் செய்யப்படும்போது, இலைகளால், கொடி களால் ஆன ஊஞ்சலில் கிருஷ்ணன் (வனராணி) ஆட... படிகளின் ஓரங்களில் செடித் தொட்டிகளை வைத்துப் படிகளில் விலங்குகள், குறவன், குறத்தி, வேடன், பாம்பாட்டி போன்ற பொம் மைகளும் கீழே மலை, குளம், காடு செட்டும், மிருகக் காட்சிச் சாலை, பார்க் முதலியவையும் வைப்போம்.

"பாரத மாதா" அலங்காரம் என்றால், படிகளில் தலைவர்கள் பொம்மைகளை வைத்து முப்படை கள், தாஜ்மஹால், பார்லிமெண்ட் கட்டடங்கள் வைப்போம். இதே போல மீனாக்ஷி ஜனனம், கிஷ்ணப தேசம், சிவகாமி - நடராஜர் என்று தினம் ஒரு அலங்காரம் செய்து படி களில் பொம்மைகளையும் மாற்று வோம். பாரதியின் "வெள்ளிப் பனி மலையின் மீதுலாவுவோம்" என்ற பாடலை ஒரு வருடம் எடுத்துக் கொண்டு ஒவ்வொரு வரிக்கும் ஒரு காட்சியை பொம்மைகளை வைத்து மாடல் செய்து கொலு வைத்தது அனைவர் கவனத்தையும் கவர்ந்தது. நீலப் பட்டுப் புடைவை மீது கப்பல் களை ஓடவிட்டு, பஞ்சாபி, தமிழர், தெலுங்கர், மலையாளி இப்படிப் பல உடை அலங்காரங்களுடன் பொம்மைகள் பாரதியின் கவிதை வரிகளுக்கு உயிர் கொடுத்தன" என்றார் வள்ளி.



● சீதா கல்யாணம்



இந்தக் கொலு வைக்கும் பழக்கத்தை வள்ளி அவர்களது தாய்வழிப் பாட்டனார் திரு. ராமநாதன் செட்டியார் அறுபது ஆண்டுகளுக்கு முன் துவக்கி வைத்தார் என்றாலும் இன்றளவும் குடும்பத்தினர் அனைவரும் நவராத்திரி சமயம் எந்த ஊரில் இருந்தாலும் ஒன்றுகூடி இதனைச் சிறப்பாக நடத்துவது குறிப்பிடத்தக்கது.

"மதுரை பொன்னுத் தாயி அவர்களைப் பற்றி வீட்டில் வெளி வந்த கட்டுரையைப் படித்த நான் அவர், "விதவை என்பதால் கல்யாணக் கச்சேரிகள் செய்ய யாரும் அழைப்பதில்லை" என்று குறிப்பிட்டதைப் படித்துவிட்டு நவராத்தி ரிக்கு அழைத்தால் என்ன என்று எண்ணி அழைத்தேன். அந்த இசையைத்தான் நீங்கள் இப்போது கேட்டுக் கொண்டிருக்கி றீர்கள்" என்றார். கலையோடு கலைஞர் களை ஊக்குவிக்கும் சேவையையும் இவர் ஆரவாரமில்லாமல் செய்கிறார்.

"இந்த நவராத்திரிக்கு மட்டும் ஒவ்வொரு வருடமும் எலக்ட்ரீஷியன், கார்பெண்டர் என்று பலரும் எங்களுக்கு உதவுகிறார்கள். பலவித மாலைகளை கட்டித் தரும் பூக்காரர், சுவாமிக்கு அலங் காரம் செய்யும் குருக்கள் இப்படி ஏதோ ஒரு



வகையில் சமுதாயத்தின் கலைஞர்களுக்கும் நலிவுற்ற வர்களுக்கும் உதவ முடி கிறதே என்ற நிறைவு ஏற்படு கிறது'' என்று கொலுவின் பின்னால் உள்ள சமுதாயநல சிந்தனையையும் கூறினார் திருமதி வள்ளி.

இவர் குடும்பத்திலுள்ள பெண்மணி கள், நண்பர்கள் ஆகியோர் கொலு வைக்க ஆர்வமுடன் உதவுகிறார்கள். இவரது பாட்டி பல வெளிநாடுகளுக்கும் சுற்றுப் பயணம் செய்தவர். அந்த நாடுகளில் வாங்கிய அநேக அபூர்வ பொம்மைகளும் கொலுவில் உள்ளன.

கொலுவில் கண்ணனின் அலங்காரத் தையும், தினம் ஒரு நிஜுஸில் அமைக்கப் படும் கொலுப்படி பொம்மைகளையும், கச்சேரி கதாகாலட்சேபம் இவற்றையும் ரசிக்க சுமார் முந்நூறுக்கும் மேற்பட்ட வர்கள் தினமும் வருவார்கள். மாலை 6 மணி முதல் 9.30 மணிவரை கதவு திறந்திருக்கும். தீபாராதனையின் போது சுண்டல் விநியோகிக்கப்படும். வெள்ளிக் கிழமையும், சீதா கல்யாணத்தன்றும் பெண்களுக்குத் தாம்பூலம் கொடுக்கப் படும். மொத்தமாக நவராத்திரி செலவு சுமார் 10,000 ரூபாய் வரை ஆகுமாம்.

இவரது கொலுவிற்கு இவர் தாத்தா வின் நெருங்கிய நண்பர்களான திரு ராய. சொக்கலிங்கம் அவர்கள், கம்பன் அடிப் பொடி திரு சா. கணேசன் அவர்கள், திரு நாமக்கல் கவிஞர், ரசிகமணி டி. கே. சி. அவர்களின் குடும்பத்தார், திரு. அழகப்பச் செட்டியார் (திருமதி வள்ளியின் சின்னப்பா) போன்ற பிரபலமான பலர் வருகை தந்துள்ளதே இவரின் கொலுவின் சிறப்பிற்கு எடுத்துக்காட்டு.

திருமதி வள்ளி, ''நவராத்திரி ஒரு அற்புதமான பண்டிகை மனிதனின் பல் வேறு உணர்ச்சிகளின் வடிகால். இவ்வளவு சிறப்பான பண்டிகை காலப்போக்கில் அழிந்து விடாமல் கட்டிக் காப்பது இந்தியப் பெண் ஒவ்வொருவரின் கடமை இல்லையா?'' என்று கேட்டது ஒவ்வொரு பெண்ணும் சிந்திக்க வேண்டிய ஒன்று.

- லக்ஷ்மி சங்கர்

ஒரு பிரச்னைக்குத் தீர்வு கண்டு,
"அப்பாடா" என்று மூச்சு விடுவதற்குள்,
"இதோ நான் இருக்கிறேன்" என்று
அடுத்த பிரச்னை சங்கிலித் தொடராய்
தலை தூக்கும்

பத்து வருடங்களுக்குள்தான் எத்தனை மாற்றங்கள்!

அதற்கு முன்னர் திருச்சியில் அமைதியான வாழ்க்கை. அந்த அமைதியைக் குலைத்தவாறு சென்னைக்கு மாற்றல். முதலில் நான் மட்டும் சென்னை வந்தேன். மனைவி, மூன்று குழந்தைகள், நான்... ஆக ஐந்து பேர் வசிக்கக்கூடிய வசதியான வீட்டைத் தேடி அலைந்தேன். கிடைத்தது குடும்பமும் சென்னைக்கு வந்து சேர்ந்தது.

வீட்டு வாடகை என் வருவாயின் ஒரு கணிசமான பகுதியை விழுங்கத் தொடங்கியது. பற்றாக்குறை என்னைப் பற்றத் தொடங்கியது. முதல் மாதமே விழி பிதுங்கியது. சம்பாத்தியம் இரு மடங்கானால்தான் சமாளிக்க முடியும் போலிருந்தது. ஆனால் அதற்கு வழி?

தையலில் டிப்ளமா வாங்கியிருந்த மனைவி இப்போது நிதிப் பற்றாக் குறையை ஓரளவு சமாளிக்க முன்வந்தாள். ஆடைகளை ஏற்றுமதி செய்யும் ஒரு நிறுவனத்தில் சூப்பர்வைசராக வேலை செய்யத் தொடங்கினாள்.

'சொந்தமாக ஒரு வீடு இருந்தால் இந்தப் பிரச்னைகள் எல்லாம் இருக்காதே!' என்று தோன்ற ஆரம்பித்தது. அந்த நேரத்தில் அதிர்ஷ்டவசமாக ஆழ்வார் பேட்டையில் வீடொன்று விலைக்கு வந்தது. பணத்துக்கு என்ன செய்வது?

சில உறவினர்கள் கடனுதவி செய்தார்கள். மனைவியின் நகைகள், தோடு, வெள்ளிப் பாத்திரங்கள் எல்லாவற்றையும் விற்றோம். ஒருவாறு தேவைப்படும் தொகை தேறியது. வீட்டை வாங்கிவிட்டோம்.

'அப்பாடா' எனப் பெருமூச்சு விட்டேன்.

அப்போது பார்த்து என்னை சேலத்துக்கு மாற்றி விட்டார்கள்!

பிள்ளைகளின் கல்லூரிப் படிப்பு பாதியில். குடும்பத்தை மாற்றுவதற்கில்லை. ஆகவே நான் மட்டும் சேலம் சென்றேன். என் ஒரு வருமானத்தில் இரண்டு குடும்பம் நடத்த வேண்டிய நிலை.

ஒரு பிரச்னைக்குத் தீர்வு கண்டு, "அப்பாடா" என்று மூச்சு விடுவதற்குள், "இதோ நான் இருக்கிறேன்" என்று அடுத்த பிரச்னை சங்கிலித் தொடராய் தலை தூக்கி விடுகிறது! எல்லாவற்றையும் மனைவிதான் சமாளித்து வந்தாள்.



சில அலுவலகப் பிரச்னைகளின் காரணமாக வேலையிலிருந்து முன் கூட்டியே ஓய்வு பெற்று சென்னைக்குத் திரும்பினேன். கல்லூரிப் படிப்பு முடித்த மகன் வேலைக்கு போவான், எல்லாம் சரியாகிவிடும் என்று எதிர்பார்த்த நேரத்தில் —

"சொந்தமாக பிசினஸ் செய்யப் போகிறேன். முதலீடாகக் கொஞ்சம் பணம் கொடுங்கள்" என்று சொல்லி விட்டான்!

எனக்குத் தலை சுற்றியது.

அந்தத் தொகையைக் கொடுப்பதற்கு மனைவி முன்வந்தாள். அவளுக்கு ஏது அவ்வளவு பணம்? செலவைச் சிக்கனப் படுத்தி ஸ்ரீராமில் சீட்டுச் சேர்த்து வந்ததன் மூலம்தான்!

— டி.எஸ்.கே. கண்ணன்,
சென்னை-18.

வீட்டின் ஒவ்வொரு செங்கல்லும்



ஆயகலைகள் அறுபத்து நான்கிற்கும் அதிபதி கலைவாணி. கலைகளின் நாயகி. நவராத்திரிப் பண்டிகையில் சரஸ்வதி பூஜையும், விஜயதசமியும் கடைசி இரண்டு நாட்களாக இருந்து பண்டிகையைச் சிறப்புறச் செய்கின்றன.

இன்றும் விஜயதசமி நாளிலே கலைகளைக் கற்றுக் கொள்ளும் ஆர்வமும் துடிப்பும் உள்ளவர்களும், கற்றுக் கொடுக்கும் ஆசிரியர்களும் நம்மிடையே உண்டு. காலம் மாறினாலும் நம் பண்டைக் கலைகள் அழியாத பெருமை பெற்றவை. இவ்வாறிய கலைகளைக் கற்பிக்கும் ஆசிரியர்கள் சிலர் தமது கருத்துக்களைச் சொல்கிறார்கள்.


கலைகளின் அதி சரஸ்வதி. அவள் கையிலே இருப்பது வீணை. அவ் வீணையிலே புகழ்பெற்ற வீணை ராகவன் என்ற பழம்பெரும் வீணை இசைக் கலைஞர் கூறுகிறார்:-

வீணை ராகவன் :

''சுமார் ஐம்பது வருடங்களுக்கு முன் ரேணுகா ஃபிலிம்ஸ் திரு. நாகய்யா தயாரித்த நடித்த 'யோகி வேமனா' படத்திலே முதன் முதலில் பின்னணி இசைக் குழுவில் வீணை வாசித்தேன். (தயாரிப்பு, டைரக்ஷன், இசை, நடிப்பு என எல்லாவற்றையுமே அன்றே செய்து காட்டினவர் நாகய்யா அவர்கள்) கர்நாடக இசையைத் தெள்ளத் தெளிவாக ஜாஸ்தியின்றி சுத்தமாகப் பாடத் தெரிந்தவர்கள் மட்டுமே அன்று பாடவோ, இசைக் குழுவில் வாசிக்கும் வாய்ப்போ பெற முடியும்.

பிரபல இசை அமைப்பாளர்கள் திரு. ராஜேஸ்வரராவ், சி. என். பாண்டுரங்கராவ், ஜி. ராமநாதன், கே. வி. மகாதேவன் கண்டசாலா, எஸ். எம். சுப்பையா நாயுடு, எம். எஸ். வி. போன்றவர்களோடு மட்டுமின்றி இன்றுள்ள திரு. இளையராஜா அவர்கள் வரை எல்லோர் இசையமைப்பிலும் வீணை நான்





இசையால் கிடைத்தது

வாசித்திருக்கிறேன். நிலையான இடத்தைப் பெற்றிருக்கிறேன். அன்று மாத சம்பளம்தான். ஒரு கம்பெனி வேலை முடிந்ததும் அடுத்த கம்பெனி வேலைக்குச் செல்ல வேண்டும். படம் ஓடவில்லை என்று சொல்லி பணம் கொடுக்காமல் இருந்தவர்களும் உண்டு.

பல நாட்கள் ஒத்திகை தொடர்ந்து இருக்கும். அக்குழுவில் இருக்கும் அனைவருக்கும் பாட்டு முழுவதும் தெரிந்திருக்க வேண்டும். ஒரே மைக்தான் குழுவினருக்கு. ஒத்திகை முடிந்து நன்றாக வந்ததாகத் தோன்றினால் பதிவு செய்வார்கள். பதிவு செய்த பாடலைப் போட்டுக் கேட்ட பிறகு ஏதாவது ஒரு சிறு தவறு நேர்ந்திருந்தாலும் திரும்பவும் முதலிலிருந்து அனைவரும் பாடி, வாசித்துப் பதிவு செய்வோம். டெக்னிகலாக முன்னேற்றமில்லாத காலமாதலால், சிறந்த இசை ஞானம் உள்ளவர்களைக் கொண்டு, பல நாட்கள் உழைத்தபின் பாட்டைப் பதிவு செய்தாலும் பணம் குறைவாகத்தான் கிடைக்கும். பணம் கிடைத்தால் சாப்பாடு, துணிமணி. இல்லாவிட்டால் பட்டினிதான். இது அன்றைய நிலை.

திரு. எம். கே. தியாகராஜ பாகவதர் கொடிகட்டிப் பறந்த காலம் அது. அவரது 'சிவகவி' படத்தில் 'ராஜன் மகாராஜன்' என்ற உசேனி ராகப் பாடலை அவர் பாட வீணை நான் வாசித்திருந்தேன். சம்பளப் பணம் வாங்க தயாரிப்பாளரிடம் சென்ற போது பாகவதர் அங்கு வந்திருந்தார். என்னை மிகவும் பாராட்டினார். என் பெயரைக் கேட்டார். கிராமபோன் ரிகார்டுகளில் பாடியவர்கள் பெயர் மட்டுமே போடுவார்கள். தயாரிப்பாளரிடம் என் பெயரை ரிகார்டில் போடச் சொன்னார் பாகவதர். அவர் தயங்கியபடி வழக்கமில்லை என்று இருந்தார். ராகவன் பெயரை ரிகார்டில் போடாவிட்டால் இந்தப் பாடலே வெளிவர வேண்டாம்





என்று கண்டித்துச் சொல்லி விட்டார். அவர் வார்த்தைக்கு மறு வார்த்தை ஏது? அந்த ரிகார்டில் பாடியவர் - ராக வர், வீணை - ராகவன் என்று போட்டு வெளிவந்ததை என்னால் மறக்க முடியாது. என் இசைக்கு அவர் செய்த பெருமை. நல்ல இசையை அவர் மதித்ததற்கு இது ஒரு எடுத்துக்காட்டு.''

இன்று இவரது மகன் வீணை பாச்சா என்ற பார்த்தசாரதி சினிமா பின்னணி இசைக் குழுவில் இருக்கிறார். இன்றைய சினி மியூசிக் பற்றி அவர் சொல்கிறார்:-

''நான் 72-ம் வருடத்திலிருந்து வீணை வாசிக்கிறேன். திரு. எம். எஸ். வி., சங்கர் கணேஷ், கே. வி. மகாதேவன் முதல் இன்றைய திரு. இளையராஜா, சந்திரபோஸ், தேவா போன்ற பலருடன் வாசித்து வருகிறேன். என் தந்தைதான் குரு. அதனால் சுத்தமான கர்நாடக இசை தெரிந்துள்ள எனக்கென்று ஒரு தனி இடமும், மதிப்பும் உள்ளது. இன்று கர்நாடக இசை பற்றி சுத்தமாகத் தெரிய வேண்டிய அவசியமில்லை. அவர்களுக்குக் கொடுக்கப்பட்ட ஸ்வரங்களை டிராக் சிஸ்டம் இருப்பதால் சொன்ன இடத்தில் வாசித்தால் போதும். ஏன்? இசை கொஞ்சம் தெரிந்தாலே நல்ல உதவியாளர்களை வைத்துக் கொண்டு இசையமைக்கலாம். பணம் அன்று போலப் பிரச்னையல்ல. யூனியன் இருப்பதால் வேலை முடிந்த உடன் கையில் பணம் கிடைக்கும். தயாரிப்பாளர் பணத்துடன் தான் ரெடியாக வருவார். பாட்டி இருந்த நிலை மாறி இன்று குடி இருப்பதற்கு ஒரு வீடு இருக்கிறதென்றால் அது வீணை வாசித்துக் கிடைத்த பணத்தால்தான். இந்த வீட்டின் ஒவ்வொரு செங்கல்லும் வீணையின் ஸ்வரத்தால் கிடைத்தது என்றால் மிகையாகாது.

''இப்போது கம்ப்யூட்டரைஸ்டு செய்து எல்லா வாத்தியங்களையும் வாசித்துத் தேவையான வாத்திய ஒலியை உபயோகித்துக் கொள்ளும் வசதி வந்துள்ளதே அதன் வரவால் இசைக் கலைஞர்கள் பாதிக்கப்படுவார்களா?''

இப்போது 'சின்தசைசர்' என்ற கருவி வந்துள்ளது. வீணை, சிதார், வயலின் போன்ற வாத்தியங்களை மாதிரிக்கு (Samples) வாசித்துக் காண்பித்தால் அப்படியே அந்த ஒலிகளைக் கொடுக்கும். அதாவது பாடங்களை மனப்பாடம் செய்து அர்த்தம் தெரியாமல் கரெக்டாக ஒப்பிப்பது போல என்று சொல்லலாம். பாட்டின் பாவம், உயிர்த் துடிப்பு அதில் நிச்சயம் கிடைக்காது. ஆனால் ஐம்பது வயலின்கள் வாசிக்க வேண்டிய இடத்தில் பத்து ஆட்களை மட்டும் வைத்துக் கொண்டு மீதியை இதன் மூலம் பெறலாம். இதனால் எங்களைப் போன்ற இசைக் கலைஞர்களுக்குக் கஷ்டம்தான்'' என்கிறார் இவர்.

வீணை ராகவனின் மகள் திருமதி. நிர்மலா ராமன் பலர் வீடுகளுக்குச் சென்று வீணை கற்றுக் கொடுக்கிறார். விஜய தசமி பற்றிக் கேட்ட போது,

அவசரத்திற்கு சாக்ஸில் ஒன்று கிடைக்கும், ஒன்றைத் தேட வேண்டியிருக்கும். இதைத் தவிர்க்க ஒரு சாக்ஸுக்குள் மற்றதைப் போட்டு வைக்கலாம். தேட வேண்டியதில்லை.

- கீதா



''நான் பதினைந்து வருஷமாக வீணை கற்றுக் கொடுக்கிறேன். மிக சிரத்தையாக விஜய தசமியன்று ஆரம்பிப்பார்கள். சிலர் விட்டு விடுவார்கள். தேர்வு சமயம், விருந்தினர் வந்தால் டியூஷனை அட்ஜஸ்ட் செய்து கொள்வேன். திருமணமானவர்கள் கூட கச்சேரி செய்யாவிட்டாலும் ஆத்ம திருப்திக்காகக் கற்றுக் கொள்கிறார்கள். வீட்டில் வீணையிருப்பதாலும் கற்றுக் கொள்ள விரும்புவர். வீணைக்கு மிகுந்த ஸ்ருதி ஞானம் வேண்டும். வயலினில் தந்தி அருகருகே இருப்பது போல வீணையில் இல்லாததால் ஸ்வரங்களுக்கு இடையே உள்ள தூரத்தை இடையில் எந்தத் தந்தி மேலும் கை படாமல் வாசிக்க கைப்பழக்கம் மிகவும் வேண்டும்.

குரு என்பதால் மிகவும் மரியாதையாக நடத்துகிறார்கள். அலுவலகத்திற்குப் போய் சம்பாதிக்கும் போது ஒருத்தருக்குக் கீழே வேலை செய்ய வேண்டும். பதில் சொல்ல வேண்டும். இங்கு கலைத்தொழில் செய்து சொந்தக் காலில் மதிப்போடு நிற்க முடிகிறது. நேரமின்மை காரணமாக வீட்டுக்கு வந்து கற்றுக் கொள்ள முடியாமல் இருக்கும் பலருக்கும் நான் போய்க் கற்றுக் கொடுப்பதை ஒரு புனிதமாகவும்,



பெருமையாகவுமே நினைக்கிறேன்'' என்கிறார்.

நாட்டியம்

திருமதி கலா ரமேஷ்ராவ்

- (நாட்டியப் பள்ளி நடத்துபவர்) :

''நான் கோபாலபுரத்தில் 'நிருத்ய க்ஷேத்திரா' என்ற நாட்டியப் பள்ளி நடத்தி வருகிறேன். 1953ம் வருடம் முதல் பதினைந்து வருடங்கள் திருமதி ருக்மணி



அருண்டேல் அவர்களின் 'கலாக்ஷேத்திரா'வில் மாணவியாகவும், ஆசிரியையாகவும் இருந்தேன். அவர்களது நிகழ்ச்சிகளில் பிரதான பாத்திரங்களில் உள்ளூர், வெளியூர் நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டவள். திருமணமாகிப் பல ஆண்டுகள் நாட்டியம் பற்றி நினைவே இல்லாமல் இருக்க வேண்டிய சூழ்நிலை. சமீபத்தில் ஐந்தாறு வருடங்களாக வீட்டிலும், வெளியிலும் வகுப்புக்கள் நடத்துகிறேன்.

''நீங்கள் கற்றுக் கொண்ட நாட்களுக்கும், நீண்ட இடைவெளிக்குப் பிறகு நீங்கள் கற்றுக் கொடுக்கும் நாட்களுக்கும் வித்தியாசம் தெரிகிறதே அன்று வெகு சிலரே ஆர்வத்துடன் நடனம் கற்றுக் கொண்டனர். இன்று 'என் வீட்டுப் பெண்ணும் டான்ஸ் கிளாஸ் போறா' என்ற பெருமைக்கு அனுப்புவது போலிருக்கிறது. கற்றுக் கொண்ட குறுகிய காலத்திற்குள் அரங்கேற்றம். அதற்குப் பிரபலமானவர்கள் தலைமை, நாட்டியமாடும் சபா, குரு நட்சணை, ஆடை அணிகலன்கள், பத்திரிகை என்று கல்யாணச் செலவு போல (மணமகன் நீங்கலாக) நடத்துவது பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?''

''எங்கள் காலத்தில் இருந்த ஈடுபாடு தற்போது சிறிது குறைவு என்று சொல்லலாம். காரணமும் இருக்கிறது. படிப்புச் சுமை. அன்று பாட்டு, ஜதி எல்லாமே நாங்கள் கற்றுக் கொள்வோம். இன்று பாட்டுடன் தெரிந்து கொள்ளாமல் தான் ஆட வேண்டியதை மட்டும் கற்றுக் கொள்கிறார்கள். இதற்கு மாணவிகளை மட்டும் குறை சொல்லக் கூடாது. குருவும் இதற்குப் பொறுப்பு. பணம் பண்ணுவதே குறிக்கோளாகப் பலர் இருக்கிறார்கள். கலைக்காகக் கற்றுக் கொடுப்பவர்கள் மிகச் சிலரே. நடனம் என்பது அதிகப் பணம் செலவழிக்கக்கூடிய கலைதான். இக் குறை



நீங்க வேண்டுமானால் பாட்டுக்கும் பல பள்ளிகள் இருப்பது போல நாட்டியத்துக்கும் பள்ளிகள் மூலம் கற்பிக்க ஏற்பாடு செய்யப்பட வேண்டும். ஒன்றிரண்டு பள்ளிகளில் இப்போது நாட்டியம் கற்றுக் கொடுக்கப்படுகிறது. பாட்டுத் தேர்வு போல நாட்டியத்துக்கும் டிப்ளமா அளிக்கலாம். இதன் மூலம் நாட்டியம் கற்க விரும்பும் மத்தியதரக் குடும்பத்துக் குழந்தைகளும் பயனடைவர். அரங்கேற்றமும் பள்ளிகள் மூலம் செய்தால் வீண் செலவும், ஆடம்பரமும் தவிர்க்கப்படலாம்.

ஒரு முன்னேற்றம் பற்றிக் குறிப்பிட்டே ஆக வேண்டும். திருமணம் ஆனவுடன் நாட்டியம் ஆடுவது கௌரவக் குறைவு என்று நினைத்த காலம் முன்பு. பெண் பார்க்கையில் பாட்டு தெரியுமா என்று கேட்பார்களே தவிர நாட்டியம் தெரியும் என்று சொன்னால் முகம் சுளித்தார்கள். இன்று அப்படியல்ல. டான்ஸ் தெரிந்த மனைவியரை ஊக்கமளித்து அவர்களது நிகழ்ச்சிகளை முன்நின்று நடத்த உதவும் கணவன்மார்கள் உள்ளனர். சமூகத்தில் நாட்டியம் கற்றுக் கொள்வது கௌரவமாக ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கும் நிலை இன்றுள்ளது. நல்ல உடற்பயிற்சி போலவும் கிடைக்கின்றது. பணமும், புகழும் கிடைக்கின்றது. நாம் செலவு செய்த பணம் நடனம் சொல்லிக் கொடுக்கையில் திரும்பவும் கிடைத்தும் விடுகிறது.

விஜயதசமி அன்று பலரும் நடனம் கற்றுக் கொள்ள விரும்பிச் சேருகிறார்கள். பழைய மாணவிகள் 'புது அபிநயம்' ஒன்றைக் கற்றுக் கொள்வார்கள். குரு பக்தியுடன் தட்சணை அளித்து நமஸ்கரிப்பார்கள். இப்படிப்பட்ட பெருமை வாய்ந்த நம் பழம்பெரும் பரதக் கலையை சொல்லிக் கொடுக்கும் பாக்கியம் எனக்குக் கிடைத்துள்ளதற்கு அந்தக் கலைவாணி அருள்தான் காரணம்.''

மிருதங்கம்

திரு. ஆர். ராமச்சந்திரன்

(பி. கிரேட் ஆர்ட்டிஸ்ட்)

''விஜயதசமி வந்தவுடன் ஆண் குழந்தைகள் பலரும் மிருதங்கம் கற்றுக் கொள்ள வருவார்கள். பெற்றோரின் வற்புறுத்தலின் பேரில் வந்து சேர்ந்து விடும் குழந்தைகளும் உண்டு. ஏதோ ஒரு வேகத்





தில் சேர்ந்து விட்டுப் பிறகு விட்டு விடுபவர்களும் உண்டு. ஒன்று மட்டும் நிச்சயம். கலைகள் எதுவாக இருந்தாலும் பரம்பரையில் யாருக்காவது கலைஞானம் இருந்திருந்தால்தான் இயற்கையாக வரும். தானே ஈடுபாடும் விருப்பமும் ஏற்படும். வற்புறுத்தினால் மட்டும் வராது. குழந்தைகளுக்குப் பிடிக்கும் கலையையே நாம் வளர்க்க வேண்டும்.

"இந்தத் துறையில் ஏன் பெண் குழந்தைகள் அதிகமில்லை?"

"பெண்கள் மென்மையான உடல் வாகு கொண்டவர்கள். வீட்டு வேலை செய்வது, காய்கறி நறுக்குவது போன்ற வேலைகளால் கைகளில் சொரப்புகள், கீறல்கள் இருக்கும். சரியாக வாசிக்க வராது. பல மணி நேரம் கால்களிலேயே மிருதங்கத்தைத் தாங்கி உட்கார வேண்டும். இப்படிப் பல காரணங்களால் பெண் குழந்தைகள் வருவதில்லை. ஆனால் ஆர்வம் காரணமாகக் கற்றுக் கொண்டு சில பெண் மிருதங்க வித்வான்கள் வாசிப்பதையும் நாம் காணலாம்.

தற்போது படிப்பு அதிகமாகி விட்டது. கம்ப்யூட்டர் யுகம். அதைக் கற்றுக் கொண்டு எதிர்காலத்தை ஒளிமயமாக்கிக் கொள்ளவே விரும்புகிறார்கள். மிருதங்கம் கற்றுக் கொண்டு சம்பாதிப்பது மிகக் குறைவான வருமானத்தையே தரும். பொழுது போக்கிற்காக வைத்துக் கொள்வது நாகரீகமாகி விட்டது. விஜயதசமி அன்று கிடைக்கும் குருதட்சணைதான் எங்களுக்கு 'போனஸ்' என்று சொல்லலாம்.

மேற்கத்திய சங்கீதமும், பாப் மியூசிக்கும் வந்தாலும் நம் கர்நாடக சங்கீதத்திற்கு ஈடுஇணையாகாது. பழம்பெரும் வித்வான்களின் முயற்சியால் கர்நாடக சங்கீதத்திற்குத் திரும்ப ஒரு மறுமலர்ச்சி ஏற்பட்டுள்ளது என்பது கண்கூடான உண்மை. ஆதலால் பக்கவாத்தியமான மிருதங்கத்துக்கும் எதிர்காலம் நன்றாகவே உள்ளது என்பது மறுக்க முடியாத உண்மை."

வாய்ப்பாட்டு

திருமதி. ராஜலட்சுமி :

"நான் எட்டு வயதிலிருந்து சங்கீதம் கற்றுக் கொண்டேன். 73ம் வருடம் மியூசிக் அகாடமியில் திரு. கே. வி. [illegible], திரு. பி. கிருஷ்ணமூர்த்தி, திருமதி. ஆர். வேதவல்லி போன்றவர்களிடம் பயின்று தேர்ச்சி பெற்றேன். 75லும் வீட்டிலிருந்து டியூஷன்கள் எடுக்கின்றேன். முதலில் பொழுதுபோக்காக ஆரம்பித்து இரண்டு மூன்று பேருக்குச் சொல்லிக் கொடுக்க ஆரம்பித்தேன். இப்போதோ ஐம்பது, அறுபது குழந்தைகளுக்குச் சொல்லிக் கொடுக்கிறேன். வாரத்தில் ஏழு நாட்களும் வகுப்புகள் உண்டு.


விஜயதசமி அன்று பலர் வந்து சேர்ந்து விடுவார்கள். பாதி பேர்தான் தொடர்ந்து வருவார்கள். பலவற்றிலும் குழந்தைகள் பங்கு கொண்டிருப்பதால் ஏதாவது ஒன்றை விட்டு விட வேண்டிய நிலையில் பாட்டை நிறுத்தி விடுவார்கள். வாத்தியங்களை விட வாய்ப்பாட்டு கஷ்டம். வாத்தியங்களுக்கு ஸ்வரஞானம் மிக முக்கியம். பாட்டைச் சொல்லிக் கொடுத்தபடி பாடலாம். ஆனால் பாவத்துடன், அர்த்தம் தெரிந்து பாட ஆசிரியர் ஆரம்பத்திலிருந்தே சொல்லிக் கொடுக்க வேண்டும்.

எனக்குச் சிறு வருத்தம் ஒன்று. பாடத்துக்குத் தரும் முக்கியத்துவத்தைப் பாட்டுக்கும் தர மறுக்கிறார்களே என்பது தான். படிப்பு முக்கியம்தான். மார்ச், ஏப்ரல் மாதங்களில் இரண்டு மாதம் பாட்டு வேண்டாம் என்கிறார்கள். தொடர்ச்சியாகப் பாட விட்டுப் போய் விடுவதால் ஆர்வம் குறைந்து விடும். படிப்பின் இடையே அரைமணி நேரம் பாட்டு வகுப்பை ஒதுக்காமல் பாடுவது தொடர்ந்து, படிப்பதிலிருந்து ஓய்வு கிடைப்பது போல, மனதுக்கு ஒரு 'ரிலாக்ஸேஷன்' ரிக்ரியேஷன் கிடைக்கிறது அல்லவா?"

நவராத்திரி அலங்காரம்

நவசிப்புப் பொருட்கள் செவ்வத்தின் மீது கோல்ட் கலர் அலுமினியப் பேப்பர்கள், கோல்ட் கலர் ஜிகினா பேப்பர்கள் புழக்கத்துக்கு வருகின்றன. இவற்றை ஆண்கள் போடும் பெல்ட் மீது கத்தி உட்புறம் பசை தடவி ஒட்டி விட்டால் அருமையான ஒட்டியாணம் தயார். பெல்ட்டிலேயே ஹுக் இருப்பதால் இதை அணியவும், உடலுக்கேற்ப அட்ஜஸ்ட் பண்ணுவதும் சுலபம்.

- அரவிந்தலோசனி



''தற்போது ஸ்டார் டீ.வி.யில் மியூசிக் டீ.வி. சேனலை குழந்தைகள் மிகவும் ரசிக்கிறார்கள். அதனால் நம் சங்கீதம் பாதிக்கப்படுமல்லவா?''

''எந்தச் சங்கீதமாக இருந்தாலும் ரசிப்பதில் தவறில்லை. எனக்குக் கூட அதிலே சில பாடல்கள் பிடிக்கும். அந்த மியூசிக்கை நாம் ஒதுக்கக் கூடாது. நம் கர்நாடக இசை 'சாகாவரம்' பெற்றது. மனதிலே ஒரு பிரச்னை ஏற்பட்டால் குழப்பம் ஏற்பட்டால் நம் இசையைக் கேட்டால் அமைதியும், சாந்தமும் கிடைக்கும் என்பதைப் பலரும் அனுபவபூர்வமாகவே உணரலாம். இதைப் பாட்டுச் சொல்லிக் கொடுப்பவர்கள் குழந்தைகளுக்குப் போதிக்க வேண்டும். அன்று குருவிடம் எங்களுக்கு இருந்த பயம், பக்தி இன்று இல்லை. காலத்தின் மாற்றம் அது. அதை ஏற்றுக் கொண்டு அவர்கள் போக்கில் போய் சிநேகித பாவத்தோடு சொன்னால் குழந்தைகள் புரிந்து கொள்வார்கள். பலவந்தப்படுத்திப் பாட வைத்தால் பாட்டின் மேல் வெறுப்பே வந்து விடும்.

நவராத்திரி கொலுவிற்காகப் பாட்டுகள் கற்றுக் கொடுக்கச் சொல்லி பல பெற்றோர் கேட்பார்கள். அந்த நேரத்துக்குத் தகுந்தபடி அம்பாள் பேரில் பல பாடல்களைச் சொல்லிக் கொடுக்கிறேன். என் மாணவிகள் பாரதியார் பாடல், தனிப் பாடல்களைக் கற்றுக் கொண்டு போய்ப் பல பரிசுகளை வாங்கியுள்ளனர்.

படிப்போடு பாட்டும் முக்கியம் என்பதைப் பெற்றோர் தாம் உணர்ந்து பிள்ளைகளுக்கு உணர்த்த வேண்டும் என்பதே என் வேண்டுகோள். யாகம், பூஜை, மந்திரங்கள் இவற்றை விட பாட்டால் மிகச் சுலபமாக இறைவனைப் பாடி நெருங்கலாம். பாட்டுக்கு அந்தளவு சக்தி உள்ளது என்று காஞ்சி ஸ்ரீ காமகோடி ஸ்வாமிகளே சொல்லியிருப்பதை நாம் உணர்ந்து குழந்தைகளுக்கும் சொல்ல வேண்டும் என்பதே என் ஆசை.''

தொகுப்பு :
பானுமதி ராமச்சந்திரன்

படங்கள் : ஓம். சுப்பிரமணியன்



நவராத்திரி அலங்காரம்

சிறுமிகளுக்கு, பெரியவர்களின் அலங்கார வளையல்களை ஒட்டியாணமாகப் பயன்படுத்தலாம்.
- அகிலாவேணி




மங்கையர் மலர்
செப்டம்பர் '92
நவராத்திரி
இதழுடன்
இணைப்பு

பட்டர்ஃபிளை மிக்ஸரில் அப்படி என்ன தனிச்சிறப்பு ?

40 ஆண்டுகளுக்கு மேல் ஸ்டெயின்லெஸ் ஸ்டீல்
சாதனங்கள் தயாரிப்பில் ஈடுபட்டு ஸ்டெயின்லெஸ்
ஸ்டீல் குக்கர், டேங்க், வாட்டர் ஹீட்டர், ஃபிளாஸ்க்
ஆகியவற்றை வழங்கிய பட்டர்ஃபிளை
உங்களுக்கு அளிப்பது புதிய
மிக்ஸர்-கிரைண்டர்.

பட்டர்ஃபிளை சிறப்பு அம்சங்கள் :

- ☐ ஹெவி டியூட்டி மோட்டார்-தொடர்ந்து 60 நிமிடம் ஓடும்.
- ☐ மூன்று பிரத்தியேக ஜாடிகள்-24 கேஜ் சேலம் ஸ்டெயின்லெஸ் ஸ்டீல்
- ☐ ஹை – டென்ஷன் ஸ்டெயின்லெஸ் ஸ்டீல் பிளேடுகள் – அதி உறுதி, எளிதில் மழுங்காத கூர்மை.
- ☐ ஸ்பெஷல் கிரேடு நைலான் கப்ளர்-எளிதில் தேயாது, உடையாது, மோட்டார் ஓடும் போதும் ஜாடியை இறுகப் பற்றிக் கொள்ளும்.
- ☐ சஸ்பெண்டட் மோட்டார் அமைப்பு-மோட்டார் அதிர்வு இல்லாமல் இயங்கும்.
- ☐ மைக்ரோ பாலன்ஸ் செய்த ரோட்டர்-மோட்டார் சப்தம் இல்லாமல் சீராக இயங்கும்.
- ☐ ஆட்டோமாடிக் ஓவர்லோடு கட் ஆஃப் வசதி மோட்டாருக்குப் பாதுகாப்பு
- ☐ வேக்கும் ரப்பர் ஷூ-மிக்ஸர் இயங்கும் போது ஆடாமல் நிலை நிறுத்தும்.
- ☐ ஃபுட் ப்ராசஸர் இணைப்புகள்-வேண்டுமானால் கிடைக்கும்.





தயாரிப்பாளர்கள் :
காந்திமதி அப்ளையன்ஸஸ் லிமிடெட்,
272, அண்ணா சாலை, சென்னை -600 018.
போன் : 45 41 86, 45 53 42, 45 87 22, 45 83 75.

எல்லா பிரபலமான கடைகளிலும் கிடைக்கும்.

பட்டர்:பிளை
மிக்ஸர் கிரைண்டர்

குறையாத திறன் அழியாத தரம்.

Insight GA 1549



விலை குறைவாக
இருந்தால் மட்டும்
போதுமா?
"போதாது. தாயாகவும்
டாக்டராகவும் இருப்
பதால் நான் கட்டாய
மாகக் கூறுவேன்.
தாய்ப் பாசத்தையும்,
அதன் சந்தோஷத்
தையும் விலை
என்னும் தராசிலே
நிறுக்கவே முடியாது.
ஒரு தாயின்
சந்தோஷம்
தனது குழ
ந்தைக்கு அனைத்
திலும் உன்னத
மானதை அளிப்
பதில்தான்
அடங்கி
இருக்கிறது.
உன்னதம்
என்றால்
விப்ரோ பேபி
சாஃப்ட்
சோப். இதிலே
குழந்தையின்
தளிர் மேனிக்கு
அவசியமான
பி.எச். பேலன்ஸ்
சரியான அளவிலே
உள்ளது. சருமத்திற்கு
கேடு ஏற்படுத்தும் உட்
பொருளே கிடையாது.
சருமத்தை மென்மை
யாக வைக்கும்
லனோலினும் உள்ளது.
இத்தனை சிறப்புகள்
இருந்தும் விலை
6 ரூபாய் குறைவு.
இனியும் அதிக
விலை கொடுத்து
இதர சோப்புகளை
வாங்குவீர்களா?"
விப்ரோ
பேபி சாஃப்ட்
சோப்
ரூ.13/-
WIPRO
BABY SOFT
குழந்தைக்கு தாய்மையானது
உங்களுக்கு சிக்கனமானது

"சொட்டு நீலத்துடன்"
வழங்கப்படும் இலவசப் பரிசுகள்
என்றுமே என்னைக் கவர்ந்தது இல்லை.



பொதுவாக ஒரு பொருளை நுகர்வோர் நிராகரிக்கும்போது, அதன் தயாரிப்பாளர் தனது விற்பனைக்கு கைகொடுக்க, பயன்படுபவையே இந்த இலவசப் பரிசுகள்.

ஆனால் 'உஜாலா'வின் சிறப்பே தனி

நமக்கு தேக்கரண்டி அளவுகள் தேவையில்லை ?

உஜாலாவின் நான்கு "துளிகளே" போதும் ஒரு லிட்டர் நீருக்கு.

உபயோகிப்பவர்களுக்கு

[illegible] ORAL TOXICITY TEST [illegible] SKIN IRITATION TEST [illegible]



JYOTHY LABORATORIES
Marketing Office:
44, Shivshakthi Ind. Estate, Marol,
Bombay-400 059.
Regd. Office: Sreekrishna Nagar
Bombay-400 066.

உஜாலா

இதயத்திற்கு இதமானது

திருமதி ஷீலா பால், BSc., D.N.D., உணவியல் வல்லுநர் கூறுகிறார்.

"நல்லெண்ணெய் இரத்தத்தில் கொலஸ்ட்ரால் அளவைக் குறைக்கின்றது. ஆகவே தான் நமது முன்னோர்கள் அதை "நல்ல எண்ணெய்" (தமிழ்) "மஞ்சி நூனெ" (தெலுங்கு) என்று அழைத்தனர். இது உடல் ஆரோக்கியத்திற்கு பாதுகாப்பானது என்பதால்தான் தென்னிந்தியர்கள் சமையல் எண்ணெய்யாகப் பயன்படுத்துகின்றனர்."

Sheila Paul



Mrs. Sheila Paul B.Sc,
Diploma in Nutrition & Dietetics
Senior Dietition
Madras



இதயம் நல்லெண்ணெய் தயாரிப்பில் தரத்தில் சிறந்த எள் மட்டுமே உபயோகிக்கப்படுகின்றது. பிசுக்கு எள் மற்றும் பொக்கு முழுவதுமாக நீக்கப்படுகின்றது. ஆகவே இதயம் நல்லெண்ணெய் பொங்குவதில்லை. பூரி, வடை, பஜ்ஜி எது வேண்டுமானாலும் தயார் செய்யலாம்.



இதயம் சுவையாக்கும் எதையும் சுவையாக்கும்

Bombay Distributor

M/s. P.R. OIL DEPOT (P. Ramalingam)
MATUNGA (C.R.) Bombay – 400 019.
Phone : 4372077 & 4376874

இதயம்
நல்லெண்ணெய்

SILVER SPOON